
# வெள்ளி விழா மலர்



University of Jaffna
080
ALV
264057(AR)

## பாரதிதாசன் சனசமூக நிலையம்
அல்வாய் தெற்கு, அல்வாய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

*from*

# SATHA PONDS

ALVAI.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
★ LIBRARY ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய்

# பாரதிதாசன் சனசமூக நிலையம்

நூல் நிலையம் — விளையாட்டுக் கழகம்

*பதிவு இல, J/VC/13/CC/353*

UNIVERSITY OF JAFFNA
080
ALV
LIBRARY AR

ARCHIVES



264057

264057

# வெள்ளிவிழா மலர்

University of Jaffna
264057
Library

Donated by
Prof.K.Visakaruban
Dept. of Tamil
University of Jaffna

*மலர் வெளியீடு:*
*பாரதிதாசன் சனசமூக நிலையம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

# திரு. சு. டிவகலாலா அவர்களின்

# ஆசிச்செய்தி

மக்களுக்கான மகத்தான சேவை செய்து வரும் பாரதிதாசன் சனசமூக நிலையம் தனது வெள்ளிவிழாவினைக் கொண்டாடுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இத் தருணத்தில் அவர்கள் வெள்ளிவிழா மலரொன்று வெளியிடுவதும் பாராட்டத்தக்க விஷயமாகும். இம்மலர் காலத்தால் அழியாத தாய் வரலாற்றில் நிரந்தர இடம்பெறக் கூடியதாய்ப் பயனுள்ள வகையில் அமையவேண்டுமென வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உபவேந்தர்

## பேராசிரியர் அ. துரைராசா அவர்களின்

# ஆசிச்செய்தி

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையம் தனது வெள்ளிவிழாவினைக் கொண்டாடுமுகமாக மலரொன்றினை வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மலரில் பல ஆய்வுக்கட்டுரைகளும், மாணவர்களுக்குப் பயனளிக்கும் கட்டுரைகளும் இடம்பெறுவதையொட்டி மலர் வெளியீட்டுக் குழுவினரைப் பாராட்டுகின்றேன்.

சனசமூக நிலையங்களின் பிரதான பணி கிராமத்தில் வாழும் ஒவ்வொருவரையும் ஏதாவதொரு வகையில் பயனுள்ள பிரசைகளாக்குவதேயாகும். விவசாயிகள், கடற்றொழிலாளர், அன்றாட கூலிவேலை செய்வோர் போன்றோருக்கும், வாழ்வளிக்கும் பல செயற்றிட்டங்களை உருவாக்கி முன்னெடுத்துச் செல்லவேண்டும். இவ்வகையான பணிகளை இச்சனசமூக நிலையம் ஆற்றிவருவது பெருமைப்படக் கூடியதாகும்.

இன்றைய காலகட்டத்திற் பிரசுர செலவினங்கள் உயர்வடைந்த வேளையிலும் மனந்தளராது,

'எண்ணிய முடிதல் வேண்டும் - நல்லவே
எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் - தெளிந்த
நல்லறிவு வேண்டும்'

என்ற பாரதிப்புலவரின் வாக்கிற்கு ஏற்ப, மலர் வெளியீட்டுக் குழுவினரைப் பாராட்டி, அவர்களது முயற்சிகள் அனைத்திலும் வெற்றியீட்ட எனது நல்லாசிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிதாசன் சனசமூக நிலைய ஆரம்பகர்த்தா

## வே. ச. திரவியம் (B. A.) அவர்களின்

(மக்கள் வங்கி, மன்னார்)

# ஆசிச்செய்தி

"ஈன்ற பொழுதிற் பேரிதுவக்கும் தன்மகனைச் -
சான்றோன் எனக் கேட்ட தாய்."

சான்றோனாகத் திகழ்ந்து உலகத்தின் ஆசியை ஆசித்து நிற்கும் அன்புச் செல்வமே, உனது வளர்ச்சி கண்டு மகிழ்ச்சியும் இறும்பூதுமெய்துமிவ்வேளையில் உன் மழலைப் பருவத்தின் காட்சிகளை என்னால் அசைபோடாதிருக்க முடியவில்லை சின்னஞ் சிறுசுகளின் சிற்றிற் குழந்தைபோலத்தான் நீ பிறந்தாய். பிறந்த உனக்கு ஒரு துளியேனும் காட்டும் தயவு இல்லாது உன்னவர்கள் தவிர்த்த போது உனக்கென ஓரிடத்தை இனம் காட்டியளித்த மக்கள் தொண்டர் திரு J S. செல்லப்பா ஆசிரியர் அவர்கள் என்றென்றும் உன் நன்றிக்குரியவர், மறந்துவிடாதே.

தளர்நடை நடக்க நீ தொடங்கிய வேளையில் எதிர்கொள்ள நேர்ந்த இடர்ப்பாடுகள் ஓராயிரம். சிறியவன் உனைச் சிலர் தட்டிக் கொடுத்து வளர்க்கமுன் வந்த வேளையில், "சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேருமோ? என எள்ளி நகையாடி எடுத்தெறிய முற்பட்டோர் தாம் எத்தனை பேர்?

ஆனால் இன்றும் சிறு பிள்ளை வேளாண்மை வீடுகள் தோறும் வந்து சேர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு அனைவருமே களிப்புறுகின்றார்கள். விதைத்தவர் பங்கைவிட வளர்த்தவர்களின் பங்குதான் அறுவடைக்கு மிக மிக அவசியமாக இருந்தது. வளர்த்தவர்கள் பொறுப்பேற்றிருந்திருந்தால் உன் வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி கொள்ளும் இப்பேறு எனக்குக் கிட்டியிராது,

எனவே நீ ஆசிக்கும் ஆசி உனக்குமட்டுமன்றி உன்னை வளர்த்தவர்கட்குமுரியதுவே. உலகோர் மனம் நிறைந்து உன் வளர்ச்சிக்காக உனக்கு ஆசி கூறுமிவ்வேளையில் உனது தோற்றத்திலும் வளர்ச்சியிலும் தினையளவு பங்கேனும் உண்டென்ற அமைதியில் நானும் ஒருவனாக உனக்கு எனது ஆசிகளை இதயங்கனிய வழங்குகின்றேன்.

நீ மேலும் வளரவேண்டும். அறிவு கொளுத்துவதுடன் அமைந்துவிடாது, சமூகத்தின் ஒவ்வொரு நற்பணிகளுடனும் நீ உன்னை இணைத்து உழைத்து உலகிற்கு ஒளிகாட்டுமாறு வளர வேண்டும். மலர்ந்து கொண்டிருக்கும் புதுயுகத்துக்கு உன் போன்றோர் பங்களிப்பு இன்றியமையாதது.

உன் பணி தொடர்ந்தும் சிறந்து என்றென்றும் நீ சான்றோனாகத் திகழ அனைத்திற்கும் மேலான இறையருளை ஆசித்துநிற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாகவி பாரதியாரின் விருப்பப்படி
## புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்
## முதன்முதலில் பாடிய பாடல்

எங்கெங்குங் காணினும் சக்தியடா! — தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா! — அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் — அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா — ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும் — வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ? — எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் — அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி தெற்கு - மேற்கு
**உதவி அரசாங்க அதிபர், விசேட ஆணையாளர்**

## திரு. இ. ஐயாத்துரை (இ. நி. சே) அவர்களின்

# ஆசிச்செய்தி

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கி கட்டைவேலி உப அலுவலகப் பகுதியில் இயங்கிவரும் ''பாரதிதாசன்'' சனசமூக நிலையம், எதிர்வரும் புத்தாண்டுத் தினத்தன்று' அதனது வெள்ளி விழாவை கொண்டாடும் அதே வேளையில் ஓர் வெள்ளி விழா மலரையும் வெளியிட இருப்பதை அறிந்து மிகுந்த பெரு மகிழ்ச்சியும், பேரார்வமும் அடைகின்றேன். இவ் வெள்ளி விழா மலர் பல அநுபவம் மிக்க ஆசிரியர்களினதும், விரிவுரையாளர்களினதும் பயனுள்ள ஆக்கங்களைத் தாங்கி வெளிவர இருக்கின்றது. இச் சனசமூக நிலையத்தின் பெருமுயற்சி வெற்றி பெற எனது மனமார்ந்த ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்,

கடந்த ஆறு - ஏழு ஆண்டுகளாக நினைத்துப்பார்க்க முடியாத கஷ்டங்கள், சூழ்நிலைகளில் வாழ்ந்து தற்போது ஓரளவு நிம்மதியுடன் மக்கள் வாழ்கின்ற இக் காலகட்டத்தில் சன சமூக நிலையங்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் தேவைப்படுகின்றது. அவ் எதிர்பார்ப்புகளுக்கமைய இப் ''பாரதிதாசன்'' சனசமூக நிலையம் எடுக்கின்ற இப் பெருமுயற்சி காலத்திற்கு ஏற்றதுமல்லாமல் தற்போதைய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கும் முன்வந்துள்ள தென்பதை எடுத்துக் காட்டுகின்றது.

''பாரதிதாசன்'' ஓர் புரட்சிக் கவிஞர். அப்பெயரை தாங்கிய இச் சனசமூகநிலையம் புதுமையானதும், புரட்சிகரமானதுமான செயற்பாடுகளை கடந்த காலங்களில் செய்து வந்துள்ள தென்பதை யாவரும் அறிவர் அதேபோன்று எதிர்வரும் காலங்களிலும் இச் சனசமூக நிலையம் அதனது பகுதி மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய மக்களுக்கும் பயன்படக்கூடிய செயற்பாடுகளை செய்து வருமென நம்புகின்ற அதே வேளையில் இச் சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் முன்னேற்றமடைய எல்லாம் வல்ல இறைவனை மனமார வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்கும் போக்கும்

அல்வாய் தெற்குப் பாரதிதாசன் சனசமூக நிலையம் இன்று வெள்ளி விழாவைக் கொண்டாடு முகமாக இம்மலரை வெளியிடுகின்றது.

கல்வியென்பது பல பாட ஒழுங்குகளையும், தத்துவங்களையும் ஒன்றிணைக்கும் சக்தி வாய்ந்தது என்பதற்கிணங்க இவ்வெளியீடு, பல்கலைக் கழகப் பேராசிரியர்களினதும், முதுநிலை விரிவுரையாளர்களினதும், ஆற்றலும் அனுபவமுமிக்க ஆசிரியர்களினதும் கட்டுரைகளைத் தாங்கி வருவது நிலையான கல்விப் பணியின் சாதனையென்றே கூறவேண்டும். சமூக, புனருத்தாரண, பண்பாட்டு விழுமிய கருவியான கல்வியைப் பரப்பும் நோக்கத்தோடு இப்பணி ஆரம்பிக்கப்பட்டது.

''தூயவை துணிந்த போது பழிவந்து தொடர்வதில்லை'' என்ற கம்பனின் வாக்குக்கேற்ப நாம் தொடங்கிய இப்பணி எவ்வித இடையூறின்றி முழுமை வாய்ந்த பல்துறைக் களஞ்சியமாக வெளிவருவதற்கு முன்னோடிகளாக உழைத்தவர்கள் சனசமூக நிலைய இளைஞர்களே – சிறப்பாக ஒரு சிலர் மலர் வெளியீட்டில் ஆற்றிய பங்களிப்பு காலத்தால் அழியாதது.

மலர் வெளியீட்டிற்கு ஆசியுரை தந்த யாழ் பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா அவர்களுக்கும் ஆசியுரை வழங்கிய எமது சனசமூக நிலைய ஆரம்பகர்த்தா திரு. வே. ச. திரவியம் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

பல்வேறு நெருக்கடிகளில் கட்டுரைகள் தந்துதவிய பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் அறிஞர்களுக்கும் எமது நன்றிகள்.

மலர் வெளியீட்டுக்கு உதவியளித்த விளம்பரதாரர்களுக்கும், நிதியுதவி அளித்த நண்பர்களுக்கும் அட்டைப் படத்தை வரைந்துதவிய ஓவியர் ரமணி அவர்களுக்கும், குறுகிய காலத்தில் மலரை அச்சிட்டு உதவிய அல்வாய் அபிராம் அச்சகத்தினருக்கும் எமது நன்றிகள்.

மனிதத் தன்மையை மனிதர் பெற உறுதுணையாய் விளங்குவதே எமது நோக்கும் போக்குமாகும்.

*மலர் வெளியீட்டுக் குழுவினர்*

கட்டுரையில் வரும் கருத்துக்கள் அனைத்திற்கும்
கட்டுரையாசிரியர்களே பொறுப்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிதர்சன் சனசமூக நிலைய

# நடப்பு வருட நிர்வாகக் குழுவினர்

காப்பாளர்கள்: திரு. த. மார்க்கண்டு

(செயலாளர், போக்குவரத்து அமைச்சு வடக்கு, கிழக்கு-மாகாணசபை.)

திரு. த. இராஜேஸ்வரன்

(உதவி விரிவுரையாளர் பேராதனை பல்கலைக் கழகம்)

தலைவர்: திரு. கி. நடராசா

உபதலைவர்கள்: திரு. நா. சந்திரசேகரம்

திரு. தெ. கனகசபாபதி

செயலாளர்: திரு. சி அருணாசலம்

உபசெயலாளர்: திரு. ச. கிருஷ்ணசாமி

பொருளாளர்: திரு. ஆ. குலநாதன்

நிர்வாக சபை உறுப்பினர்கள்

திரு. க. சிவபாதசுந்தரம்

திரு. ம. கனகரத்தினம்

திரு. க. புவனேந்திரன்

திரு. சி. சிறீகாந்தன்

திரு. க. மாணிக்கவாசகர்

திரு. சு. மகாதேவா

திரு. க. செல்லத்தம்பி

திரு. ச. சோமசுந்தரம்

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி

கணக்குப் பரிசோதகர்: திரு. மு. கனகசபாபதி

(H. U. I.)

விளையாட்டுக்குழு ஒருங்கமைப்பாளர்:

தலைவர்: திரு. த. சிவபாதசிங்கம்

செயலாளர்: திரு. ம. மகேந்திரராசா

உறுப்பினர்: திரு. ஆ. கணநாதன்

திரு. க. புலேந்திரன்

திரு. மா. தயாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே . . . . .


வாழ்த்து 01
வளர்நிலை அறிக்கை 04
பாரதி — பாரதிதாசன் ஓர் ஒப்பீடு 08
தமிழ் ஓர் கண்ணோட்டம் 13
இலங்கை மத்திய வங்கி 16
பிரயோக கணிதமும் மதிப்பிடுதலும் 22
திறைசேரி உண்டியல்கள் 24
பற்சுகாதாரம் 31
க. பொ. த, (உ. த.) பரீட்சையில் தூயகணிதமும் மதிப்பீடுகளும் 34
சீ பாங் விசா அட்டை 39
காணமற் போனவர்கள் 42
சென்மதி நிலுவையில் பிரச்சினை ஏற்படுவதற்கான காரணங்களும்
அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளும் 43
சுதந்திரத்தின் விலை சொல்லிவிட முடியுமா 51
சுதந்திரத்தின் விலை சொல்லிவிட முடியுமா 52
அந்த நாளும் வந்திடதோ 53
இலங்கையில் கிடைத்த பார்வதி வெண்கலச் சிலைகள் 54
நடிகமணி அவர்களுடன் சில நினைவுகள் 63
✓ பாரதிதாசன் கவிதைகளிலே நாட்டார் இலக்கியங்களின் தாக்கம் 66
பள்ளிக்கூடங்களில் நூல்நிலையங்கள் 72
விலங்கியல் 76
இந்து நாகரிகம் 79
வள்ளுவர் ஏற்கும் தலைக்கடவுள் 82
நாயக்கர் கால இலக்கிய முயற்சிகள் 87
வருமானச் செலவுக் கணக்குகள் 92
வெளிநாட்டு வியாபாரம் 98
எழுபதாம் ஆண்டுகளிலிருந்து ஈழத்தில் நிகழ்ந்த கலை இலக்கிய விவாதங்கள் 106
இளைஞர்களும் சமூகப் பணியும் 108
கல்வி என்னும் பயிர் 111
போதை: தனிமனிதப் பிரச்சினையல்ல, சமூகப் பிரச்சினை 114
வடமராட்சி அபிவிருத்தியில் குடாநாட்டிற்கு ஒரு சுற்றுப் புகையிரதப் பாதை 119
தமிழ் இலக்கியமும் ஆய்வு முயற்சிகளும் — சிறு குறிப்புகள் 125
குருதி — ஒரு திரவத் தொடுப்பிழையம் 134
அலைவடிவில் அனுப்பப்படுகிறது 137
விலையிடல் கொள்கை 140
அல்வாய்க் கிராமமும் அதன் கல்விச் சிறப்பும் 143
தாண்டல் மூலகங்கள்
147


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய் தெற்கு

# பாரதிதாசன் சனசமூக நிலைய
# வெண்பொன் விழா
# வாழ்த்து

திணை – பாடாண்டிணை துறை – வாழ்த்தியல்

விருத்தம்

கற்றவர்கள் மெய்யடியார் சூழ்ந்து வாழுங்
கனிமதுரத் தென்னல்வைப் பதியின் கண்ணே
கொற்றமுறு மூவேந்தர் சங்கம் ஆய்ந்த
கூடல்நகர்த் தீந்தமிழைக் குடித்துக் கவிதைப்
பொற்றேரிற் கொலுவிருந்த பார திதாசன்
பொன்னாமம் பூண்டசன சமூக நிலைய
நற்றாயே! நின்னருமை வெண்பொன் விழாவை
நாமின்று கண்டுகளி கொண்டோம் வாழி. 1

காளானைப் போன்முளைத்து மூன்று நாளைக்
காய்ச்சலைபோல் ஓய்ந்துமடி சங்கங் கோடி
ஆளான ஆட்களெலாம் ஆக்கி வைத்தும்
அணுவணுவாய்த் தேய்ந்தகதை அகிலஞ் சொல்லும்:
தாழாத மனவுறுதி கட்டுப் பாடு
தன்மானம் பொதுச்சேவை தலையாய்க்கொண்டு
மாளாமல் இருபானைந் தாண்டு மோங்கி
வான்பிறைபோல் வளர்ந்த வுந்தன் வனப்பேவாழி. 2

சிறப்பான செய்திகளைத் திரட்டித் தரூஉம்
தேமதுரத் தமிழாங்லத் தினச ரிகள்
இறவாத அறநூல்கள் சஞ்சி கைகள்
இனியகுறிப் பேடுகளை இல்லம் ஏந்தி
முறையான அறிவொளியை மக்கட் கூட்டி
முழுநேரப் பணியாற்றும் நின்மு யற்சித்
திறனாய முடியுங்கொள்! நீல வானின்
செங்கதிருந் திங்களும்போற் சிறந்து வாழி. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுகத்துத் தீபமென ஓங்கி நிற்கும்
மணிமாட வனப்பதனைத் – தமிழ்த்தாய் தந்த
கலையமுதாம் இயலிசைநா டகத்தை – மக்கள்
கருத்தீர்க்கும் தொலைக்காட்சிக் கவினை – இளைஞர்
பலருவக்கும் விளையாட்டுத் திறனைப் – பார்த்தோர்
பசிதீர்க்கும் திரைப்படத்தின் பண்பை – வெள்ளைக்
கலையுடுத்த சரசுவதி விழாவை யுந்தன்
காலத்திற் கண்டதனை மறவோம் வாழி. 4

திரிகரண தூய்மையொடு சிறந்த சேவை
செய்துவரும் எங்கிராம சேவ கர்க்கு
ஒருபெரிய துணையாகக் காலந் தோறும்
ஓங்கரசு – தாபனங்கள் உவந்த ளிக்கும்
பொருளுதவி யத்தனையும் பாகு பாடு
போக்கிமனப் பூரிப்பாய் விரைந்து செய்யும்
பொருவரிய சேவைக்கோர் உரைகல் லாகப்
புடமிட்ட தங்கமெனப் போந்தாய் வாழி. 5

தென்னல்வை மக்களுக்கே யன்றி வல்வை
திருமலைநீர் வேலிபொலி கண்டி கோப்பாய்
துன்னுமுயர் சாவகச் சேரி யாழிற்
தொல்லைகளா லள்ளுண்ட அகதி கட்குப்
பன்னரிய நிதிதேடிப் பாடு பட்டுப்
பகிர்ந்தளித்த தூயமனப் பான்மை யான
தன்னிகரில் லாதவுயர் ஆன்ம நேயத்
தர்மபணிக் கேழுலகுஞ் சான்றும் வாழி. 6

காணிநிலம் வேண்டுமென்றார் பார தியார்:
கட்டழிக்கும் சுயநன்மைக் காரர்க் கல்ல:
தோணுபொது நூலகமாய்த் தோன்று தற்குச்
சொல்லரிய பாடுபட்டும் கடைசி நேரம்
வேணுமென்று வெண்ணெய்திரள் கின்ற வேளை
விஷமிகளோ தாழிதனை யுடைத்து விட்டார்:
பூணுசுக ராசாவிருந் தயரும் போதில்
புன்சிறகார் ஈவிழுதல் புதுமைத் தல்ல. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் ஞானஅருட் செல்வ மீயும்:
அரியவித்தி யாலயங்கள் கல்வி ஈயும்:
பாலமுதம் ஈந்ததிருப் பாற்க டல்போல்
படிப்பகமும் பரந்தவுல கறிவி னோடு
சீலமிகு ஜீவதயை தெய்வ நீதி
தேசபக்தி யாதியன ஈந்த சேவை
மாலயனார் காணாத மகேசன் சேவை
வையகமும் வானகமும் வாழ்த்தும் வாழி. 8

''சாலவுமே கற்றுயர்ந்த மேதை யோரைத்
தரணிநட மாடுமொரு தகுதி வாய்ந்த
நூலகமே'' யென்றுரைத்தார் சான்றோர் இந்த
நுண்மதியைத் தாங்கிநூற் றாண்டு மேலாய்
ஆலறுகு போல்மிளிர மக்கள் தம்மின்
அடைக்குந்தாழ் இல்லாத அன்ப ளிப்பை
ஏலுமட்டுங் கொடுத்துதவி செய்தல் நல்ல
இதயமுற்றார் பணியென்றே யுலகம் ஏத்தும். 9

எண்ணுக்கும் எட்டுக்கும் அடங்கா துற்ற
இன்னபல சேவைகளை இனிதே யாற்றும்
கண்ணினிய தலைவர்செய லாளர் நிதியின்
காப்பாளர் நிர்வாகர் உறுப்பா ளர்கள்
நண்ணுமுடல் பொருளோடு ஆவி யெல்லாம்
நாட்டுக்காய்த் தியாகஞ் செய் நல்லோன்
கண்ணுதலோன் விநாயகர்அம் பாள்வயிரவர்
கருணையோடு பல்லாண்டு வாழ்க! மாதோ: 10

கவிமாமணி க. த. ஞானப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கு மென்னுல்,
தினையளவு பயனேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்.''

# பாரதிதாசன் சனசமூக நிலைய
# வளர்நிலை அறிக்கை

சு. கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்)

பாரதிதாசன் அவர்களின் பகுத்தறிவு, சீர்திருத்தம், மொழிப்பற்று, இனஉணர்வு, நாட்டுப்பற்று ஆகியவற்றிற் பற்றுக்கொண்டு, அப்புரட்சிப் பாவலனின் கவிதை உணர்வு களால் ஆகர்சிக்கப்பட்டு நின்ற இளைய தலைமுறையினர் சிலர் ஒன்றிணைந்து பெயர் சூடிய ஸ்தாபனந்தான் மேற்படி நிலையம்.

மாலிசந்தியிலிருந்து அல்வையூரை ஊடறுத்து அலைவாய் நோக்கிச் செல்லும் றோட்டின் இருவளைவுகளைத் தாண்டிச் செல்லும்போது, சற்றுக் கிழக்கே நோக்கினுல் பாரதிதாசனின் எழுச்சி மிக்க தோற்றம் காணலாம்! அல்வையூரின் மன வளர்ச்சியை யும் மதிப்பிடலாம்! வடமராட்சிப்பகுதி மட்டிலுமல்ல யாழ்குடா நாட்டிலும், ஏன் தமிழீழத்தின் எப்பகுதியிலும் 'பாரதிதாசன்' என்கின்ற குறியீட்டுப் பெயரின் பிரபல மாக மக்களால் அழைக்கப்படும் தாபனம் இச்சனசமூக நிலையம்.

அல்வையூர்க்கு அறிவுக் கருவூலமாக விளங்கும் இந்நிலையம் வளர்ச்சிப் படியில் வெள்ளி விழா காண்கிறது. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்திநாலில் சிறிய கட்டிடம் ஒன்றில் தொடங்கப் பெற்றது; இன்று கம்பீரமான கட்டிடத்தில் பல்துறைச் சமுதாயப் பணிகளைச் செய்து பொதுமக்களை தன்வயப் படுத்தியிருக்கிறது.

கிராமச் சங்கக் கட்டிடமொன்றில் ஆரம்பிக்கப்பட்ட பாரதிதாசன் படிப்பகம் தன்னைச் சுதாரித்துக் கொள்ள அரச நன்கொடை பெற வேண்டியிருந்தது. அதனுல் 1970-ம் ஆண்டு 'பாரதிதாசன் சனசமூக நிலையம்' எனப் பெயர் மாற்றம் பெற்றது. பாரதிதாசனின் உணர்ச்சியும், வளர்ச்சியும் இளைஞர்களின் எழுச்சியும் அப்போதிருந்த பாராளுமன்ற உறுப்பினரைக் கவர்ந்திழுத்தது. அன்னாரின் நிதி ஒதுக்கீட்டில் இருபத் தேழாயிரம் ரூபா நிலையத்துக்குக் கிடைத்தது. அதன் பயனாக இன்று உயர்ந்து நிற்கும் அழகான கட்டிடத்தில் நிலையம் இயங்கி வருகின்றது. பாரதிதாசன் வெறும் கட்டிட மல்ல. அது உயிர்த்துடிப்புள்ள சமூக சேவை நிறுவனம். பல்துறைப் பணிகளை பொது மக்களுக்காற்றி வரும் தாபனம். சாதி - இன மத பேதங்கட்கப்பாற்பட்டு மனிதத் துவத்திற்காக பணி செய்து நாள் தோறும் பரவப்படுவது.

கிராம மட்டத்தில் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இந்நிலையம் ஆற்றிவரும் சேவை சொல்லித்தெரிய வேண்டியதொன்றல்ல. சாதாரண பொதுமக்கள் – புதினம் விரும்பி கள் படித்துப் பயன்பெறுவதற்காகப் படிப்பகப் பிரிவும், புத்திஜீவிகள் – ஆய்பவர் பயன் பெற நூலகப் பிரிவும், அன்றாட நிகழ்வுகளை - செய்திகளைப் படித்தவர் - பாமரர் அனை வரும் அறிந்து பயன்பெற தொலைக்காட்சிப் பிரிவுமென மூன்று பகுதிகளாக அறிவுப் பணி நடைபெறுகிறது.

படிப்பகப் பகுதி வெளி மண்டபத்தில் இயங்குகிறது. படிப்பவர் பலர் ஒரே வேளை யில் இருந்து படிக்கக்கூடிய பாரிய மேசையில் நாளிதழ்கள் பல நாளாந்தம் வைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. தமிழீழத்தில் இருந்து வெளிவரும் உதயன், முரசொலி, ஈழநாதம், ஈழ நாடு என்பனவும், கொழும்பு வெளியீடுகளான தினகரன், வீரகேசரி, ஆங்கில ஏடு களாவன டெய்லிநியூஸ், ரைம்ஸ், என்பனவும் பன்னூறுமக்களால் படிக்கப்படுகின்றன. இவற்றினைவிட உள்ளூர்ப் பிரசுரங்கள் – செய்திகள் அவ்வப்போது வைக்கப்படுகின்றன.

மண்டப நடுப்பகுதியில் சஞ்சிகைகள் நிலை குலையாவண்ணம் பேணப்படுகின்றன. ஆனந்த விகடன், குமுதம், கல்கண்டு, அம்புலிமாமா, கோகுலம், ஜூனியர் விகடன் ஆகிய திங்கள் ஏடுகள் வாசகர்களால் பயன்படுத்தப்படுகின்றன. படிப்பகப் பகுதியில் நிலவும் அமைதியும் ஒழுக்கமும் மனங் கொள்ளத்தக்கது.

நூலகப்பகுதி தனிப்பகுதியாக உள் மண்டபத்தில் இயங்குகிறது. இருநூற்றெண் பது புத்தகங்களோடு தொடங்கிய இப்பகுதியில் தொளாயிரத்தைந்து புத்தகங்கள் இருக்கின்றன. இப்பகுதியைப் பயன்படுத்தும் அறிவுஜீவிகள் உறுப்பினராதல் வேண்டும். உறுப்பினர் சந்தா ரூபா ஐந்திலிருந்து இன்று பத்தாக்கப்பட்டுள்ளது. புத்தகத் தாம தக் கட்டணமாக ரூபா ஒன்று அறவிடப்படுகின்றது. இப்பகுதியை சிறுகதை - நாவல் நாட்டம் உள்ளோர்கள்தான் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். உசாத்துணை நூல் களும், உயர்கல்வி நூல்களும் பயன்படுத்தக்கூடிய உயர் கல்வி மாணவர்களை அவற் றைப் பயன்படுத்தும்படியான உந்துதல் கல்லூரிகளிலோ அல்லது ரியூற்றறிகளிலோ இல் லாதிருப்பது துரதிஷ்டவசமானதே.

நூல்நிலையப் பகுதியை எதிர்காலக் கண்கொண்டு நோக்கும்போது அது வளர்ந்து ஒரு பொது நூலகமாக மாறவேண்டும் என நிலைய நடத்துனர்கள் பல முயற்சிகளைச் செய்து வருகிறுர்கள். 25-06-85-ல் இதற்கெனச் செய்த பிரயத்தனங்கள் நிறைவேறும் தறுவாயில் தீய எண்ணங் கொண்ட சிலரால் தடைப்பட்டுப்போன செய்தியையும் எழுத வேண்டியுள்ளது. எனினும் முயற்சி கைவிடப்படவில்லை,

மூன்றுவது பகுதியாகத் தொலைக்காட்சிப் பிரிவு: மக்கள் தொண்டர் ஒருவரால் மனமுவந்து பாரதிதாசனுக்கு தொலைக்காட்சிப் பெட்டி (கறுப்பு, வெள்ளை) ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. மாலை வேளையில் மக்கள் கூடி அதன் பயனை அனுபவிப் பது கண்கூடு. ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரை காட்சி நடைபெறும். தமிழ் சினிமாப்படங்கள் விசேட நிகழ்ச்சியாக இடம் பெறுகின்றன. அனைத்து மக்களும் பயன்பெறும் பகுதியாக இப்பகுதி பணிபுரிகிறது.

அறிவு சார்ந்த மேற்கூறிய சேவைகளைவிட மக்களது உளத்துக்கும், உடலுக்கும் ஆரோக்கியந்தரும் விளையாட்டுக்கள், கலைநிகழ்ச்சிகள் 1979ம் ஆண்டிலிருந்து 1983 ஆண்டு வரை இனக்கலவரம் வரை நிலையத்தால் நடாத்தப் பெற்று வந்துள்ளன.

மின்னொளிக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை வருடா வருடம் நடாத்தி பெறுமதி வாய்ந்த கேடயங்களையும் பரிசில்களையும் சனசமூக நிலையம் வழங்கியமை யாவரும் அறிந்ததே. மாணவர்களும் அல்லாதோரும் நிலையத்தின் விளையாட்டுப்போட்டி களிலும், கலைநிகழ்ச்சிகளிலும் கலந்து பரிசில்களைப் பெற்றனர். 1983-ன் பின் இப் பணிகள் தொடர முடியா வண்ணம் தமிழீழத்தை துன்ப துயரங்கள் கௌவிக்கொண் டன. இன்று இடைவேளை போலிருப்பதால் பாரதிதாசன் வெள்ளிவிழா எடுக்கிறது.

''மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதில் பாரதிதாசன் மிக்க நம்பிக்கை கொண்டு சமூக சேவைகளிற் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது. சாதி, மத இன வேறுபாடுகள் எதுவும் சேவைகளில் காட்டப்படுவதில்லை. அறிவு வளர்ச்சிக்கான நிலையம் என்பதால் ஆண்டு தோறும் கலைமகள் விழா கொண்டாடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிப்பாளரின் வன்செயலின் போதும், அமைதி காக்க வந்தவர்களால் நாடு தாக்கி அழிக்கப்பட்டபோதும், தமிழீழ மக்கள் அகதிகளாயினர். அவ்வேளை பாரதிதாசன் வாளாதிருக்கவில்லை. தன்னாலியன்றளவு உதவிகளைச் செய்தமை பாராட்டுதற்குரியது. அத்தகைய உதவிகளில் சில:

அ) 16-08-83ல் திருமலை அகதிகளுக்கு 1429 ரூபா

ஆ) 12-09-83ல் திருமலை அகதிகளுக்கு 5776 ரூபா

இ) 07-08-84ல் வல்வை பொலிகண்டி வன்செயலால் பாதிப்புற்ற மக்களுக்கு 2235 ரூபா பெறுமானமுள்ள அரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய உணவுப் பொருள்கள்

ஈ) 01-02-86ல் மீளவும் திருமலையில் அகதிகளாகக்கப்பட்டவர்களுக்கு ரூபா 2389

உ) 1987ல் இந்திய ராணுவ அட்டூழியத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொள்ள ஆவன செய்தமை.

ஊ) 28-10-87ல் அமைதிப் படையின் அழிப்பு வேலைகளால் இடம் பெயர்ந்து வந்த நீர்வேலி, கோப்பாய், சாவகச்சேரி மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்தமை

ஆகிய சமூக நலப் பணிகளால் மக்கள் பாரதிதாசனில் ஒருவகைப் பற்றும் பாசமும் உள்ளவர்களாக விளங்குகிறார்கள்.

மேலும் இந்நிலையம், உலக மக்களுக்கு உதவிக் கரம் நீட்டுகின்ற செஞ்சிலுவைச் சங்கம், போரூட் நிறுவனம் போன்றவற்றை அணுகி அவற்றின் உதவிகளைப் பாதிப்புற்றோர் பெற்றிட உழைத்துவருகிறது. கிராம மட்டத்தில் நடைபெறும் புனர்நிர்மாண வேலைகளிற் பங்களிப்பும் தூண்டுதலும் செய்து வருவது மகிழ்தற்குரியது.

போக்குவரத்துப் பாதைகள், வெள்ள வாய்க்கால்கள் சீரமைப்பதிலும், ஏழை எளிய அநாதை மக்களை இனங்கண்டு அவர்கட்கு உதவிட கனதனவான்களையும் அரசு சார் நிறுவனங்களையும் நாடி நிற்கும் மனிதாபிமான நிலையம் இது என்பது வெறும் புகழ்ச்சியன்று.

மேற்கூறிய சேவைகளை விடப் பாரதிதாசனின் உள்ளக வளர்ச்சியையும் நாம் மதிப்பிடல் வேண்டும். தனியார் ஒருவரின் காணியிலமைந்த இச்சனசமூக நிலையம் தனது சிக்கன சேமிப்பிலிருந்து ரூபா 5000/- கொடுத்து 12.72 குழி நிலத்தைச் சொந்தமாக்கிக் கொண்டுள்ளது. நிலைய வளர்ச்சி நிதியத்தின் வளர்ச்சியிலும் தங்கியிருக்கிறது என்பதால் 28-11-77ல் நூறு ரூபாவை வைப்புப் பணமாகக் கொண்டு தொடங்கப் பெற்ற சேமிப்பு நிதியம், இன்று 17,714-14 சதத்துக்கு வளர்ந்துள்ளது.

இந்நிலையம் 08-02-84ல் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு அனுமதி பெற்றது. வேலை உண்மையான வேலையாகச் செய்யப்பட்டமையை உணர்ந்த உள்ளூராட்சி உதவியாணையாளர் அவர்கள் ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வரை பெறுமதியுள்ள ஒப்பந்த வேலைகளை நிலையம் செய்யலாம் என அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பன்முகப்பட்ட செலவுகளையும் தாங்கி நிலைய நிதியம் வளர்ந்து வருவது, தனிப்பட்டோரின் அன்பளிப்புக்கள் சந்தாக்கள் மட்டுமன்றி ஒப்பந்த வேலைகள், வாடகைகள் போன்றவற்றினாலுமாம். மின்உபகரண வாடகைப்பணம், புத்தக தாமதக் கட்டணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய பத்திரிகை விற்பனை போன்றவற்றின் மூலம் நிதி சேர்கிறது. இந்த இடத்தில் நிலையத்தின் செலவு வகைகளான,

I. பத்திரிகைகள் சஞ்சிகைகள் கட்டணம்
II. மின்கட்டணம்
III. தொலைக்காட்சி அனுமதிப் பத்திரம்
IV சரஸ்வதி பூசை
V. கட்டட உபகரணத் திருத்தம்
VI. உடனுடன் ஏற்படுச் சில்லறைச் செலவினம்

என்பனவற்றையும் நாம் மனங்கொளல் வேண்டும்.

வெறும் சாதாரண மண்டபமாயிருந்த கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் பாரதிதாசன் என்ற பெயரில் கம்பீர தோற்றத்தில் வளர்ந்திருப்பது மட்டுமல்ல அது தன்னகத்தே பெறுமதிவாய்ந்த சொத்துக்களையும் கொண்டிருக்கிறது. தொலைக்காட்சிப் பெட்டி இரும்பு அலுமாரி, பலர் அமர்ந்து வாசிக்கக் கூடிய பாரிய மேசை, இரண்டு சஞ்சிகை மேசை, ஆறு வாங்கில், ஐந்து கதிரை ஆகியவற்றுடன் தாக சாந்திக்கென ஒரு மண்கலம்.

பாரதிதாசனின் இத்துணை வளர்ச்சிக்கும் சேவைக்கும் ஏன் வெள்ளிவிழா எடுப்பதற்கும் காரணஸ்தர்களாய் விளங்குபவர்கள் நிர்வாகத்தினரே. 1964ம் ஆண்டு நாற்பது உறுப்பினர்கள் இருந்தார்கள். இன்று எழுபத்திரண்டு உறுப்பினர்கள் சந்தா செலுத்துகிறார்கள். பணமுட்டின்றி யாவரும் சேர்ந்திட வாய்ப்பளிக்கு முகமாக தொடக்கத்தில் உறுப்புரிமைப் பணம் இருபத்தைந்து சதங்கள் மட்டுமே. 1975ல் இது ஒரு ரூபாவாகி 1983 லிருந்து ஐந்து ரூபாவாகி இருக்கிறது. அன்றைய இருபத்தைந்து சதமும் இன்றைய ஐந்து ரூபாவும் ஒன்றுபோல.

பாரதிதாசன் ஒரு திறந்த புத்தகம்.! யாரும் எவரும் ஆங்கு பேணப்பட்டு வரும் ஏடுகளையோ, ஆவணங்களையோ, கணக்கு வழக்கு அறிக்கைகளையோ பார்வையிடலாம். ஒப்பு நோக்கலாம். நிலைய உறுப்பினர் ஏடு, நூலக உறுப்பினர் ஏடு. நூல் விபரஏடு, புத்தகம், பத்திரிகை, இரவல் வழங்கும் ஏடு, நிலையான சொத்தேடு நன்கொடைக் கணக்கேடு, நிலைய அன்பளிப்பேடு, சஞ்சிகை பத்திரிகை விபர ஏடு, என்பனவும், பொதுக்கூட்ட அறிக்கைகள், நிர்வாக குழுக் கூட்ட அறிக்கைகள், 1975 லிருந்து ஆண்டாண்டு சமர்பிக்கப்படும் பரிசீலிக்கப்பட்ட வரவு செலவு அறிக்கைகள் என்பனவும் நிர்வாகத்தினரால் பேணப்பட்டு வருகின்றன.

நாமறிந்த பெரும் பெரும் தாபனங்களே, வைத்திருக்கவும் வெளிக்காட்டவும் தயங்கும் அச்சிடப்பெற்ற வரவு செலவு அறிக்கைகள் பாரதிதாசனின் தனித்துவத்திற்கு எடுத்துக் காட்டாகும். அதனாலேதான் பாரதிதாசன் ஒரு திறந்த புத்தகம் எனப்படுகிறது. தூய்மையான நிர்வாகம், அதன் செயற்பாடுகள் அனைத்தும் நிதி கையாளும் வகையிலேயே தங்கியுள்ளது என்பது பாரதிதாசனின் கொள்கையாகும்.

இன்று இருபத்தைந்தாண்டுகளை நிறைவு செய்து வெள்ளி விழா காண்கின்ற இந்நிலையம் இருபத்தைந்து அகவையுடைய வாலிபனொருவனைப் போன்றதெனக்கூற மனம் வரவில்லை. காரணம் வாலிபன் ஈற்றில் கிழவனாகி விடுவான். பாரதிதாசன் கிழவனாக மாறிவிடக் கூடாதென்பதற்காக பல்லாண்டு வாழ்கின்ற ஆலமரமாக ஆக வேண்டும் என வாழ்த்துகிறது மானிடம்.

மனித நேயமும், பொதுநல சிந்தையும், தொண்டுள்ளமும் வாய்க்கப்பெற்ற நிர்வாகம் ஒன்று தன் பெயரையே குறிப்பிட விரும்பாது, பரந்த மனப்பக்குவம் வாய்ந்த இளைஞர்களைக் கொண்டியங்குவது பாரதிதாசன் வளர்நிலைக்கு அடிப்படை என்பதை ஊரொப்பும். உலகம் போற்றும்.

வளர்க பாரதிதாசன்! வாழ்க தமிழினம்!

வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி - பாரதிதாசன் ஓர் ஒப்பீடு

திரு கி. நடராசா B. A. (Cey) Dip - in. Ed.
தலைவர், பாரதிதாசன் சனசமூக நிலையம், அல்வாய்.

கலியுகத்தை மாய்த்து, மெய்க்கும் கிருதயுகமாம் சத்தியயுகத்தைத் தோற்றுவிப்பதற்காகவே பாரதி தோன்றினார். புதியதோர் உலகம் செய்து, கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்பதற்காகத் தோன்றினார் பாரதிதாசன். பாரதியின் வழித்தோன்றலாக பாரதிதாசன் காணப்படுகின்ற போதிலும் கவிதை வேகத்தின் ஆழத்திலும், விரிந்த பார்வையிலும் பாரதியிலிருந்து வேறுபடுகின்ற இயல்பு பாரதிதாசனிடம் காணப்பட்டது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட பாரதநாட்டிலே, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாருக்கு தீர்ப்பு வழங்கிய சந்தர்ப்பத்தில், பின்ஹே என்ற நீதிபதி 'பாரதியின் பாட்டைக் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும். அடிமைப் பட்டதேசம் ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்' என்று குறிப்பிட்டிருந்தமை பாரதிபற்றி சிந்திக்க வைக்கின்றது. 'பாரதியின் பாடல்களைப் பாடுவதும் ராஜத்துரோகம்' எனச் சட்டமும் செய்து அடக்கு முறையினால் பிரித்தானிய சாம்ராச்சியம் தன்னைக் காத்துக் கொள்ள முனைந்தது. 'பாரிசவாயுவும் பக்கவாதமும் போட்டலைக்கும் இன்றைய கவிதையுலகிலே பாரதிதாசனுடைய பாட்டுக்கள்தான் தலைநிமிர்ந்து நடக்கின்றன என்று புதுமைப்பித்தன் பாரதிதாசனைப் பற்றி புகழ்ந்து கூறுவதும் சிந்திக்கத்தக்கது. பாரதிபாடல்களை அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுதலை பெறத் தூண்டிய தேசியப்பாடல்கள் எனக் கொண்டால், பாரதிதாசனின் பாடல்களை விடுதலை பெற்ற பாரதநாட்டில் இன மொழிக்காகப் பாடிய தமிழுணர்வுப் பாடல்கள் எனக் கொள்வதில் தவறில்லை. சுருக்கமாகக் கூறின் தமிழால் இவ்விருவரும் புகழ் பெற்றனர். இவ்விருவரால் தமிழ் பொலிவு பெற்றது.

பாரதியின் தேசியப் பாடல்களினாலும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களினாலும் நாட்டு விடுதலைக் கொள்கையினாலும் கவரப்பட்டவரே பாரதிதாசன். அவரது உள்ளத்தில் பாரதியார் எத்தகைய இடத்தைப் பெற்றிருந்தார் என்பதை,

> 'பைந்தமிழ்த் தேர் பாகன்: அவனொரு
> செந்தமிழ்த் தேனீ சிந்துக்குத் தந்தை
> குவிக்கும் கவிதைக்குயில் இந்நாட்டினைக்
> கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவி
> முரசு'

என்ற பாடல் அடிகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. இதேபோன்று பாரதியாரின் உள்ளததிலும் பாரதிதாசன் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. புலவர் சுப்புரத்தினம் என அழைக்கப்பட்ட பாரதிதாசனின் கவிதை ஆற்றலில் சந்தேகம் கொண்ட சிலர் பாரதியார் முன்னிலையிலேயே அவரைப் பாடும்படி கேட்டனர். 'எங்கெங்கும் காணினும் சக்தியடா' என்று தொடங்கும் பாடலை சுப்புரத்தினம் அவர்கள் பாடிக்காட்டினார். பாரதியார் முன்னிலையில் முதன் முதல் பாடிய அப் பாடலை பாரதியே தம் கையால் எழுதி, அதன் தலைப்பில் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சார்ந்த கனக - சுப்புரத்தினம் எழுதியது' என்று குறிப்பிட்டு சுதேசமித்திரன் பத்திரிகையில் பிரசுரித்தார்என அறியப்படுகின்றது. புலவர் சுப்புரத்தினமும் பாரதியாரிடம் கொண்டிருந்த அளவு கடந்த பற்றுதலினாலே தன் பெயரையே பாரதிதாசன் எனமாற்றி இறுதிவரை பாரதிதாசன் என்றே கையெழுத்திட்டும் வந்தார்.

பாரதியின் கருத்துக்களால் நன்கு கவரப்பட்ட பாரதிதாசன், தமிழகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமரியாதை இயக்கம் தோன்றிப் பகுத்தறிவு நெறிக்கருத்துக்கள் கருத்தூன்றத் தொடங்கிய காலத்தில் அவரது உள்ளம் அதனுல் ஈர்க்கப்பட்டது. சமுதாயத்தில் நிலவி வந்த குருட்டு நம்பிக்கைகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் சாடத் தொடங்கினுர். இவ்வகையில் பாரதியுடன் ஒப்பிடும் போது பாரதிதாசனின் பாடல்கள் வலுவுள்ளதாகக் காணப்படுகின்றன. வீரசுதந்திரம் வேண்டிப்பாடிய பாரதி, தம்காலத்து மக்களின் நிலைகண்டு,

அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடி – கிளியே
ஊமைச் சனங்களடி' என்று

பாடுகின்றுன். இது போன்று ஆனுல் வேருெரு சூழ்நிலையில் மக்கள் தமக்குள் ஒற்றுமை யுணர்ச்சி குறைந்து வேற்றுமைக்கு ஆளாகி சண்டையிட்டு அழிகின்ற சமுதாய நிலையை கண்ட பாரதிதாசன்,

''எச்சாதிக்கிவர் சாதி இழிவென்று சண்டையிட்டுப் பஞ்சாகிப் போனுரடி'' என்று பாடுவது ஒப்பு நோக்கத்தக்கது. சமுதாய ஏற்றத் தாழ்வுகளைச் சாடுகின்ற வகையில் பாரதியின் பாடல்களிலும் பாரதிதாசனின் பாடல்களில் வேகம் கூடுதலாகக் காணப்படுகின்றது.

'சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல்பாவம்' என்று

பாடுவதோடும் சமுதாயப் பிரிவுகளைக் கண்டு 'கொஞ்சமோ பிரிவினைகள் ஒரு கோடி என்றுல் பெரிதாமோ' என்று இடித்துரைப்பதோடும் நின்றுவிடுகிறுர் பாரதி. ஆனுல் பாரதிதாசனே,

சூத்திரனுக்கொரு நீதி – தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேருெருநீதி
சாத்திரம் சொல்லிவிடுமாயின் – அது
சாத்திரமன்று சதியென்று கண்டோம்

என்று பாடும்போது உள்ளக் குமுறலாகவே அது வெளிவருகின்றது. பேராசிரியர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் சமவுரிமையில்லாத நிலையினைக் கண்டு எரிமலையாக குமுறிப் பாடிய பாடல்களில் சமுதாயத்தின் உரிமைக்குரல் என்றென்றைக்கும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும் என்று பாரதிதாசன் பாடல்கள் பற்றிக் குறிப்பிட்டது இவ்விடத்தில் மிகப் பொருத்தமாகவே தோன்றுகின்றது.

ஒரு நூற்றுண்டிற்கு முற்பட்ட தமிழ் நாட்டுப் பெண்ணின் சமுதாய வாழ்க்கைக்கும் இன்றைய தமிழ்நாட்டுப் பெண்ணின் சமுதாய வாழ்க்கைக்கும் இடையே எத்தனை எத்தனையோ மாறுதல்கள் உண்டு. இம்மாற்றங்களுக்கு அடிப்படையாக விளங்கியவர்கள் பாரதியும் பாரதிதாசனுமே. அன்னியருக்கு அடிமைப் பட்டதன் விளைவாக வீரக்கண்ணகி வழிவந்த பெண் சமுதாயம் அச்சமொன்றையே அணிகலனுகக் கொண்டது. அதன் விளைவாகவே,

நாணும் அச்சமும்
நாய்கட்கு வேண்டுமாம்
ஞானநல்லறம் வீரசுதந்திரம்
பேணு நற்குடிப்
பெண்ணின் குணங்களாம்

என்று பெண்விடுதலையையும் பெண்ணடிமையையும் நீக்க முயலுகின்றுர் பாரதி. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று நான்கு சுவர்களுக்குள்ளே சிறைப்படுத்திய பெண்குலத்தை புதுமைப் பெண்ணுக்க முயன்று நின்றுர். மகாபாரதத்தைப் பாட வருகின்ற பாரதி பார்த்தனின் வில்லாற்றலையோ அல்லது வீமனின் தோளாற்றலையோ பாட முன்வரவில்லை. பாஞ்சாலியின் வீரசபதமே அவர் உள்ளத்தை ஈர்த்தது. துச்சாதனனுல் பாஞ்சாலி இழுத்து வரப்படும்போது 'என்ன கொடுமையிது' என்று மக்கள்

'நெட்டை மரங்களென
நின்று புலம்பினுர்
பெட்டைப் புலம்பல்
பிறர்க்குத் துணையாமோ'

என மக்களைச் சாடுகின்ற பாஞ்சாலி துரியோதனன் அவையிலே கூறுவதும் சிந்திக்கத்தக்கது.

'தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்
பாவி துச்சாதனன் செந்நீர் - அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழ்த் துரியோதனன் ஆக்கை
இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து - குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன்யான் - இது
செய்யு முன்னே முடியேன்'

இந்த வகைகளை நாட்டில் வாழும் ஒவ்வொரு பெண்ணும் மனனம் செய்து மனத்திட்பம் பெறவேண்டும்.

இவ்வகையிலே பெண்விடுதலை பாட வந்த பாரதிதாசன் தன் சமகால நிகழ்வுகளைச் சாடி பெண்ணுக்குமேலும் பெருமை தேட முற்படுகின்றார். பாரதியாரைப் போல பெண்ணுலகத்தில் மண்டிக்கிடந்த அறியாமையினையும் அடிமைநிலையினையும் சாட முற்படும் கவிஞன் அதற்கு அப்பால் கைம்மைத் துயரையும், குழந்தை மணக் கொடுமையையும் சாடுகின்றான். மகளிர்க்கு நீதி வழங்காத மனித உள்ளத்தை சுக்கல் சுக்கலாக வெடிக்கச் செய்யும் வெடிமருந்துகள் தான் பெண்களைப் பற்றி இவர் பாடிய பாடல்கள் என்று மு. கோவிந்தசாமி என்பவர் பாரதிதாசன் கவிதைத் திறன் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். சமுதாயப் புரட்சியில் பெண்களுக்காக உரிமைக்குரல் எழுப்பியதில் கைம்மை நோன்பும் குழந்தைமணக் கொடுமையும் முக்கியம் பெறுகின்றன. வாழ்க்கை வளம் புரியாத ஏழு வயதுச் சிறுமிக்கு திருமணம் நடக்கின்றது. கன்னிப்பருவம் எய்தும் வேளையில் அவள் கணவனே இறந்துவிட்டான். இக்கருவை மையமாகக் கொண்டு அப்பெண்ணின் துயரைக் கண்ணீர்க் காவியமாகத் தருகின்றார் பாரதிதாசன்,

சின்ன வயதினில்
என்றனையோர் - பெருஞ்
சீமான் மணந்தனன்
செத்துவிட்டான் - எனில்
அன்னது நான்செய்த
குற்றமன்று - நான்அமங்கலை

இத்தகைய கொடுமையின் உச்சக் கட்டமாகக்

''கோரிக்கையற்று கிடக்கு
தண்ணே - இங்கு
வேரிற் பழுத்த
பலா - மிகக்
கொடியதென் றெண்ணிடப்
பட்டதண்ணே - குளிர்
வடிக்கின்ற வட்டநிலா''

என்றெல்லாம் கைம்மை நோன்பினைக் கண்டிக்கின்றார். பாரதியும் கண்டிக்காத சமுதாயக் கொடுமைகளைக் கண்டித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்றும் குறிப்பிடுகின்றார்.

இரு கவிஞர்களும் தலைக்கேறிய தமிழ் வெறி கொண்டவர்கள். எனினும் தமிழின் பெருமையைக் கூறுகின்ற வகையில் இருவருக்குமிடையே வேறுபாடு உண்டு. இதற்குக் காரணம் இரு கவிஞர்களும் வாழ்ந்த காலப் பின்னணி வேறுபட்டமையேயாகும். பாரதியார் இந்திய விடுதலைப் போராட்டத்திற்காக முன்னின்று உழைத்த கவிஞர். இதனால் அவரிடம் தேசியப்பற்று மேலோங்கிக் காணப்பட்ட தேயன்றி குறுகிய இனவாத மொழிவாத சிந்தனைகள் மேலோங்கிக் காணப்படவில்லை. விடுதலைப் போரில் தமிழ்மக்கள் காட்டிய ஆர்வம் குறைவாக இருந்தமையாலும், விடுதலைக்கு இனமொழி உணர்வு அடிப்படையாக இருந்தமையாலுமே அவர் தமிழ்மொழியைப் பற்றியும் தமிழ் நாட்டைப் பற்றியும் பாட முற்பட்டார்.

''செந்தமிழ் நாடெனும்
போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது
காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற
பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது
மூச்சி னிலே''

என்று பாடும் போது மேற்குறிப்பிட்டவுண்மையை உணரக்கூடியதாக அமைந்துள்ளது. ஆங்கிலமொழி பேசி, ஆங்கிலத்தையே தம் வீட்டு மொழியாகவும் கல்வி மொழியாகவும் கொண்டவர்களைக் கண்டிக்குமுகமாகவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும்
காணோம்! என்றும்
தெள்ளுற்ற தமிழமுதின்
சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக்
கண்டார்! என்றும்

தமிழ்மொழியின் பெருமை பாடுவதோடு நின்று விடுகின்றார். ஆனால் பாரதிதாசனோ உலகிலுள்ள அனைத்துக்கும் மேலாகத் தமிழையே கருதினார். தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழின் சிறப்புப் பற்றி பாரதிதாசன் பாடிய அளவிற்கு வேறு எவருமே பாடவில்லை. அவரது சிந்தை சொல் செயல் எல்லாமே தமிழோடு ஒன்றிப் போயிருந்தது. இதற்குக் காரணம் திராவிட இயக்கத்தின் பின்னணி, சுயமரியாதை இயக்கம், ஹிந்திமொழி எதிர்ப்பு போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழ்ப்பற்று அவருள்ளத்தில் எந்த அளவிற்கு கரைபுரண்டு ஓடிற்று என்பதை

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சிப்
பாகிடை ஏறிய ருசியும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்-தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்

என்றும்,

மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள்
மாத்தமிழுக்கு ஈடில்லை
என்றுரைப்போம்!

என்றெல்லாம் கூறுவதிலிருந்து அறியக் கூடியதாகவுள்ளது. தமக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பு எத்தன்மையானது என்பதை,

'வெண்ணிலாவும் வானும் போல
வீரனும் கூர்வாளும் போல
வண்ணப் பூவும் மணமும் போல
மகரயாழும் இசையும் போல
கண்ணும் ஒளியும் போல எனது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ'

என்று கோடிட்டுக் காட்டுகின்றான். ஹிந்தி மொழியை அரசகரும மொழியாக்க வேண்டும் என்ற சர்ச்சை எழுந்த காலத்தில்,

இந்திக்கு தமிழ்நாட்டில்
ஆதிக்கமாம் - நீங்கள்
எல்லோரும் வாருங்கள்
நாட்டி னரே
செந்தமிழ்க்குத் தீமை
வந்தபின்னும் – இந்த
தேகம் இருந்தொரு
லாப முண்டோ

என்றும்,

எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டி வரும்
அற்பமென்போம் அந்த இந்திதனை
– அதன்
ஆதிக்கந் தன்னைக் குலைத்திடுவோம்.

என்றெல்லாம் பாடும் இடங்களில் பாரதியிலும் தமிழ் உணர்வு பாரதிதாசன் பாடல்களில் மேலோங்கியே காணப்படுகின்றது.

சமுதாயத்தின் குருட்டு நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும் அகற்றப்பட வேண்டுமாயின் எல்லோர்க்கும் கல்வியளித்திடல் வேண்டும் என்பதில் இரு கவிஞர்களும் கருத்தொற்றுமையுடையவராகவே காணப்பட்டனர்.

கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு

என்று தமிழ்நாட்டின் கல்விச் சிறப்பினைக் கூறிவரும் பாரதி,

'இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல்வேண்டும்'

என்றும் கூறியவர்,

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்'

என்று தமிழ்மொழிக் கல்வியின் அருமை பெருமைகளையும் குறிப்பிடத் தவறவில்லை. பாரதிதாசனும் தமிழ் வழிக் கல்விவேண்டும் என்பதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உலகியலின் அடங்கலுக்கும்
துறைதோறும் - நூங்கள்
ஒருத்தர் தயை இல்லாமல்
ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும்
பாய்ச்சி விடவேண்டும்'

என்ற அடிகளால் குறிப்பிடுகின்ருர். அறியாமையை ஒழிப்பதற்கு தமிழ்நாட்டிலுள்ள வீடுதோறும் கலையின் ஒளி திகழவேண்டும் என்றும், வீதிதோறும் கல்லூரிகளும், நகரந்தோறும் கலாசாலைகளும் இயங்க வேண்டுமென்றும், கல்வி நலம் அறியாத கசடரின் ஊர்களை எரியினுக்கு ஊட்டவேண்டுமென்றும் பாரதி கூறுகின்ருர். அறத்தின் பெருமையை வளர்க்க வேண்டுமாயின்,

'அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்

என்று எல்லோர்க்கும் கல்வி வேண்டுமென பாரதி வலியுறுத்துகின்ருர். பாரதிதாசனே எளிமை காரணமாக ஒருவன் படிப்பதற்கு முயலவில்லை என்ருல் இங்குள்ளோர் அனைவரும் அதற்காக நாணப்படவேண்டும் என்கிருர்.

'கறைகள் போகா திருப்பதென்ன
கட்டாயக் கல்வி கிட்டாமைதான்'

என்றும் பாரதிதாசன் குறிப்பிடுகின்ருர்.

இவர்கள் இருவரும் பாடிய பல்வேறு துறைகளில் ஒப்புமை காணப்படுகின்றன. சமூகத்தில் மண்டிக் கிடக்கும் எல்லா வகையான அநீதிகளையும் இருவரும் பாடியுள்ளனர். இருவரும் புரட்சிக் கவிஞர் என்றே அழைக்கப்பட்டனர். புரட்சி என்பது அடிப்படை மாற்றம். அந்தவகையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் புரட்சியை ஏற்படுத்தியவர் பாரதி. புரட்சியை நிலைநாட்டியவர்பாரததிதாசன்.

*''ஏடா தமிழ்வீரா! உனை*
*எலிபோல் நினைத்தாரா?*
*வாடா பகையூடே அற*
*வலியின் துணை யோடே*
*நாடா பிணக்காடா என*
*நால்வர் மடிந் தாலும்*
*போடா அவர்வழியே! நகை*
*புரிவாள் தமிழ் மொழியே!*

**— கவிஞர் காசி ஆனந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - ஒரு கண்ணோட்டம்

செ. யோகராசா பி. ஏ. சிறப்பு; பி. லிட்; டிப். இன் எடியு

க. பொ. த. உயர்தர வகுப்பிலே பயிலும் மாணவர் பலர், சில சந்தர்ப்பங்களில் தாம் எதிர்பார்க்கும் சிறந்த பேறுபேறுகளை தேர்வின்போது அடையமுடியாதவர்களாக உள்ளனர். விடை அளிக்கும் முறையிலே காணப்படும் தவறுகளும் இதற்குக் காரணமாகின்றது என்று கூறுவதில் தவறில்லை. தமிழை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்க்கு இவ்விதத்தில் சில குறிப்புக்களைக் கூறுவது அவசியமாகின்றது.

## தமிழ் I

### வினா 1: அ) குறட் பாக்களுக்குப் பொருள் எழுதுதல்:

எதிர்பார்ப்பது போல பெரும்பாலோர் இவ்வினாவுக்குத் திருப்திகரமான விடை தருகின்றனர் என்று கூறமுடியாது; அவசியமாகப் பொருள் வேண்டப்படும் (குறட்பாக்களில் உள்ள) கடினமான பதங்களுக்கு விளக்கம் தராமையினால் உரிய புள்ளிகளை முழுமையாகப் பெறத் தவறிவிடுகின்றனர்.

### ஆ) குறிப்பிட்ட செய்யுள்களுக்கு சந்தர்ப்பங்கூறி, பொருள் விளக்கந் தருதல்:

சந்தர்ப்பம் எழுதுவது எப்படி என்று தெரியாத மாணவரே பலர்; இவர்கள் பொருளையே சந்தர்ப்பமாகவும் கருதி எழுதுகின்றமை கவனிக்கத்தக்கது. சரியாக எழுதுவதோடு, இரு செய்யுள்களுக்குமான சந்தர்ப்பத்தை தனித்தனியே எழுதாமல் ஒன்றாக எழுதுவது நேர விரயத்தைத் தடுப்பதாக அமையும்.

### வினா 2: I) ஆசிய ஜோதியிலிருந்து தரப்படும் பாடற் பகுதியில் இடம் பெறும் உணர்ச்சியினை எடுத்துக் கூறுதல்:

இப்பகுதிக்கு 98% ஆன மாணவரும் பொருத்தமான விடை எழுதுவதில்லை; பாடல்களின் பொருளையே - அதுவும், ஆசிய ஜோதிப் பாடல்கள் மிக எளிமையானவை - தந்துவிடுகின்றனர்.

### II) அல்லது 'இலக்கியவழி' உரைநடைப் பகுதியிற் காணப் படும் சிறப்புகளை விளக்குக.

இப்பகுதி அபூர்வமாகவே தெரிவு செய்யப்படுகின்றது. எழுதுவோரும் தரப்பட்ட பகுதியை திரும்ப எழுதுவோராகவே காணப்படுகின்றனர். சுருங்கக் கூறின் (பயிற்சி பெற்றிருப்பின்) எளிமையானதும், பகுதி I இல் அதிக புள்ளிகளை (16) கொண்டதுமான இவ்வினா மாணவரினது கவனிப்பையும், ஆர்வத்தையும் பெறத் தவறி விடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### வினா 3: திருக்குறள்

அதிகாரப் பொருளை (பொதுவாக) வகுத்து விளக்கும்படியோ, அதிகாரத்திலிடம்பெறும் குறிப்பிட்ட அம்சங்களுக்கு அழுத்தம் கொடுத்தோ வினா அமைவதே மரபு. எவ்வாறமையினும் மாணவர் பலரும் அதிகாரப்பொருள் முழுவதையுமே அவ்வாறே தருபவராகவே காட்சி தருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா 4: காரைக்காலம்மையார் புராணம்

குறிப்பிட்ட பாடநூல்களுள் இந்நூலே இலகுவானதாக மாணவரால் கருதப் படுகின்றது; வினாக்களும் அவ்வாறே நோக்கப்படுகின்றது. அதேவேளையில் எத்தகைய வினா இடம்பெறினும் காரைக்காலம்மையார் புராணத்தின முழுக் கதையையுமே மாணவர் எழுதுகின்றனர். வினாவை வாசித்தறிந்து தெளிவுபெற்று எழுதும் ஆற்றல் குன்றியுள்ளது.

வினா 5: முகியித்தீன் புராணம்

இந்நூல் தொடர்பான வினா நேரடியாகவும் இலகுவானதாகவும் அமைந்தாலும் விருப்பத்துக்குரிய நூலாக அமைவதால், பல பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதில்லை; இஸ்லாம் சமயச் சொற்கள் நிறைய உண்டு என்ற தவறான அபிப்பிராயமே இதற் குக் காரணமாகும். ஆயினும் படித்து எழுதும் மாணவர் திருப்திகரமான விடை அளிப்பவராகவே விளங்குகின்றனர்.

வினா 6: இரட்சணிய யாத்திரிகம்

இந்நூல் தொடர்பான வினாவுக்கு பெரும்பாலோரால் திருப்திதரும் விதத்தில் விடை எழுதப்படுகின்றது.

வினா 7: ஆசியஜோதி

இந்நூல் வினா சற்று ஆழமான முறையில் அமையும்போது திருப்தியற்ற விடை களே கிடைக்கின்றன.
(எ-டு: ஓகஸ்ட் 89)

வினா 8: இலக்கியவழி

குறிப்பிட்ட ஒரு கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு வினா அமையும் போது மாணவரால் விடை எழுதப்படுகின்றது. வினா பல கட்டுரைகளைத் தொடர்பு படுத்தி அமையும்போதும் (எ-டு. ஓகஸ்ட் 89, பொதுவான தன்மையில் அமையும் போதும் (எ-டு: ஓகஸ்ட் 83) மாணவர் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கும் ஆற்றல் அற்றவராகக் காணப்படுகின்றனர்.

(அல்லது) இலக்கியக் கட்டுரைகள்

இந்நூல் வினா மிக அரிதாகவே தெரிந்தெடுக்கப்படுகின்றது. எழுதுவோரும் ஏனோதானோ வென்ற மனநிலையில் எழுதுகின்றனர்.

**தமிழ் II**

வினா 1: கட்டுரை எழுதுதல்

கட்டுரை நன்கு பரிச்சயமான விடயமாக இருந்தால் மட்டுமே; (உ-ம் நாட் டுப் பாடல்கள், முன்னர் பாடநூலாக 'நாட்டார் பாடல்கள்' பற்றிப் படித்தமையினா லேயே இதுவும் எழுதப்படுகின்றது) திருப்தியளிக்கின்றது. அன்றி, மாணவரின் மேல திக வாசிப்பறிவின்மையையும், பொது அறிவு குன்றியுள்ளமையையுமே 'கட்டுரை' விடை அம்பலப்படுத்துகின்றது. (எ-டு; 'தமிழில் அறிவியல் நூல்கள்' பற்றி வின வும்போது அறநூல்கள் பற்றி எழுதுவர். 'அறம் மறவற்க' என்று கேட்கும்போது சங்க மருவியகால அறநூல்கள் பற்றி மட்டுமே எழுதுவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா 2: உரைப்பகுதிகளை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுதல்:-

மாணவர் அக்கறை எடுக்காத வினாக்களுள் இதுவுமடங்குகின்றது. பந்தியில் கூறப்படும் விடயத்தைக் கிரகித்து எழுதத் தெரியாமை, சுருக்கம் எழுதத் தெரியாமை, சுருக்கத்தை விளக்கி எழுதத் தெரியாமை, அணிகள் பற்றிய அடிப்படை அறிவுகூட இல்லாமை என்ற விதங்களில் இன்றைய மாணவரின் கல்விநிலை எத்தகையதென்பது பற்றி உணர்த்துவதாக இவ்வினாவுக்கான விடைகள் காட்சியளிக்கின்றன.

வினா 3: சுருக்கமான விடை வேண்டும்

இலக்கண வினாக்களாக இடம்பெறும் பதினைந்து வினாக்களுள் பத்தே எழுதப்பட வேண்டியவை. ஆயினும் முழுதும் சரியாக எழுதுவோர் சிலரே. சராசரி அறிவுடைய இன்றைய ஏழாம் ஆண்டு மாணவன்கூட இவற்றைச் சிறப்பாக எழுதல் சாலும். இந் நிலையில் உயர்தர மாணவரின் பின்தங்கிய நிலை விசனத்திற்கும் ஆய்விற்குமுரியதாகும்.

வினா 4: இலக்கணம்

விரிவான விடையை எதிர்பார்க்கும் (விருப்பத்திற்குரிய) இவ்வினாவுக்கு விடை சிலரால் எழுதப்பட்டாலும் திருப்திகரமாக அமைகின்றது. மனனம் செய்து எழுதுகின்றார்களோ எனக்கருதும் நிலையும் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுவதுண்டு.

வினா 5 — 7: தமிழ் இலக்கிய வரலாறு

இத்தொடர்பில் இடம்பெறும் வினாக்கள் நேரடியாக வரும்போது - எடுத்துக்காட்டாக, 'சங்ககால இலக்கியப் பொருள்மரபு' என்றவாறு பெரும்பாலோர் சிறப்பான விடை தருகின்றனர். அதேவேளையில் இலக்கியப் பண்புகளுக்கான காரணங்கள் விளக்கமாகக் கேட்கப்படும்போது அவற்றை எழுதும் ஆற்றல் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர்; 'முன்னைய தொடர்ச்சி' என்றும் 'பின்னைய வழிகாட்டி' என்றும் கேட்கும்போது வகுத்தும் தெளிவாகவும் எழுதமுடியாதுள்ளனர்; காலப் பின்னணிக்கு அழுத்தங் கொடுத்தும், ஒப்பிட்டும் வினவும்போது தடுமாற்றம் எய்துகின்றனர். தமிழ் இலக்கிய வரலாறு மேலோட்டமாகக் கற்பிக்கப்படுவதும், மிகப் பழைய ஓரிரு நூல்களையே கற்பிப்போர் பயன்படுத்துவதும் இதற்குக் காரணங்களாகலாம்.

வினா 8: ஈழத்து இலக்கிய வரலாறு

(விருப்பத்திற்குரிய) இவ்வினாவைத் தெரிந்தெடுப்போர் மிக அரிது. கடந்த ஈராண்டுகளாக, 'அல்லது' என்ற அடிப்படையில் 'ஈழத்தவர் இருவர்' தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பும் கேட்கப்படுகின்றது, இதற்கான விடையும் மிகச் சிலரால் — அதுவும் மனம் போன போக்கில் எழுதப்படுகின்றது.

(வினா 4 தொடக்கம் 8 வரையானவற்றுள் எவையேனும் மூன்றே எழுதவேண்டும்)

மேலே கூறியவற்றைத் தவிர பொதுவாக இடம்பெறும் குறைபாடுகளும் பல உள்ளன: எழுத்து வழுக்கள், சொல் வழுக்கள், வாக்கிய வழுக்கள் விடைகளிலே மலிந்து காணப்படுகின்றன; பந்தி அமைப்பு, குறியீடுகளின் பிரயோகம் என்பனவற்றிலே கவனஞ் செலுத்துவதில்லை.

பாடநூல்களை ஆழமாகக் கற்றல், மேலதிக வாசிப்பில் ஈடுபடுதல், விடைகள் எழுதிப் பயிற்சி பெறுதல், வினாக்களை நிதானமாக வாசித்தல், (சில வினாக்களுக்கு) குறிப்பெடுத்து விடை எழுதுதல், நேரத்திற்குள் எழுதி முடித்தல் முதலியன மாணவர்களால் பின்பற்றப்படுமாயின் முற்கூறிய குறைபாடுகள் நீங்கிட வாய்ப்பேற்படலாம். கற்பிப்போரும் - எல்லாருமன்று - மேலதிக வாசிப்பில் ஈடுபடுவதும், விடைத்தாள் திருத்தச் செல்வதும் அவசியமென்பது கசப்பான உண்மைகளாம்.

⊙

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CENTRAL BANK OF SRILANKA
# இலங்கை மத்திய வங்கி

செல்வி நந்தினி மயில்வாகனம்
B. A. (பொருளியல் சிறப்பு)

பொருளாதாரத்தின் நாணய நடைமுறை கொள்கை சார்பான நடைமுறைகளின் முதுகெலும்பாக விளங்குவது குறிப்பிட்ட நாட்டின் மத்திய வங்கியாகும். அரசின் உடமையாகக் காணப்படுவதுடன் வணிக வங்கிகள், நிதி ஸ்தாபனங்கள், நிதி கம்பனிகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி பொருளாதார வளர்ச்சி பொருளாதார அபிவிருத்தி, பொருளாதார உறுதி ஆகிய நோக்கில் நாணய வெளியீட்டை மேற்கொள்வதுடன் நாணய பெறுமதியை தளம்பல் அடையா வண்ணம், விலைமட்ட உறுதியைப் பாதுகாக்கும், அதி உயர்ந்த ஓர் நிதி அமைப்பாக மத்திய வங்கி காணப்படுகிறது. பிரித்தானியாவிலே தான் உலகின் முதன்முதல் மத்திய வங்கி அமைப்பு ஏற்படுத்தப்பட்டது என்பதனால் ஏனைய நாடுகளும் இதன் செயற்பாடுகளையே பின்பற்றிக் கொண்டன.

இலங்கையில் 1884 – 1950 வரையான காலப்பகுதியில் நாணய வெளியீட்டுக்கு பொறுப்பாக அமைந்த நாணய வெளியீட்டு சபையினால் ஒதுக்கு அடிப்படையில் நாணய வெளியீடு மேற்கொள்ளப்பட்டது. இதனால் குறைவிருத்தி நாடான இலங்கை மூலதன பற்றாக்குறையினை ஈடுசெய்ய முடியாத நிலை தோன்றியது அதனை ஈடு செய்ய உத்தேச அடிப்படையிலான நாணய வெளியீடு சிறப்பாக அமைப்பதற்கெனவே 1949ம் ஆண்டு 58-ம் இலக்க நாணயச் சட்டத்திற்கேற்ப இலங்கை மத்திய வங்கி உருவானது. இதன் ஆரம்ப மூலதனம் 15 மில். ஆகும். இவ் வங்கி உருவாக்கப்படுவதற்கு ஆலோசனை வழங்கிய கனடிய வங்கியியல் நிபுணரான ஜோன் எக்ஸ்ரர் என்பவரே முதலாவது ஆளுநராக நியமிக்கப்பட்டார். இலங்கை மத்திய வங்கியின் நிர்வாகமானது மத்திய வங்கி ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர். ஜனாதிபதியின் பிரதிநிதி ஆகிய மூவரைக் கொண்ட சபையினால் நிர்வகிக்கப்படும்.

இலங்கை மத்திய வங்கியானது தனது நோக்கங்களையும், தொழிற் பாடுகளையும் மேற்கொள்ள வேறுபட்ட பல பகுதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது அவையாவன: நாணய வெளியீட்டுத் திணைக்களம், கட்டுப்பாட்டுப் பகுதித் திணைக்களம், நாணய மாற்றுவீத பெறுமானப் பகுதி, கணக்காய்வுத் திணைக்களம், பொதுபடுகடன் திணைக்களம், பொருளாதார ஆராய்ச்சிப் பகுதி, சேம இலாப நிதி திணைக்களம், வெளிநாட்டுச் சொத்துப் பகுதி, பொது அல்லது செயலகபகுதி என்பவையாகும்.

## இலங்கை மத்திய வங்கியின் நோக்கம்:

### (i) பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியைப் பேணல்:

நாட்டில் காணப்படும் பயன்படாத மூல வளங்களை கண்டுபிடித்து அவற்றைப் பயன்படுத்துதலுக்கான நடவடிக்கையில் ஈடுபடல், கிராமப்புற மீன்பிடி வி ல ங் கு, பறவை, தேனீ வளர்ப்பு, பூந்தோட்டம், குடிசைக் கைத்தொழில், விவசாயம்' வர்த்தகம் போன்றவை வளர்ச்சி அடையச் செய்ய ஆலோசனைகளையும், கடன் வசதிகளையும் அளித்தல். நாட்டின் வேலை இன்மையைக் குறைத்து வருமான சமபங்கீட்டை ஏற்படுத்தல்

### (ii) பொருளாதார உறுதி பேணல்

மத்திய வங்கி நாணய வெளியீட்டை மேற்கொள்ளும் போது, பணப் பெறுமதி தளம்பலடையாது. உள்நாட்டு விலைமட்டம் தளம்பலடையா வண்ணம் பாதுகாத்தல். வெளியிடப்படும் நாணயத்துக்கு ஏற்ப வெளிநாட்டுச் சொத்துக்களைப் பாதுகாத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணய மாற்று வீதத்தினை உறுதியாகப பேணுதல்.

இலங்கை மத்திய வங்கியினது நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ள நாணய வெளியீடு செய்தல், அரசாங்கத்தின் வங்கியாகச் செயற்படல், வங்கிகளின் வங்கியாக செயற்படல், பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல், இறுதி நிலை கடன் ஈவோனாக இருத்தல், வெளிநாட்டுச் சொத்துக்களுக்குப் பொறுப்பாக இருத்தல், நாட்டின் கடன்களைக் கட்டுப்படுத்தல், போன்ற தொழிற்பாடுகளை ஆற்றுவதன் மூலம் நாட்டின் பொருளாதார நிலைமைகளைச் சீர்படுத்த முனைகின்றது. இத்தொழிற்பாடுகளை நோக்கின்

## 1. நாணய வெளியீட்டை மேற்கொள்ளல்

மத்திய வங்கியின் பிரதான தொழிற்பாடாக நாணய வெளியீடு அமைந்துள்ளது. இன்று எல்லா நாடுகளிலும் நாணய வெளியீட்டை மேற்கொள்ளும் தனி உரிமை படைத்த ஸ்தாபனமாக மத்திய வங்கி செயற்பட்டு வருகின்றது. அது மத்திய வங்கி தவிர்ந்த ஏனைய நிதி நிறுவனங்களோ அன்றி தனிப்பட்டவர்களோ சட்டரீதியாக நாணய வெளியீட்டை மேற்கொள்ள முடியாது. இலங்கையில் நாணய வெளியீட்டு முறைமையினை பொறுத்தமட்டில் ஆரம்பத்தில் அடிப்படையிலான வெளியீடு இடம்பெற்றது. ஒரு குறித்த அளவு பெறுமதியான நாணயத்தை வெளியீடு செய்ய வேண்டுமாயின் அதற்குச் சமபெறுமதி வாய்ந்த தங்கத்தினை ஒதுக்கி வைக்க வேண்டும் எனவும், அத்தகைய தங்க ஒதுக்கானது நாட்டின் உற்பத்தியில் தொடர்ந்து இடம்பெற வேண்டும் என்பதேஒதுக்கு அடிப்படையிலான நாணய வெளியீடு என்பதாகும். எனினும் இன்று உற்பத்தி மட்ட அதிகரிப்பிற்குத் தூண்டுதலாக நாணய வெளியீடு இடம்பெற வேண்டும் எனக் கருதியே நம்பிக்கை நாணய வெளியீடு செயற்படுத்தப்படுகிறது பொருளாதாரத்தின் தேவைகளுக்கு ஏற்ப நாணயங்களையும், நாணய தாள்களையும் வெளியிடும் பொறுப்பு அரசை சார்ந்ததாகும். அந்தப் பொறுப்பு இலங்கை மத்திய வங்கியினால் நிறைவேற்றப்படுகிறது.

## 2. அரசாங்கத்தின் வங்கியாக செயற்படல்

இலங்கை மத்திய வங்கியானது அரசின் உடமையாக இருப்பது மட்டுமன்றி அரசிற்காகவும் சில கடமைகளை ஆற்றுவதனால் அரசின் வங்கி என கூறுகின்றோம். சிறப்பாக திறைசேரி ஆலோசகராக கடமையாற்றுகிறது அரசிற்குத் தேவையான போது ஆவணங்களை திறைசேரி உண்டியல்களை வெளியீடு செய்து விற்பனை செய்வதன் மூலம் – முற்பணத்தை வழங்குவதன் மூலம் நிதி உதவிகளை வழங்கி வருதல். அரசின் வங்கிக் கணக்குகளைப் பேணிக் கொள்ளுகின்றது. அரசிற்கு காலத்துக்குக் காலம் நிதி சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குதல். சர்வதேச நிதி நடவடிக்கைகளில் தரகர் ஒருவரைப் போலத் திகழ்ந்து வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகிறது. மத்திய வங்கி நாளாந்தம் வெளியிடும் அந்நிய செலாவணி விகிதம் பற்றிய அறிக்கையில் இருந்து இது தெளிவாகின்றது.

## 4. வங்கிகளின் வங்கியாக செயற்படல்—

ஒரு நாட்டில் இருக்கும் வணிக வங்கிகளுக்கு தலைமை நிறுவனமாக மத்திய வங்கி செயற்பட்டு வருவதனால் அதனை 'வங்கிகளின் வங்கியாளன்' என அழைக்கின்றோம். வணிக வங்கிகள் இலாப நோக்க அடிப்படையில் செயற்படுவதனால் இவ்வங்கிகளுக்கும் - வாடிக்கையாளருக்கும் இடையிலான தொடர்பினைத் தொடர்ந்து பாதுகாக்கும் நோக்கில் மத்திய வங்கி தலைமையகமாக செயற்பட்டு வருகின்றது இதனால் நிதி விடயங்களில் ஒரே சீரான கொள்கையினைக் கடைபிடித்தல், தான்தோன்றித்தனத்தைக் கட்டுப்படுத்தல், வாடிக்கையாளரின் நம்பிக்கையினை உறுதிப்படுத்தல் ஆகிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

## 4. பொருளாஜார அபிவிருத்திக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்—

நாட்டின் பொருளியல், நிதியியற் கொள்கையில் மட்டுமல்லாது திட்டமிடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல் போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும் பணியை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும். பொருளாதார அபிவிருத்தித்துறை சார்ந்த உள்ளீட்டுக் கணக்குகளை ஆய்வு செய்து அதற்குத் தேவையான நிதி வளங்களை மேற்கொள்வது சிறப்பம்சமாகும். இதன் மூலம் இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகள் அபிவிருத்திப் பாதை நோக்கி நகர்ந்து செல்ல உதவுகிறது. ஆண்டு தோறும் அரசு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கையில், நாட்டின் பொருளாதார, நிதி நிலமைகளை மத்திய வங்கி அறிக்கையாகத் தயாரித்து அரசிற்கு சமர்ப்பிப்பதனை உதாரணமாகக் கொள்ளலாம்.

## 5. இறுதி நிலை கடன் ஈவோனாக இருத்தல்

வணிக வங்கிகளிடம் திரவத்தன்மை முடிவடைந்த ஓர் சூழ்நிலையினில் வணிக வங்கிகளுக்கு மத்திய வங்கி கடன்களை வழங்கி வருவதனால்தான் இதனை ''கையறு நிலைக் கடனீவோன்'' என அழைக்கின்றோம். இத்தகைய நிலைமை ஏற்படுமாயின் மத்திய வங்கியானது தன் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ள ஏதுவாக அமையும். இதன் மூலம் நாட்டின் நாணய நடைமுறையினை இலகுவாக சமநிலை நோக்கி நகர்த்த முடியும்.

## 6. வெளிநாட்டு சொத்துக்களுக்கு பொறுப்பாக இருத்தல்—

இருதுறை பொருளாதார அமைப்புக் கொண்ட இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளில் இத்தொழிற்பாடு இடம் பெறுவதினைக் காணலாம். அரசு வெளிநாடுகளிடம் இருந்து பெறுகின்ற மூலதன முதலீட்டுக் கடன்களுக்குப் பொறுப்பாக மத்திய வங்கியே இருக்கின்றது இக்கடன்களுக்கான வட்டியை வழங்குவது தொடர்பாகவும் மத்திய வங்கியே தொழிற்படுகிறது. எனவே தான் நாட்டின் வெளிநாட்டுச் சொத்துகளுக்கு பொறுப்பு வாய்ந்த நிதி நிறுவனமாக இலங்கை மத்திய வங்கி செயற்பட்டு வருகிறது. இதன் முக்கிய கருத்துயாதெனில் அரசின் கொள்கை மாறினாலும் அதன் கடன் நடவடிக்கையை மத்திய வங்கியே நடைமுறைப்படுத்துகிறது என்பது தெளிவாகிறது.

## 7. நாட்டின் கடன்களைக் கட்டுப்படுத்தல்

வணிக வங்கிகளின் வங்கியாளன் என்ற வகையில் கடன் கட்டுப்பாடு தொழிற்பாடு முக்கியம் பெறுகிறது. வணிக வங்கிகளால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் கடன்களைக் கட்டுப்படுத்தும் முகமாக மத்திய வங்கியானது வணிக வங்கியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையினையே கடன் கட்டுப்பாடு எனலாம். வணிக வங்கி மேலதிக கடன்களை வாடிக்கையாளருக்கு வழங்குவதன் மூலம் நாட்டின் பணநிரம்பல் அதிகரிப்பதுடன், விலைமட்ட உயர்வினையும், வீக்க நிலையினையும் தொடர்ச்சியாக ஏற்படுத்தும். இந்நிலைமையினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிப்படையும். மாறாக வணிக வங்கி குறைந்தளவு கடன் வழங்குமேயாயின் பணநிரம்பல் குறைந்து பணச்சுருக்க நிலை ஏற்பட்டு பொருளாதார வளர்ச்சியானது பாதக நிலை அடையும். எனவேதான் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து தேவையான பணநிரம்பலை அனுமதிக்கும் செயல்முறையே கடன் கட்டுப்பாடாகும். மத்திய வங்கியின் தொழிற்பாடுகளில் கடன் கட்டுப்பாடு முக்கியம் பெறுவதனால் அவ்விடயம் பற்றி விரிவாக நோக்குதல் அவசியம்.

## மத்திய வங்கியின் கடன் கட்டுப்பாடு

கடன் கட்டுப்பாட்டினை செயற்படுதற்கு இலங்கை மத்திய வங்கியானது பல்வேறு கட்டுப்பாட்டு கருவிகளை கையாளுகிறது. அவற்றை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. தொகை ரீதியான கடன் கட்டுப்பாடு
   (*Quantitative Credit control*)
2. தெரிவுக் கடன் கட்டுப்பாடு
   (*Seleative Control*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தொகை ரீதியான கடன் கட்டுப்பாடு -

வணிக வங்கி வாடிக்கையாளருக்கு வழங்கும் கடன்களை அளவு ரீதியாகவும், துறை ரீதியாகவும், நோக்கத்தினையும் கருத்திற் கொண்டு அணுகாமல் மொத்த ரீதியாக கட்டுப்படுத்தும் செயன்முறையே தொகைக்கடன் கட்டுப்பாடாகும். இக்கடன கட்டுப்பாடுக் கருவிகளை 3 பிரிவுள் உள்ளடக்கலாம்.

1. வங்கி வீதம்
2. பகிரங்கச் சந்தை
3. ஒதுக்கு வீதம்

(i) வங்கி வீதம் -

'இறுதிக் கடனீவோன்' எனும் வகையினில் வணிக வங்கிகள் கடன் பெறச் செல்லும் போது அக்கடன் மீது விதிக்கப்படும் வட்டி வீதமே வங்கி வீதமாகும். நாட்டில் பணப் புழக்கத்தினை அதிகரிக்க வேண்டுமாயின் மத்திய வங்கியானது வங்கி வீதத்தினைக் குறைக்கும். பணப் புழக்கத்தினை குறைக்க வேண்டுமாயின் மத்திய வங்கி வங்கி வீதத்தினை அதிகரிக்கும். வங்கி வீதம் அதிகரிக்கின்ற போது வணிக வங்கிகளும் தமது கடனுக்கான வட்டிவீதத்தினை அதிகரிக்கும். இங்கு வங்கி வீதத்துக்கும் - வட்டி வீதத்துக்கும் இடையே நேரான தொடர்பு காணப்படுகிறது. இதனால் வாடிக்கையாளர் கடன் பெறுவதற்கான செலவு அதிகரிக்க வணிக வங்கிகள் கடன் பெற வருவது குறைய பண நிரம்பல் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் வங்கி வீத மாற்றத்துடன் நாட்டிலுள்ள ஏனைய வட்டி வீதங்களும் மாற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் மத்திய வங்கியானது நாட்டின் கடனளவு குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது, ஆயினும் இக்கருவி திறமையாச் செயற்பட குறைவிருத்தி நாட்டில் பல சூழ்நிலைகள் அவசியமான போதும் வங்கிகளின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும். அ-து மத் மத்திய வங்கியிடம் வணிக வங்கிகள் கடன் பெறச் செல்வதற்கான சூழ் நிலை யிலேயே வங்கி வீதம் சாத்தியமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ii) பகிரங்க சந்தை நடவடிக்கை -

பகிரங்க சந்தை நடவடிக்கை என்பது மத்திய வங்கியானது பணச் சந்தையில் ஆவணங்களை விற்பனை செய்தல், கொள்வனவு செய்தல் மூலம் கடன் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளும் செயல்முறையாகும். மத்திய வங்கி கடன் அளவினை குறைக்க விரும்பினால் பகிரங்க சந்தையில் ஆவணங்களை விற்கும் போது வணிக வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் ஆவணங்களைக் கொள்வனவு செய்யுமாயின் அவற்றிடமிருக்கும் பணம் வங்கிக்குச் செல்லும். இதனால் வணிக வங்கிகள் கடன் வழங்குவது கூடியளவு குறைவடையும். மறுபுறம் கடன் வழங்கலை அதிகரிக்க வேண்டுமாயின் மத்திய வங்கி ஆவணங்களைக் கொள்வனவு செய்யும். இதனால் மத்திய வங்கியிடமிருந்த பணம் வணிக வங்கிகளுக்குச் செல்லும். இக்கருவியின் திறமையான செயற்பாட்டுக்கு வளர்ச்சி அடைந்த பணச் சந்தை அவசியமாகும்.

(iii) ஒதுக்குவீதம்

மத்திய வங்கியானது சட்ட ரீதியாக வணிக வங்கிகளின் வைப்பில் ஒரு பகுதியை ஒதுக்காக வைக்கும்படி கூறுவது ஒதுக்கு வீதமாகும். கடனைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் ஒதுக்குவீதம் உயர்வாகவும், கடனை அதிகரிக்க வேண்டுமாயின் ஒதுக்கு வீதத்தினை குறைவாகவும் விதிக்கலாம். இந்தக் கட்டுப்பாட்டு கருவியானது முன்னேற்றமான தன்மை கொண்டிருப்பதனால் மேற்குறித்த இரு கருவிகளிலும் பார்க்க உடனடியாக பலனளிக்கக் கூடியது. மேலும் இக்கருவி செயற்பட பணச் சந்தையின் வளர்ச்சி அவசியம் இல்லை. எனவே இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளின் பணச் சந்தை வளர்ச்சி அடையாமையால் இக் கடன் கட்டுபாட்டு கருவியே பெரிதும் நடைமுறையிலுள்ளது. எனினும் இங்கு அடிக்கடி ஒதுக்கு வீதத்தினை மாற்றி அமைக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் இம்மரபுவழி கடன் கட்டுப்பாட்டு கருவிகளைக் கொண்டு ஒழுங்கான முறையில் மத்திய வங்கி செயற்பட முடியாமையினால் தெரிவுக் கடன் கட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுக் கருவிகளை அறிமுகமாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

## 2. தெரிவு கடன் கட்டுப்பாடு

இலங்கை மத்திய வங்கியின் பண ரீதியான முகாமையில் ஒப்பிட்டு நோக்கில் அண்மைக்காலத்தில் விருத்தி பெற்ற அம்சமாக மாகத் தெரிவு கடன் கட்டுப்பாட்டு முறைகள் காணப்படுகிறது. இவை தொகை ரீதியான கருவிகளில் இருந்து பெருமளவு வேறுபடுகிறது. இககருவிகள் துறை ரீதியாகவும் அளவு ரீதியாகவும் நோககத்தினையும் கருத்தில் கொண்டு அணுகுவதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப செயற்படுகின்றன. இதன் மூலம் மத்திய வங்கி கடன் கட்டுப்பாட்டு தொழிற்பாட்டினை சிறப்பாக நடைமுறைப்படுத்த உதவியாகிறது. தெரிவு கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளை பின்வருமாறு வகுக்கலாம்.

(i) நல்வழி புகட்டல்
(ii) நேரடி நடவடிக்கை
(iii) கடன் பங்கீடு
(iv) நுகர்வோன் கடனை ஒழுங்குபடுத்தல்
(v) எல்லை ஒதுக்குத் தேவை

### (i) நல்வழி புகட்டல்

மத்திய வங்கியானது சிநேகபூர்வமான முறையில் வணிக வங்கிகளிடம் கடன் வழங்கலை ஒழுங்குபடுத்துமாறு கூறிக்கொள்ளும் சட்ட ரீதியற்ற ஓர் செயல்முறையே நல்வழி புகட்டலாகும். மத்திய வங்கி தனது ஆலோசனைகளை வணிக வங்கிகளின் தலைமை அலுவலகத்துக்கு தெரிவிப்பதன் மூலம் இக்கடன் கட்டுப்பாட்டுக் கருவியைக் கையாளுகிறது. இதன் மூலம் துறை ரீதியாகவும், மொத்த ரீதியாகவும் கடன்களைக் கட்டுப்படுத்தலாம். மேலும் வழக்கமாக மத்திய வங்கியிடம் கடன்பெறும் நிதி நிறுவனங்களையும் இக் கருவி ஊடாகக் கட்டுப்படுத்தலாம். ஏனெனில் அவை பெரும்பாலும் வங்கி மூலகங்களிடம் இருந்து கடன் பெறுபவையாகும். உ+ம்; *Finance Company*. ஆயினும் இக் கருவி நடைமுறைப்படுத்த பெருமளவு வங்கிகளின் எண்ணிக்கை நாட்டில் இருப்பது அவசியமான ஒன்றாகும்.

### (ii) நேரடி நடவடிக்கை

வங்கிகளின் கடன் வழங்கலில் நேரடியாகவே மத்திய வங்கி கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கையினை நேரடி நடவடிக்கை எனலாம். இது சட்ட ரீதியான ஒரு செயல் முறையாகும். நேரடி நடவடிக்கையின் போது மத்திய வங்கி குறிப்பிட்ட விதிகளின் படி வணிக வங்கி நடந்து கொள்ளவேண்டும். அது தவறின் கடன் பெறச் செல்கின்றபோது தண்டனை வீதத்தினை அனுபவிக்க வேண்டி வரலாம் அல்லது கடன் வழங்க மறுக்கலாம். மேலும் எவ்வகையான துறைகளுக்குக் கூடுதலான கடனை வழங்க வேண்டும் எனவும், எவ்வகையான துறைகளுக்கு குறைந்தளவு கடனை வழங்க வேண்டும் எனவும் மத்திய வங்கி நேரடியாகத் தெரிவிக்கும். ஆயினும் இங்கு பெருமளவு கட்டுப்பாடுகளைஏற்படுத்தின் வணிகவங்கிகள் தவறான வழியில் பயன்படுத்துவதாகவும் அமைவதும் உண்டு.

### (iii) கடன் பங்கீடு

துறை ரீதியான செயல்முறையினால் பல்வேறு துறைகளுக்கும் கடனைப் பங்கிட்டுக் கொடுக்கும் நடவடிக்கையினை மத்தியவங்கி மேற்கொள்கிறது இதனையே கடன் பங்கீடு என அழைக்கிறோம். எந்தத் துறை பொருளாதாரத்தில் கூடிய முக்கியத்துவம் வகிக்கின்றதோ அதற்கு கூடியளவு கடன்களையும், எந்தத் துறை குறைந்தளவு முக்கியம் பெறுகிறதோ அதற்குக் குறைந்தளவு கடன்களையும் வழங்குமாறு வணிக வங்கிக்கு மத்திய வங்கி பணிக்கலாம். உதாரணம்; விவசாயத் துறைக்கு கூடிய அளவு கடன் வழங்கும்படி இலங்கை மத்திய வங்கி விதித்தல். சில துறைகள் நாட்டில் பண வீக்கத்தினை ஏற்படுத்தும் துறைகளாயின் அவற்றின் கடன் அளவினைக் குறைக்கும்படி விதிக்கலாம். எனவே இக்கருவியானது நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு மத்திய வங்கி பயன்படுத்தக் கூடியதாக அமைகிறது.

### (iv) நுகர்வோர் கடனை ஒழுங்குபடுத்தல்

நுகர்வோன் நீடித்த வாழ்வுடைய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படுகின்ற கடன்களைக்குறைக்கும்படி மத்திய வங்கி கூறிக்கொள்ளும் செயன் முறையினையே நுகர்வோன் கடனை ஒழுங்கு படுத்தலாகும். இது முதன்முதல் அமெரிக்காவிலே அறிமுகமானது. நீண்டகால நுகர்வு பொருளுக்கான கடன் வழங்கலின் மூலம் நாட்டின் உற்பத்தி மட்டம் அதிகரிக்காத நிலையில் பணவீக்கம் ஏற்படுகின்ற சூழ்நிலையினிலே இக்கருவி பயன்பட வேண்டியுளது. இதனால் கடன் அளவினைப் பெருமளவுக்கு குறைத்துக் கொள்ளமுடியும் என்பதனால் மத்திய வங்கி தனது கடன் கட்டுப்பாட்டினை சிறப்பாகச் செயற்படுத்தி வருகின்றது.

(v) எல்லை ஒதுக்குத் தேவை —

கடன் அளவினை கட்டுப்படுத்தக் குறிப்பிட்ட வீதத்தினை ஒதுக்குமாறு பணித்தல் எல்லை ஒதுக்கு தேவையாகும். 1934ல் அமெரிக்காவில் முதன்முறையாக கையாளப்பட்டது. பங்கு சந்தையினில் காணப்படும் நிலைமைகளை அவதானித்தே இக்கருவி நடைமுறைப்படுத்தப்படலாம். உத்தேச நோக்கம் பொருளாதார நிலைப்பாட்டிற்கு ஒவ்வாதவேளை அதனை அகற்றவே எல்லை ஒதுக்கு தேவை எனும் கருவி பயன்படுத்தப்படுகிறது. பங்குச் சந்தையில் கொள்வனவு செய்யப்படும் பங்குகளைக் கொண்டு வணிக வங்கியிடம் இருந்து தொடர்ந்து கடன் பெறும் நிலையானது பண வீக்கத்தினை ஏற்படுத்தும். எனவே இதனைத் தடுக்க எல்லை ஒதுக்குவீத அளவு அதிகரிக்கப்படும். உ+ம்: எல்லை ஒதுக்கு அளவு 10%மாயின் 1000/- பெறுமதியான பத்திரத்திற்கு பொறுப்பாக 900/-வைக் கடனாகப் பெறலாம். மேலும் அதனைபயன்படுத்திவேறு பங்குகளை வாங்கிக் கொள்ளலாம். இந்த ஒதுக்கின் அளவினை 50% மாக அதிகரிப்பின் 1000/- பெறுமதியான பங்கினை பொறுப்பாக வைத்து 500/-யினையே வங்கியிடம் கடனாகப் பெறமுடியும். எனவே கடனின் அளவினைக் கட்டுப்படுத்த முனைகின்றபோது மத்திய வங்கி எல்லை ஒதுக்கு வீதத்தினை அதிகரிக்கும். இதனால் கடன் கட்டுப்பாட்டினை சிறப்பாக மேற்கொள்ள முடிகிறது.

மத்திய வங்கியின் கடன்கட்டுப்பாட்டுக் கருவிகளைத் தொகுத்து நோக்கின் தெரிவு கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் தொகை ரீதியான கருவிகளைவிட சில வழிகளில் முன்னேற்றம் உடையனவாக இருக்கின்றன. இந்த வகையில் இலங்கை போன்ற குறைவிருத்தி பொருளாதாரப் பண்புகளைக் கொண்ட நாடுகளின் பண சந்தையானது வளர்ச்சி அடையாத நிலையில் துறை ரீதியான பணவீக்கம் என்பது முக்கிய பிரச்சனையாக இருந்து வந்துள்ளது. அதனைக் கட்டுப்படுத்த மத்திய வங்கியின் தெரிவுடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் சிறப்புடையனவாக அமைந்தன. எனவே தான் நவீன காலணித்துவ நாணய நடைமுறைக் கொள்கையில், மத்திய வங்கியின் ஏனைய தொழிற்பாடுகளைவிட கடன்கட்டுப்பாட்டு கருவிகள் பல முக்கிய பங்கினை ஆற்றுவதன் மூலம் நாட்டின் வங்கியியலில் இலங்கை மத்திய வங்கி முதன்மை வங்கியாக இடம் பெறுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரயோககணிதமும், மதிப்பிடுதலும்

க. தருமலிங்கம் B. Sc.

மனித இயக்கத்துடனும், நடைமுறை வாழ்வுடனும் ஒன்றிணைந்த பிரயோகமே பிரயோக கணிதமாகும். எனவே இப் பாடத்திலுள்ள தத்துவங்களையும் அதன் பிரயோகங்களையும் க. பொ. த. உயர்தர மாணவர்கள் தெளிவாகவும் ஆழமாகவும் அறிந்திருக்க வேண்டியது முக்கியமான தாகும். இந்த வகுப்பு மாணவர்களை நாம் எடுத்து நோக்கினுல் 100வீத மாண வர்களில் 30வீதமான மாணவர்களே தங் கள் பாடங்களில் ஓரளவு தெளிவுடன் காணப்படுகின்றனர். மிகுதி 70 வீதமான மாணவர்களில் சிலர் பாடத்தில் அரை குறைத் தெளிவுடனும், இன்னும் பலர் பாடத்தில் முற்றுகவே தெளிவில்லாதவர் களாகவும் இருக்கின்றனர். இது பாடத் தைப் பொறுத்தளவில் அனுதாபத்திற் குரிய விடயமாகும்.

ஒரு மாணவன் வினுத்தாளைக் கையில் எடுத்ததும் முழு வினுக்களையும் வாசித்து தெரிவு செய்தலே முக்கியமான செய லாகும், பிரயோக கணிதத்தில் 15 நிமி டம் 10 வினுக்களையும் வாசித்து விளங்கிக் கொள்வதற்கு எடுக்க வேண்டும். பின்னர் அவர் செய்ய வேண்டிய வினுக்களை கடி னத் தன்மைக்கு ஏற்ப ஏறுவரிசைப்படி ஒழுங்கு செய்தல் வேண்டும். ஒவ்வொரு வினுவிற்கும் 25 நிமிடங்கள் என்பதை நினைவில் வைத்திருத்தல் வேண்டும். முத லில் செய்யப்படும் வினு மிகவும் கடினத் தன்மை குறைந்ததாக இருத்தல் வேண் டும். இவ்வினுவிற்கான விடையைப் பூர ணமாக அளித்த பின்னர் மாணவருக்கு ஒரு உற்சாகமும் உதவேகமும் பிறக்கும். இல்லையேல் அவனிற்கு உளத்தாக்கமும், ஒரு வித மனச்சோர்வும் ஏற்படும். இத ஞல் தொடர இருக்கும் வினுக்களிற் குரிய விடையை முழுமையாக அளிக்க முடியாதவனுக மாறிவிடுவான்.

பிரயோக கணிதத்தில் படம் மிக வும் முக்கிய பங்கை வகிக்கிறது. சாத் தியமான படம் வினுவிற்கேற்ப வரையப் படல் வேண்டும். அதில் குறிக்கப்பட வேண்டிய மறுதாக்கம், நிறைகள், எழுத்துக்கள் என்பன குறிக்கப்பட்டிருத் தல் வேண்டும். பின்னரே பிரயோக கணி தத் தத்துவங்களையும் விதிகளையும் முறைப்படி பிரயோகித்து சமன்பாடுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். தெரியாக் கணியங்களைக் குறைக்கும் விதத்தில் சமன்பாடுகள் அமைதல் வேண்டும். இதற்குக் கூடுதலான கணித நுட்ப அறி வும் பயிற்சியும் இருத்தல் வேண்டும்.

இனி மதிப்பீடுகள் பற்றிச் சிந்திப் போம். ஒவ்வொரு வினுவிற்கும் 100 புள் ளிகள் வீதம் வழங்கப்படுகின்றன. பகுதி களுக்குரிய புள்ளிகள் ஐந்தின் மடங்கு களாக இருக்கும். இதனுல் புள்ளிகள் எல்லா பகுதி விடைகளிற்கும் பரவி இருக் கும். காரணங்கள் சரியாக எழுதப் படாது விடை காணப்படும் இடத்து பகுதிப் புள்ளிகளில் குறைப்பு ஏற்படும். ஒன்று இரண்டு வழு ஒரு வினுவில் தவிர்த்து புள்ளிகள் வழங்கப்படும். மாண வரினுல் விடப்படும் வழுக்கள் பிரசினங் களை எளிதாக்குமாயின் தொடர்ந்து புள் ளிகள் வழங்கப்படமாட்டாது.

1989ம் ஆண்டு வினுக்களையும் மாண வர்களின் பங்களிப்பையும் சிந்திப்போம். பகுதி I இல் 1ம்' 2ம், 3ம் வினு காவி என்ற அலகில் போடப்பட்டுள்ளது 1ம் வினுவை நோக்கின் இதிலே ஒரு காவிக்குச் சமாந்தரமாக அதன் மடங்கு களைக் கொண்ட காவியை அமைக்க முடியாது பல மாணவர்கள் கஷ்டப்பட் டுள்ளனர். காவிகளின் மட்டுக்களை ஒப் பிடுவதில் மாணவர்கள் எண்ணக் கரு வையே சிந்தியாது செயற்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ம் வினவின் கடைசிப் பகுதியை பெரும்பகுதியான மாணவர்கள் செய்ய வில்லை. இவர்களிற்கு அலகுக் காவியின் விளக்கமும் இன்மையே காரணமாகும்.

3ம் வினவில் காவிகளின் எண்ணிப் பெருக்கம், காவிப் பெருக்கம் என்பன வற்றில் மாணவர்களிற்குரிய விளக்கம் போதாமை அவர்களின் செய்கையில் அறியக் கூடியதாக உள்ளது

6ம் வினவைச் சிந்தித்தால் சிலர் சாத்தியம் இல்லாத படத்தை வரைந்து விடையை எழுதியுள்ளனர். இதனுல் பெருமளவு புள்ளிகளை மாணவர் இழக்கின்றனர். எனவே சாத்தியமான படம் மிகவும் முக்கியமாகும். 12ம் வினவிலே அழுத்த சக்தியைக் கணிக்கும் பொழுது பூச்சிய சக்தி மட்டத்தில் இருந்து தூரங்கள் கணிப்பதில் பெரும் தவறுகளை விட்டுள்ளனர். இதில் செய்யப்பட்ட வேலை, அழுத்த சக்தி என்பவற்றிற்கு இடையே ஆன தொடர்புகள் தெரியாமல் உள்ளனர்.

பகுதி II இல் 1ம் வினவை பெரும்பாலான மாணவர்கள் எடுத்துச் செய்துள்ளனர். அதில்(ii)ம் பகுதியில் ln என்பதன் விளக்கம் மாணவர்களிற்கு இன்மையால் அப்பகுதிக்குரிய முழுமையான புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது.

2ம் வினவை பெரும்பாலான மாணவர்கள் எடுத்துள்ளனர். ஆனல் ஒருவரும் அதை முடிக்கவில்லை. இதில் 2ம் பகுதியை பெரும்பாலான மாணவர்கள் சரியான விளக்கத்துடன் விடையளிக்க முன்வரவில்லை.

3ம் வினவை சிந்தித்தால் சில மாணவர்கள் சரியாக விடையளித்துள்ளனர். பல மாணவர்கள் இங்கே என்ன தத்துவங்கள் பிரயோகிக்க வேண்டும் என்பதே தெரியாது திணறியுள்ளனர்.

எனவே சில பகுதிகளில் மாணவர்கள் தெளிவின்மையாக இருப்பதால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களில் சிலவற்றை விளக்கியுள்ளேன். ★

மலர் விரிந்தால் மணம் வீசத்தான் செய்யும்.
மேகங்கள் கூடினுல் மயில் ஆடத்தான் செய்யும்.
தென்றல் வீசினுல் குளிர்ச்சி ஏற்படத்தான் செய்யும்.
இவை இயற்கை! இவை போலத்தான்,
நாட்டாட்சி காட்டாட்சியானுல் மக்கள் புரட்சிப் புயல்
எழுப்புவதும் இயற்கை.

அறிஞர் அண்ணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறைசேரி உண்டியல்கள் - *Treasury Bills*

மா. நட. ராசசுந்தரம் *B. A. Hons, M. A*
*சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்*

திறைசேரி உண்டியல்கள், அரசாங்கத்தின் பெயரில் மத்திய வங்கியினுல் பணச் சந்தையிற் குறுங்கால கடன் பத்திரமாக ஒவ்வொரு கிழமையும் வழங்கப்படுகின்றன. வருடாந்தம் தாயாரிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட சில நடைமுறைச் செலவீனங்களை ஈடுசெய்வதற்கு வேண்டிய குறுங்கால காசுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்திற்கு இது உதவுகின்றது. நடைமுறை செலவீனங்கள் தொடர்த் தேர்ச்சியாக அல்லது குறிப்பிடப்பட்ட கால இடைவெளியில் நடைபெறலாம். வரவு செலவு திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருமானங்கள் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பின்னரே கிடைக்கின்றது. எனவே அதி அவசியமான குறுங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு (கூலி, சம்பளம்) திறைசேரி உண்டியல்களை வழங்குதல், அரசாங்கத்தின் கடன் பெறும் உபாயமாகும் இந்த உண்டியல்கள் மத்திய வங்கியின் பொது கடன் திணைக்களத்தால் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 417) பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட பண எல்லை அல்லது பெறுமதி எல்லை வரைக்கும் வழங்கப்பட்டுள்ளது.

திறைசேரி உண்டியலின் ஆரம்ப வரலாறு குடியேற்ற காலப்பகுதியிலிருந்து ஆரம்பிக்கின்றது. குடியேற்ற காலப்பகுதியில் 1923ம் ஆண்டின் 7ம் இலக்க திறைசேரி உண்டியல் சட்டம் பின்பு 1954ம் ஆண்டில் 31 வது இலக்கத்தின்படி மாற்றப்பட்டு திறைசேரி உண்டியல்களுக்கான நிதி அரச முகவர்களால் ஐக்கிய இராச்சியத்தில் சேகரிக்கப்பட்டது. பின்னர் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் மூலம் இலங்கையில் நிதி சேகரிப்பட்டது. இலங்கை பாராளுமன்றத்தில் சட்ட சபையில் 29-07-41ல் உருவாக்கப்பட்ட பிரேரணையின்படி இலங்கையில் முதன் முதலாக ரூபா 10 மில்லியனுக்கு சமமான உள்நாட்டு திறைசேரி உண்டியல்களை வெளியிடுவதற்கு அதிகாரம் பெறப்பட்டது. இந்த கடன் பெறும் எல்லையானது காலத்திற்குக் காலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 1950ல் இது 100 மில்லியன் ரூபாவாகவும், 1960ல் 650 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்து 1970ம் ஆண்டு மிகவும் விரைந்த அதிகரிப்பான ரூபா 2020 மில்லியன் எல்லையை அடைந்தது 1980ல் இது ரூபா 4000 மில்லியனை அடைந்தது. 1980ம் ஆண்டுகளில் இதன் முக்கியத்துவம் மேலும் வளர்ச்சியடைந்தது. குறைநிலை வரவு செலவுத் திட்டத்தை நிதியீட்டம் செய்வதில் முக்கிய இடத்தைப் பெற்றது. அரசாங்கம் திறைசேரி உண்டியல் என விற்று அந்தப்பணத்தை கொண்டு குறைநிலையை ஈடு செய்வதற்கு முயன்றது. இதனுல் 1985ல் இதன் எல்லை ரூபா 25,000 மில்லியனுக அதிகரித்து 1986ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மேலும் 10,000 மில்லியனுக அதிகரித்து ரூபா 35,000 மில்லியனை அடைந்தது இன்று இதன் எல்லை ரூபா 50,000 மில்லியன் வரை சென்றுள்ளது. இந்த வளர்ச்சியிலிருந்து அரசாங்கம் எந்தளவுக்கு இக்குறுகிய கால கடன் பத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது என்பதனை அறிய முடிகின்றது.

சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கையில் மத்திய வங்கி அமைக்கப்பட்டு நாணயச் சட்டத்தின் 113ம் பிரிவின்படி 1949ம் ஆண்டில் 58ம் இலக்க சட்டத்தின்படி பொதுபடுகடனை முகாமை செய்யும் பொறுப்பு மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய வங்கி தொழிற்பட தொடங்கியதும் அங்கு பொதுபடுகடன் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு திறைசேரி உண்டியல்களை வழங்குவதும் அவை முதிர்ச்சியடையும் போது மீட்புப் பெறுவதும் தொடர்பாக நடவடிக்கைகள் இத்திணைக்களத்தினுல் அரசாங்கத்தின் முகவர் என்ற நிலையில் மேற்கொள்ளப்பட்டது. திறைசேரி உண்டியல்கள் ஆரம்பத்தில் திறைசேரியின் பருவகால நிதியிலான வருமான வீழ்ச்சியை ஈடு செய்வதற்கும், எதிர்பாராத செலவீனங்களை ஈடு செய்வதற்காக நிதியினை பெற்றுக் கொள்வதற்குரிய தற்காலிக மூலமாக பயன்படுத்தப்பட்டது. இவை வர்த்தக வங்கிகள், சட்ட ஆளுமை அமைப்புகள், தனிப்பட்ட நபர்கள் குறுங்கால முதலீட்டை மேற்கொள்ளக்கூடிய வழியாக தொழிற்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைத்ததும் திறைசேரி வெளியே இருந்த உண்டியல்களை மீட்டுக் கொண்டது. ஆனுல் தற்பொழுது வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள் பங்கீட்டில் நிதியீட்டம் செய்வதற்கான ஒரு கூறுக அமைந்ததினுல் இக்கடன் படுகை ஒரு நிரந்தரத் தன்மையுடையதாக மாறியுள்ளது.

திறைசேரி உண்டியல்கள் கடந்த வருடத்தில் இருந்து (1989) மிகவும் பிரபல்யமடைந்து வந்துள்ளது. தனியார்கள் வங்கிகள் அதிகளவில் கொள்வனவு செய்யும் ஒரு குறுங்கால கடன் பத்திரமாக காணப்படுகின்றன. அரசாங்கம் மக்களிடமிருந்து நேரடியாகப் பண வைப்புக்களைத் தான் பெறும் நோக்கத்துடன் இத்திட்டத்தை பிரபல்யமடையச் செய்தது. நாட்டில் நிலவும் வங்கி வட்டிவீதங்களிலும் பார்க்க உயர்ந்த வட்டிவீதத்தை கொடுக்கின்றது. இதனுல் பெருமளவு பணம் இப்பொழுது திறைசேரி உண்டியலில் முடக்கப்பட்டுள்ளது. வானெலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஊடாகவும், முகவர் நிலையங்கள் ஊடாகவும் மக்கள் மத்தியில் இதனை பிரபல்யமடையச் செய்வதற்கு பல முயற்சிகள் நடைபெறுகின்றது. திறைசேரி உண்டியல்களுக்காக வழங்கப்படும் வட்டிவீதங்கள் ஏனைய வட்டிவீதங்களை என்றும் பாதிக்கமாட்டாது. ஆயினும் ஒருசில இடங்களில் மாத்திரம், அதாவது மத்திய வங்கியிலும் அதன் கிளைகளிலும் (அனுராதபுரம், மாத்தளை) கொள்வனவு செய்யப்படும். வேறு இடங்களில் கொள்வனவு செய்ய முடியாது. ஒவ்வொரு கிழமையும் பத்திரிகைகளில் கொள்வனவு செய்யப்பட்ட அளவு, அதற்கான வட்டிவீதங்கள் யாவும் பிரசுரமாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து வரும் கிழமை வட்டிவீதம் எவ்வாறு அமையும் என ஊகித்துக் கொள்ளலாம். ஏனைய வங்கிகளில் முதலீடு செய்வதுபோல இங்கு உண்டியல்களை கொள்வனவு செய்யமுடியாது. கொள்வனவு செய்வதாயின் சில நடைமுறைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். கொள்வனவு செய்யும் முறையை தொடர்ந்து வரும் பந்தியிலிருந்து விபரமாக அறிந்து கொள்ளலாம்.

திறைசேரி உண்டியல்களின் பெறுமதி ரூபா 1000/- ஆக அல்லது அவற்றின் பெருக்கங்களாக இருப்பதோடு முதிர்ச்சியடையும் பொது சமநிலையில் மீட்கப்படும். உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் 5-வது பிரிவின்படி அவை ஒரு வருடத்திற்கு மேற்படாத காலப்பகுதியாக அதன் முதிர்வு இருக்கும். பின்பு முதிர்ச்சிக் காலப்பகுதி 3-மாதம் ஆக்கப்பட்டது. யூலை 1981-ல் இருந்து 6-மாத முதிர்ச்சி காலமாக உண்டியல்கள் அறிமுகம் செய்யப்பட்டன. ஆகவே திறைசேரி உண்டியலில் நாம் 3, 6, 12 மாதங்களில் எதனையும் கொள்வனவு செய்யலாம். ஒவ்வொரு கிழமையும் பத்திரிகையில் முதற்கிழமை கொண்டு செய்யப்பட்ட அளவுகள், வட்டிவீதங்கள், இம்முறை கோரப்படும் அளவுகள் விபரமாகக் கொடுக்கப்படும். அதனை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை குறிக்கப்பட்ட பத்திரங்களில் நிரப்பி அனுப்பவேண்டும். இதற்கு பூரணஅறிவு, சந்தைநிலை பற்றிய அனுபவம் முக்கியமானது. இது எவ்வாறு நடைபெறுகின்றது என்பதனை பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம். பத்திரிகைகளில் முதற்கிழமை வெளிவரும் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மத்திய வங்கி

(உ+ம்) இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும்
3, 6, 12 மாத திறைசேரி உண்டியல்கள்.

ரூபா 1400 மில்லியனுக்குத் தேவையான கேள்வி விபரங்கள் பின்வரும் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப கோரப்படுகின்றன.

1. கேள்வி விபரங்கள் அடுத்த கிழமை புதன்வரை கோரப்படும்.
2. கேள்வி விபரங்களில் தெரிவு செய்யப்படுவோர் வெள்ளிக்கிழமைக்கு முன்பு பணம் செலுத்த வேண்டும்.
3. குறைந்த பண அளவு 1000/-
4. இதற்கு மேற்பட்ட தொகை 1000/- மடங்காக இருக்க வேண்டும்.

முதற் கிழமை கொள்வனவு செய்யப்பட்ட உண்டியல் விபரங்களும் அதற்கான எடையூட்டப்பட்ட சராசரி வட்டிவீதங்களும் பின்வருமாறு அமைகின்றது.

| முதிர்வடையும் காலம் (மாதங்கள்) | எடையூட்டப்பட்ட சராசரி ஏல விலை (ஒவ்வொரு 100/-) | எடையூட்டப்பட்ட சராசரி வருமானம் (% வருடாந்தம்) |
|---|---|---|
| 3 | 96.5963 | 14.0945 |
| 6 | 92.9671 | 15.1299 |
| 12 | 85.4443 | 17.0354 |

இந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு முதலீடு செய்யவிரும்பிய ஒருவர் விண்ணப்பத்தை அனுப்பவேண்டும். முதலில் வங்கியினால் கொடுக்கப்பட்ட விபரங்களை நோக்குவோம்.

1. முதிர்ச்சியடையும் காலம் 3 மாதங்கள் அதில் 96.5963 எனக் கூறப்பட்டுள்ளவிலை ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் இன்று முதலீடு செய்யும்பொழுது 96.5963 ரூபா கொடுக்க வேண்டும். ஆகவே 10.000/- ஒருவர் 3 மாதகால முதலீட்டில் போடுவதாயின் இன்று 9659.63 சதத்தை முதலீடு செய்யவேண்டும். தான் பெறப்போகும் வட்டியைக் கழித்து ரூபா 9660/-க்கு காசோலை வரைந்து (மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் கணக்குக்கு) கொடுத்தல் வேண்டும். வங்கி திறைசேரி உண்டியலை அனுப்பும்பொழுது ரூபா 10,000/- பெறுமதி உடையதனை அனுப்பும். கொள்வனவு செய்த திகதியில் இருந்து 3 மாதத்தின் பின்பு வங்கியில் கொடுத்து ரூபா 10,000 பெற்றுக் கொள்ளலாம். ஆகவே,

| | | ரூபா |
|---|---|---|
| கொள்வனவு செய்யும் போது வழங்கிய பணம் | (01-01-90) | 9660 |
| முதிர்ச்சியில் | (31-03-90) | 10,000 |
| ∴ கிடைக்கும் வட்டி | | 340 (3மாதம்) |

$$∴ \text{ வருடாந்த வட்டிவீதம் } \frac{340}{9660} \times 4 = 14.08\%$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வட்டிவீதம்தான் சராசரி வட்டிவீதமாக 14.0945 என கொடுக்கப்பட்டுள்ளது. சிறுமாற்றங்கள் வருவதற்கு முழுமைத் தானத்தில் கணிப்பதே காரணமாகும். இதே போன்று சுருக்கமாக ஆறுமாத உண்டியல்களை கணித்தால், ஒவ்வொரு ரூபா100 க்கும் இன்று கொடுக்கப்பட வேண்டியது ரூபா 92.9671, ஆகவே ரூபா 10,000/- கொள்வனவு செய்தால் ரூபா 9297/– காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

| | | ரூபா |
|---|---|---|
| கொள்வனவு செய்த பொழுது வழங்கிய பணம் | (01-01-90) | 9297 |
| முதிர்ச்சியில் | (31-06-90) | 10,000 |
| ∴ கிடைக்கும் வட்டி | | 703 (6 மாதம்) |

$$∴ \text{ வருடாந்த வட்டிவீதம் } \frac{703}{9297} \times 2 = 15.12\%$$

இந்த வட்டிவீதம்தான் சராசரி வட்டிவீதமாக 15.1299 என கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு வருட முதலீட்டை எடுத்து நோக்குவோமாயின் ஒவ்வொரு ரூபா 100க்கும் இன்று கொடுக்க வேண்டியது ரூபா 85.4443, ஆகவே ரூபா 10,000/- கொள்வனவு செய்தால் ரூபா 8544/- காசோலை அனுப்பவேண்டும்.

| | | ரூபா |
|---|---|---|
| கொள்வனவு செய்யும் பொழுது வழங்கிய பணம் | (01-01-90) | 8544 |
| முதிர்ச்சியில் | (31-12–90) | 10,000 |
| ∴ கிடைக்கும் வட்டி | | 1456 (12 மாதம்) |

$$∴ \text{ வருடாந்த வட்டிவீதம் } \frac{1456}{8544} = 17.04\%$$

இந்தத் தரவுகளில் இருந்து முதலீட்டாளன் தன்னை தயார்ப்படுத்தி அடுத்த கிழமைக்கு விண்ணப்பித்தல் வேண்டும். பத்திரிகையில் கொடுக்கப்பட்டது சராசரியாக இருப்பதால் கூட அல்லது குறைய வட்டிவீதத்தில் நாம் விண்ணப்பிக்கலாம். ஒருவர் விண்ணப்பிக்கும் பொழுது பின்வரும் அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்படல்வேண்டும்.

1. மத்தியவங்கி கோரும் கேள்வித் தொகையின் அளவு
2. முதல் கிழமை நடைமுறையில் இருந்த வட்டிவீதங்கள்
3. பொதுவாக மக்களிடம் இருக்கும் விருப்பங்கள்

உதாரணமாக ஒருவர் 10,000/– வை மேற்காட்டிய உதாரணத்தின்படி அடுத்த கிழமை முதலீடு செய்ய விரும்புகின்றார், விண்ணப்பம் அனுப்பும்பொழுது (12மாதங்கள் என கொள்வோம்) ஒவ்வொரு 100/- வுக்கும் ரூபா 85.22 தருகின்றேன் என விண்ணப்பித்துள்ளார். இதன் பிரகாரம் 10,000/– முதலீடு செய்தாராயின் ரூபா 8522/- உடன் கொடுக்க வேண்டும். இதனால் அவர் 12 மாதங்களின் பின் பெறும் வட்டி அளவு 10,000 — 8522 = 1478/– அதாவது 17.34% ஆகும். இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, வங்கியானது கட்டாயமாக இவருடைய விண்ணப்பத்தை ஏற்கவேண்டும் என்பதல்ல. பலருடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். இதற்கான காரணங்களை நோக்குவோம்.

1. வங்கிக்கு தேவையான அளவுக்கு அதிகமாக காசு வந்தால், வங்கி வட்டி வீதத்தை குறைக்க முயலும்.

264057

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பெரிய அளவு தொகைகளை வங்கி அதிகமாக விரும்பி கொள்வனவு செய்யும்.
3. தொடர்ச்சியாக கொள்வனவு செய்யும் நிதி நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கும்.

இந்த நிலையில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிழமையும் புதன்கிழமை நண்பகல் 12–00 மணிக்கு முன் வங்கியில் கொடுக்கவேண்டும் வியாழக் கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு வங்கியுடன் தொடர்புகொண்டு கேள்விப் பத்திரம் ஏற்கப்பட்டுள்ளதா என அறியவேண்டும். வங்கியுடன் தொடர்புகொள்ளும் போது அவர்கள் ஒவ்வொரு ரூபா 100 க்கும் அதில் கோரப்பட்ட விலை என்னவென்று கூறு வார்கள். உதாரணமாக பின்வருமாறு வங்கி அறிவிக்கின்றது என வைப்போம்.

| | ஒவ்வொரு | | ஆகக்குறைந்தது |
|---|---|---|---|
| 12 மாதங்கள் | 100/–க்கு | — | 86/- |
| 6 மாதங்கள் | 100/–க்கு | — | 93/– |
| 3 மாதங்கள் | 100/–க்கு | — | 96/– |

ஒருவர் கேள்விப் பத்திரத்தில் 85/- (12 மாதம்) என போட்டிருந்தால் அவர் விண் ணப்பம் நிராகரிக்கப்படும். அதே போல ஆறு மாதத்திற்கு 92/- என போட்டால் அதுவும் நிராகரிக்கப்படும். அதே போல மூன்று மாதங்களுக்கு ரூபா 95/- என போட்டிருந்தால் அதுவும் நிராகரிக்கப்படும். இந்தத் தொகை அல்லது அதற்கு மேற் பட்டிருந்தால் உம் 87, 93, 97 யாவும் ஏற்கப்படும். ஏன் வங்கி அவ்வாறு செய் கின்றது. ஒரு உதாரணத்தை நோக்குவோம்.

12 மாதங்கள் ஒவ்வொரு ரூபா 100-க்கும் 85/- வழங்க விருப்பம். இதனல் அவர் எதிர்பார்க்கும் வட்டிவீதம்

$$\frac{15}{85} \times 100 = 17.64\%$$

வங்கி சகல விண்ணப்பங்களையும் பரிசீலித்து தீர்மானித்தது ஒவ்வொரு 100-க்கு 86/– இதனல் வங்கி கொடுக்க இருக்கும் வட்டிவீதம்

$$\frac{14}{86} \times 100 = 16.27\%$$

ஆகவேதான் இவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படுகின்றது. ஆனல் இன்னெரு வர் ஒவ்வொரு 100-க்கும் 87/- என போட்டிருந்தால் அவர் எதிர்பார்க்கும் வட்டிவீதம்

$$\frac{13}{87} \times 100 = 14.94\%$$

வங்கி வழங்கி இருக்கும் வட்டிவீதத்திலும் இது குறைவாக இருப்பதனல் வங்கி இதனை ஏற்றுக்கொள்ளும். இங்கு ஓர் முககிய அம்சம் கவனத்தில் எடுக்க வேண்டும். நாம் எந்த வட்டியை விரும்புகின்ருேமோ அதனைத்தான் வங்கி கொடுக்கும். வங்கி தீர்மானித்த வட்டிவீதத்தின் கீழ் எதனையும் வங்கி கொடுக்கும். ஆனல் முதலீட்டா ளர் தான விரும்பியபடி, விண்ணப்பப் பத்திரத்தை கொடுத்ததன் பின்பு வட்டி வீதத்தை மாற்றும்படி கோரமுடியாது. இதனல் ஒவ்வொருவரும் வெவ்வேறு வட்டி வீதத்தில் முதலீடு செய்யவேண்டி ஏற்படும். இதற்கு முதலீட்டாளரின் அனுபவம் திறமை முக்கிய இடத்தை வகிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழக்கிழமைகளில் முதலீடுகள் அங்கீகரிக்கப்பட்டதும், வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு முன்னர் காசோலைகள் மத்திய வங்கியின் திறைசேரியின் கணக்குக்கு வரையப்பட்டு வழங்கப்பட வேண்டும். அந்த நேரத்துக்குள் காசோலை வழங்கப்படா விட்டால் அவருடைய பெயர் அந்த கிழமைக்கான முதலீட்டிலிருந்து நீக்கப்படும். சரியான முறையில் வழங்கப்பட்டதும் வங்கி 10 நாட்களில் உண்டியலை அவருடைய முகவரிக்கு அனுப்பி வைக்கும். முதிர்ச்சியடையும் திகதியில் அவர் வங்கிக்கு கொண்டு சென்று காசாக மாற்ற முடியும். இப்பொழுது இந்த உண்டியல்களை மறுகழிவு செய்து உடன் பணமாக மாற்றக் கூடியதாக வசதிகள் இருக்கின்றன. பணம் ஒருவருக்கு உடனடியாக தேவைப்படுமாயின் உணடியலை வணிக வங்கிகளிடம் ஒப்படைத்து மறுகழிவு செய்து பணத்தை பெற்றுக் கொள்ளலாம். குறைந்த வட்டி வீதத்தில் வங்கி மறுகழிவு செய்து முதிர்ச்சிக்காலத்தில் மத்திய வங்கியிடம் கொடுத்து குறிக்கப்பட்ட வட்டி வீதத்தை பெற்றுக் கொள்ளும். கழிவு செய்யும் வீதத்திற்கும் முதிர்ச்சிக்கால வட்டி வீதத்திற்கும் இடைப்பட்ட வட்டி, வங்கிக்கு இலாபமாக கிடைக்கும். இந்த வசதிகள் அண்மையிலேயே புகுத்தப்பட்டன. இதமூல் திறைசேரி உண்டியலுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

ஏனைய குறுங்கால முதலீடுகளிலும் பார்க்க உண்டியல் முதலீடு பல வகைகளில் வேறுபடுகின்றது.

1. முதலீட்டுக்காக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்ப்டும்.

2, முதலீடு அரசாங்கத்தால் தேசிய சேமிப்பு வங்கி முதலீட்டைப் போல் 100% உத்தரவாதம் வழங்கப்படுகின்றது. ஏனைய வங்கி முதலீடுகள் உத்தரவாதம் மற்றவை.

3. ஏனைய எல்லா நிதி நிறுவனங்களின் முதலீடுகளிலும் பார்க்க வட்டி வீதம் உயர்வாக காணப்படும். (இன்று ஒரு வருடகால முதலீட்டுக்கு 19.5 வீநம் வழங்கப் படுகின்றது.

4, முதலீட்டின் முதிர்ச்சிக் காலங்கள் 3, 6, 12 மாதங்களை மட்டும் உள்ளடக்கும்

5. நீங்கள் நேரடியாகவோ அல்லது முகவர்கள் மூலமாகவோ முதலீட்டை உங்கள் பெயரில் மேற்கொள்ளலாம்.

6. முதலீடுகள் யாவும் வெவ்வேறு வட்டி வீதங்களில் காணப்படும். வங்கியால் நிர்ணயிக்கப்படும் உச்ச வட்டி வீதத்திற்கு குறைவாக வெவவேறு வீதங்கள் காணப் படும்.

7 ஒவ்வொரு கிழமையும் வெள்ளிக்கிழமையில் மாத்திரம் மத்திய வங்கியில் முதலீடு செய்யலாம்.

8. முதலீட்டு நடவடிக்கைகள் மிகவும் சிக்கலானவையாகும்.

திறைசேரி உண்டியலில் அதிகளவு நன்மைகள் காணப்பட்ட பொழுதிலும் பாமர மக்கள் முதலீடு செய்வதில் அதிக சிக்கல்களை அடைய வேண்டி இருக்கின்றது. இதனால் அதிக உயர் வட்டி வீதம் காணப்பட்ட பொழுதிலும் பெரும்பாலான மக்கள் இதில் முதலீடு செய்வதில்லை. நகரங்களில் வாழ்கின்ற மக்களும், நிதிநிறுவனங்களுடன் அதிகளவு தொடர்பு கொண்டுள்ள மக்களுக்குந்தான் இதில் முதலீடு செய்து அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் முதலீடுக
ளவு நன்மையடைகின்றனர். இருந்தும் இன்று நடைமுறையில் வருகின்றது எனலாம் இந்தக்
ளில் இது முக்கிய இடத்தை பெற்று பிரபல்யமடைந்து
கட்டுரையில் வங்கி என்பது மத்திய வங்கியைக் குறிக்கின்றது.

## உசாத்துணைகள்

1. மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.
2. மத்திய வங்கி செய்தித் தொகுப்புகள்.
3. தினசரி பத்திரிகைகள்,
4. வங்கியும் ஏனைய நிதி நிறுவனங்களும் - கலாநிதி கருணாதிலக்க.
5. மத்திய வங்கி - மாத வெளியீடுகள்.

தமிழுண்டு தமிழ் மக்களுண்டு — இன்பத்
தமிழுக்கு நாளுஞ் செய்வோம் நல்லதொண்டு
தமிழென்று தோள்தட்டி ஆடு — நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம்பாடு

— பாரதிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற் சுகாதாரம்

*பற்களை நீங்கள் இழந்தால் சொல்லுமட்டுமன்றி அழகு, உணவு அரைத்தல், கீழ்தாடை மூட்டு என்பனவும் பாதிக்கப்படும். எனவே பற்களைப் பாது காப்பது அவசியம்.*

பற்களைப் பேணுவதற்கு வைத்தியம் செய்வதிலும் பார்க்க நோய் வராமல் தடுப்பதே மேல்.

வாய்க் குழிக்குள் வரும் பொதுவான நோய்கள்:

1) பற்சூத்தை
2) முரசு கரைதல்
3) வாய்ப்புண் (*Ulcer*)
4) வாய்ப்புற்று நோய்

## பற்சூத்தைக்கான காரணங்களும, அதன் விளைவுகளும், தடுக்கும் முறைகளும்

*காரணங்கள்:*

1. இனிப்புப் பண்டம்
2. வாயினுள் காணப்படும் நுண் கிருமிகள்
3. உமிழ் நீரினுள்ள பல்சக்ரைட்டுகளும், புரதங்களும்.

உமிழ்நீர் கிருமிகள் இயற்கையில் வாயில் காணப்படுவதால் அவற்றை அகற்ற முடியாது. எனவே சீனிப் பண்டங்களின் அளவைக் குறைப்பதால் பற்சூத்தையில் இருந்து நிவாரணம் பெறலாம்.

## சீனிப் பண்டங்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கான வழிகள்

1. அடிக்கடி சீனிப் பண்டங்கள் உண்பதைத் தவிர்த்தல்.
2. சாப்பாட்டுக்குப் பின் சீனிப் பண்டங்களை எடுக்க வேண்டும். எடுத்தவுடன் வாயைக் கழுவவும். (2-5 நிமிடங்களில் நுண்கிருமிகளின் தாக்கத்தினல் அமிலம் உருவாவதால்)
3. இனிப்புள்ள பற்சூத்தையை ஏற்படுத்தாத பொருட்களைப் பாவிக்கவும். (உதாரணமாக சிலவகை சூயிங்கங்கள்)
4. சிறு பிள்ளைகளுக்கு இனிப்புப் பண்டங்களுக்குப் பதிலாக கடலை, மற்றும் நார்கள் கூடவுள்ள உணவு வகைகளைக் கொடுக்கவும்.
5. தாய்ப் பால் அருந்தும் பிள்ளைகள் பாலை வாயினுள் வைத்துக்கொண்டு படுப்பதால்

   A) தாய்ப் பாலில் உள்ள *Lactose* நெடுநேரம் வாயில் இருப்பதால் சூத்தை ஏற்படும்.

   B) மற்றும் பசுப்பாலையோ வேறு பாலுணவுகளையோ சீனி சேர்த்து சிறு பிள்ளைகளுக்குக் கொடுத்து வாயைக் கழுவாமல் விடுவதால் சூத்தை ஏற்படும்.

மேற்கூறிய *A*யிலும் *B*யிலும் குழந்தைகளுக்கு மேல் கீழ் தாடை முன் பால் பற்கள் முழுவதும் சூத்தையால் பாதிக்கப் படும். இது *Rampant Caries* ஏன்று அழைக்கப்படும்.

சூத்தை ஏற்படின் பல் வைத்தியரிடம் காட்டி ஆரம்ப கட்டத்திலேயே நிரபபிக் கொள்ள வேண்டும். புளோரைட்டுக் கொண்ட பற்பசை பாவித்தல் மற்றும் தாய்மார்கள் கர்ப்பமாக இருக்கும்போதே வைத்தியரின் அனுமதியோடு புளோரைட்டு குழிசைகளைப் பாவிப்பதால் அமிலத் தாக்கத்தை தாக்குப் பிடிக்கக்கூடிய பல் மேற் பரப்புகளை உருவாக்கலாம். மற்றும் சிறு பிள்ளைகளுக்கும் வைத்திய ஆலோசனைப்படி புளோரைட்டு குழிசைகளைக் கொடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பற்சூத்தையால் ஏற்படும் விளைவுகள்

1. பல் நிறமாற்றம்
2. உணவுத் துணிக்கைகள் பற்சூத்தைக் குள் அடைதல்.
3. குளிர், சுடு பானங்கள் அருந்தும் போது கூசுதல்.
4. பல்வலி
5. வீக்கம் ஏற்படுதல். இதற்கு வைத்தியம் செய்யாவிட்டால் தொண்டைக்கு வீக்கம் பரவி மூச்சு விடக் கடினம் ஏற்பட்டு மரணம் கூட சம்பவிக்கலாம். பற்சூத்தை வராமல் தடுப்பதன் மூலம் தடுத்துக் கொள்ளலாம்.

## முரசு கரைதல்

காரணங்களும், விளைவுகளும்
தடுக்கும் முறைகளும்;

பற்களின் மேற்பரப்பிலும், இடையிலும் இருக்கும் வெண்ணிற படையில் (*Plaque*) வாய் நுண்கிருமிகளின் தாக்கத்தால் ஏற்படும் விளைவே இது. ஆரம்பத்தில் பல் துலக்கும் போது மட்டும் இரத்தம் வரும். பின்னர் அடிக்கடி முரசில் இருந்து இரத்தம் வரும். இதற்கும் வைத்தியம் செய்யாவிடில் இது பல்லை எலும்புக குழிக்குள் தாங்கும் இழையங்களையும் பாதிப்பதால் பற்கள் ஆடத் தொடங்கி இறுதியில் பற்களை இழக்க வேண்டி வரும்.

இதைத் தடுப்பதற்குச் சரியான முறையில் பல் துலக்க வேண்டும். அருகிலுள்ள பல் வைத்தியரிடமோ பயிற்றப்பட்ட பற்தாதிகளிடமோ கேட்டறியலாம். ஒவ்வொரு சாப்பாட்டுக்குப் பின்னரும் பல் துலக்க வேண்டும். அது எமது அன்றாட வாழ்க்கையில் எல்லோருக்கும் சரிவராததால் காலையிலும் இரவிலும் பல் துலக்க வேண்டும்.

## வாய்ப்புற்று நோய்

புற்றுநோய் இருப்பதா என்பதை எவ்வாறு அறிவீர்கள்?

1. வாய்க்குழிக்குள் காணப்படும் நெடுநாள் ஆறாத புண்கள்.
2. காரணம் இல்லாமல் இரத்தம் வருதல்.
3. சொக்கு, சொண்டு, நாக்கு, *Paiate* (நாசி) போன்ற இடங்களில் துடைக்கும் போது போகாத காணப்படும் வெண்ணிற படை காணப்படுதல்.
4. நெடுநாளைய வீக்கங்கள்

வாய்ப்புற்று நோய்க்குரிய காரணங்கள் திட்டவட்டமாகத் தெரியாது. ஆனால் கீழ்க் காணும் முறைகளினால் புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

1. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை சேர்த்து சாப்பிடுதலை நிறுத்த வேண்டும். சாப்பிடுவதானால் படுக்கும் போது நன்றாக முழு வெற்றிலை பாக்கையும் அகற்றி வாயை அலம்ப வேண்டும்
2. மதுபான வகைகள், புகைத்தல் அதிகளவில் எடுத்தலும் ஒரு காரணமாகலாம்.
3. உடைந்த அல்லது வரிசையில் அமையாத பற்களால் நீண்ட நாட்களுக்கு ஏற்படும் உராய்வு (*Frictiou*) இப்பற்களை அகற்றுவதன் மூலம் உராய்வை இல்லாமல் பண்ணலாம்.

இலங்கையில் காணப்படும் புற்றுநோய்களில் 35% — 40% வாய்ப்புற்று நோய்களாகும். எனவே நாம் நோயின் ஆரம்ப கட்டத்தை கண்டுபிடித்தவுடன் பல் வைத்தியரிடம் காண்பிக்க வேண்டும்.

## வேறு காரணங்களாலும் பற்களில் நிறமாற்றம் ஏற்படும்

1. தாய் கர்ப்பம் தரித்திருக்கும் போதும் ஆறு வயதுக்குட்பட்ட பிள்ளைகளும் இயலுமான அளவு *Tetracycltne* பாவிப்பதை நிறுத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் *Tetracycline* பாவித்த காலம் பல்லில் மென் மண்ணிறகோடு (*Bond*) ஆக காட்சியளிக்கும். இது நிரந்தரமானதால் முன் பற்களுக்கு ஒரு அழகற்ற தோற்றத்தைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நாம் பருகும் நீரில் புளோரைட்டின் அளவு பத்து இலட்சத்துக்கு 1 பகுதிக்கு கூட விருப்பின் இதுவும் நிரந்தரமான நிறமாற்றம் ஏற்படும். சோக்கு போன்ற வெண்ணிறத்திலிருந்து மண்ணிறம் வரையில் நிறமாற்றம் ஏற்படுவதோடு பல்லின் மேற்பரப்பிலும் மாற்றங்களைக் கொண்டு வரும்.

8. ஈயம், இரசம், பிஸ்மத் போன்ற உலோகங்களாலும் பற்களில் நிறமாற்றம் ஏற்படும்.

4. சிகரெட்டில் இருக்கும் நிக்கொட்டினும் நிறமாற்றத்தை ஏற்படுத்தும். ஆனல் இது தற்காலிகமானது. சுத்தம் செய்து அகற்றிக் கொள்ளலாம்.

நன்றி: ரவி

## பல் பாதுகாப்பு

பண்டைக்காலம் முதலே பற்களையும் வாயையும் தூய்மையாக வைத்துக் கொள்ளு பழக்கம் நம் மக்களிடையே இருந்து வருகிறது. ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி'' என்னும் பழமொழியையும் நாம் கேட்டிருக்கிருேமல்லவா? இந்தப் பழமொழி இன்றைய வாழ்க்கைக்கும் பொருத்தமாய் அமையும். ஆலங்குச்சி அல்லது வேலங்குச்சிகளை நறுக்கி அவற்றைப் பல் துலக்கிகளாக இன்றும் கிராமங்களில் ஏராளமான மக்கள் பயன்படுத்தி வருவதை நாம் பார்க்கலாம். இக் குச்சிகளின் சாறு மருத்துவ குணம் கொண்டதாக விளங்குகிறது. எனவே, இக் குச்சிகள் பல் நோய்கள் வராமல் எளிதில் தடுக்கக் கூடியனவாகவும் உள்ளன.

இக்காலத்தில் பயன்படுத்தப்படும் பல் துலக்கிகள் பல அமைப்புகளில் பல நிறங்களில் அமைந்துள்ளன. பல் துலக்கிகளில் மென்மையானது, நடுத்தரமானது, கடினமானது என மூன்றுவகை உண்டு. குழந்தைகள் மென்மையான துலக்கிகளையும், பெரியவர்கள் நடுத்தரமான துலக்கிகளையும் பயன்படுத்தலாம்.

### சரியான முறையில் பல் துலக்குதல்

பற்களைச் சிறந்த முறையில் தூய்மைப்படுத்துவதும், ஈறுகளை ஊக்குவிக்கக் கூடியதுமான முறையே சரியான பல் துலக்கும் முறை என்று கூறப்படுகிறது. அவற்றை இங்கு காண்போம்.

### செங்குத்து முறை

துலக்கியினை மேலிருந்து கீழ் நோக்கியும் கீழிருந்து மேல் நோக்கியும் செலுத்துவதால் இருவரிசைப் பற்கள் கன்னப்பகுதி, நாக்குப்பகுதி, அண்ணப்பகுதி ஆகியவை செம்மையாகத் துப்பரவு செய்யப்படுகின்றன.

### சுற்றுமுறை

இம் முறையில் துலக்கின் முட்கள் ஈறின் மேல் பகுதியில் அழுத்தமாகத் தொடங்கி, பற்களின் மேல் புறத்திலும், அரைக்கும் பக்கங்களிலும் வட்டமாக இயக்கப்பட வேண்டும். இவ்வாறு ஓரிடத்தை ஐந்து அல்லது ஆறு முறைகளாவது வட்டமாகத் துலக்க வேண்டும்.

### வட்டமுறை

இம்முறை குழந்தைகளுக் கேற்றது. இம் முறையில் இரண்டு தாடைகளும் இணைந்த நிலையில் கன்னப் பக்கங்கள் வட்டமாகத் துலக்கப்படுகின்றன. நாக்குப்புறம், அண்ணப்புறம் ஆகியவை முன்னும் பின்னுமாகத் துலக்கப்படுகின்றன. அரைக்கும் பக்கங்களும் அவ்வாறே துலக்கப்படுகின்றன.

நன்றி: 'பல் பாதுகாப்பு' கழக வெளியீடு, சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தூயகணிதமும் மதிப்பீடுகளும்

சோ. கருணேஸ்வரன் *B. Sc. Spl. Trd. (Maths)*

**தூ**யகணிதம் என்பது தருக்க முறைப் படி பகுத்து ஆராய்ந்த அறிவாகும். இங்கு அடிப்படையான எடுகோள்கள் தெளிவாகக் கூறப்பட வேண்டும். எடுக்கப்பட்ட எடு கோள்களையும், தர்க்கவியலிலுள்ள சாதா ரண விதிகளையும் ஒன்றிணைத்து, அதாவது பயன்படுத்தி உள்ளுணர்வுக்கு எந்தவிதத்தி லும் இடங்கொடுக்காது விருத்தியாக்கப் பட்டதே தூயகணித என்று விரிவாகக் கூறலாம். தூயகணிதத்தில் அட்சர கணி தம், நுண் கணிதம், புள்ளி விபரவியல், திரிகோண கணிதம் ஆள்கூற்றுக் கேந்திர கணிதம், திண்மக் கேத்திர கணிதம், தளக் கேத்திரகணிதம், நிகழ்தகவு என்னும் கணி தத் தொகுதிகள் உள்ளடங்கும்.

மதிப்பீடு என்பது நாங்கள மேற் கொள்ளும் எந்தவொரு செயற்பாட்டிலும் ஒரு பிரிக்க முடியாத ஒரு செயற்பாடாக அமைந்துள்ளது. மதிப்பீடு மேற்கொள்வ தன் நோக்கம் ஒரு செயற்பாடு நடை முறைப்படுத்தப்படும் பொழுது செயற் பாட்டின் இடைநடுவில் அது எவ்வாறு அமைந்துள்ளது என்று அறிவதற்கும், செயற்பாட்டின் இறுதியில் எவ்வாறு வெற்றி அளித்துள்ளது என்பதை அறிவதற்கும் மேற்கொள்ளப்படுகின்றது. ஆனல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மேற்கொள்ளப் படும் மதிப்பீடு இவ்வாறு மேற்கொள்ளப் படுவதில்லை. ஏனெனில் இப்பரீட்சையில் தோற்றும் மாணவர்களில் 7%க்கும் குறைந்த மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழக அனு மதி பெறுகின்றனர். எனவே இப்பரீட்சை ஒரு தகுதிகாண் பரீட்சையாக இல்லாமல் ஒரு போட்டிப் பரீட்சையாகவே மாணவர் களுக்கு அமைந்துள்ளது. எனவே மாண வர்களுக்கு பாட அறிவு மட்டும் இருந்தால் போதாது. அவர்கள் எவ்வாறு பரீட்சை யில் வினக்களுக்கு விடை அளிக்கவேண்டும் என்று தெரிந்திருத்தல் வேண்டும். வினக் களுக்கு எவ்வாறு விடையளிக்க வேண்டும் என்பதற்கு வினத்தாள் எவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்றது என்ற அறிவு மாண வர்களுக்கு இருக்குமானல் விடை அளிப்பது இலகுவாகவும், அதிகளவு புள்ளி பெறுவ தற்கு வாய்ப்பாகவும் இருக்கும்.

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தூயகணிதம் 3 மணித்தியாலம் கொண்ட இரு வினத்தாள்களை கொண்டது. ஒவ் வொரு வினத்தாளும் பத்து வினக்கள் கொண்டவை. அதில் விரும்பிய ஆறு வினக் களுக்கு ஒவ்வொரு வினத்தாளிலும் விடை அளிக்கப்பட வேண்டும். தூயகணிதம் I இல் அட்சரகணிதத்தில் முதல் ஐந்து வினக் களும், இறுதி ஐந்து வினக்களும் நுண்கணி தத்தில் அடங்கும். தூயகணிதம் II இல் முதலாம் வின தளக்கேந்திர கணிதத்திலும் இரண்டாம் வின திண்மக் கேத்திர கணி தத்திலும், மூன்றும், நான்காம், ஐந்தாம், ஆறும், ஏழாம் வினக்கள் ஆள்கூற்றுக் கேத்திர கணிதத்திலும் எட்டாம், ஒன்ப தாம் வின திரிகோண கணிதத்திலும், பத் தாம் வின நிகழ்தகவிலும் பொதுவாக உள் ளடங்கும்.

பரீட்சை மண்டபத்தில் வினத்தாளை மாணவர்கள் பெற்றதும், பரீட்சையைச் செய்ய ஆரம்பித்தல் ஆகாது. முதல் 15 நிமி டங்களுக்கு வினத்தாளை நன்கு வாசித்து வினக்களின் கடினத் தன்மைக்கேற்ப ஏறு வரிசைப்படுத்தி முதலில் கடினம் குறைந்த வினவுக்கு விடையளிக்க வேண்டும். ஏனெ னில் கடினமான வினவுக்கு விடையளிக்க முடியாத நேரத்தில் மனவெழுச்சியடைந்து உளச் சமநிலை குலைக்கப்பட்டு தொடர்ந்து பரீட்சை எழுதுவது முடியாமலிருக்கலாம். ஒவ்வொரு வினவுக்கும் 25 நிமிடங்கள் ஒதுக்கி மிகுதி 15 நிமிடங்களுக்கும் விடைத் தாள் மீள்பார்வை செய்ய பயன்படுத்த தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயகணிதத்திலுள்ள ஒவ்வொரு வினவும் 100 புள்ளிகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு பின்னர் 6 ஆல் வகுக்கப்படுகின்றது. ஒவ்வொரு 100 புள்ளிகளும் 5 புள்ளிகள் கொண்ட அல்லது அதன் மடங்குகள் கொண்ட சிறுசிறு கூறுகளாகக் கொண்டே புள்ளீ வழங்கப்படுகின்றது. எனவே மாணவர்கள் கொடுக்கும் ஒவ்வொரு கூற்றுக்கும் ஏற்ற நியாயங்கள் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு செய்கைக்கும் ஏற்ற காரணங்கள் கொடுக்க வேண்டும். அல்லாவிடில் புள்ளிகள் வழங்கும் போது 5 புள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் குறைக்கப்படும். இதனுல் விடை சரியாக அளித்த போதும், வினவிற்குரிய முழுப் புள்ளிகளையும் பெறமுடியாமல் போய்விடும். அத்துடன் ஒவ்வொரு வினவுக்கும் அதன் பகுதிகளுக்கும் இறுதி விடை எடுக்க வேண்டும். அல்லாவிடின் இங்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

வினக்களுக்கேற்ற படங்கள் வரையும் போது பொருத்தமானதாகவும், தெளிவானதாகவும் படங்கள் வரைதல் வேண்டும். அப்பொழுதுதான் வினவுக்கு விடை அளிப்பது இலகுவாக இருக்கும். அத்துடன் மாணவர்களின் மனதில் வினவைப் பற்றிய புதிய எண்ணங்கள் உருவாகி பொருத்தமான முறையில் வினவை அணுகி இலகுவாக வினவுக்கு விடையளிக்க முடியும். ஏனெனில் பொருத்தமற்ற படங்கள் வரையும் போது மாணவனின் மனதில் தவருன எண்ணங்கள் உருவாகி பிழையான முறையில் வினவுக்கு விடையளிக்கத் தூண்டும். படம் வரையும் போது விடை அளிக்கும் பக்கத்திலேயே படம் வரைதல் நன்று. ஏனெனில் அத்துடன் மதிப்பீட்டாளருக்கும் மதிப்பீடு செய்வது இலகுவாகும் ஒவ்வொரு வினவுக்கும் விடையளிக்கத் தொடங்கும்போது புதியதொரு விடைத்தாளில் விடை அளிக்க வேண்டும்.

வினவுக்கு விடையளிக்கத் தொடங்கு முன் வினவிலிருந்து பரீட்சகர் மாணவனிடமிருந்து எதனை எதிர்பார்க்கின்ருர் என்பதை மாணவன் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு ஏற்ற முறையிலேயே மாணவன் வினவை அணுக வேண்டும் உதாரணமாக பாடத்தின் அடிப்படை அறிவை எதிர்பார்க்கிருரா, பிரயோகத்தை எதிர்பார்க்கிருரா, விளக்கத்தை எதிர்பார்கிருரா என்பதை அறிய வேண்டும். அப்பொழுது தான் மாணவன் இலகுவாக விடையளிக்க முடியும். அத்துடன் கூடிய புள்ளிகளையும் பெறமுடியும்.

மேலும் கடந்தகால க. பொ. த. (உ. த) பரீட்சை வினத்தாள்களை ஆராய்வோமாயின், முதலில் தூயகணிதம் I இல் அட்சரகணிதப் பகுதியை ஆராய்வோமாயின் மிகக் கூடுதலாக இருபடிச் சமன்பாடுகள், மீதித்தேற்றம், தொடர்கள், சமனிலிகள், கணிதத் தொகுததறிமுறை, சிக்கல் எண்ணில் தாமோவரின் தேற்றம் போன்ற பகுதிகளில் மாணவர்கள விடையளிக்க எத்தனிக்கிருர்கள். மிகக்குறைவாக வரிசைமாற்றம், சேர்மானம், ஈருறுப்புத் தேற்றம், ஆகன்வரிப்படம் போன்றவற்றில் வரும் வினக்களுக்கு மாணவர்கள் விடையளிக்க எத்தனிக்கிருர்கள். இதேபோல இருபடிச் சமன்பாட்டில் மாணவர்கள் அடிப்படைப் பகுதிகளை புரிந்துகொள்ளாத படியாலோ அல்லது இலகுவான பகுதியென்று அலட்சியப்படுத்துவதாலோ இவர்கள் இதில் வரும் வினக்களுக்கு உரியமுறையில் விடையளிக்காதபடியால் மாணவர்கள் உரிய புள்ளிகளைப் பெறத் தவறிவிடுகிருர்கள். மீதித் தேற்றத்தைப் பயன்படுத்தி காரணிப்படுத்தும் போதும் சார்பு ஏகவினமானது, வட்டச் சமச்சீர் போன்ற இயல்புகள் சமன்பாட்டின் சர்வசமன் தன்மையைக் கொண்டு குணகங்களைச் சமப்படுத்தல் போன்றவற்றில், மாணவர்களுக்கு போதியளவு பயிற்சியின்மையால் இதில்வரும் வினக்களுக்கு பூரண விடையளிப்பதில் தவறிவிடுகிருர்கள். தொடர்களின் வினக்கள் வழமைக்கு மாருன முறையில் வரும்பொழுது மாணவர் இலகுவான வின என எத்தனித்து அதிக நேரத்தை செலவழிக்கிருர்கள். அத்துடன் பொருத்தமான முறையில் வினவை அணுகவும் தவறிவிடுகிருர்கள். இதில் ஒழுங்குத் தொடர் அல்லது ஒழுங்காத் தொடர் எனக் காட்டுவதற்கு பல மாணவர்கள் சரியான முறையில் அணுகுவதில்லை. சமனிலிகளில் வரும் வினக்களுக்கு விடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யளிக்கும்போது அநேகமான மாணவர்கள் எண்களின் சமனிலி பற்றி அடிப்படை இயல்புகளை கவனிக்காமல் விடையளிப்பதனால் அதற்குரிய புள்ளியைப் பெறத்தவறிவிடுகிறார்கள். கணிதத் தொகுத்தறி முறையில் வரும் வினாக்களுக்கு விடையளிக்கும்போது ஆரம்பப் பகுதியில் மட்டும் சரியாக விடையளிக்கிறார்கள். அதற்கு பின் $n=p$, உண்மை எனின் $n=p+1$ க்கு உண்மை என்னும் காட்டும் பகுதியை சரிவரக்காட்டுவதில்லை. அத்துடன் $n>No$ க்கு தரப்பட்ட கூற்றுத் தரப்படின் $n=No+1$ க்கு மட்டும் உண்மை எனக்காட்டல் வேண்டும். $n=No+2$ உண்மை எனக் காட்டவேண்டியதில்லை. இவ்வாறு காட்டின் கணிதத் தொகுத்தறி முறையின் அடிப்படைக்கு முரணாவது.

சிக்கல் எண்ணில் தாமோவரின் தேற்றத்தில்வரும் வினாக்களுக்கு வரும்போது தாமோவரின் தேற்றத்தை பயன்படுத்துவதைவிட்டு அநேகமான மாணவர்கள் வேறு முறைகளை கையாள்கிறார்கள். தேற்றத்தை நிறுவும்போதும் நேர் முழு எண்களுக்கு காட்டிவிட்டு மறை முழுவெண்களுக்கு காட்டாமல் எடுகோள்களாக எடுத்து புள்ளிகளை இழக்கிறார்கள். இதேபோல் ஆகன் வரிப்படத்தில் வரைபு அமைப்பைக் கேட்கும்பொழுது வரைபை மட்டும், வரைந்து அதற்குரிய நிறுவல்கள் கொடுபடாதபடியால் அநேகமான மாணவர்கள் முழுப் புள்ளிகளையும் பெறத் தவறிவிடுகிறார்கள். அத்துடன் ஆகன்வரிப்படத்தில் வரும் ஆரம்ப கேத்திரகணித அறிவின் பிரயோகம் புரியாததனாலும் இரு சிக்கல் எண்களுக்கிடையேயுள்ள கோட்டின், வீச்சம், மட்டு போன்ற அடிப்படைப், பண்புகள் காணாது தெரியாதபடியாலும் இதில்வரும் வினாக்களைச் செய்ய அநேகமான மாணவர்கள் தவறிவிடுகிறார்கள். மிகக் கூடுதலான மாணவர்கள் சரியாக வரிசைமாற்றம் சேர்மானத்தில் வரும் வினாக்களுக்கு விடையளிக்கிறார்கள். சில மாணவர்கள் சேர்மானங்கள் தெரிவதில் தவறிவிடுகிறார்கள். ஈருறுப்புத் தேற்றத்தில் வரும் வினாக்களுக்கு சரியான விடை அளிக்கிறார்கள். ஆனாலும் மாறுபட்ட முறையில் வினா வரும்போது விடையளிக்கத் தவறிவிடுகிறார்கள்.

மேலும், நுண்கணிதத்தை நோக்குவோமாயின் மிகக் கூடுதலாக எல்லைகள், வகையீடுகள், மக்கியூலரின் விரிவு, சிம்சனின் விதி, பரப்பு, கனவளவு காணுதல் போன்ற பகுதிகளில் வரும் வினாக்களுக்கு மாணவர்கள் விடையளிக்க எத்தனிக்கிறார்கள். ஆனால் தொகையீடுகள், வரைபுகள் போன்ற பகுதிகளில் வரும் வினாக்களுக்கு மிகக் குறைவாகவே மாணவர்கள் விடையளிக்க எத்தனிக்கிறார்கள். நுண்கணிதத்தில் பொதுவாக மாணவர்கள் சிறப்பாக விடையளிக்கிறார்கள். இருந்தும் மக்கியூலின் விரிவில் வகையீட்டுக் குணகங்கள், பெறுமானங்கள் காணும்போது சரியான முறையில் அணுகாமல் அதிக நேரத்தை செலவழிக்கிறார்கள். தொகையீடுகளிலும் பொருத்தமான முறைகளில் அணுகாமல் வினாவை செய்து முடிப்பதில் சிரமப்படுகிறார்கள். வரைபை எடுத்துக் கொண்டால் அதுவும் பரமானச் சமன்பாடுகள் கொண்ட வரைபுகள் கொண்ட வினாக்களுக்கு விடையளிக்கும் மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஏனெனில் இவ்வகையான வினாக்களில் பூரண பயிற்சியின்மையும் விளக்கமின்மையுமே காரணமாகும். அதாவது பரமானச் சமன்பாட்டிலிருந்து மூலச்சமன்பாட்டிற்கு மாற்றுவதற்கே முயற்சிக்கிறார்கள். அத்துடன் புள்ளிகள் இட்டும் வரைபை வரைய எத்தனிக்கிறார்கள். சமச்சீர் தன்மை போன்ற விடயங்களில் தெளிவின்மையாலும் பூரணவிடை அளிக்க பல மாணவர்கள் தவறிவிடுகிறார்கள். பரப்பு, கனவளவு காணுதல் போன்ற வினாக்களுக்கு அநேக மாணவர்கள் விடையளிக்கிறார்கள். இருந்தும் சில மாணவர்கள் சரியான வரைபு வரைய முடியாததன் காரணத்தினால் புள்ளிகள் பெறத் தவறிவிடுகிறார்கள்.

தூயகணிதம் II இல் தளக் கேத்திர கணிதப் பகுதியில் வரும் வினாவை ஆராய்வோமாயின் க. பொ. த. (சா. த) இல் கேத்திரகணிதத்தில் போதிய அறிவின்மையாலும் இப்பகுதியில் வரும் வினாக்களுக்கு அநேகமான மாணவர்கள் பூரண விடை அளிக்கத் தவறிவிடுகிறார்கள். அத்துடன் வேறு வினாக்கள் செய்யமுடியாத பட்சத்தில் இவ்வினாவுக்கு விடையளிக்க எத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னித்து தவறுகிறார்கள். திண்மக் கேத்திர கணித வினாவை நோக்குவோமாயின் இதில் வரும் வினாக்களுக்கு விடையளிக்க அநேக மான மாணவர்கள் எத்தனிப்பதில்லை. இதன் காரணமாக இதில்வரும் வினா மிக வும் எளிதான வினாவாகும். இவ்வினாவுக்கு விடையளிக்க வேண்டுமாயின் குறிப்பிட்ட அளவு சிந்தனையின் பின் விடையளிப்போ மாயின் இலகுவாக இருக்கும். ஆள்கூற்றுக் கேத்திரகணிதத்தில் நேர்கோட்டில் வரும் வினாக்களை பார்க்கும்போது எளிதாக இருக் கும். ஆனால் மாணவர்கள் விடையளிக்கும் போது மிகவும் சிரமப்படுகிறார்கள். ஏனெ னில் மாணவர்கள் பொருத்தமான முறை யில் வினாவை அணுகுவதுமில்லை. அத்து டன் மாணவர்கள் பகுப்பாய்வுத் திறன் இன்மையாலுமே பூரண விடையளிப்பதில் சிரமப்படுகிறார்கள். வட்டத்தில்வரும் வினாக் களுக்கும் அநேகமான மாணவர்கள் விடை யளிக்க எத்தனிக்கிறார்கள். இருந்தும் வினா விலிருந்து கிடைக்கும் தரவுகளிலிருந்து பெறப்படும் யுத்திகளை பயன்படுத்தாமலும் கணித அறிவு முதிர்ச்சியின்மையாலும் பூரண விடையளிக்கத் தவறிவிடுகிறார்கள். பரவளைவு, நீள்வளையம், அதிபரவளைவு போன்றவற்றில் வரும் வினாக்களுக்கு அநேக மான மாணவர்கள் விடையளிக்கிறார்கள். இருந்தும் சில மாணவர்கள் பிழையான அணுகுமுறையால் பூரண விடை எடுக்கத் தவறிவிடுகிறார்கள். சில மாணவர்கள் சில வளையிகளுக்கு பரமான ஆள்கூறு எடுக்கத் தவறுவதாலும் இதில் வரும் வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தவறுகிறார்கள். முனை வாள் கூற்றில் வரும் வினாவுக்கு அநேக மான மாணவர்கள் சரியான விடையை அளிக்கிறார்கள். ஏனெனில் இவ்வினா அண் மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப் பட்ட படியால் அப்பகுதி வினா மிகவும் எளிய வடிவத்தில் இருப்பதாலாகும்.

திரிகோண கணிதத்தில் சமன்பாடுகளை நிறுவுதல், சமன்பாடுகளின் பொதுத் தீர்வு கள், திரிகோண கணித நேர்மாறு விகிதங் கள் போன்றவற்றில் வரும் வினாக்களுக்கு அநேக மாணவர்கள் விடைளிக்கிறார்கள். முக்கோணிகளின் தீர்வுகளில் வரும் வினாக் களுக்கு விடையளிக்கும் போது சரியான முறையில் விடையளிக்காதபடியால் முழுப் புள்ளியையும் பெறத் தவறிவிடுகிறார்கள். உதாரணமாக ஒரு முக்கோணம் ABCயில்

$$\frac{a}{sinA} = \frac{b}{sinB} = \frac{c}{sinC}$$

எனக் காட்டும்போது அநேகமான மாண வர்கள் கூர்ங்கோண முக்கோணத்திற்கு மட் டும் நிறுவிவிட்டு செங்கோண, விரிகோண முக்கோணத்திற்குக் காட்டாமல் முழுப் புள்ளிகளையும் பெறத் தவறிவிடுகிறார்கள். அத்துடன் இப்பகுதியில் வரும் பிரயோக வினாக்களுக்கும் மிகக் குறைவான மாண வர்களே விடையளிக்கிறார்கள்.

நிகழ்தகவில் வரும் வினாக்களுக்கு ஓர ளவு மாணவர்கள் விடையளிக்கிறார்கள். இருந்தும் நிகழ்தகவில் வரும் வினா பற்றிய அடிப்படை எண்ணக் கருக்களுக்கு வரை விலக்கணம் தெரியாதபடியால் அநேகமான மாணவர்கள் இவ்வினாக்களுக்கு பூரண விடையளிக்கத் தவறிவிடுகிறார்கள்.

பொதுப்படையாக நோக்கும் போது மாணவர்கள் பரீட்சையில் வினாக்களுக்கு விடையளிக்கும் போது நேரத்தைத் திட்ட மிட்டு விடையளிப்பதற்கு பயன்படுத்தாத படியாலும், போதிய பயிற்சியின்மையாலும் நேரம் பற்றாக்குறை ஏற்படுகின்றது. பாட விடயங்களில் அடிப்படை அறிவில் போதிய விளக்கமின்மையாலும், கணித பாடங்களை மனனம் செய்வதாலும், வினாவுக்குரிய விடையை முழுமையாக அளிக்கத் தவறி விடுகிறார்கள். அதாவது கணித முதிர்ச்சி யின்மையால் பிரச்சனைகளுக்கேற்ப அணுகா மல் வேறுமுறைகளில் அணுகுவதனால் அவர் களில் பூரணமான விடையை அளிக்கத் தவறிவிடுகிறார்கள்.

பிரச்சனைகளைத் தெரிவு செய்யும்போது முதலில் எளிய பிரச்சனைகளைத் தெரிவு செய்யத் தவறுவதாலும் அவர்கள் பிரச் சனைகளில் முதலிலேயே தவறுவதாலும் மன வெழுச்சி அடைந்து உளத்தாக்கமடைந்து தொடர்ந்து வினாக்களுக்கு விடைகள் அளிக்க முடியாமல் பதட்டம் அடைகின் றார்கள். மாணவர்கள் பரீட்சைக்கு செல்ல முன்பே சில வினாப் பகுதிகளை தவிர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு பரீட்சைக்கு செல்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு மிகவும் தெரிந்த ஒரு பகுதியிலுள்ள பிரச்சனையை எடுத்து தீர்வுகாண முயற்சிக்கும் போது தீர்வுகாண முடியாத சந்தர்ப்பத்தில் அவர்களால் தொடர்ந்து வினாக்களுக்கு விடையளிக்க முடியாமல் போய்விடுகின்றது. எனவே மாணவர்கள் பரீட்சைக்கு முன்கூட்டியே சில பகுதிகளை இயன்றளவு ஒதுக்காமல் எல்லாப் பகுதிகளையும் நன்கு கற்கவேண்டும்.

தற்பொழுது, சுயமாக, பரீட்சைக்கு முன் தூயகணித பிரச்சனைகளுக்கு விடையளித்து பயிற்சி எடுக்காமல் பரீட்சைக்குச் செல்லும்போது, பரீட்சையிலுள்ள வினாக்கள் முன்பு வந்த வினாக்களிலிருந்து வேறுபட்ட வடிவில் வினாக்கள் வரும்போது மாணவர்களால் விடையளிக்க முடிவதில்லை. எனவே மாணவர்கள் இயன்றளவு சுயமாக கணித பிரச்சனைகளை தீர்ப்பதில் பயிற்சி எடுத்தல் வேண்டும்.

கடந்தகால க. பொ. த (உ.த) பரீட்சையை உற்று நோக்கும்போது தூயகணிதத்தில் ஒரு மாணவன் பெறும் சராசரிப் புள்ளி 18 — 28 வரை அமைந்துள்ளது. 39 புள்ளிக்கு மேற்பட்ட புள்ளி பெற்ற மாணவர்கள் நூற்றுவீதம் 15% — 28% வரையும் 49 புள்ளிக்கு மேற்பட்ட புள்ளி பெற்ற நூற்றுவீதம் 8% — 11% ஆகவும் 69புள்ளிக்கு மேற்பட்ட புள்ளிபெற்ற மாணவர்கள் நூற்றுவீதம் 0.7%—1.4% ஆகும். எனவே தூயகணிதத்தைப் பொறுத்தவரை மாணவர்களின் அளவு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

## புறநானூற்றில் இகவாழ்விற்குரிய தத்துவ நன்மொழி (PHILOSOPHY OF LIFE)

*யாதும் ஊரே யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர் தரவாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோரன்ன*
*சாதலும் புதுவதன்றே வாழ்தல்*
*இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்*
*இன்னா தென்றலு மிலமே மின்னோடு*
*வானந் தண்டுளி தலைஇ யானது*
*மல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியிற் றெளிந்தன மகாலின் மாட்சியிற்*
*பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே*

*புறம்- 192*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீ பாங் விசா அட்டை - (Cey Bank Visa Card)

செல்வி கி. வீரசிங்கம் *B.A. B.Com. Dip. in Accy., Dip. in Edu.*
*ஆசிரியர் - மகளிர் மகாவித்தியாலயம் சாவகச்சேரி*
*பகுதிநேர விரிவுரையாளர் - யாழ் தொழில்நுட்பக் கல்லூரி கொக்குவில்*

ஒருவர் பணம் அல்லது காசோலையைத் தன்னுடன் கொண்டு செல்லாது பொருள் விற்பனை நிலையம், வைத்திய நிலையம், உணவு விடுதி, பெற்றோல் நிரப்பு நிலையம், உயர் சந்தை, பகுதிக் கடை போன்ற வியாபார அமைப்புக்களில் உடனுக்குடன் தனக்குத் தேவையான பொருட்கள், சேவைகளைப் பெறுவதற்கு ஏற்றவாறு அமைந்துள்ள திட்டமே ''சீ பாங் விசா அட்டை'' முறையாகும். பணப் புழக்கத்தைத் தவிர்க்க ஒரு புதிய முறையாக இன்று இது நடைமுறையில் கையாளப்படுகிறது.

பணத்துக்குப் பதிலாக இந்த இலங்கை வங்கியின் விசா அட்டை பயன்படுவதால், இதனை பிளாஸ்டிக் பணம் என்று கூறலாம். இலங்கை வங்கியினால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள இந்த விசா அட்டை மூலம், வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு, அதனால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளிடம் இவ்வட்டையைச் சமர்ப்பித்து கடன் அடிப்படையில் பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்யலாம். இவ்வாறு கடனுக்குக் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் சேவைகட்கு கொடுக்குமதியான பணத்திற்கு இலங்கை வங்கி உத்தரவாதம் அளிக்கின்றது.

மக்கட்கு இத்தகைய கடன் வசதியை வழங்குவதற்காக, உலகப் பிரசித்திபெற்ற சர்வதேச விசா நிறுவனத்துடன் இணைந்து அவற்றின் அங்கீகாரத்துடன் இலங்கை வங்கி இப்புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி இன்று செயற்படுத்திக் கொண்டிருக்கிறது. தனது கிளைகளினூடாக இத்திட்டத்தை பலருக்கும் பயன்படும் வகையில் பரவலாக்கிக் கொண்டு இருக்கின்றது.

இலங்கையில் சம்பத் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, கோல்டன் கம்பெனி போன்ற நிறுவனங்களும் இக்கடன் அட்டை முறைமையை செயல்படுத்துகின்றன. நம் நாட்டில் அண்மைக் காலத்தில் இக்கடன் அட்டை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டாலும், அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பல வருடங்களுக்கு முன்பே இது நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டது. இந்நாடுகளில் கடன் அட்டை மூலமே வாடிக்கையாளர் தம் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலைமை வழமையாகிவிட்டது.

தற்போது உள்நாட்டுப் பாவனைக்காகப் பயன்படுத்தப்படும் இந்த சீ பாங் விசா காட் முறையானது இதன் பயன்பாடு விரிவடைய, உலகின் பலபாகங்களிலும், இதன் பாவனை பரவலாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சீ பாங் விசா அட்டை ஒன்று ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும். அதனை வருடா வருடம் புதுப்பிக்க வேண்டும். தங்க அட்டை வாங்க 500/- வும் வெள்ளி அட்டை வாங்க 250/- வும் செலுத்த வேண்டும். 1990 மார்ச் 15 ஏப்ரல் 15 வரை விசா மாதமெனப் பிரகடனப்படுத்தப்பட்டு அக்காலப் பகுதிக்கு மட்டும் தங்க அட்டைக்கு 250/- வாகவும் வெள்ளி அட்டைக்கு 150/- வாகவும் குறைகக்கப்பட்டுள்ளது. தங்க அட்டையைப் பெறுபவர்கட்கு கொள்வனவுக்கான உச்சத் தொகை கூடுதலாக இருப்பதுடன் அவர்கட்கு பிரயாண வசதிகள், காப்புறுதி வசதிகள் போன்றவையும் அளிக்கப்படும்.

பிளாஸ்டிக்கினால் உருவாக்கப்பட்டு, பல தொழில் நுட்பங்களை உள்ளடக்கிய இந்த சீ பாங் விசா அட்டையானது, இலங்கை வங்கி இலச்சினையை ஒரு கோணத்திலும், விசா நிறுவன சின்னத்தை இன்னொரு கோணத்திலும் கொண்டு உருவமைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை வங்கி தலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யலுவலகத்தின் சாயலைப் பின்னணியில் கொண்டுள்ளது. பின் வரும் விபரங்கள் இவ் வட்டையில் இடம் பெறும்.

1. அட்டை உரிமையாளரின் பெயர்.
2. கடன் அட்டை இலக்கம்.
3. செல்லுபடியாகும் காலம்.
4. பின்புறத்தில் சில தகவல்களை ஏந்திய காந்தத் தகடு.
6. அட்டை உரிமையாளரின் கையொப்பம்.
6. ஒளியின் பிரகாசத்திற்கு ஏற்ப நிறம் மாறும் ஒரு பறவையின் சின்னம்.

சீ பாங் விசா அட்டையைப் பெற விரும்புவோர் இலங்கை வங்கிக் கிளைகளில் அதற்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். இலங்கை வங்கி வாடிக்கையாளர் அல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரியின் தொழில், வருமானம், நம்பிக்கை, நாணயம் இவற்றைக் கருத்தில் கொண்டு, அவரவர் தகைமை தகுதி நிர்ணயிக்கப்படும். விண்ணப்பங்கள் கிளை வங்கி முகாமையாளரின் சிபாரிசுடன், கொழும்பு வங்கி தலைமையகத்திலுள்ள சீ பாங் விசா அட்டை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு கடன் அட்டை வழங்க முடியுமா என்பதும், வழங்குவதாயின் கடன் வசதி எவ்வளவுக்குட்பட்டது என்பதும் கணணியின் உதவியுடன் தீர்மானிக்கப்படும்.

சில விதிமுறைகளுக்கு இணங்க, சீ பாங் விசா அட்டைகள் மூலம் சேவைகள் பொருட்கள் வழங்க வியாபாரிகளும் தெரிவு செய்யப்படுகின்றார்கள். எனவே வங்கியானது இங்கு இரு பகுதியினருடன் ஒப்பந்தங்களை மேற்கொள்கின்றது. ஒருபுறம் கடன் அட்டை மூலம் சேவை வழங்கும் வியாபார நிறுவனங்களுடனும், மறுபுறம் கடன் அட்டை மூலம் பயன் பெறும் சீ பாங் விசா காட் உரிமையாளர்களாகிய வாடிக்கையாளருடனும் மேற்கொள்ளப்படுகிறது.

விசா காட் மூலம் வியாபாரம் செய்ய நிர்ணயிக்கப்பட்ட வியாபாரிகளின் விபரக் கொத்து, சீ பாங் விசா காட் உரிமையாளர்கட்கு காலத்திற்குக் காலம் இலவசமாக வழங்கப்படுவதனால் காட் வைத்திருப்பவர் எங்கு எப்பொருட்களை வாங்கமுடியும் என்பதை அறிய முடிகிறது. விசா காட் உடையவர்கட்கு வழமையான நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலேயே வியாபாரிகள் விற்பனை செய்தல் வேண்டும்.

சீ பாங் விசா அட்டை உரிமையாளர் ஒவ்வொருவரது பெயரிலும் வங்கியில் ஒரு கணக்கு ஆரம்பிக்கப்படவேண்டும். அட்டை உரிமையாளர் கொள்வனவு செய்யும் பொருட்கள் சேவைகட்கான பணம் அல்லது அவர்கள் நடவடிக்கையினுல் ஏற்படும் நட்டங்கள் ஆகிய யாவும் இக்கணக்கில் வருமதியாக வரவு வைக்கப்படும்.

வியாபாரிகள் சீ பாங் விசா அட்டை மூலம் விற்பனை நடைபெற்றவுடன் வங்கியினுல் இலவசமாக அனுப்பப்பட்ட படிவங்களில், அவ் விற்பனையைப் பிரதி செய்து வியாபாரம் நடைபெற்ற 3 தினங்களுள் வங்கிக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவர்களது வங்கிக் கணக்கில் அத்தொகை வைப்பில் இடப்படும். வங்கிக் கணக்கற்ற வியாபாரிகளுக்கு வங்கிக் கட்டளை மூலம் பணம் செலுத்தப்படும்.

விசா அட்டை வைத்திருப்போர் ஒப்பந்தப்படி பொறுப்புடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் வங்கியினுல், அட்டை உரிமையாளரிடமிருந்து வருமதியான தொகை தொடர்பான ஒரு விபரக் கூற்று அனுப்பி வைக்கப்படும். விபரக் கூற்று கிடைத்த 11 நாட்களுக்குள் கொடுக்க வேண்டிய தொகையை அட்டை உரிமையாளர் வங்கிக்குச் செலுத்திவிடவேண்டும். தவறின் மாதாந்தம் 2·5வீத வட்டி செலுத்த வேண்டி நேரிடும்.

விசா அட்டை தொடர்பான சகல விபரங்களையும் இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க வேண்டியது அட்டை உரிமையாளரின் கடமையாகும். தற்செயலாக விசா அட்டை தொலைக்கப்பட்டால் உடனடியாக அது தொடர்பான விபரங்களை வங்கிக்கு அல்லது தலைமையலுவலகத்திலுள்ள விசா அட்டை நிறுவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும். எச் சந்தர்ப்பத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசா அட்டை உரிமையாளரோ அல்லது வங்கியோ ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் அட்டை உரிமையாளர் அந்த விசா அட்டையையும், தான் கொடுக்க வேண்டிய முழுத் தொகையையும் வங்கியில் ஒப்படைத்து தனது பொறுப்புக்களிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

இந்த சீ பாங் விசா அட்டை முறையினால் வியாபாரி – வாடிக்கையாளன் இருவருமே நன்மை பெறுகின்றனர்.

*வியாபாரி பெறும் அனுகூலங்கள்*

1. கடனை அறவிடும் பொறுப்பு இல்லை.
2. கடன்கட்கு வங்கி உத்தரவாதமளிக்கிறது.
3. கடன் அடிப்படையில் விற்பனை அதிகரிக்கிறது.
4. விற்பனை அதிகரிக்க இலாபம் கூட வாய்ப்பு ஏற்படுகிறது.
5. பணம் நேரடியாக வங்கியில் சேர்வதால், பாதுகாப்பும் நேரச் சிக்கனமும் கிடைக்கிறது.
6. கடன் அட்டையும், வங்கியின் விபரக் கொத்தும் அவர்கட்கு ஒரு விளம்பரமாக அமைகிறது.
7. சமூகத்தில் இவர்கட்கு பிரபல்யும், மதிப்பு ஏற்பட வழி கிடைக்கிறது.

*வாடிக்கையாளர் பெறும் அனுகூலங்கள்*

1. பணத்தைக் கொள்வனவுக்காகக் கொண்டு செல்ல வேண்டிய சிரமம் இல்லை.
2. பணம், காசோலை களவாடப்படச் சந்தர்ப்பமில்லை.
3. கிழிந்த தாள், கள்ளத்தாள் பயன்பாடுகளிலிருந்து தப்பிக் கொள்ளலாம்.
4. கடன் அடிப்படையில் கொள்வனவு செய்வதால் தற்காலிகமாக ஏற்படும் நிதிப் பிரச்சனையைத் தீர்க்கலாம்.
5. பொருட்கள் சேவைகளை வழங்கும் நிறுவன விபரங்கள் வங்கியால் வழங்கப்படும்.
6. குறைந்தது 250/- செலுத்தி இக் கடன் திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.
7. கடன் முறை என்றாலும் பொருட்களைக் குறித்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இம்முறையினால் இலங்கை வங்கிக்கும் அனுகூலங்கள் ஏற்படுகிறது. வாடிக்கையாளர் எண்ணிக்கை கூடவும், நன்மதிப்பு அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. கடன் அட்டை பெறுகின்றவர்கள் வங்கியில் வைப்புச் செய்வதால், வைப்புகள் அதிகரிக்கிறது. வருமதிப் பணம் நிலுவையிருந்தால் வட்டி அறவிடுவதாலும், வியாபாரிகளிடம் $2\frac{1}{2}\%$ கமிஷன் பெறுவதாலும் வங்கியின் வருமானம் அதிகரிக்கும். சர்வதேச புகழ் பெற்ற விசா நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதால் சர்வதேச ரீதியாக இலங்கை வங்கியின் நன்மதிப்பும் அதிகரிக்கின்றது.

**

பெண் அழகான விஷம். மிருதுவான வஞ்சனையின் உருவம். பெண் அழகான விஷம். மிருதுவான வஞ்சனையின் உருவம். மென்மையான சாகசத்தின் பிறப்பிடம். முட்கள் நிறைந்த இதழ்களையுடைய மலர். கொடுமை நிறைந்த மடுவின் ஆழம். பெண்களைப் புரிந்து கொள்ளவே முடியாது

— அகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனவர்கள்......

- குப்பிழான் ஐ. சண்முகன்

இருளின் பகைப்புலத்தில் -
எமனின் வாகனமாய் இரைச்சல்
நாய்களின் குரைப்பு
சப்பாத்துக் காலோசை .........
கதவு தட்டும் பேரோசை .........

கனவில் அமிழ்ந்தவர்கள்
திறந்திருந்த ஜன்னல் சிறகதனினூடாக
நிலவுப்பாலை மாந்தித் திளைத்தவர்கள்
வருடும் குளிர்காற்றின் சுகந்தம் நுகர்ந்தவர்கள்
வாழ்வின் சுகத்திற்காய் கட்டிப் புரண்டவர்கள்
இரவின் மௌனகீதத்தில் ஆழ்ந்தவர்கள்

உழைப்பின் களைப்பால்
உலகை மறந்த உறக்கத்தில் கிடந்தவர்கள்
அடிமை விலங்கொடிக்கும் ஆவேசம் கொண்டவர்கள்
தம்மை வெளிப்படுத்தும் தவத்தில் உழன்றவர்கள்
உலகின் துயருக்காய்
தாமே துயர் உற்றவர்கள்
(ராஜனி திரணகம
றிச்சாட் டீ சொய்ஸா
..........................................என்பதால்)

எத்தனை மனிதர் காணாது போயினர்
எத்தனை ஆற்றல்கள் மண்ணில் புதைந்தன.

* *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்மதி நிலுவையில் பிரச்சனை ஏற்படுவதற்கான காரணங்களும் அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளும்

**செல்வி பராசக்தி வைத்திலிங்கம்** *B. A. (Hons)*

சென்மதி நிலுவை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டிற்கும் ஏனைய நாடுகளுக்குமிடையே ஏற்படுகின்ற சட்ட ரீதியான கொடுக்கல் வாங்கல்களைக் குறிக்கும். குறிப்பிட்ட காலம் என்பது ஒரு வருட காலத்தையும் சட்ட ரீதியானது, என்பது சட்டரீதியற்ற கள்ளக் கடத்தல் மூலம் நாடுகளிடையே ஏற்படும் கொடுக்கல் வாங்கல்கள் சென்மதி நிலுவைக் கணிப்பில் இடம் பெறுவதில்லை என்பது விளக்கம். மேலும் இக் கட்டுரையின் நோக்கம் சென்மதி நிலுவையில் பிரச்சினை ஏற்படுவதற்கான காரணங்களையும் அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் மட்டுமே கொண்டதாகும். சென்மதி நிலுவை பற்றிய ஏனைய பகுதிகள் இக்கட்டுரையில் இடம்பெறவில்லை. அவை தனியொரு வெளியீட்டுக் கருப்பொருளாக அமையத்தக்கவை ஆகையால் அவை தவிர்க்கப்பட்டுள்ளன.

ஒரு நாடானது தனது உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்றது. இதற்கு மாருக ஒரு நாடானது தனக்குத் தேவையான பொருட்களில் சிலவற்றை வெளிநாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யும் போது கொடுப்பனவு ஏற்படுகின்றது. இவ்வாறு மொத்தப் பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதியால் ஏற்படுகின்ற வருமானங்களின் அளவும்' மொத்தப் பொருட்கள் சேவைகளின் இறக்குமதி மூலம் ஏற்படுகின்ற கொடுப்பனவுகளின் அளவும் சமமாக இருப்பின் சென்மதி நிலுவையில் சமநிலை நிலவும். ஆனுல் வருவாயின் அளவும் கொடுபபனவுகளின் அளவும் வேறுபட்டிருக்கும் சமயத்தில் சென்மதி நிலுவையில் பிரச்சினை தோன்றும். வருவாயின் அளவு கொடுப்பனவின் அளவிலும் கூடுதலாக உள்ளபோது சென்மதி நிலுவை சாதக நிலையை அனுபவிக்கின்தென்று கூறப்படுகின்றது. தொடர்ந்து ஒரு நாடானது சாதகமான சென்மதி நிலுவையினை அனுபவித்து வருமாயின் அந்நாட்டு மக்கள் தாம் உற்பத்திசெய்கின்ற பொருட்களை தாமே நுகராமல் பிறநாடுகளுக்கு அனுப்பி அதனுல் வரும் வருமானங்களைச் சேர்த்து வைக்கிருர்கள் என்பது அர்த்தமாகும். நுகராமல் ஏற்றுமதிக்காக பொருட்களை உற்பத்தி செய்து கொண்டே இருத்தல் பொருளாதார ரீதியில் அர்த்தமற்ற விடயமாகும். சாதகமான சென்மதி நிலுவை அனுபவித்தல், சென்மதி நிலுவையில் சமநிலையின்மை நிலவுவதைக் குறிப்பினும் 'அது நாட்டுக்கு அதிகம் பிரச்சனையைக் கொடுக்கும் விடயமாக அமைய மாட்டாது.

ஆனு் வருவாயிலும் பார்க்க கொடுப்பனவு அளவு கூடுதலாக உள்ள பாதக
மான சென்மதி நிலுவையே ஒரு நாட்
டிற்குப் பிரச்சினையை ஏற்படுத்துவதாக
அமையும். ஓரிரு ஆண்டுகளிற்கு மட்டும்
பாதகமான சென்மதி நிலுவை காணப்
படின் அதனைக் கொண்டுள்ள நாட்டினை
பாதகமான சென்மதி நிலுவையை அனு
பவிக்கும் நாடு என்று கூறுவதில்லை.
தொடர்ந்து பல ஆண்டுகளாக சென்
மதி நிலுவையில் பாதக நிலையை ஒரு
நாடானது அனுபவித்து வருமாயின்தான்
அதனைப் பாதகமான சென்மதி நிலுவை
யினை அனுபவித்து வரும் நாடென்று
அழைப்பர். உதாரணமாக:. 1956-ம்
ஆண்டின் பின்னர் இலங்கை பாதக
மான சென்மதி நிலுவையையே அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலித்து வருகின்றது. தொடர்ந்தேர்ச்சியாக சென்மதி நிலுவை பாதக நிலைமையை அனுபவிப்பதற்குக் காரணம் பொருளாதாரத்தில் காணப்படுகின்ற அடிப்படைக் குறைபாடேயாகும். தொடர்த்தேர்ச்சியான பாதகமான சென்மதி நிலுவையால் நாட்டின் வேலை மட்டம், விலை மட்டம், உற்பத்தி மட்டம் என்பனவற்றில் பாதிப்பு ஏற்படுகின்றது, இதனுல் பாதக நிலையை நீக்க வேண்டியது அவசியமாகும். சென்மதி நிலுவையில் பாதக நிலையை ஏற்படுத்துவதற் காரணங்களை நான்கு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். அவைகளாவன;-

## 1. குறுகிய காலத்திற்கு மட்டும் பாதக நிலையை ஏற்படுத்தக் கூடிய காரணிகள்

மொத்த ஏற்றுமதியில் ஒரு சில பொருட்களை மட்டும் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகக் கொண்டுள்ள பல நாடுகள் இன்று உலகில் உள்ளன.

விவசாயப் பொருட்களைப் பெருமளவு ஏற்றுமதி செய்கின்ற நாடுகள் பல இருக்கின்றன. அந்நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தியை நிர்ணயிப்பதில் கால நிலை முக்கிய பங்களிப்பினைப் பெறுகின்றது. காலநிலை சாதகமாயின் உற்பத்தி பெருகும். மற்றவை மாறுதுள்ள போது ஏற்றுமதி அளவு பெருகி ஏற்றுமதி வருமானம் கூடி சென்மதி நிலுவை சாதக நிலையை அனுபவிக்கும். ஒரு குறிப்பிட்ட வருடத்தில் வெள்ளம் அல்லது வரட்சி அல்லது நோய் என்பனவற்றின் விளைவாகப் பயிர்கள் சிதைவடைய நேரிடலாம். இதனுல் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தி குறைந்து ஏற்றுமதி அளவு குறைந்து ஏற்றுமதி வருமானம் குன்றி சென்மதி நிலுவையில் பாதக நிலைமை ஏற்பட வழி வகுக்கும்,

கைத்தொழில் பொருட்களை முக்கியமாக ஏற்றுமதி செய்கின்ற நாடுகளில் குறிப்பிட்ட ஆண்டில் வேலைநிறுத்தம், கதவடைப்பு போன்ற விடயங்களால் கைத்தொழில் துறையில் சாதகமான நிலைமை நிலவாதவிடத்து கைத்தொழில் பொருட்களின் உற்பத்தி குறையலாம். இதனுல் ஏற்றுமதி அளவு குறைந்து ஏற்றுமதி வருமானம் குறையலாம்.

அத்துடன் அவ்வாண்டில் தமக்குத் தேவையான கைத்தொழில் பொருட்களைக் கூட பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் நேரிடின் இறக்குமதிக் கொடுப்பனவும் கூடும். ஓரிரு ஆண்டுகளுக்கு மட்டும் நாடுகளிடையே ஏற்படுகின்ற யுத்தமும் அந்நாடுகளின் உற்பத்தியைக் குறைப்பதன் ஊடாக ஏற்றுமதி வருமானத்தைக் குறைத்தும் இறக்குமதிக் கொடுப்பனவை அதிகரித்தும் சென்மதி நிலுவையில் பாதக நிலையை ஏற்படுத்தலாம். எனினும் இதனுல் ஏற்படும் பிரச்சினைகள் ஓரிரு ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்கும். கால நிலையில் சாதகமான நிலை ஏற்படும் போதோ, கைத்தொழில் துறையில் பொதுவாக நாடுகளிடையே சமாதானம் ஏற்படும் போதோ சென்மதி நிலுவையில் ஏற்பட்ட குறைவு நீக்கப்பட்டு விடும். ஆகவே, இதனை அதிகம் கவனத்தில் எடுக்கத் தேவையில்லை.

ஏனைய காரணிகளால் சென்மதி நிலுவையில் ஏற்படுகின்ற தாக்கங்களே நீண்ட காலத்திற்கு நிலவும் என்பதால் ஏனைய காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

## 2. பண வருமானத்தில் மாறுதல்கள்

பண வருமானத்தின் உயர்வு ஒரு நாட்டின் பொதுவிலை மட்டம் உயர்வதற்கு வழிவகுக்கும். பொதுவிலை மட்டத்தில் ஏற்படும் உயர்வு ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கப் பயன்படுத்தப்படும். மூலப் பொருட்களின் விலையினையும் உயர்த்துவதாக அமைகின்றது. அத்துடன் பொது விலை மட்டம் உயரும் போது பொது விலை மட்டத்திலேயே தொழிலாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குத் தேவையான பொருட்களைப் பெரும்பாலும் பெற்றுக்கொள்வதால் தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவும் உயரும். உயர்ந்த வாழ்க்கைச் செலவை நிவர்த்திக்க உயர்ந்த கூலியை வேண்டி நிற்பர். உயர்ந்த விலையில் உள்ள மூலப் பொருட்களையும், உயர்ந்த கூலியுடைய தொழிலாளரையும் பயன்படுத்தி ஏற்று மதிப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற போது ஏற்றுமதிப் பொருட்களின் விலை உயர்கின்றது. இதனால் ஏற்றுமதியளவு குறைவடையலாம். ஆனால் குறைகின்ற தன்மை அப்பொருட்களைக் குறித்து இறக்குமதி செய்கின்ற நாட்டில் உள்ள மக்களின் கேள்வி நெகிழ்ச்சியைப் பொறுத்து அமையும். குறிப்பிட்ட ஏற்று மதிப் பொருட்களை ஏனைய நாடுகளும் ஏற்றுமதி செய்வனவாக இருப்பின், முன்பு இறக்குமதி செய்த நாடுகள், உயர்ந்த விலையில் கொள்வனவு செய் வதை விடுத்து, ஏனைய நாடுகளிடம் இருந்து பொருட்களை கொள்வனவு செய்ய முயலும். இதனால் ஏற்றுமதி வருமானம் குறைந்து, பாதக சென்மதி நிலுவை ஏற்பட வழிவகுக்கும். ஆனால் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றிற்குக் குறைவாக இருப்பின் விலை உயர்வினை அனுபவிக்கின்ற நாட்டுக்கு ஏற்றுமதி வரு மானம் உயரலாம் அல்லது குறையலாம். ஆனால் அந்நிலைமை விலை எவ்வளவு உயர்கின்றது என்பதைப் பொறுத்திருக் கும்.

ஓரளவுக்கு விலை உயருமாயின் நன்மை பெறலாம். பண வருமான உயர் வினால் விலை பெருமளவுக்கு ஏற்றமடை யின் ஏற்றுமதி வருமானம் குறையும். பண வருமானம் உயர்வதனால் இறக்கு மதிக்கான மொத்தக் கேள்வியிலும் அதி கரிப்பு ஏற்பட்டு இறக்குமதி அதிகரித்து கொடுப்பனவில் உயர்வு ஏற்பட வழி உண்டு. இதனால் இறக்குமதிக் கொடுப் பனவு அதிகரிப்பும் ஏற்றுமதி வருமானக் குறைவும் சேர்ந்து சென்மதி நிலுவையில் பாதக நிலையை ஏற்படுத்தலாம்.

பண வருமானத்தில் ஏற்படும் குறைவு மூலப் பொருட்களின் விலை குறைவடைய வழி வகுக்கும். இது ஏற்றுமதியைத் தூண்டி, ஏற்றுமதி வருமானம் அதிகரிப் பதற்கு வழிவகுப்பதுடன் பண வருமானக் குறைவால் இறக்குமதிக்கான கேள்வி குறைந்து இறக்குமதிக் கொள்வனவு குறையவும் வழிவகுத்து சென்மதி நிலு வையில் சாதகமான நிலமை ஏற்படக் கூடும். ஆனால் பணச் சுருக்க நிலையால் காலப்போக்கில் விலை மட்டம், உற்பத்தி மட்டம் என்பன குறையக்கூடிய நிலைமை ஏற்படலாம். பண வருமான உயர்வு, பண வருமானக் குறைவு என்பனவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சமாளிப்ப தற்கு தகுதியான நாணய நடைமுறைக் கொள்கை, நிதி நடைமுறைக் கொள்கை என்பனவற்றைத் தகுந்த நேரத்தில் கையாளுதல் வேண்டும்.

### 3. அமைப்பு ரீதியான மாறுதல்கள்

அமைப்பு ரீதியான மாறுதல்கள் நீண்ட காலத்திற்கு சென்மதி நிலுவை யினைச் சாதகமான நிலையினையோ, பாதக மான நிலையினையோ வைத்திருக்கக்கூடிய சக்தி வாய்ந்தவை. அமைப்பு ரீதியான மாறுதல்கள் என்பதற்குள் உற்பத்திக் காரணிகளின் வளங்களில் ஏற்படக்கூடிய மாற்றம், மக்களின் சுவையில் ஏற்படக் கூடிய மாற்றம் என்பன முக்கிய இடம் பெறுகின்றன- இவை உள்நாட்டு ரீதி யாகவோ சர்வதேச ரீதியாகவோ இடம் பெறலாம்.

சாதன வளங்களில் ஏற்படக்கூடிய மாற்றம் முக்கிய இடம் பெறுகின்றது. உலக நாடுகளுக்கு ஒரு குறிப்பிட்ட நாட் டிடம் உள்ள மூலவளம் முக்கியமான தாக இருப்பின் சென்மதி நிலுவை சாதக நிலையை அனுபவிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. உதாரணமாக பெற்றோ லின் முக்கிய நிலையால் இன்று அரபு நாடுகள் அதிக ஏற்றுமதி வருமானத் தினைச் சம்பாதிப்பதனைக் கூறலாம். முக் கியமான ஏற்றுமதியாக உள்ள சாதன வளம் முற்றாக இல்லாது விடின் முன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மூலம் பெற்ற வருமானம் இல்லாமல் போக அல்லது குறைவான ஏற்றுமதியால் குறைவான வருமானமே பெறக்கூடியதாக இருக்கின்றபோது சென்மதி நிலுவையில் பாதக நிலை ஏற்படலாம்.

ஒரு நாடு ஏற்றுமதி செய்கின்ற பொருட்களை அல்லது பிரதியீட்டுப் பொருட்களை ஏனைய நாடுகளும் புதிதாக உற்பத்தி செய்யத் தொடங்கின் அவற்றின் உற்பத்தி நிரம்பல் கூடி விலை வீழ்ச்சியடைய ஏதுவுண்டு. இதனுல் ஏற்றுமதி வருமானம் குறையலாம். இதற்குச் சிறந்த உதாரணமாக இலங்கையின் அண்மைக் காலப் போக்குகள் அமைகின்றன. இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருளான தேயிலையை ஆபிரிக்க நாடுகள் பல புதிதாக உற்பத்தி செய்யத் தொடங்கியதால் உலக சந்தையில் தேயிலையின் நிரம்பல் கூடி விலை வீழ்ச்சிப் போக்கினை உடையதாக இருப்பதைக் குறிப்பிடலாம். இதனுல் ஏற்றுமதி வருமானம் குறைந்து செல்வதையும் கூறலாம்.

பொருட்களை இறக்குமதி செய்கின்ற நாட்டு மக்களின் சுவைகள் பாதக மாற்றத்தினை அனுபவிக்கும் போது ஏற்றுமதி செய்கின்ற நாட்டுப் பொருட்களுக்கான கேள்வியில் குறைவு ஏற்படும். இதனுல் ஏற்றுமதி குறைய ஏற்றுமதி வருமானம் குன்றி சென்மதி நிலுவை பாதக நிலமை அனுபவிக்க நேரிடலாம். சுவையில் சாதக நிலைமை ஏற்படின் நிலைமை மாறுக இருக்கும்.

ஒரு நாட்டின் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தி குறித்து தொழில் நுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றம் உற்பத்திச் செலவைக் குறைப்பதன் ஊடாக ஏற்றுமதிப் பொருட்களின் விலையைக் குறைத்து ஏற்றுமதி அளவைக் கூட்டி ஏற்றுமதி வருமானத்தில் பெருக்கத்தினை ஏற்படுத்த வழிவகுக்கும். ஆனுல் குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியிலேயே ஏனைய நாடுகளில் கூடியளவுக்கு தொழில் நுட்பம் ஏற்படின் ஏற்றுமதி வருமானத்தினைக் குறைப்பதற்கு வாய்ப்புக்களுண்டு ஆரம்ப காலங்களில் பிரித்தானியர் கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதியால் அதிக வருமானத்தினைப் பெற்றமையையும் பின்பு ஏனைய நாடுகளில் கூடியளவு தொழில் நுட்பம் ஏற்பட்டதால் பிரித்தானியரின் ஏற்றுமதி வருமானத்தில் பெருமளவு சரிவு ஏற்பட்டுச் சென்றதை விளங்க முடியும்.

இவ்வாறுக அமைப்பு ரீதியான காரணிகளால் ஏற்படுகின்ற மாற்றங்களை நிவர்த்தி செய்வதற்கு தகுந்த நடைமுறைக்கொள்கைகளை கையாளாதுவிடின் சென்மதி நிலுவையில் தொடர்ந்து பாதக நிலை இருப்பதற்கு சாத்தியக் கூறுகள் உண்டு.

## 4. வர்த்தக சகட ஓட்ட மாறுதல்கள்

செழிப்பும் மந்தமும் மாறி மாறி ஏற்படுகின்ற நிலைமையே வர்த்தக சகட ஓட்டம் என்பர். இது முதலாளித்துவ பொருளாதாரங்களின் இயல்பான தன்மைகளில் ஒன்ருகி விட்டது. செழிப்பு நிலைமைகளும், மந்த நிலைமைகளும் வெவ்வேறுன சமயங்களில் சேர்ந்தாற்போல நிகழுமாயின் சென்மதி நிலுவையில் பிரச்சினைகள் தோன்ரு: ஆனுல் நடைமுறையில் ஒரே நேரத்தில் எல்லா நாடுகளிலும் செழிப்பு நிலைமையோ அல்லது மந்த நிலைமையோ தோன்றுவது அரிது. ஒரு சில நாடுகள் செழிப்பின் பிடியில் உள்ள போது, வேறு சில நாடுகள் மந்தத்திற்குள் சிக்குண்டு இருக்கும். இவ்வாறுன நிலைமை இருக்கும் போது சென்மதி நிலுவையில் ஏற்படக்கூடிய பற்ருக் குறையின் அல்லது மிகையின் அளவினை இறக்குமதி பொறுத்த எல்லை நாட்டம் நாடுகளுக்கிடையே உள்ள வருமான அளவுகள் என்பன நிர்ணயிக்கும்.

ஏற்றுமதி வருவாயிலும் பார்க்க இறக்குமதிக் கொடுப்பனவுகள் அதிகமா இருப்பதே பாதக நிலுவை ஏற்படுவத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான காரணமாகும். எனவே சென்மதி நிலுவையின் பாதக நிலையினை நீக்க வேண்டுமாயின் இறக்குமதிக் கொடுப்பனவுகளைக் குறைக்கின்ற வழிவகைகளையும், ஏற்றுமதி வருவாய்களை உயர்த்தக்கூடிய வழிவகைகளையும் கையாளுதல் வேண்டும். சென்மதி நிலுவையில் தொடர்ந்தேர்ச்சியானபாதகநிலைமைகள் காணப்படுகின்ற போது பின்வரும் முறைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன,

## (1) இறக்குமதிக் கட்டுப்பாடுகள்

இறக்குமதிக் கட்டுப்பாட்டினை இறக்குமதி வரி விதிப்பதன் மூலமாகவும், நேரடியாக அரசாங்க சட்டங்களின் மூலம் கட்டுப்பாடுகளை மேற்கொள்வதன் மூலமும் ஏற்படுத்தலாம். இறக்குமதி வரி விதிக்கும் போது இறக்குமதிப் பொருட்களின் விலைகள் இறக்குமதி வரி விதிப்பினை மேற்கொள்கின்ற நாட்டில் உயர்வடைகின்றன. இதனால் நுகர்வோர் நுகர்வளவினைக் குறைப்பர். இதன் மூலம் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு குறைந்து இறக்குமதிக் கொள்வனவில் அதிக சேமிப்பு ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இறக்குமதி வரியினைக் கையாளுகின்ற போது அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்குமென்ற நல்ல விளைவு இருந்த போதும், சில தீய விளைவுகளும் இதனால் ஏற்படலாம். இறக்மதி வரி விதிக்கப்படும் பொருளின் விலை சார் கேள்வி நெகிழ்ச்சியினை பொறுத்தே இறக்குமதிக் கொடுப்பனவில் எவ்வளவு குறைவு ஏற்படும் என்று கூறமுடியும். ஒன்றுக்குக் குறைந்த கேள்வி நெகிழ்ச்சி இருக்குமாயின் இறக்குமதி வரி விதிப்பின் மூலம் இறக்குமதிக் கொடுப்பனவில் அதிக சேமிப்பினை ஏற்படுத்த முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. இறக்குமதிப் பொருட்கள் பலவகைத் துறைகளோடு தொடர்புபட்டிருப்பின் அவை எல்லாவற்றின் மீதும் வரியை விதிப்பின் அவற்றின் விலைகள் உயர உள்நாட்டுப் பொதுவிலை மட்டம் உயரக்கூடிய சாத்திக் கூறுகள் இடம்பெறலாம். இதன் விளைவு ஏற்றுமதிப் பொருட்களின் விலையையும் உயர்த்தி ஏற்றுமதி அளவினைக் குறைத்து ஏற்றுமதி வருமானத்தினையும் குன்றச் செய்யலாம். எனவே இறக்குமதி வரிகளை விதிக்க முற்படுகின்ற எல்லாப் பொருட்களிலும் அதனைப் பிரயோகிக்கக் கூடாது. அத்தியாவசியமற்ற ஒன்றிற்கு கூடிய நெகிழ்ச்சியுள்ள பொருட்களின் மீது விதிப்பின் எதிர்பார்த்த பலனைப் பெறலாம். எனவே இறக்குமதி வரி விதிப்பை விதிக்க முனையும் போது அப் பொருள் உள்நாட்டு மக்களின் நுகர்விலும் உள்நாட்டுத் துறைகளுடனும் எதுவித தொடர்பு கொண்டதாக இருக்கின்றது என்பதை நோக்க வேண்டும். இறக்குமதி வரி விதிப்பதன் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாத்து இறக்குமதிப் பிரதியீடுகளைச் செய்து நீண்ட காலத்தில் இறக்குமதியை குறைக்கக் கூடிய சூழல் உள்ள போது இறக்குமதி வரிவிதிப்பைக் கையாளுதல் நலம் உடையது. இது சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி வகுப்பதுடன் உள்நாட்டு உற்பத்தியையும் வேலை மட்டத்தினையும் பெருக்கக்கூடிய சக்தி வாய்ந்தது.

இறக்குமதி வரி விதிப்பினல் உள்நாட்டு விலைகள் உயர்ந்த போதும் அப் பொருளைக் கொள்வனவு செய்வதில் நுகர்வோர் எவ்வித குறைப்பினையும் ஏற்படுத்தாது விடின் இறக்குமதி வரி விதிப்பதன் மூலம் இறக்குமதிக் கொடுப்பனவில் எவ்வளவு சேமிப்பினை ஏற்படுத்த முடியும் என்று கூறமுடியாது. ஆனல் நேரடியான இறக்குமதிக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளும் போது மற்றைறவை மாருத இடத்து இறக்குமதிக் கொடுப்பனவில் சேமிப்பு ஏற்படுமென நிச்சயமாகக் கூறலாம். நேரடியான கட்டுப்பாட்டினை ஏற்படுத்துகின்ற போது எல்லாப் பொருட்கள் மீதும் கட்டுப்பாடு விதித்தல் நல்லதல்ல. நாட்டின் பொருளாதார நிலைமைக் கேற்ற வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை வகைப்படுத்தி தேவையற்ற பொருட்கள் மீது இறக்குமதிக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்தலாம்.

உதாரணமாக 1960 ம் ஆண்டைத் தொடர்ந்த காலங்களில் இலங்கை அரசாங்கம் இறக்குமதிப் பொருட்களில் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தியதைக் கூறலாம். இலங்கை போன்று உணவுத் தேவையில் கணிசமான அளவினை இறக்குமதி செய்கின்ற நாடுகள் அப்பொருட்களின் இறக்குமதி மீது கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்குமாயின் உள்நாட்டில் பணவீக்க நிலைமைகள் தோன்றக்கூடிய அபாயங்கள் ஏற்படும். அத்துடன் முதலீட்டு பொருட்களின் இறக்குமதி மீதும் கட்டுப்பாடுகளை மேற்கொண்டால் எதிர்காலத்தில் பொருளாதார வளர்ச்சி தடைப்படலாம். எனவே அத்தியாவசியப், பொருட்கள் முதலீட்டுப் பொருட்கள் என்பனவற்றை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாதவிடத்து அவற்றின் மீது கட்டுப்பாட்டினை விதிக்கக் கூடாது, ஆடம்பர பொருளின்மீது தாராளமாகக் கட்டுப்பாட்டினை விதித்து இறக்குமதிக் கொடுப்பனவுகளில் சேமிப்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற உள்நாட்டுத் தொழில்கள் வளரவும் அதன் பயனாக வேலை வாய்ப்புப் பெருகவும், இறக்குமதிக் கட்டுப்பாடு உதவி செய்யும். இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் இறக்குமதியின் அளவினைக் குறைத்து கொடுப்பனவில் சேமிப்பினை ஏற்படுத்தி சென்மதி நிலுவையில் சீர்திருத்தங்களைச் ஏற்படுத்தலாம் எனினும் இதனால் சில தீய விளைவுகளும் ஏற்படுகின்றன. அவையாவன:-

1. கள்ளக் கடத்தல் பெருக முனைதல்-

வேறு நாட்டுப் பொருட்களை நுகர்ந்த மக்கள் இறக்குமதிக் கட்டுப்பாட்டின் பின்னரும் அப்பொருட்களின் மீது அதிகம் மோகம் கொண்டவர்களாக இருப்பதே இதற்குக் காரணமாக அமையும். சட்டத்தைத் எதிர்த்துத் துணிந்து செயலாற்றக் கூடியவர்கள் அதிகம் உள்ள சமுதாயத்தில் இந்நடவடிக்கை கள்ளக் கடத்தலை அதிகரிக்கச் செய்யும்.

2. ஒரு நாடு இறக்குமதிக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளும் போது ஏனைய நாடுகளும் அதனை மேற்கொள்ளின் உலக வர்த்தகம் சுருங்கும். ஒப்பீட்டு நயம் மூலம் கிடைக்கக் கூடிய பயன்கள் இல்லாமற் போகும்.

3. இறக்குமதிக் கட்டுப்பாட்டின் முன்னர் இறக்குமதி வரி மூலம் பெற்ற வருமானம் இல்லாமல் போக அரசாங்கத்தின் வருமானத்தில் குறைவு ஏற்படும்.

## 2. பணச் சுருக்கம்

பொது விலை மட்டத்தில் வீழ்ச்சி ஏற்படுவதையே பணச் சுருக்கம் என்பர், பண நிரம்பலைக் குறைப்பதன் ஊடாக பொது விலை மட்டத்தில் குறைப்பினை ஏற்படுத்தலாம். இதனால் ஏற்றுமதிப் பொருட்களின் விலையும் குறையும். இது வெளிநாட்டு நுகர்வோருக்கு மலிவுடையதாகத் தோன்றுவதால் இந்நாட்டின் பொருட்களை அதிகம் இறக்குமதி செய்வர்.

இதனால் ஏற்றுமதி வருமானம் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பண நிரம்பல் குறைவு மக்களின் வருமானத்தினையும் குறைப்பதால் இறக்குமதிப் பொருட்களுக்கான கேள்வி குறைவதன் மூலம் இறக்குமதிக் கொடுப்பனவில் குறைப்பினை ஏற்படுத்தலாம். இறக்குமதிக் கொடுப்பனவில் சேமிப்பும், ஏற்றுமதி வருமானத்தில் பெருக்கமும் சேர்ந்து சென்மதி நிலுவையின் பாதக நிலையினைத் தீர்க்கும் என்று கொள்கை ரீதியாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் ஏற்றுமதி வருமானம் பெறக்கூடிய அளவானது ஏற்றுமதிப் பொருட்களைப் பொறுத்து வெளிநாட்டு நுகர்வோர் கொண்டுள்ள கேள்வி நெகிழ்ச்சியையும், பணச் சுருக்கத்தின் போது ஏற்றுமதி விலைகளில் ஏற்படக்கூடிய குறைவினையும் பொறுத்தே அமையும். ஏற்றுமதிப் பொருட்கள் பொறுத்து வெளிநாட்டவர் கொண்டுள்ள கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு கூடியதாக இருக்குமாயின் ஏற்றுமதி வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் பெருக வழியுண்டு. ஏற்றுமதிப் பொருட்களின் விலை குறைய வேண்டுமாயின் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்திச் செலவு குறைய வேண்டும். ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்துகின்ற மூலப்பொருட்கள் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற போதோ அல்லது ஏற்றுமதிப் பொருட்கள் தொழிற்செறிவு கொண்டவையாக இருந்தாலோ உற்பத்திச் செலவில் குறைவு ஏற்படமாட்டாது. தொழிலாளர் கூலியில் குறைவு ஏற்படுத்துவது என்பது தொழிற் சங்கங்கள் பலம் வாய்ந்த இக்காலத்தில் முடியாதென்பதும், இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களின் விலையைத் தீர்மானிப்பவை வெளிநாடுகள் என்பதுமே உற்பத்திச் செலவில் குறைவினை ஏற்படுத்த முடியாமைக்குக் காரணமாய் அமையும். உற்பத்திச் செலவில் குறைவு ஏற்படாவிடில் ஏற்றுமதி வருமானம் பெருகும் என எதிர்பார்ப்பினைக் கொள்ள முடியாது. பணச் சுருக்க விளைவாக லாபம் குறையக் கூடிய சந்தர்ப்பங்கள் உற்பத்தியாளர்களுக்கு இருந்தால் தகுந்த நடவடிக்கையை கையாளாவிடில் நீண்ட காலத்தில் வேலை மட்டம், உற்பத்தி என்பனவற்றில் குறைவு ஏற்படக்கூடிய நிலையையும் எதிர்நோக்க வேண்டும்.

## 3. ஏற்றுமதி உற்பத்திகளை அதிகரித்தல், இறக்குமதி பிரதியீட்டைச் செய்தல்

அமைப்பு ரீதியான காரணிகளால் சென்மதி நிலுவையில் பாதக நிலைமை ஏற்படும் போது இத்தகைய நடவடிக்கையினைக் கையாளுதல் வேண்டும். இலங்கையினை எடுத்துக் கொண்டால் அன்றும் இன்றும் ஏற்றுமதி வருமானத்தில் பெரும் பங்கினைப் பெற்றுக் கொள்கின்ற தேயிலை, றப்பர், தெங்கு போன்றபொருட்களின் பாதகமான உலக சந்தை நிலையே இலங்கையின் பாதக சென்மதி நிலுவைக்கு முக்கிய காரணமாகும். எதிர்மாருனலும் இவற்றின் நிலைமை சாதகமாக அமைய மாட்டாது. எனவே வேறு வகையான ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்ய ஊக்கமளிப்பதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்புக்கள், ஏற்றுமதி வருமானங்களுக்கு சலுகை மானியம் வழங்கல் போன்றவை அவ் நடவடிக்கைளாகும். இவற்றின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதி அளவினைப் பெருக்கி வருமானத்தினை அதிகரிக்கலாம். அத்துடன் இறக்குமதி செய்கின்ற பொருட்களை இயலுமானல் உள்நாட்டில் உற்பத்தி செய்ய முனைவதின் மூலம் இறக்குமதிக் கொடுப்பனவைக் குறைக்கலாம். பல உப உணவுத் தானியங்களில் இலங்கை இந்நடவடிக்கைகளை கையாண்டுள்ளது. இந்நடவடிக்கைகள் உள்நாட்டு மக்களுக்கு அதிகவேலை வாய்ப்பை வழங்குவதுடன் அதிக வருமானத்தினையும் அளிக்கும். ஏற்றுமதி உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க முடிவதும், இறக்குமதிப் பிரதியீட்டைச் செய்வதன் மூலம் இறக்குமதிக் கொடுப்பனவில் சேமிப்பை ஏற்படுத்தமுடிவதும் சேர்ந்து சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## 4. நாணய மாற்றுப் பெறுமதி இறக்கம்

நாணய மாற்று விகிதம் என்பது ஒரு நாட்டினது நாணயத்திற்கும், ஏனைய நாடுகளது நாணயத்திற்குமிடையே உள்ள மாற்று விகிதமாகும். நாணயப் பெறுமதி இறக்கம் என்பது ஒரு நாட்டினது நாணயத்தின் பெறுமதியினை ஏனைய நாட்டு நாணயங்களின் பெறுமதி குறித்து இணக்கம் செய்வதையே குறிக்கும். நாணயப் பெறுமதியிறக்கம் செய்யும் நாட்டின் ஏற்றுமதிப் பொருட்கள் ஏனைய நாட்டு மக்களைப் பொறுத்து நாணயப் பெறுமதியிறக்கம் செய்ய முன்பு இருந்த நிலையிலும் பார்க்க மலிவுடையதாகத் தோன்றும். இதனுல் பொருட்கள் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட ஏற்றுமதி வருமானம் பெருகும். நாணயப் பெறுமதியிறக்கத்தினை மேற்கொண்ட நாட்டு மக்களைப் பொறுத்து வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் முன்பிலும் பார்க்க விலை கூடியனவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். இதனல் இறக்குமதி அளவினையும் குறைப்பார்கள். இதன் மூலமாக இறக்மதிக் கொடுப்பனவு குறையும். எனவே ஏற்றுமதி வருமானம் பெருகுதலும், இறக்குமதிக் கொடுப்பனவு குறைதலும் சேர்ந்து சென்மதி நிலுவையில் சமநிலையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனல் நாணயப் பெறுமதி இறக்கம் வெற்றிகரமான விளைவைத் தரவேண்டுமாயின், பல சாதக சூழ்நிலைகள் இருத்தல் வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதி குறித்த கேள்வி நெகிழ்ச்சியானது ஒன்றுக்குக் கூடுதலாகவும், விலை வீக்கம் ஏற்பட்டாலும், நிறை தொழில் மட்டம் நிலவாமலும், ஏனைய நாடுகள் போட்டி முறையான நாணயப் பெறுமதி இறக்கத்தினை மேற்கொள்ளாமலும் இருக்குமாயின் தான் நாணயப் பெறுமதி இறக்கத்தின் மூலம் சென்மதி நிலுவை சமநிலை அடைய முடியும்- நாணயப் பெறுமதி இறக்கத்தினைக் கையாளுகின்ற போது தகுந்த நடவடிக்கை எடுக்காவிடில் வீக்க நிலை ஏற்படக்கூடிய சக்திகள் பொருளாதாரத்தில் காணப்படும் என்பது இதன் தீய விளைவாகும். இன்னும் ஏனைய நடவடிக்கைகளைக் கையாளும் போது நாடுகளின் நாணயங்களின் பெறுமதிக்கிடையே மாறுதல் ஏற்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 5. நாணய மாற்றுக் கட்டுப்பாடு

அயல் நாட்டு நாணயங்கள் ஏற்றுமதியின் மூலமே பெரும்பாலும் கிடைக்கின்றன அல்லது கிடைக்கின்ற நாணய மாற்றுக்களை விரும்பியவாறு இறக்குமதியின் மீது செலவிடாமல் தேவைக்கேற்ற வகையில் செலவிடுவதற்கான கட்டுப்பாட்டு விதிகளை அரசாங்கம் ஏற்படுத்துவதையேநாணய மாற்றுக் கட்டுப்பாடு என்பர். இதன் ஏற்றுமதியாளர்கள் தாம் பெறுகின்ற அயல் நாட்டு மாற்றுக்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டு, அதற்குப் பதிலாக உள்நாட்டு நாணங்களைப் பெற்றுக் கொள்வர். அரசாங்கம்தேவையின் முக்கியத்துவத்திற்கு ஏற்ற வகையில் அதனைப் பங்கீடு செய்யும்.

சென்மதி நிலுவையில் பிரச்சினையானது அதற்கான காரணிகள் தனித்தனியாகவோ ஒரே சமயத்திலோ நிலவும் போது ஏற்படலாம், அதே போன்று அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளும் சென்மதி நிலுவைப் பிரச்சினையினை தீர்ப்பதையே நோக்கமாகக் கொண்டவை. எனினும் அவற்றில் சில பக்க விளைவுகள் பொருளாதாரத்தில் ஏற்படும். அவை தீயனவாகவோ நல்லனவாகவோ இருக்கலாம். எனவே பொருளாதார சூழ்நிலைக்கேற்ப சென்மதி நிலுவையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கையாளும் போதே சரியான முறையில் பிரச்சனை தீர்க்கப்படும்.

(முற்றும்)

புகைப்பவர்களுக்கு அருகில் புகைக்காமல் அமர்ந்திருந்தாலும், அது உடல் நலத்தைப் பாதிக்கும். குறிப்பாக ஆண்களைவிடப் பெண்களை அதிகமாகப் பாதிக்கும். இந்தப் புகையானது, பெண்களுக்கு கருப்பையின் கழுத்துப் பகுதியில் புற்றை உருவாக்குகின்றதாம். ஒரு பெண், தானே புகைத்தால் அவளுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்படுமோ அதே போன்று புகைப்பவருக்கு அருகில் அமர்ந்திருந்தாலும் ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தின் விலை சொல்லிவிட முடியுமா?

★ செல்வன் சுந்தரலிங்கம் துஷ்யந்தன்




"வெள்ளி விழாவை யொட்டி சனசமூக நிலையம் நடாத்திய தமிழ்த் தினப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கவிதை."

அமைதியாய்க் கிடந்த எம் தேசத் தெருக்களின் ஓரங்களில்
அன்நியப் படைகளின் பாதடிகள் ஆழமாகத் தடம்பதிந்த போது
நிம்மதிப் பெருமுச்சு விட்டிருந்த எம் மக்களின் விழிகளில்
விம்மிய அழுகையின் வழி வந்த கண்ணீர்த் துளிகள் தான்
(மீதம்

அடிமைப் பட்டிருந்த எங்களுக்கு விரைவில் இந்நிலைமாறி
விடிவு கிட்டிடும் என்று கனவுகள் கண்டனர்
விடுதலை அது விலங்கொடிப்பிலிருந்து வருவது
ஒடுக்கப்பட்ட நாமும் பெற்றிடலாம் அதை—ஆனால்

செய்தனர் ஒப்பந்தம் தப்பிடலாம் என்றே
எய்தவன் இருக்க அம்பை நாமேன் நோவான்.
காலங்காலமாய் களைத்திட்ட எங்களுக்கு என்றும்
விலகாத இருளாய் இருப்பது அடிமை விலங்கு.

வரலாற்றில் அழித்திடமுடியாத என்றும் நிலைத்திட்ட
சரளங்களில் இருந்து சில நினைவுகளைத் திருப்பிட
விருப்பங்கள் எங்களுக்கு மட்டும் வெறுப்புக்களாய்
இருப்புக்கள் இன்னமும் மறைக்கப்படுகின்றன.

ஈழத்தில் ஓர் ஈரமான இரவினில் — அவை
வேழத்தின் பிளிறலையையும் முந்தியவையாய்வரும்.
அரைத் தூக்கத்தில் கண் விழித்து வானத்தைப்பார்க்க
குரைத்திடும் நாய்களின் ஓலத்திலும் மிஞ்சியவையாய்

விரைந்திடும் வண்டிகளின் சங்கூதல் கூட
கரைத்திடும் ஈழவர் நம் மனதைத் தினம்
இரவினில் தினம் தூக்கமில்லை—கயவர்களின்
வரவினால் எழும் அரவத்தின் பயத்தினால்.

நாய்களின் ஓலம் வானைப் பிளக்க—மனிதமற்ற
பேய்களின் உரசல்கள் நாடித் துடிப்பையளக்க
கழிகிறதே எங்களின் உணர்வற்ற ஜீவியம்
விழிகள் மூடமறந்த இரவுகள் தூங்குகின்றன.

ஆனாலும் நாம் இப்பொழுதும் தேடுகின்றோம்—அவை
கானல் நீரின் நிழல் கொண்ட வார்த்தைகள்
சுதந்திரம் இதைப் பெற நாம் படும் அந்தரம்
தந்திரம் செய்தே தந்தனர் உயிர் அந்தரம்.

எதற் கெல்லாமோ விலைபேசும் போது—இவர்கள்
இதற் கெல்லாம் விலைகுறிப்பது நியாயமாமோ?
கேட்ட சுதந்திரத்திற்கு எல்லோரையும் போல்
வேட்டு வைத்து விட்டுச் செல்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தின் விலை சொல்லிட முடியுமா?

★ செல்வி
சுஜாதா நவரத்தினம்

சுதந்திரத்தின் விலை
சொல்லிட முடியுமா
நாம் படும் வேதனைகள்
வார்த்தையில் அடங்குமா?
விடிவு என்பது இங்கே
வேடிக்கை யாவதும் உண்மையே.
இன்று
வாழ்வின் நிலையதை
வரையறுக்க முடியுமா?
சுதந்திரத் தாயும் இங்கே
சுருண்டு போவதும் உண்மையே
இப்படியே நம் சுதந்திரம்
நிரந்தரமற்றுப் போனல்
நிம்மதியெங்கே தமிழன் வாழ்வில்.

சுதந்திரச் செல்வன் காந்தியும்
தேசப்பற்றுடையோன் பாரதியும்
வாழ்ந்த ஈழமண்ணவர்
சுதந்திரத்தின் விலையை
பேசுவது நியாயமா?

நமக்கும் உணர்வுகள்
உறங்கவில்லை என்பதை
நாமெல்லாம் காட்டமுடியாது
நரக வேதனை கொள்கிறோம்
நாளெல்லாம் நம் உணர்வுகள்
நசுக்கப்படுவதை தவிர்க்க
நாமும் ஏந்துகின்றோம்
சுதந்திரக் கொடிதனையே
என்னதான் நாம் செய்யினும்
சுதந்திரம் இங்கே
விலை பேசப் படுகிறதே.

உணர்வைப் பறித்து
உயிரைக் குடிக்கும்
தேசப் பற்றற்ற பாவிகளே
உயிரான நம் தேச
சுதந்திரத்தின் விலை
சொல்லிட முடியுமா?

வீடுகள் யாவிலும் ஓலங்கள்
காடுகள் யாவிலும் சுவடுகள்
வேலிகள் யாவிலும் ஏக்கங்கள்
இவையெல்லாம் வேண்டுவன
சுதந்திரத்தின் விலையெனின்
சொல்லிட முடியுமா
சுதந்திரத்தின் விலை.

“

*வெள்ளி விழாவை யொட்டி சனசமூக நிலையம் நடாத்திய தமிழ்த் தினப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கவிதை.*

”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாளும் வந்திடாதோ...

அன்பே
உன்னை யெண்ணி
இன்று வாடுகின்றேன்
நீ என்பது
நான் அல்லவா
என்று பாடிய
அந்த நாளும் வந்திடாதோ?
தேனே
உன் வாழ்வுக்காய்
என்
வாழ்வை உன்னை
சுற்றி பறக்க விட்டு
அன்பு மொழி பேசிய
அந்த நாளும் வந்திடாதோ?

மலரே மலரே
நீ யல்லவா
என் நாயகி
என்று உன்னை யெண்ணி
பல நாளும்
வாடிய நினைவுகளின்
நாள் தான்
மேகங்களாய்
வானத்தில் செல்கின்றதோ?

உன் முடிவுக்காய்
காத்திருக்க
நீ
வெண் புருவாய்
சென்றாய்

என்னை விட்டு
என் வாழ்வின்
விடி வெள்ளியாய்
உன்னை யெண்ணி
வானத்தில் கோட்டை
கட்டி
வானவில்லில்
பூந்தோட்டம் வைத்து
மகிழ்ந்த
அந்த நாளும் வந்திடாதோ?

வெண்ணிலாவே
என் காதல்
தேவதையிற்காக
கட்டிய
தாஜ்மகாலின் அழகு
பார்க்கவா
மெல்ல மெல்ல
நாணி வருகிறாய்?
அவளோ நிலாவை கண்ட சூரியனாய்
சென்று விட்டாள்
அன்பே
உன்னைக் கண்ட நாணத்தில்
செஞ் சிவப்பாகிய
சூரியனுக்காக
உன் வதனத்தை
காட்டு?
இல்லையேல்
அந்த நாளை யெண்ணி
வாழ்ந்திடுவேன்.
அந்த நாளும்
வந்திடாதோ?

செல்வன் அன்னலிங்கம் சுதாகர்

"வெள்ளி விழாவை யொட்டி சனசமூக நிலையம் நடாத்திய தமிழ்த்தினப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கவிதை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிற் கிடைத்த பார்வதி வெண்கலச் சிலைகள்

செ. கிருஷ்ணராசா M. A.
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தென்னாசியாவிலும் ஆங்கிலேயர்களது வருகையைத் தொடர்ந்தே அப்பிராந்தியப் பண்பாட்டு ஆய்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் பயனாக காலவெள்ளத்தினால் அள்ளுண்டு சிதைவுண்டு, அழிபாடுகளுக்குள்ளும், மண்மேடுகளுக்குள்ளும் மறைக்கப்பட்ட-மறைந்துபோன கலைவனப்பு மிக்க கருவூலங்கள் வெளிக்கொணரப்பட்டன. தென்னாசியாவைப் பொறுத்தமட்டிலே பௌத்த - இந்து – சமணப் பண்பாட்டுக் கருவூலங்களின் வெளிப்பாடானது அப்பிரதேசத்தின் பண்பாட்டு வரலாற்றினை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவுவதாக அமைந்தது.

இந்திய உப கண்டத்திலும் சரி, இத்தீவிலும் சரி ஆங்கிலேயர்களால் தொடக்கி விடப்பட்ட பண்பாட்டு ஆய்வுகள் இன்றைய நிலையில் புத்தூக்கம் எய்தி, பண்பாட்டு வரலாற்றுக் கட்டுமானத்திற்கு மேன்மேலும் பல புதிய தகவல்களை வழங்கும் நிலையை அடைந்துள்ளது. இலங்கையைப் பொறுத்தமட்டிலே பௌத்தமதம் தொடர்பான பண்பாட்டியல் ஆய்வுகள் பெருவளர்ச்சி கண்ட போதும், இந்துப் பண்பாட்டியல் ஆய்வுகள் பெருமளவுக்குப் பின் தங்கிய நிலையிலே இருந்து கொண்டிருப்பதனைக் காணலாம். இருந்த போதிலும் பௌத்த பண்பாட்டியல் ஆய்வுகளின்போது வெளிப்படுத்தப்பட்ட இந்துமதம் தொடர்பான கருவூலங்களையும். தற்செயலாக நாட்டின் சில பாகங்களில் கிடைத்த இந்து மதம் தொடர்பான ஆவணங்கள், கலாசார எச்சங்கள் என்பனவற்றையும் அடிப்படையாகக் கொண்டே எமது வரலாற்றாசிரியர்களும், இந்து மதத்தின் மீதான பற்று மிகுந்தவர்களும் அம்மதம் தொடர்பான தத்தமது ஆய்வுகளை நடாத்தி வருகின்றனர். இந்நிலையில் ஓர் உண்மையை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்; அஃதாவது இலங்கையில் பௌத்ததின் வலயத்திலுள்ளேயே இந்துமதம் தொடர்பான அனைத்து வரலாற்றுக் கருவூலங்களும் பாதுகாக்கப்பட்ட நிலையில் வெளிப்படுத்தப்பட்டு வருவதாகும்.

இவ்வடிப்படையிலேயே இந்து மதம் தொடர்பாக இதுவரை கிடைத்த மூலாதாரங்களையும். கருவூலங்களையும் அடிப்படையாகக் கொண்டு அம்மதத்தின் முக்கியமான ஒரு பிரிவாக உள்ள சைவ மதத்துடன் இணைந்த பார்வதி வெண்கலச் சிற்பங்கள் பற்றி மேற்கொள்ளப்படும் இவ்வாய்வானது வரலாற்று மாணவர்களுக்கன்றி இந்து நாகரிகத்துறை மாணவர்களுக்கும் பெரும்பயன் கொடுப்பதாக அமையும். இச்சிறு ஆய்வின் கண் இதுவரையில் இலங்கையில் வெளிக்கொணரப்பட்ட பார்வதி வெண்கல விக்கிரஹங்கள் தொடர்பாகச் சில விபரணங்களைக் கொடுப்பதே நோக்கமாக அமைகின்றது.

## வெண்கலச் சிலைகள் கிடைத்த இடங்களும் அவற்றின் வரலாற்று முக்கியத்துவமும்

இலங்கையில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் தொடக்கி வைக்கப்பட்ட அகழ்வாய்வுகளினதும் (*Excavetrons*) மேலாய்வுகளினதும் (*Explorations*) விளைவாகவும், தற்செயல் கண்டுபிடிப்புக்கள் காரணமாகவும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இந்து சமயம் தொடர்பாக, குறிப்பாகச் சைவமதத்துடன் தொடர்பான வரலாற்றுக் கருவூலங்கள் கிடைத்த வண்ணமுள்ளன. இவற்றுள் எண்ணிக்கையிலே அதிகமாகக் கிடைத்தவண்ணமிருப்பவை பார்வதியின் வெண்கலச் சிற்பங்களாகும். ஏறத்தாழ 20க்கும் மேற்பட்ட இவ்வெண்கலச் சிற்பங்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இதுவரையிற் கிடைத்துள்ளன என்பது இச்சிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கலை தொடர்பாக ஆய்வு செய்வோருக்கு பெருவிருந்தாக அமையும்.

அவ்வகையில், இச் சிலைகள் கிடைத்த இடங்களாக எடுத்துக்காட்டப்படுவனவற்றுள் அனுராதபுரம், பொலனறுவை, திருகோணமலை, பதவியா என்பன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. காலத்தால் முந்தியதும், தென்னிந்திய சிற்பமரபின் நேரடியான அலைகளை உள்வாங்கிக் கொண்டு வளர்ச்சியடைந்த கலைமரபுக்குரிய அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்ட இடமுமாக அனுராதபுரம் விளங்கியதைக் காணலாம். தனித்துவமாக பார்வதி கோயில்கள் கட்டப்பெற்று வழிபாடு இயற்றப்பட்ட ஒரு தலமுமாக அனுராதபுரம் விளங்கியது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

''....அனுராதபுரத்தில் கிடைத்துள்ள இந்தத் தொல்பொருளாதாரங்கள் சென்ற நூற்ருண்டின் இறுதியில் *H. C. P. Bell* என்ற ஆராய்ச்சியாளரால் வெளிக் கொணரப்பட்டவையாகும். *1892* இலும் *1893* இலும் அவர் அங்கு அகழ்வாராய்ச்சி நடாத்தியபோது பல சைவக் கோயில்களின் அழிபாடுகளும் ஒரு சில தமிழ்க் கல்வெட்டுகளும் அனுராதபுரத்தின் வடக்குப் புறத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. ......... பெண் தெய்வ வழிபாட்டுக்குரிய கோயில்களும் காணப்பட்டன. இக்கோயில்கள் அனைத்தும் ஒரே வடிவினதாய் எளிமையானமுறையில் பல்லவர் காலக் கோயில்களைப் போன்று அடித்தளங்களைக் கொண்டிருந்தன...... இவற்றுக்கு குமாரகணம் என்ற நிர்வாகக் குழுவினர் பொறுப்பாக இருந்தமையை நோக்குமிடத்து, தமிழ்நாட்டிற் போலவே இலங்கையிலும் சைவக் கோயில்களின் நிர்வாகம் அமைக்கப்பட்டிருந்தது என ஊகிக்க இடமுண்டு.''

அனுராதபுரத்திலிருந்து இதுவரையில் ஐந்துக்கு மேற்பட்ட பார்வதி வெண்கலச் சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவற்றுள் காலத்தால் முந்திய பார்வதி சிற்பம் கி. பி. 9ம் நூற்ருண்டுக்கு முற்பட்டதாக எடுத்துக்காட்டப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மிக அண்மையிலே நிற்கும் நிலையில் அமைந்த நான்கு பார்வதி வெண்கலச் சிலைகள் அனுராதபுரத்திலுள்ள அபயகிரி விஹாரத்துக்கண்மையிலிருந்து அகழ்ந்தெடுக்கபப்ட்டன. இவற்றுள் ஒன்றின் பீடத்திலே 'நானுதேசி' எனத் தமிழிலே பொறிப்பு ஒன்று காணப்படுவதிலிருந்து வணிக கணங்களுக்கும் பார்வதி வழிபாட்டுக்குமிடையே இருந்திருக்கக்கூடிய நெருக்கமான உறவினை அறிந்து கொள்ளலாம்.

மிகக் கூடுதலான எண்ணிக்கையைக் கொண்ட பார்வதி வெண்கலச் சிலைகள் பொலனறுவையிலிருந்தே வெளிக்கொணரப்பட்டன. புலத்தி நகரம் அல்லது ஜனநாத மங்களம் என அழைக்கப்பட்ட இப்பொலனறுவையிலிருந்து (இதுவரையில்) 10 பார்வதி வெண்கலச் சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. பொலனறுவையின் வரலாறுனது சோழப் படையெடுப்பாளர்களது நடவடிக்கைகளுடன் – அந்நடவடிக்கையின் மையமாக ஏறத்தாழ அரை நூற்ருண்டுகட்கு மேல் தொடர்புபட்டிருந்தது. அக்காலகட்டத்திலே 13 இந்துக்கோயில்கள் ஒரு காளிகோயில் உட்படகட்டிமுடிக்கப்பட்டன. 'வானவன்மாதேவி ஈஸ்வரமுடையார்' என அழைக்கப்பட்ட 2ம் சிவதேவாலயம் அவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் இயங்கியது, கடந்த நூற்ருண்டின் இறுதியிலே இங்கு ஆரம்பிக்கப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளின் விளைவாக ஐந்து சிவதேவாலயங்களும், ஏழு விஷ்ணு தேவாலயங்களும் இருக்க அடையாளம் காணப்பட்டன. இத்தேவாலயங்களிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட பார்வதியின் உலோகச் சிலைகளுள் பெரும்பாலானவை. தலைகீழாக பாதுகாப்பு நோக்கத்தின் பொருட்டு நடு மண்டபங்கட்குள்ளும், கோயிற் சுவர்களுக்குள்ளும், தாழிகளுக்குள்ளும் புதைத்திருக்கவும் மறைக்கப்பட்டும் காணப்பட்டன. பொலனறுவையிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட பார்வதியின் உலோகச் சிலைகள் யாவும் கொழும்பிலுள்ள அரும்பொருளகத்திலே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

பார்வதி வெண்கலச் சிற்ப மரபு தொடர்பான பிறிதொரு வளர்ச்சி நிலையினைத் திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணமலையிலிருந்து கிடைத்துள்ள மூன்று சிலைகளிலிருந்து அறிய முடிகிறது. அவற்றுள் ஒன்று இன்று வரை தம்பலகாமம் கோணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டில் இருந்து வருவதனைக் காணலாம். ஏனைய இரண்டு வெண்கலச் சிலைகளும் கொழும்பு அரும்பொருளகத்திலே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இலங்கையிற் கிடைத்த பார்வதி வெண்கலச் சிற்பங்களுள் எல்லாவற்றுக்கும் உரைகல் போன்று அமைந்தது திருகோணமலை தம்பலகாமம் கோணேஸ்வரர் கோயிலிருந்துவரும் பார்வதி சிலை எனலாம்.

பதவியாவிலிருந்தும் பார்வதி வெண்கலச் சிலைகள் பல கிடைத்திருந்தும், அவை சரியான முறையில் அடையாளம் காணப்படாத நிலையிலும்' பெற்றுக்கொள்ளப்பட்ட இடத்தின் பெயர் பதிவு செய்யப்படாத ஒரு நிலையிலும் பல அரும்பொருளகங்களின் கைமாற்றங்களினூடாக கொழும்பு அரும்பொருளகத்தினை அவை சென்றடைந்ததன் காரணமாகவும் லக்ஷ்மி அல்லது கௌரி என்ற பெயரில் கண்டெடுக்கப்பட்ட இடத்தின் பெயரின்றி காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். பதவியா ஸ்ரீபதிபுரம் எனவும் பார்வதிபுரம் எனவும் ஸ்ரீபதிக்கிராமம் எனவும் அழைக்கப்பட்டது. பார்வதியின் பெயரில் சத்திரங்கள் பல அங்கு இருந்தமைக்கும் சான்றுகள் உண்டு. இந்நிலையில் பார்வதியின் வழிபாடு அங்கு பிரபல்யம் அடைந்திருக்கும் என்பதில் சந்தேகமிருக்காது.

### பார்வதி சிலைகளின் பொது இயல்புகள்

இலங்கையில் இதுவரையில் கிடைத்துள்ள 20 பார்வதி வெண்கலச்சிலைகளுள்ளே 18 சிலைகள் நிற்கின்ற நிலையில் அமைந்தனவாகவும், இரண்டு சிலைகள் மாத்திரம் இருக்கின்ற நிலையில் அமைந்தனவாகவும் கிடைத்துள்ளன. இவற்றினுள்ளே இரண்டு சிலைகள் மாத்திரம் பீடங்களின்றிக் கிடைத்துள்ளன.

ஏனைய 18 பார்வதி வெண்கலச் சிலைகளும் தாமரையாசனத்துடன் கூடியனவாக மீட்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதுவரைக்கும் இலங்கையிற்கிடைத்த வெண்கல இந்து உலோகச் சிலைகள் பற்றி ஆய்வு செய்த சிலை வரலாற்று ஆசிரியர்களும் சரி, இந்து சமயத்தின் மீதான ஈடுபாட்டின் காரணமாக அச்சிலைகளைப் பற்றி விளக்கம் கொடுத்த அறிஞர்களும் சரி நடராசர் சிலைகளைப் பற்றியே பெருமளவுக்கு ஆய்வு செய்வதும், அவற்றுக்கு வகுப்பெண் கொடுத்து அவற்றைப் பற்றி சமய - தத்துவ ரீதியில் விளக்கம் கொடுப்பதுமாக இருந்துள்ளனரே தவிர பார்வதி வெண்கலச் சிலைகளைப் பற்றி அந்தளவுக்கு சிந்தித்திருந்தனர் எனக் கூறமுடியாதுள்ளது. இக்காரணத்தினாலும் காலத்துக்குக் காலம் கிடைத்து வரும் – எண்ணிக்கையில் அவை அதிகரித்து வரும் காரணத்தினாலும் அச்சிலைகளைப் பற்றி விளக்கும்போது, அவை கொழும்பிலுள்ள அரும்பொருளகப் பதிவேட்டில் பதிவு செய்ததன் பிரகாரம் அவற்றுக்கு இலக்கமிட்டு விளக்கமளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இச்சிறு கட்டுரையின் கண் அதே பண்பு பின்பற்றப்பட்டு தனித்தனியான முறையிலே மிகச் சுருக்கமாக அவை ஒவ்வொன்றையும் பற்றி விபரிக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

### பார்வதி சிலை இல: 1. (CMR No. 13.104.286)

தாமரை மலர் ஆசனத்தின் மேல் நிற்கும் நிலையில் அமைக்கப்பட்ட இச்சிலையானது 51.2 சென்ரிமீற்றர்கள் உயரத்தினைக் கொண்டுள்ளது. தலையில் கரண்டமகுடத்துடன் கூடிய இச்சிலையின் கழுத்தில் கடிசூத்திரம் உட்பட ஆபரணங்களைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. வலது கரமானது நீலத்தாமரை மொட்டொன்றினைத் தாங்கி நிற்க இடது கரம் கடஹஸ்த நிலையில் கீழே தொங்கியுள்ள நிலையில் காட்டப்பட்டுள்ளது. மேகலையுடன் கூடிய இடையலங்கார ஆபரணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆடையமைப்பானது கீழே கணுக்கால் வரைக்கும் காட்டப்பட்டுள்ளது. இச்சிலையின் சிற்ப அமைதியை நன்கு அவதானித்த இந்திய சிற்பக்கலை வல்லுனரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கூலி என்பவர் இரண்டு மிகமுக்கியமான முரண்பாடான அம்சங்களை எடுத்துக்காட்டியுள்ளார். ஒன்று, 'திரிபங்க நிலை' எனப்படும் அசைவு நிலை வலப் பக்கமாக வலது பாதமும், வலது இடையும் வளைத்த நிலையில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பது: இரண்டு, வலது கையில் தாமரை மொட்டினைத் தாங்கியுள்ள நிலையானது வலது மார்பகத்துக்கு மேலே உயர்ந்திருப்பது என்பவையாகும். இது சிற்ப சாஸ்திர மரபுகளில் விதிக்கப்பட்ட முறைகளில் இருந்து முற்றிலும் முரண்பட்ட ஒரு தன்மையை எடுத்துக் காட்டுவதாகும். பொதுவாகக் குறிப்பிடுவதாயின் இச்சிற்பத்தின் வெளிப்பாடானது இலங்கைக்கேயுரிய பௌத்த உலோக சிற்பக் கலையில் கைதேர்ந்த ஒரு சிற்பியின் கைவண்ணத்தில் பார்வதியின் உருவை வெளிப்படுத்த முயற்சி செய்தமையின் விளைவேயாகும். இப்பார்வதி சிலையின் தலையில் காணப்படும் முடியின் அமைப்பு பௌத்த பாரம்பரியத்தினைத் தெளிவாகப் படம் பிடித்துத் தருகிறது. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இச்சிலையின் காலத்தினை கி. பி. 10ம், 13ம் நூற்றுண்டுகட்கு சேர்ந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்,

## *பார்வதி சிலை இல. 2,*
## *CMR No. 13. 108. 287)*

மிகவும் அழகிய தாமரையாசனத்திலே நிற்கின்ற நிலையில் வடிக்கப்பட்ட இச்சிற்பமானது 63·6 சென்ரி மீற்றர்கள் உயரத்தினைக் கொண்டுள்ளது. பொலனறுவையில் 3ம் சிவதேவாலயத்தினுள்ளிருந்து அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட இச் சிலை பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்குவதனைக் காணலாம். தலையில் கிரீட மகுடம், காதுகளில் மகர குண்டலங்கள், வலது கரத்தில் தாமரை மலர், இடது கரம் கடகஸ்த நிலை கைக்கட்டுக்களில் *(Arm Lets)* மகர வடிவ ஆபரணங்கள் என்பன பிரதான அலங்கார அணிகலங்களாக உள்ளன.

இச்சிலையின் அமைப்பினையும் சிற்ப – சாஸ்திர முறைகளுக்கேற்ற வகையில் அமைந்த தன்மையினையும் அவதானித்த அருணாசலம் அவர்கள் அதனைச் சிவகாமியாக அடையாளம் கண்டுள்ளார். 'மங்கள சுந்தரெ' மற்ற நிலையில் இவர் இச்சிலையை பொலனறுவையிலே கண்டெடுக்கப்பட்ட சிவன் இலக்கம் 8 இனது சக்தியாக அடையாளம் கண்டுள்ளார். இருப்பினும், இவ்விரு உலோக சிற்பங்களது ஸிரஸக்ர'வை அவதானிக்கும்போது இவை இரண்டுக்குமிடையே இருக்கின்ற பாரிய வேறுபாடு தெளிவாகின்றது. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இச்சிலையின் காலத்தினை கி. பி. 10ம், 13ம் நூற்றுண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## *பார்வதி சிலை இலக்கம் 3.*
## *(CNR No. 13. 109. 287)*

திட்டவட்டமாக சோழ மரபினைச் சேர்ந்தது எனக் கொள்ளப்படும் இப்பார்வதி சிலையானது பொலனறுவையில் உள்ள 5ம் சிவதேவாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாகும். தாமரையாசனத்தின் மீது நிற்கின்ற நிலையில் அமைந்த இச்சிலையானது 83·34 சென்ட்ரி மீட்டர்கள் உயரத்தினைக் கொண்டதாகும். அலங்கார அம்சங்கள் பொறுத்து ஒரு புதிய பரிமாணத்தினைக் காட்டும் இச்சிலையானது பார்வதியின் உலோக கலை மரபுகளிலிருந்து வேறுபட்ட ஒரு தன்மையைக் காட்டி நிற்கின்றது. இலங்கைக்கேயுரிய தனித்துவமான சோழர் பாணியிலான உலோக வார்ப்புக் கலைக்கு இது ஒரு வேளையில் சான்றாக அமையலாம்.

நீண்ட – சதுரமான முகவெட்டினையுடைய இச்சிலையின் தலையில் அழகிய, நீண்ட கரண்ட மகுடமானது ஐந்து சுற்றுக்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அக்கரண்ட மகுடத்தின் மையத்தில் குவிந்த வச்சிர வடிவம் புடைத்த நிலையில் காணப்படுவது பார்வதியின் முகவெட்டினை ஒளியூட்டச் செய்கின்றது. இது மாத்திரமன்றி, இச்சிலையின் கழுத்திலே அணியப்பெற்றுள்ள மிகத் தடிப்பான கழுதாபரணங்களும், பதக்கங்களும் திட்டவட்டமான வட்ட வடிவிலே அமைக்கப்பெற்றுள்ளது என்பது பார்வதியின் கன்னிமைத் தன்மையை – இளமைக்கு மெருகூட்டும் தன்மையை காட்டுவதாக உள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரதிஷ்டவசமாக வலது கரமானது உடைந்த நிலையில் காணப்பட, இடது கர மானது கடகஸ்த நிலையில் தோற்றமளிக் கின்றது. இடது தோள்ப்பட்டை யூடாகச் செல்லும் முப்புரி நூல் (ஜக்நோபம்) செழிப்பினை வெளிப்படுத்தும் தொப்பூழ் மேலாக வலது பக்கமாகக் காட்டப்பட் டுள்ளது. மேகலையுடன் கூடிய இடையா பரணங்களும் ஆடையின் அமைப்பும் பரத நாட்டிய நிலையிலுள்ள சாயலை வெளிப் படுத்துவதாக உள்ளது. கலாயோகி ஆனந் தக் குமாரசுவாமி அவர்கள் இச்சிலையினை கி.பி. 10ம், 13ம் நூற்றுண்டுக்கிடைப்பட்ட தெனக் குறிப்பிட்டுள்ளார்.

*பார்வதி சிலை இலக்கம் 4.*
*(CMR No.13. 110. 287)*

இப்பார்வதி சிலையானது முன்னைய சிலையுடன் வேறுபட்டு அமையாத போதி லும், ஒரு சில அம்சங்களை யிட்டு தனித்து வமான தன்மையைக் கொண்டுள்ளது என லாம். தாமரை மலர்ப்பீடத்தின் மீது நிற் கின்ற நிலையில் அமைந்த இச்சிலை 84 . 2 சென்ரி மீட்டர்கள் உயரத்தினைக் கொண் டிருந்த போதிலும், தலையில் உள்ள கரண்ட மகுடத்தின் அமைப்பு மிகவும் சிறியதாக வும், தடித்த வளையங்களைக் கொண்டிருக் காததாகவும் காணப்படுகிறது. இதேநேரத் தில் இச்சிலையின் வெளித்தோற்ற இயல்பி னைப் பொறுத்தவரையில் ஒருவிதமான *bold* தன்மை வெளிப்படுத்தப்படுவதனை – அதன் அடிப்படையில் அச்சிலையின் உயரம் கூட மட்டுப்படுத்தப்படுவதனையும் அவதானிக்க லாம். (இதுவே திரிபங்க நிலையின் இயல்பு மாகும்.) கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இதனை கி. பி. 10ம், 13ம் நூற் றுண்டுகட்கு இடைப்பட்டதாகக் குறிப் பிட்ட போதிலும், இச்சிலையின் தடித்த உதடுகளை மையப்படுத்திப் பார்க்கும்போது இது கி. பி. 10ம் நூற்றுண்டுக்கும் முற் பட்டதாகலாம் என ஊகிக்க இடமுண்டு.

*பார்வதி சிலை இலக்கம் 5*
*(CMR No. 13. 111 A . 288)*

பொலனறுவையிலிருந்து வெளிப்படுத்தப் பட்ட இச்சிலையானது தாமரையாசனத்தில் நிற்கின்ற நிலையில் 62 · 6 சென்ட்ரிமீட்டர் கள் உயரத்தினைக் கொண்டுள்ளது. பெரு மளவிலான அம்சங்களில் இதற்கு முன் னைய சிலையுடன் ஒத்திருந்த போதிலும், குறிப்பிட்ட சில அம்சங்களைப் பொறுத்த மட்டில் தனித்துவம் வாய்ந்ததாகவுள்ளது குறிப்பிடத்தக்கது, அருணாசலம் அவர்கள் அவதானித்தமையின் அடிப்படையில், மார் புப் பதக்கம், காற்பெருவிரல்களில் உள்ள வளையங்கள் (மெட்டி?) என்பனவும், இடது பக்க தோள்பட்டை யூடாக அணிந்துள்ள ஜக்ஞோபத்துடன் (முப்புரிநூல்) 'மங்கள சூத்திரம்' எனப்படும் பெண்களுக்கான மங்கலத் தாலியும் காணப்படுவதிலிருந்து இச்சிலையை சிவகாமி என அடையாளம் காணலாம். கலாயோகி ஆனந்த குமார சுவாமி அவர்கள் இச்சிலையை கி. பி. 10ம், 13ம் நூற்றுண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

*பார்வதி சிலை இலக்கம் 6*
*(CMR No. 13. 111B. 288)*

தாமரையாசனத்தில் நிற்கின்ற நிலை யில் அமைந்த இப்பார்வதி சிலையானது பொலனறுவையிலுள்ள முதலாம் சிவ தேவாலயத்தினுள் இருந்து பெற்றுக்கொள் ளப்பட்டதாகும். [முதலாம் சிவதேவாலயத் தின் கட்டிடக்கலைப் பண்புகள் பாண்டியர் பாணிக்குரியவையாகும்.] 78.7 சென்ட்ரி மீட்டர்கள் உயரத்தினையுடைய இச்சிலை யானது பார்வதி சிலைகள் இலக்கம் 2, 5, ஆகியனவற்றிலிருந்து வேறுபட்ட கலையம் சங்களைக் கொண்டு காணப்படுகின்றது. காதணிகள், தாமரைமலர்ப் பீடம் என்பன வற்றைப் பொறுத்து தனித்துவத்தையும் காணமுடிகிறது. கலாயோகி ஆனந்தகுமார சுவாமி அவர்கள் இச்சிலையினை கி.பி. 10ம், 13ம், நூற்றுண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

*பார்வதி சிலை இலக்கம் 7*
*(CMR No. 13. 206. 299)*

பொலனறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட பார்வதி சிலைகளுள் மிகச் சிறியதும், சம பங்க நிலையில் நிற்கின்ற ஒரு வடிவமுமே இச்சிலையாகும். இந்திய இலட்சியப் பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையின் தோற்றத்தினைத் தன்னள விலே வெளிப்படுத்தி நிற்கும் இப்பார்வதி சிலை யின் இடைப்பாகத்தின் அமைப்பானது அழகியல் நோக்கிலமைந்த ஆய்வுக்குரிய தாகும். 31 சென்ட்ரி மீட்டர்கள் உயரத் தினைக் கொண்ட இச்சிலையின் ஆபரண ஒழுங்கு முறைகளும், ஆடையின் அமைப் புக்களும், வேறுபட்ட ஒரு கலைமரபின் வெளிப்பாட்டினை, அதன் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக வுள்ளது. கலா யோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இச்சிலையினை கி.பி. 10ம், 13ம் நூற்றாண் டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப் பிட்டுள்ளமை இங்கு மீளாய்வுக்குரிய தாகும்.

## பார்வதி சிலை இலக்கம் 8
## (CMR No. 13. 296. 285)

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கலை மரபில் உருவாக்கப்பட்டு, இருக்கும் நிலையில் வெளிப்படுத்தப்பட்ட இப் பார் வதி சிற்பமானது 41 சென்ட்ரி மீற்றர் கள் உயரத்தினைஉடையதாக, (தாமரை) ஆசனத்தினை இழந்த நிலையில் பொல னறுவையிலிருந்து மீட்டெடுக்கப்பட்டது. இச்சிலையிலும், பார்வதி சிலை இலக்கம் 1 இனது குணயியல்புகளைப் போன்றே பல தனித்துவமான தன்மைகளைக் காண முடிகிறது. சுகாசன நிலையில் அமைக் கப்பட்ட இப்பார்வதியின் இடது பாதம் கீழ் நோக்கியவாறு தொங்கிக் கொண்டும் வலது பாதம் மடித்த நிலையிலும், வலது கரத்தில் தாமரை மொட்டொன்றினைக் கொண்டும். இடது கரம் வரதஹஸ்த நிலையிலும் சித்திரிக்கப்பட்டுள்ளது. தாமரை மொட்டினைத் தாங்கி நிற்கின்ற வலது கரம் வலது பக்க முலைக்காம்புக்கு மேல் உயர்த்தி விடப்பட்ட நிலையானது சிற்ப – சாஸ்திர மரபுகளுடன் முரண்பட் டுக் கொள்வதாக உள்ளது. இதனை அவ தானித்த இந்திய சிற்பவியல் ஆய்வா ளர் கங்கூலி என்பவர் குறிப்பிடுவதா வது, ''ஓரளவுக்கொத்த இன்னொரு பார் வதி சிலையுடன் இச்சிலையை ஒப்பிட்டு நோக்குவோமேயானால், அவற்றின் உருவ அமைதிக்கும், மெருகூட்டலுக்கும் ஆடை யாபரணங்களது வரைவுகளுக்கிமிடையே காணப்படும் பாரிய வேறுபாடு என்பன எல்லாவற்றையும் கொண்ட இலங்கை யின் உதாரணங்களானவை. தென்னிந் திய விதி முறைகளுக்கு அவ்வுலோகச் சிற்பியானவன் வழிப்படுத்தப்பட்டவன் அல்லன் என்பதைத் தெளிவாக்குகின்றன' எனக் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த கலை மரபின் பிரதான அம்சங்களைக் கொண்டிருக்கும் இச்சிலை யின் ஸிரசிலே சிங்களப் பாணியில் அமை யப்பெற்ற முடி (Cornical) ஒன்றும், காதுகளில் அமைந்துள்ள ஆபரணங்கள் இரண்டும், கழுத்திலே அணியப்பெற்ற மாலைகள் மூன்றுமாக இணைந்து இப் பார்வதி சிலையின் தனித்துவமான பிறப் பினை சுதேசக் கலை மரபுக்குரியதாக்கியுள் ளது. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இச்சிலையினை கி. பி. 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார். ஒருவேளை இச்சிலை யானது கி. பி. 13ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாக அமையலாம்.

## பார்வதி சிலை இலக்கம் 9
## CMR No. 13. 213. 299)

அனுராதபுரத்திலுள்ள சங்கிலி கனு தரவாபி என்ற இடத்தில் கண்டுபிடிக் கப்பட்ட நிற்கும் நிலையில் அமைந்த பார்வதி சிலையானது 9.4 சென்ட்ரி மீற் றர்கள் உயரமுடையதாகும். வலது கரம் உடைந்த நிலையில் தாமரையாசனம் எதுவுமின்றிக் கிடைத்த இச்சிலையை சரியான முறையில் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்களால் அடை யாளம் கண்டு கொள்ள முடியாதபோதி லும், அது பாவனையிலிருந்து விலக்கப் பட்ட ஒரு சிலை என்ற கருத்தில் குறிப் பிட்டுள்ளார். இது வீசப்பட்ட அல்லது பாவனையிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட நிலையிலேயே சங்கிலி வனுதரவாபியில் கண்டெடுக்கப்பட்டது என்பது அவரது குறிப்பாகும். இதனை வலியுறுத்துவதற் காக 'மகாநிர்வாண தந்திர' என்ற நூலின் 14ம் அத்தியாயத்தில் 100வது சுலோ கத்தை பின்வருமாறு எடுத்துக் காட்டு கின்றார். ''கால்கள் இல்லாத ஒரு கட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுளருடைய உருவம் அல்லது அதில் உடைவு காணப்பட்டால் அல்லது அவ்வுருவத்தில் துவாரங்கள் காணப்பட்டால் (அதனை) நீருக் குணவாகச் செய்யவேண்டும். (நீர்நிலைகளில் இதனை இடவேண்டும் என்பதாகும்.) எது எவ்வாறெனினும், வலதுகரம் இல்லாத இச் சிலையின் அமைதியினைப் பொறுத்த மட்டில் அதன் காலம் கி. பி. 9ம், 10ம் நூற்றாண்டு களுக்குரியதாக கலாயோகி ஆனந்த குமார சுவாமி குறிப்பிட்டிருப்பினும் உண்மையில் அதன் காலம் கி. பி. 9ம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதாகவே கொள்ளவேண்டும்.

## பார்வதி இலக்கம் 10.
## (Find No. 1960 / 05)

இலங்கையிலே இதுவரையில் அகழ்ந்து வெளிக்கொணரப்பட்ட பார்வதி சிலைகளுள் இச்சிலையே மிகவும் உயரமானதாகக் கிடைத் துள்ளது. 1960ல் பொலனறுவையில் 5-ம் சிவதேவாலயத்தின் சுவர்ப்பகுதி மீண்டும் அகழ்வாய்வுக்கு உட்பட்டபோது 93.5 சென்ரி மீற்றர் உயரமான இச்சிலை கிடைக் கப் பெற்றது. இச்சிலை மிகவும் எடுப்பான ஒரு தோற்றத்தினை அதனைப் பார்த்த மாத் திரத்திலே தருகின்றது எனலாம். மிகவும் திருத்தமான – இந்து சிற்ப சாஸ்திரங்கள் நன்கு கைவந்த – பௌத்த உலோக வார்ப் புக்கலை மரபில் உருவான பார்வதியாகவே இச்சிலை காணப்படுகிறது. கூம்பு வடிவான மகுடத்தினைத் தலையிற் கொண்டு, தாமரை யாசனத்தின் மீது நிற்கும் நிலையில் அமைந்த இச்சிலையின் ஆபரண ஒழுங்குகளும், ஆடை யமைப்பின் இலட்சணங்களும் பார்வதியின் நேர்த்தியான தன்மையை வெளிப்படுத்து வதாக அமைகின்றது. கழுத்திலே மிகவும் தடிப்பான பதக்கம் வட்டவடிவிலே மிகத் துல்லியமாக அமைக்கப்பட்டுள்ளது. இடது தோள்பட்டையூடாகச் செல்லும் ஜக்ஞோ பத்துடன் மங்கள சூத்திரமும் இணைக்கப் பட்டிருப்பது என்பது இச்சிலையை சிவகாமி யாகக் கொள்ள வைக்கின்றது. அவ்வடிப் படையில் கொடகும்புர என்பவர் பொல னறுவையிற் கிடைத்த நடராசர் இலக்கம் 6 இனது சக்தியாக இதனைக் கொள்கின்றார்.

ஆடையமைப்பின் ஒழுங்கு, அதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மடிப்புக்கள், வளை யங்கள் என்பன கைதேர்ந்த தென்னிந்திய வார்ப்புக்கலையில் உருவான படிமத்தினை நினைவூட்டினாலும் கூட, கொடகும்புரவின் கருத்துப்படி இப்பார்வதி சிலையின் ஆடை யலங்கார முறையின் குறிப்பிட்ட சில அம் சங்கள் பொலனறுவையில் உள்ள மகாபராக் கிரமபாகுவினதும், தாரா வெண்கலச் சிலை யினதும் ஆடையமைப்பு முறையை ஞாப கப்படுத்துவதாக உள்ளது என்பதாகும். கொடகும்பு, இச்சிலையானது கி. பி. 11ம் 12ம் நூற்றாண்டுகட்குரியது எனக்குறிப்பிட் டுள்ளார்.

## பார்வதி சிலைகள் இலக்கம் 11 & 12
## (FIND No. 1950)

திருகோணமலையில் வடக்கு கடற்கரை வீதியில் தற்செயலாகக் கிடைத்த பெரும் கலைக்கருவூலங்களுள் இவ்விரு பார்வதி சிலை களும் உள்ளடங்கியிருந்தன. இலங்கையின் இந்து விக்கிரவியல் வரலாற்றிற்கு திரு கோணமலையில் கிடைத்த இப் படிமங்கள் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. இலங்கைக்கேயுரிய-காலத் தால் - முந்திய - தனித்துவமான இந்து படி மக்கலை மரபொன்று திருகோணமலை மாவட்டத்தில் வளர்ச்சியடைந் திருந்தமைக்கு இவை சான்றாகின. பார்வதி சிலை இலக்கம் 11 இருக்கின்ற நிலையிலும் சிலை இலக்கம் 12 நிற்கின்ற நிலையிலும் அமைந்துள்ளன. இருக்கின்ற சிலையின் உய ரம் 47.6 சென்ரி மீற்றர்கள் ஆகும். நிற் கின்ற சிலையின் உயரம் 50 சென்ரி மீற்றர் களாகும். வரதமுத்திரையுடன் கூடிய இருக் கின்ற நிலையில் உள்ள பார்வதியின் வலது கரத்திலே நீலோற்பல மலர்மொட்டு காணப் படுகிறது. சுகாசன நிலையில் அமைந்த இச் சிலையின் வலது பாதத்தின் பெருவிரல் சாய் வாக கீழே தொங்கிக் கொண்டிருக்கும் இடது பாதத்தின் முழங்காலினை மெல்லத் தொட்டபடி காணப்படுவது அதன் பழமைத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது என லாம். இச்சிலையைப் பற்றி ஆய்வு செய்த பாலேந்திரா என்பவரினதும், இராகவன், கிருஷ்ண ஐயர் என்போர்களது கருத்துப் படியும், இப்பார்வதி மூர்த்தமானது சோமாஸ்கந்த மூர்த்தத்தின் இணையே என் பதாகும். சிற்ப - சாஸ்திர விதிமுறைகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்மைய சோமாஸ்கந்த மூர்த்தத்தில் பார்வதியின் இடது காதணி 'மயிற்சிறகினை'க் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் இப்பார்வதி மூர்த்தமானது இற்றைவரையில் வழிபாட்டுப் பொருளாய் இருந்து வருகின்றமை காரணமாக அவ்விசேட இயல்புகளைக் கண்டறிந்து கொள்ள முடியாதிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நிற்கின்ற நிலையில் அமைந்த பார்வதி சிலையின் சிறப்பியல்புகள் பல இந்திய சிற்பக்கலை ஆய்வாளர்களை மட்டுமன்றி, ஐரோப்பியக்கலை விற்பன்னர்களையுமே ஈர்த்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. இச்சிலையின் விசேட அம்சம் என்னவெனில் திருவாசி அல்லது பிரபாமண்டலத்தினுள் தாமரையாசனத்தின் மீது உருவாக்கப்பட்ட ஒரேயொரு வடிவம் இது என்பதாகும், துரதிஷ்டவசமாக அத்திருவாசியின் மேற்பாகம் எமக்குக் கிடைக்காமற் போயிற்று. மீனாட்சி என்று வர்ணிக்குமளவிற்கு எடுத்த எடுப்பிலே ஒரு மீனைப்போன்ற தோற்றத்திலே உண்மையான திரிபங்க நிலையிலே, இந்தியப் பெண்மையின் இலட்சிய பிம்பம் பிரதிபலிக்கும்படி வடிக்கப்பட்ட இப்படிமம் H.Zimmerஎன்ற மேலைத்தேய கலைப்புலவரை ஒருங்கே ஈர்த்துள்ளது. அவருடைய வர்ணனையிலே இங்கு குறிப்பிடுவதாயின் "*It is moment of Romance*" என்பதாகும். கிருஷ்ணஐயர் என்பவரது கருத்தின்படி இப்படிமமானது கி. பி. 11ம் நூற்றாண்டுக்குரியது என்பதாகும்.

*பார்வதி சிலை இலக்கம் 13.*
*(CMR. No. 13 . 214 . 299)*

தாமரைப்பீடத்தின் மீது நிற்கும் நிலையில் அமைந்த இப்படிமமானது 16 சென்றிமீற்றர்கள் உயரத்தினையுடையதாகவுள்ளது. திருகோணமலையிலிருந்து பெறப்பட்ட இப்படிமம் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்களால் 'சக்தி' அல்லது 'லக்ஷ்மி' என அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால் இப்படிமத்தின் சிறப்பியல்புகள் பல அதனைப் பார்வதியுடன் அடையாளம் காண்பதற்கு உதவுவதாகவுள்ளன. மார்புக்கவசம் அணிந்தநிலையில் இடது கரத்தினால் தாமரை மொட்டினைத் தாங்கி நிற்கும் நிலையும், வலது கரம் வலது பாதத்தின் முழங்கால் வரைக்கும் நீண்டிருப்பதும் சிறப்பியல்புகளாக அமைந்துள்ளன. மேகலாபரணங்களுடன் இணையப்பெற்றஆடையமைப்பானது பெருமளவுக்கு பார்வதி சிலை 12ஐ நினைவுபடுத்துவதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இப்படிமத்தின் காலத்தினை சந்தேகத்தோடு கி. பி. 13ம் நூற்றாண்டு எனக் குறிப்பிட்டுள்ள போதும் அதற்கும் முற்பட்ட காலத்தைச் சேர்ந்தது எனக் கொள்ளமுடிகிறது.

## கலாசார முக்கோணத்திட்டத்தின் கீழ் பார்வதி சிலைகள்

அனுராதபுரம், பொலனறுவை, கண்டி ஆகிய மூன்று முக்கியமான புராதன நகரங்களை இணைக்கும் முக்கோண வலயத்தினுள்ளே கலாசார அமைச்சினால் மேற்கொள்ளப்படும் தொல்லியல் அகழ்வாய்வுகளின் போதும் கிடைத்த கலைக் கருவூலங்களுள் ஏழுக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய பார்வதி வெண்கலச் சிலைகளும் உள்ளடங்கும். இவற்றில் ஒன்றிலேதான் 'நானாதேசி' என்ற பெயர் பொறிக்கப்பட்ட படிமமும் காணப்படுகிறது. கலாசார முக்கோண வலயத்தினுள்ளே கிடைக்கப்பெற்ற இப்பார்வதி வெண்கலச் சிற்பங்கள் யாவும் நிற்கின்ற நிலையிலே அமையப்பெற்றனவாகும். வேறுபட்ட உயரவித்தியாசங்களில் கிடைக்கப்பெற்ற இப்படிமங்கள் யாவும் விஞ்ஞான முறையிலமைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளமை (*Conservation*) காரணமாக அவற்றைப் பற்றிய மேலதிக விபரங்களை தற்போது பெற்றுக் கொள்வதில் சிறிது கஷ்ட நிலமையுள்ளது. எதிர்காலத்தில் இச்சிலைகள் பற்றிய விசேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்கள் சைவசமய வரலாற்றிற்கு மேல திக விபரங்களைத் தருவதாக அமையலாம்.

*முடிவுரை:*

மேலே கொடுக்கப்பட்டுள்ள இச்சிறு ஆய்வில் புராதன – மத்தியகால இலங்கையில் கண்டுபிடிக்கப்பெற்ற பார்வதி வெண்கலச்சிலைகள் தொடர்பான சில அம்சங்களை அறிமுகமாகக் கொடுக்க முடிந்துள்ளது. மேலும் விக்கிரஹவியல் ரீதியாக இச்சிலைகளைத் தமிழ்நாட்டிற் கிடைத்திருக்கக் கூடிய படிமங்களுடன் ஒப்பிட்டு நோக்கி, வேறுபடுத்தி ஆராயும் போதுதான் இலங்கைக்கேயுரிய தனித்துவமான இயல்புகளையும், இலங்கையில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்த பல்வேறு சிற்பக்கலை மரபுகளையும் இனங்கண்டு அவற்றைப் பற்றி விளக்கமளிக்க முடியும்.

●

## இவ்வாய்வுக் கட்டுரைக்கு பயன்படுத்தப்பட்ட நூல்கள்


1. *S. Krishnarajah; 1983, Saiva Bronzes in Sri Lanka (10-12th C. A. D.) Unpublished Thesis, Submitted to the University of Mysore for M. A. Degree in 1983.*
2. *A. K. Coomarasamy; 1914, Bronzes from Ceylon, Chiefly in the Colombo Museum.*
3. *Leelananda Prematilleke; 1986, Sri Lankan Bronzes (Bnddhist and Hindu), published by the National Museeum, Colombo.*


### கொலஸ்டிரால் மிகுமானல்...

கொலஸ்டிரால் உடலில் மிதமிஞ்சிக் காணப்படுமானல் அந்நிலை தமனி இறுக்கம் *Athero sclerosis* என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. உடலில் கொலஸ்டிராலின் அளவு மிகுமானல் அதைக் கண்டறிவதற்கு சோவியத் மருத்துவர்கள் ஒரு எளிய முறையைப் பின்பற்றுகின்றனர். அவர்கள் கண்டு பிடித்திருக்கும் சொட்டு மருந்தானது போடப்படும்போது, தோலின் மீது விழும் சொட்டுகளில் அதிகச் சொட்டுகள் நிறம் மாறுமானல் கொலஸ்டிரால் மிதமிஞ்சி இருக்கிறது எனவும் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறதென்றும் அறிந்து கொள்ளலாம். இவ்வியாதி முற்றிவிடுமானல் குணமாக்குவது எளிதல்ல.

★ ★

### விலை கொடுத்தும் வேதனை!

அதிக கலோரிகள் அடங்கிய நயப்படுத்தப்பட்ட உணவுகளான குப்பை உணவுகள் (கேக், ஐஸ்கிறீம், சிப்ஸ் போன்றவை), மற்றும் ஊளைச்சதை, சோம்பியிருத்தல், சூழ்நிலைக்களங்கள் ஆகிய காரணங்கள் நீரிழிவைக் கொண்டு வருகிறதென்கிறர் நீரிழிவு பற்றிய சுற்ருய்வு ஒன்றை நடாத்தி முடித்திருக்கும் டாக்டர்.

குறிப்பாக, செல்வந்தர்கள் இயற்கை உணவுகளைக் கைவிட்டு நயப்படுத்தப்பட்ட, பதனஞ் செய்யப்பட்ட, மணமூட்டப்பட்ட உணவுகளை விரும்பி உட்கொண்டு வருவதால், அவர்கள் வைரஸ் தொற்றுகளால் எளிதில் பாதிக்கப்படுகின்றுர்கள் எனவும் தெரிகிறது.

அதிக விலை கொடுத்தும் பெறுவதும் வேதனையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகமணி வைரமுத்து அவர்களுடன் சில நினைவுகள்...

நெல்லை க. பேரன்

நெல்லியடி சண்முகானந்த நாடகசபையினர் நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய வீதியில் அமர்க்களமாக நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டிருந்த காலம். 1962 முதல் நான் இவர்களது நாடகங்களில் சாத்திரியார், புரோக்கர், விவசாயி வேடங்கள் தரித்தும் தனிப்பட்ட முறையில் 'வள்ளி திருமணம்' 'கந்தசாமி பி.ஏ' ஆகிய தலைப்புக்களில் நவீன கதாப்பிரசங்கங்களும் செய்து வந்தேன். பெரும்பாலும் எமது நாடகங்களுடன் நடிகமணி வி.வி. வைரமுத்து குழுவினரின் 'மயான காண்டம்' அல்லது 'பூதத்தம்பி'யும் சேர்த்து மேடையேற்றுவது வழக்கம். நெல்லியடியின் பழம்பெரும் நாடகக் கலைஞர்களான கலைக்குரிசில் கந்தவனம் (ஐயா), இயமன் வேலாயுதம் ஆகியோர் மேடையில் திரைக்குப் பின்னால் நின்று இளம் நடிகர்களாகிய எங்களை உற்சாகப்படுத்துவார்கள். ஒருதடவை எனது நவீன கதாப்பிரசங்கத்திற்கு ஆர்மோனியம் வாசிக்கும்படி நடிகமணி வி. வி. வைரமுத்துவைக் கலைக்குரிசில் கந்தவனம் கேட்கவே அந்த மாபெரும் கலைஞரும் மறுக்காமல் ஒப்புக் கொண்டு வாசித்தார். பிரசங்கம் முடிந்ததும் தாளம் தவறாமல் பாடுகிறீர்கள், தாள ஞானம் இருந்தால் போதும் என்று பாராட்டியதுடன் எனது புதுமையான கருத்துக்களையும் நகைச்சுவைகளையும் மிகவும் வரவேற்றார். இயல்பாகவே நாடகத்துறையில் ஈடுபாடு கொண்ட எனக்கு அன்றுமுதல் நடிகமணி அவர்களுடன் நல்ல பரிச்சயம் உண்டானது. எப்போது கண்டாலும் 'எப்படித் தம்பி' என்று அன்போடு சுகம் விசாரிப்பார். எமது ஊரிலோ அண்மைக் கிராமங்களிலோ வைரமுத்துவின் நாடகம் என்றால் போதும், தற்போது தமிழ்நாட்டில் நாடகக்கலை பற்றி ஆய்வு செய்து வருபவரும் 'அம்பலத்தாடிகள்' அமைப்பாளரும் நடிகர் ஒன்றியத்தின் முக்கிய உறுப்பினருமான இளைய பத்மநாதன் அவர்கள் என்னையும் கூட்டிக்கொண்டு செல்வார். தேவரையாளி மனேகரா விளையாட்டுத் திடலில் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது ஒருநாள் விடியும் வரைக்கும் நாங்கள் இருவரும் நடிகமணியின் 'பூதத்தம்பி' நாடகத்தை ரசித்துப் பார்த்தோம். காத்தவராயன் மெட்டில் 'கந்தன்கருணை' என்ற தீண்டாமை ஒழிப்புக் கருத்துடைய இசை நாடகத்தை நெறியாள்கை செய்த இளைய பத்மநாதன் நடிகமணியின் கலைத்திறனையும் இசை ஞானத்தையும் மெச்சி என்னிடம் அடிக்கடி விதந்துரைப்பார்.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் அமரர் கே. எம். வாசகரின் நெறியாள்கையில் அரிச்சந்திர மயானகாண்டம் அரங்கேறியது. சுப்புலட்சுமி காசிநாதன் வைரமுத்துவுடன் இணைந்து சந்திரமதியாக நடித்தார். கொழும்பு மேடைக்கும், நேரத்திற்கும், ரசிகர்களின் விருப்பிற்கும் ஏற்ப வாசகர் மிகவும் சிறப்பாக நெறியாள்கை செய்த இந்த நாடகம் இன்றும் என் மனக்கண்ணில் நிழலாடுகிறது. இந்த நாடகத்திற்காக வந்திருந்த வைரமுத்து கோஷ்டியினர் வெள்ளவத்தை சுவிசுத்தராம வீதியில் இளைய பத்மநாதன் வீட்டில் தங்கினார்கள். நானும் அந்த வீட்டின் ஒருபகுதியில் குடியிருந்தேன். இசையமைப்புக்காக கண்ணன் வந்திருந்தார். நாடகக் கோஷ்டியில் எனக்கு நன்கு தெரிந்தவர் 'சத்தியகீர்த்தியாக' நடிக்கும் கரவெட்டி நற்குணம் அவர்கள். எல்லோரும் சேர்ந்து காய்கறி வெட்டியும் தேங்காய் துருவியும் சமைத்து உண்பார்கள். நடிகமணியும் இவர்களுடன் கலந்துகொண்டு தேங்காய் துருவுவார். கலைஞன் தேங்காய் துருவலாமா? என்று நான் பகிடியாகக் கேட்பேன். ''இதுவும் ஒரு கலைதானே

பேரன்'' என்று சொல்லிச் சிரிப்பார். சரஸ்வதி மண்டப நாடகம் முடிந்து வீட்டிற்கு வந்ததும் உணவு அருந்திய பின்னர் இரவு ஒன்றரை மணி வரைக்கும் இருந்து ஆர்மோனியம், மிருதங்கம், தாளம் போன்ற பக்கவாத்தியங்களுடன் நடிகமணி கச்சேரி செய்தார். எனது ஆசை தீருமட்டும் நாடகப் பாடல்களைக் கேட்டு ரசித்தேன். இளைய பத்மநாதன் எல்லாவற்றையும் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை ரேப் செய்தார். நாடகக் கோஷ்டியினர் ஊர் திரும்பிய பின்னரும் இந்த ஒலிப்பதிவு நாடாக்களை அடிக்கடி போட்டுக் கேட்பது வழக்கமாகி விட்டது. இச்சந்தர்ப்பத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் திரு. மதியழகனின் வேண்டுகோளின்படி நடிகமணியை நான் பேட்டி கண்டேன். அது அன்று இரவு ஒலிபரப்பானது. அந்த நாடாவை வானொலி நூலகத்தில் பாதுகாப்பாக வைப்பதாக அப்போது திரு. மதியழகன் தெரிவித்தார்.

1987 யூலைக்கு முன்னர் நெல்லியடி இராணுவ முகாம் தாக்கப்படுவதற்கு முன்னர் மத்திய மகாவித்தியாலய இராஜலிங்கம் மண்டபத்தில் நடிகமணியின் 'மயான காண்டம்' மேடையேறியது. கரவெட்டி இராஜகிராமத்தைச் சேர்ந்த நற்குணம் 'ரிக்கற்' விற்கும் பொறுப்பை ஏற்றிருந்தார். நாடகத்தை ஒழுங்கு செய்ததே அவர்தான் என்று பின்னர் அறிந்தேன். போதிய விளம்பரம் இன்மையால் எதிர் பார்த்தளவு சனம் வரவில்லை. சுமார் இருபதுக்குட்பட்ட பார்வையாளர்களே வந்திருந்தனர். ஆனல் நாடகம் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றது. லோகிதாசனைச் சந்திரமதி இடுகாட்டிற்குக் கொண்டுவந்து விறகின்மீது அடுக்கித் தீமூட்டும் கட்டத்தில் அரிச்சந்திரன் 'யாரடி கள்ளி நீ......' என்று பாடிக் காலால் பிள்ளையை எட்டி உதைக்கும் காட்சி, அப்போது மின்சாரம் திடீரெனச் செயலிழந்தது. என்னிடம் டோர்ச்லைற் இருந்தது. இன்னொரு நண்பரிடமும் சொல்லி இருவருமாக மேடைக்கு நடிகமணிக்கும் சந்திரமதிக்கும் 'ஸ்பொட் லைற்' மாதிரி அடித்துக் கொண்டிருந்தோம். நாடகம் கடைசி வரைக்கும் சிறப்பாக நடந்து முடிந்தது. நடிப்பும் மிக உச்சமாக இருந்தது. நாடகம் முடிந்ததும் மேடைக்குள் சென்று நடிகமணியிடம் கேட்டேன், 'பத்துப் பார்வையாளர்களுக்காக இவ்வளவு சிறப்பாக நடித்தீர்களே, என்று' 'தம்பி நாடகம் என்று விளம்பரம் செய்து ரிக்கற் வித்து ஒரு ரசிகன் வந்தாலும் முழுநாடகமும் நடத்தியே தீருவேன். இதுதான் என் கொள்கை. நடிகனை நம்பிய ரசிகனை ஒரு நாளும் கைவிடக்கூடாது'' என்ருர். உண்மையான நாடகக் கலைஞனின் பொறுப்புணர்வையும், தொழில் நேர்மையையும் அன்றுதான் நேரில் பார்த்து உணர்ந்து கொண்டேன். இந்த நாடகத்திற்காக வந்த இடத்தில் நடிகமணியும் நற்குணமும் சேர்ந்து நெல்லியடி நாடகக்கலைஞர் இயமன் வேலாயுதத்தை வருத்தம் பார்க்க வந்தார்கள். அப்போது 'இயமன்' நோய் வாய்ப்பட்டிருந்தார். பிறகலைஞர்களை மதித்துப் போற்றும் நடிகமணியின் இனிய சுபாவத்தையும் மானுடநேயத்தையும் என்னல் உணரமுடிந்தது.

1987 ஆரம்பத்தில் எனது 'சத்தியங்கள்' சிறுகதைத் தொகுதியின் அறிமுக விழா நல்லூர் இந்துவிடுதியில் நடைபெற்றது. நடிகமணிக்கும் அழைப்பு அனுப்பினேன். பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமான கூட்டத்திற்கு வெய்யிலையும் பொருட்படுத்தாமல் சைக்கிளில் ஏறி வேர்க்க வேர்க்க வந்து சேர்ந்தார். எனக்கு நினைக்கவே பெருமையாக இருந்தது. நாடு போற்றும் மாபெரும் கலைஞன் ஒரு எழுத்தாளனை மதித்து இவ்வளவு தூரம் காங்கேசன்துறையில் இருந்து வந்தாரே...... என்று நினைக்கும் போதும், இன்று அவரது பிரிவை எண்ணும்போதும் கண்கள் பனிக்கின்றன.

இத்தகைய ஒரு கலை அன்பரின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக்ஜீவா என்னை வரும்படி அழைத்தார். உடனே கிளம்பிவிட்டேன். நெல்லியடி சண்முகானந்த நாடகசபையின் சார்பாக நானும் இரங்கலுரை ஆற்றினேன். இலங்கை நாடக வரலாற்றின் ஓர் அத்தியாயம் முடிந்துவிட்டது என்று பேராசிரியர் சிவத்தம்பி லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணித்தார். 'ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து முகிழ்ந்த மாபெரும் கலைஞன்' என்று ஜீவா ஆவேசத்துடன் முழங்கினர். நாட்டுக்கூத்துக் கலையை ஜனரஞ்சகப்படுத்திய கலைஞன் என்று கனகசபாபதி நாகேஸ்வரன் விதந்துரைத்தார். காங்கேசன் துறை வசந்தகான நாடகசபை உறுப்பினர்களும் இன்னும் பல அன்பர்களும் இரங்கலுரை நிகழ்த்தி முடிக்க, கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை நன்றி தெரிவித்துப் பேசினர்.

யாழ்குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து கலைஞர்கள், எழுத்தாளர்கள், ரசிகர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாமரமக்கள் என்ற பல்வேறு மட்டத்திலும் தமது அன்பைக் காணிக்கையாகச் செலுத்த மக்கள் வருகை தந்திருந்தனர். நடிகமணி ஒரு சமாதான நீதிபதியாகவும் இருந்து பல சமூகசேவைகளையும் ஆற்றியுள்ளார். சிவாஜி கணேசன் நடித்த 'ராஜபார்ட் ரங்கதுரை' படத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு என்னையறியாமலேயே 'நடிகமணி' யின் நினைவுவரும்.

மரணச் சடங்கில் கலந்து கொண்ட தினத்தன்று இரவு 7 மணிக்கு ரூபவாஹினியில் இந்தக் கலைஞரின் நாடகங்களின் பல்வேறு கட்டங்களையும் பார்த்து இனிய குரலையும் கேட்ட சோக உணர்வோடும் இவரைப் பற்றிய என் நினைவுகளை எப்படியாவது எழுதித் தீர்த்துவிட வேண்டும் என்ற ஆவேசத்துடனும் அன்றிரவே இக்கட்டுரையினை எழுதிமுடிக்கின்றேன். நடிகமணியின் வெற்றிடத்தை யாராலும் நிரப்பமுடியாது. ஆனல் அவர் வளர்த்த நாடகக் கலையை அவரது சீடர்களாலும் ஏனைய கலைஞர்களாலும் வளர்க்கமுடியும். அதுவே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

●●●

**இலக்கியத்தில் நகைச்சுவை:**

*அரனவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்*
*ஐய என்செவியை மிகவும்*
*அறுமுகன் கிள்ளினன் என்றே சிணுங்கிடவும்*
*அத்தன் வேலவனை நோக்கி*
*விரைவுடன் வினவவே அண்ணன் என்சென்னியில்*
*விளங்குகண் எண்ணினன் என*
*வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து நீ அப்படி*
*விகட்மேன் செய்தாய் என*
*மருவும் என் கைந்நீள முழமளந்தானென்ன*
*மயிலவன் நகைத்து நிற்க*
*மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்*
*மைந்தரைப் பாராய்.*

*ஆதாரம்:*
*ரா. பி. சேதுப்பிள்ளை; தமிழ் விருந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதிதாசன் கவிதைகளிலே நாட்டார் இலக்கியங்களின் தாக்கம் - ஓர் ஆய்வு

கலாநிதி இ. பாலசுந்தரம் *B. A. Hons. M A; Phd.*
*சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

பாரத நாட்டில் இடம் பெற்றிருந்த விடுதலை இயக்கமும், தமிழ் நாட்டில் நிலவிய தமிழியக்கமும் பாரதிதாசனின் ஆளுமையை வளர்த்தெடுத்தன. மகாகவி பாரதியாராற் கவரப்பட்ட பாரதிதாசன் பாரதி காட்டிய வழியிற் சென்று அரசியலிலும், சமூகத்துறையிலும் புரட்சிகரமான உணர்வுகளைத் தமது புரட்சிக் கவிதைகளால் மக்களிடையே பரப்பினுர். அவர் சமூகச் சீர்திருத்தத்தை எண்ணி எண்ணிப் பாடிய பாடல்கள், தாய் மொழிக்கு ஏற்றம் கொடுத்துப் பாடிய பாடல்கள், பகுத்தறிவுப் பார்வையோடு மானிடனைப் பாடிய பாட்டுக்கள் ஆகியவற்றைப் பாட. நாட்டு மாந்தர் அறிந்த இசைப் பாடல்களையும், கதைப்பாடல்களையும் பாரதிதாசன் பெரிதும் கையாண்டிருக்கிறுர். தமிழ்க் கவிதை மரபிலே புதிய பாதை வகுத்துக் காட்டி ''எளிய பதம், எளியநடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு என்ற அடிப்படையில் சுவை புதிது; பொருள் புதிது; வளம் புதிது; சொற் புதிது'' வரத்தக்கதாக கவிதையாத்துத் தந்து மகாகவியாகத் திகழ்ந்த சுப்பிரமணிய பாரதியின் 'தாசன்' ஆக வாழ்ந்து, கவியமுதம் தந்து தமிழ்மொழிக்குச் சிறப்புச் செய்த புரட்சிக் கவியாம் பாவேந்தரே பாரதிதாசன். பாரதியாருக்கு நாட்டார் பாடல்களில் அதீத பற்றுண்டு. பாமர மக்கள் உணரும் வகையில் எளிய சொற்களும் எளிய நடையழகும் அமையத் தக்கதாகக் கவிதை படைத்து, பொதுமக்கள் விரும்பும் வகையில் அவர்களறிந்த இசை மெட்டுக்களில் பாடல்களைப் பாடிப் பொதுமக்களைத் தன் பக்கம் கவர்ந்தார். சுப்பிரமணிய பாரதியின் தேசிய கீதமோ அன்றி சுதந்திரப் பாடல்களோ அல்லது கண்ணன் பாட்டோ இவையனைத்திலும் பெரும்பான்மையாட்சி செலுத்துவன நாட்டார் இசை மெட்டுக்களே. இந்த யுக்தியை பாரதியார் கையாண்ட கவிதைச் சூத்திரத்தை நன்கு உணர்ந்து கொண்ட பாரதிதாசனும் நாட்டார் இலக்கிய நெறியினைத் தமது கவிதையாக்கத்திற்குப் பயன்படுத்தி அதில் வெற்றிவாகை சூடிய முறைமையினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாட்டார் இலக்கியம் எனக் கூறும்போது நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், விடுகதைகள், பழமொழிகள் என்பன அடங்கும். நாட்டார் பாடல்களின் யாப்பு நெறிகள், இசைமுறைகள், மெட்டுக்கள் என்பனவற்றையும் – அவற்றின் பொருட் கூறுகளையும் பாரதிதாசன் எவ்வாறு கையாண்டார் என்பதோடு, அந்த அணுகுமுறை அவருக்கு எத்தகைய பயனையளித்தது எனவும் நோக்க வேண்டும். மக்களிடையே வாய்மொழி மரபில் வழங்கிய கதைகளும் பழமொழிகளும் பாரதிதாசனின் வேட்கையைத் தீர்க்குமளவிற்கு அவரால் எடுத்தாளப்பட்டுள்ளன.

''தொடக்கப் படிப்பினரும் புரிந்து கொண்டார்கள். இச்செய்யுளின் பொருளை எனின் அதுதான் எனக்கு மகிழ்ச்சியூட்டுவது. எளிய நடை ஒன்றுலேயே தமிழரின் மேன்மையைத், தமிழின் பயனைத் தமிழர்க்கு ஆக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை'' எனத் தம்முடைய ''பாண்டியன் பரிசு'' என்ற நூலில் முன்னுரையில் பாரதிதாசன் குறிப்பிடுவதற்குக் காரணம் அவர் நாட்டாரிலக்கியத்தின் நடையையும் அதற்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கையும் உணர்ந்திருந்தமையேயாகும். இந்த நம்பிக்கையினை ஆதாரமாகக் கொண்டு தமது படைப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலே நாட்டாரிலக்கியச் சாயலைப் பாரதி தாசன் புகுத்தலானார்.

நாட்டார் பாடல்களில் மனித வாழ்வின் தொடக்கத்திலே ஒலிப்பது தாலாட்டு. அத்தாலாட்டோசையைப் பாரதிதாசனும்,

''ஆராரோ ஆரசிரோ ஆராரோ ஆரசிரோ
சீரோடு பூத்திருந்த செந்தாமரை மீது
நேரோடி மொய்த்துலவு நீலமணி
வண்டுதனைச்
செவ்விதழால்தான் மூடும் சேதிபோல்
உன்விழியை
அவ்இமையால் மூடியே அன்புடையாய்
நீயுறங்கு'' 1

என்று தாலாட்டிசையில் கவிதை பாடுகிறார். தாலாட்டில் குழந்தையின் சொத்துக்கள் புகழப்படும். அவற்றுள் தொட்டிலைப் புகழ்தல் பொது மரபு, அந்த மரபைப் பின்பற்றிப் பாரதிதாசான்,

''தேக்குமரம் கடைந்து செய்தவொரு
தொட்டிலிலே...''

என்று தொட்டிலைப் புகழ்ந்து குழந்தையைத் தாலாட்டுகிறார். 2

பாமர மக்களின் தாலாட்டுப் பாடல்களிலே, தாய் தன் குழந்தை எதிர்காலத்தில் சமூகத்தில் தனித் தலைவனாக – நற்பிரசையாக, நாலு பேருக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்ற கற்பனைகளை உள் அமைத்துப் பாடுவதும் மரபாகும். அதே கருத்தினை பாரதிதாசன் உள்வாங்கித் தமது சமூக சீர்திருத்தக் கோட்பாட்டுக்கு ஏற்ற வகையிலே தாம் பாடிய தாலாட்டினை வருமாறு அமைக்கலானார்:-

''மானிடரின் தோளின் மகத்துவத்தைக்
காட்டவந்த
தேனின் பெருக்கே செந்தமிழே
கண்ணுறங்கு......
வேண்டாத சாதிஇருட்டு
வெளுப்பதற்குத்
தூண்டாத மணிவிளக்காய்த்
துலங்கும் பெருமாட்டி
புண்ணிற் சரம் விடுக்கும்
பொய்மதத்தின் கூட்டத்தை
கண்ணிற் கனல்சிந்திக்
கட்டழிக்க வந்தவளே' 3

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு தான்' அந்த அடிப்படையில் கிராமியத் தாய் தன் குழந்தையை விலைமதிப்பிடற்கரிய பொன்னாகவும் மணியாகவும் மட்டுமன்றி, காவிய கதா மாந்தரராகவும், ஏன் கடவுளராகவும் பாவனை செய்து பாடுவது நாட்டாரிலக்கிய மரபாகும். 4 அந்த மரபிலே பாரதிதாசனும்,

''பொன்னேமணியே புதுமலரே
செந்தேனே
மின்னே கருவானில் வெண்ணிலவே
கண்ணுறங்கு'' 5

எனவும்

''இன்பத்து முக்கனியே என்அன்பே
கண்ணுறங்கு
தென்பாண்டியர் மரபின் செல்வமே
கண்ணுறங்கு'' 6

எனவும் பாடுதல் காண்க. இங்கு குழந்தை பாண்டிய மன்னர் மரபில் உதித்தமை பாடப்படுகின்றது.

பாரதியார் காட்டிய சமத்துவக் கோட்பாட்டினை அதிவேக வீறுகொண்டு பாடிய பாரதிதாசன் தமிழ்ச் சமூக அமைப்பிலே ஆணுக்குப் பெண் தாழ்வென்று கருதும் மடமைக் கொள்கையை வெட்டி வீழ்த்திட வேண்டிப் பாடியவர். அவ்வுணர்வைத் தாலாட்டிலும் ஏற்றி வருமாறு பாடினார்:-

''நாய் என்று பெண்ணை நவில்வார்க்கு
வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மை யினால் உண்டென்று
பேசவந்த பெண்ணழகே...'' 7

தாலாட்டுப் பாடல்களின் பயன்பாடு பன்முகப்பட்டது. 8 அழுங்குழந்தையை அரவணைக்கப் பயன்படுகின்றது; தாய்மையுணர்வை வெளிப்படுத்தும் கருவியாகிறது; குழந்தைக்கு விளையாட்டுக் காட்டி உற்சாகப்படுத்துகிறது; உணவூட்டப் பயன்படுகிறது. இவ்வாறு தாலாட்டின் பயன்பாடுகளை அட்டவணைப் படுத்திக்கொண்டே போகலாம். பாரதிதாசன்,

''நிலா நிலா வா வா -
நிறை விளக்கே வா வா...'' 9

எனப் பாடித் தாயாக நின்று நிலாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யழைத்து குழந்தைக்குப் பராக்குக் காட்டி, உணவூட்டுகிருர். இதுபோன்றே

''கைவீசம்மா கைவீசு
கடலே வாங்கலாம் கைவீசு'' 10

எனப்பாடி குழந்தைக்கு உல்லாசமாக உடற் பயிற்சி அளிக்கிருர். இப்பின்னணியில் மேல் வரும் பாடல் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

''தட்டாங்கி தட்டாங்கி
தலேமேலே தாழம்பூ
பட்டாலே சட்டை
பஞ்சாலே சல்லடம்
செட்டாக அணிந்து
சீராக முந்தி
தட்டு நீ தட்டு
தட்டாங்கி தட்டாங்கி'' 11

மேற்காட்டிய பாடல்களைப் போல் மேலும் பல தாலாட்டுப் பாடல்களைப் பாரதிதாசனின் கவிதைத் தொகுப்புக்களிற் குடும்பவிளக்கு, இசையமுது, இளைஞர் இலக்கியம் என்ற தொகுதிகளில் இடம் பெறுவதைக் காணலாம். இப்பாடல்களைப் பாரதிதாசன் குழந்தை இலக்கிய நெறியிற் பாடினுர் என்றும் கொள்ளலாம். பாரதிதாசன் குழந்தைகளை அணுகும் முறை சிறப்பாக உள்ளது. குழந்தையுள்ளத்திற்கு ஏற்ற வகையிலே நற்போதனைகள் அவர் பாடல்களிலே தாயுணர்வூடாகப் பாய்ச்சப்படுகின்றன. இப்பண்புகளைக் கவனித்த புலவர் மு. வைத்திலிங்கம் கூறும் கருத்தை ஈண்டு குறிப்பிடுதல் பொருத்தமாகும்:

''ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் தனித்தனி தாலாட்டுப்பாடி, அவரவர்க்கு வேண்டிய கருத்துக்களைத் தேனில் குழைத்த நன்மருந்தாக அவர் ஊட்டுவது, அவரது தாய்மைப் பண்பிற்கு எடுத்துக்காட்டு'' 12

எனவேபாரதிதாசன் பாடல்களிலே தாய்மையனுபவமும் காணப்படுகின்றதெனின் அஃது தாலாட்டுப் பாடல்களினூடாகப் பெறப்பட்டதேயாகும்.

கிராமியத் தொழிலாளர்களின் களைப்பைப் போக்கி உழைப்பில் ஊக்கமூட்டும் ஊட்டச் சக்தியாக விளங்குவன அவர்கள் பாடும் தொழிற் பாடல்கள். உழைப்பாளிகள் தாம் பட்டனுபவித்த இன்னல்கள் – இன்ப – துன்பங்கள் - தொழிலின் கடுமை - உழைப்பின் அருமை தமது குடும்பப் பொருளாதார நிலைமை முதலான பல்வேறு விடயங்களும் பாடற் பொருளாக அமைந்திருக்கும். நாட்டார் பாடல்களிலே நாட்டம் கொண்ட பாரதிதாசன், பாட்டாளிகளைப் பாடுவதற்கும், அவர்களது உழைப்பினது பெருமையைப் பேசுவதற்கும் வாய்மொழி மரபில் வழங்கும் தொழிற் பாடல்களின் மெட்டுக்களைப் பெரிதும் கையாண்டிருப்பதை அவர் கவிதைகளிற் காணலாம். உதாரணமாக,

''சென்று பொழுதுசாய
வருகிறேனடி விரைவாக
இன்று தவறினுல் ஈரம்போகுமடி
இருட்டில் போகுமுன்விதைக்கலாகுமடி'' 13

இப்பாடல் உழவர் பாடலை எமக்கு நினைவூட்டுகின்றது.

''ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டில்லை என்பது பழமொழி. இப்பாடலின் ஜனரஞ்சகத் தன்மையை நன்கறிந்த பாரதிதாசன் ஏற்றப்பாட்டிசை யூடாக தமிழ்நாட்டில் பண்பாட்டுப் பெருமையைப் பாமரமக்களும் அறிந்து கொள்ளும் வகையிலே பாடல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்கள் அவரது மூன்ருவது கவிதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

''பிள்ளையாரே வாரும்
பெருமாளே வாரும்......''

என்ற நாட்டாரிசை மெட்டிலே,

''இன்பம் உள்ள நாடுதம்பி
இத்திராவிடந்தான்
உள்ளி வாழ்த்துவோமே - தம்பி
ஒருபதுடன் வாழி......'', 14

என்ற பாடல் ஈண்டு நோக்கத்தக்கதே. மேலும் உழவுப் பாடலை நினைவு கொள்ளும் வகையிற் பின்வரும் பாடலும் நாட்டார் பாடற்பாணியிற் பாடப்பட்டதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மேழி பிடித்த கை மேலாம் இடதுகை
தாழாக்கோல் கை வலது கையாக
முழங்கால் சேற்றில் முழுக வாய்
திறந்து
பழந்தமிழ் பாடினர் வயல் உழுவோர்
......'' 15

இதுபோன்றே களையெடுப்புப் பாடற்பாணியிலே,

''களையெடுக்கிருள் - அதோ
கட்டழகுடையாள் சிற்றிடையாள் அதோ
களையெடுக்கிருள்......''16

என்று பாரதிதாசன் பாடலும் நாட்டார் பாடலின் தாக்கத்தின் விளைவேயாகும். அறுவடைப் பாடல், போர் அடிக்கும் பாடல், வண்டிப் பாடல் முதலான தொழில்சார் நாட்டார் பாடல்களைத் தழுவியனவாக இன்னும் பல பாடங்களைப் பாரதிதாசன் பாடியுள்ளார் என்பது மேலும் படித்தறியத் தக்கதாகும்.

தொழிற்களங்களிலே தெம்மாங்குப் பாட்டிசைக்கும் காதலர்களின் காதற்பாடல் மெட்டிலும் பாரதிதாசன் பாடியிருக்கிருர்·

''நாலடுக்கு மல்லிகையாம்
நாரெடுத்துப் பூத்தொடுக்கும்
சேலெடுக்கும் கண்ணுளே
திரும்பாதோ உன்முகம்தான்
செங்கேணி அடியே செங்கேணி'' 17

என்ற தெங்மாங்குப் பாடலே இதற்குச் சான்ருகக் காட்டலாம். காதலரிடையே நகைமொழிப் பாடல்களும் வழக்கிலுள்ளன. கிழக்கிலங்கையிலே பாமர மக்களிடம் வழங்கும் நகைமொழிப் பாடல் வருமாறு:-

''நாவற்பழத்திலயும்
நற்காயாம் பூவிலயும்
காகச் சிறகிலயும் கடுங்
கறுப்பு மாமிமகள்''

''சுட்டகரியப்போல
சுடுகாட்டுப் பேயைப்போல
அண்டம் காகம்போல
அவருமொரு மாப்பிளையாம்'' 18

இவற்றைப் போன்றே பாரதிதாசனும் பாடுகிருர்,

''ஆந்தைவிழி என்பதுவும்
அம்மிபோன்ற மூக்கென்பதும்
ஒந்தி முதுகென்பதும்
உமக்கமைந்து கிடப்பதென்ன மாமா?
– எங்க
ஓவியத்தை நீ மணக்கலாமா?'' 19

கும்மிப் பாடல் மெட்டிலும் சில பாடல்களைப் பாரதிதாசன் பாடியுள்ளார். உதாரணமாக,

''கும்பகோணத்திற்குப் போகவேணும் –
அங்குக்
கும்பலிற் சேர்ந்து நடக்கவேணும்'' 20

என்ற பாடலைக் குறிப்பிடலாம். பாரதியார் சிந்துக்குத் தந்தை எனப் போற்றப் படுபவர். அவர் வழிவந்த பாரதிதாசனும் சிந்து பாடுவதில் வல்லவராகக் காணப்படுகிருர். சான்ருகப் பின்வரும் பாடலைக் காட்டலாம்.

''அப்பாக் குதிரை ஆட்டக் குதிரை
அஞ்சாக் குதிரை ஏய் ஏய் ஏய்
தப்பாக் குதிரை தாவும் குதிரை
தளராக் குதிரை ஏய் ஏய் ஏய்
சப்பைக் குதிரை இல்லை இல்லை
தமிழக் குதிரை ஏய் ஏய் ஏய்......'' 21

பாரதியார் எவ்வாறு 'பள்ளுப்பாட்டு' மெட்டிலும், 'குடுகுடுப்பைக்காரன்' பாட்டிசையிலும் கவிதை பாடினரோ அதே போன்று, பாவேந்தரும் பாடத் தவறவில்லை.

''இந்தவூட்டில் முந்திமுந்தி ஒரு
பேரன் பொறக்கப் போருன்
நல்லவீட்டில் எல்லாம் பொறக்கும்
குடு குடு குடு குடு குடு குடு குடும்' 22

எனக் குடும்ப விளக்கிலும் இளைஞர் இலக்கியத்திலும்23 குடுகுடுப்பைக்காரனுகவே நின்று பாரதிதாசன் தன் கருத்துக்களைப் பாடுகின்றமை சுவைத்து இன்புறத்தக்கவையாகும்.

நிலாப்பாட்டும் கிராமியச் சிறுவர் சிறுமியருக்கு ஆனந்தமளிக்கக் கூடியதே.

''நிலா நிலா வா வா - ஒளி
நிறை விளக்கே வா வா வா'' 24

இந்த நிலாப் பாட்டிலே பாரதிதாசன் சுதந்திர முடிவின் சுகநிலையை எடுத்துரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின்றூர். இதுபோன்றே தாலாட்டுப் பாடல்கள் இளந்தமிழன் பாரதப் போரை ஏற்க வேண்டும் என்றும், வங்காள வீரரும், துருக்கரும், தெலுங்கரும் இளந் தமிழனுக்கு உறவுக்காரர்கள் என்றும் இப்பாடல்கள் பாடுகின்றன. ''சிறுவர் சிறுமியர் பாட்டு'' சிந்து மெட்டில் அமைத்து நாட்டின் முன்னேட் பெருமை பேசுகிறது. உதாரணமாக ஒரு பாடல்;

*''தமிழன் எலி அன்று*
*தாவும் புலி என்று - நீ*
*தாரணி அறியச் செய் இன்று''*

சுப்பல் பாட்டும் சிந்து மெட்டில் பாடப்பட்டுள்ளது, இதில் அடிமை நிலையும் விடுதலை உணர்வும் பாடப்பட்டுள்ளன.

பாரதிதாசன் சமூகத்தில் புரையோடிக் கிடந்த சாதிப் பிரிவினைக் கண்டு மனம் நொந்து அவற்றைச் சாடி' எதிர்க்கருத்துக்களை ''தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு'' என்ற தலைப்பிலே பாடினூர். அதற்கு அவர் கையாண்ட இசைமெட்டு கிளிக்கண்ணியாகும். அதில் ஒரு பாடல் வருமாறு:-

*''மேலும் முதலி செட்டி வேளாப்பிள்ளை முதல்*
*நாலாயிரம் சாதியாம் - சகியே*
*நாலாயிரம் சாதி*
*எஞ்சாதிக் கிவர்சாதி இழிவென்று சண்டையிட்டுப்*
*பஞ்சாகிப் போனூரடி சகியே*
*பஞ்சாகிப் போனூர்3...''* 26

பாரதிதாசன் தமது கவிதைகளின் — பாடல் வடிவங்கள், மெட்டுக்கள் முதலியனவற்றை நாட்டார் இலக்கிய மரபிலிருந்து பெற்றுக்கொண்டதோடு மட்டும் நில்லாது, பாடற்பொருளிலும் இத்தகு தாக்கம் அவரிடம் காணப்படுகின்றது. 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற பாடலில் இராமாயணக் கதையின் ஒரு சிறுபகுதி கிளைக் கதையாகப் பாடப்பட்டிருத்தலைச் சான்றுகக் காட்டலாம். போர்க்காலத்தில் அம்புபட்டு மயங்கி விழுந்த இலக்குவனை எழுப்ப, அனுமன் இலங்கைக்குக் கடலைத் தாவிப் பறந்து சென்று, சஞ்சீவி மலையைப் பெயர்த்துக் கொண்டுவந்து, சஞ்சீவி மூலிகை மருந்தை இட்டு, மயக்கத்தைத் தெளிவித்து, மறுபடியும் சஞ்சீவி மலையை இருந்த இடத்திற்குப் பறந்துசென்று, வைத்துவிட்டுத் திரும்பினூன். இதுதான் இப்பாடலின் கிளைக் கதையாக அமைகிறது. அத்துடன் இராமாயணத்தில் அனுமன் எவ்வாறு கதைப் பின்னலில் முக்கியத்துவம் பெறுகின்றுனே, அதுபோன்றே இப்பாடலிலே கதாநாயகன் குப்பனையும் பாரதிதாசன் படைத்துக் காட்டியமையும் நேக்கத்தக்கது. 27

பாரதிதாசனின் 'வீரத்தாய்' என்னும் சிறுகவிதை நாடகமும் நாட்டார் இலக்கிய மரபின் கதைகூறும் பாங்குடையது. 'மணிபுரி அரசனை மதுவில் ஆழ்ந்து கிடக்க வைத்து இளவரசன் சுதர்மனைக் கல்வி கற்காத மூடனுக்கவேண்டுமென்று நாட்டைவிட்டுக் காட்டுக்கு அனுப்பிவைத்து அந்த நாட்டு அரசனுகத் தான் ஆகவேண்டுமென்று, சூழ்ச்சிகள் புரியும் படைத் தலைவன் காங்கேயனுக்கும், மணிபுரி அரசி விசயராணிக்கும் இடையே நடக்கும் போராட்டத்தை மையமாகக் கொண்டதே இக்கவிதை நாடகம். மேலும் பாரதிதாசனின் ,எதிர்பாராத முத்தம்', 'தமிழிச்சியின் கத்தி', 'பாண்டியன் பரிசு', 'குறிஞ்சித் திட்டு'. 'அகத்தியன் விட்ட புதுக்கரடி' முதலான கதைப் பாட்டுக்கள் நாட்டார் கதைப்பாடல் மரபின் *(Ballad trodition)* அடிப்படையின் தாக்கத்தின் எதிர்விளைவு என்றே கூறவேண்டும்.

பழந்தமிழ் இலக்கியங்கள் முதற்கொண்டு நவீன இலக்கியங்கள் வரையுள்ள எல்லா இலக்கியங்களிலும் பழமொழிகள் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். பழமொழிகள் இலக்கியக் கருத்துக்களுக்கு ஏற்றம் கொடுப்பனவாகும். பாரதிதாசனும் பழமொழிகளை ஆங்காங்கே கையாண்டு தமது கவிதைகளுக்கு உரமூட்டியுள்ளார். 'செய்வன திருந்தச் செய்' 28, 'மதியார் வீடு மிதியார் நல்லார்' 29, 'குள்ளனை அணுவும் நம்பாதே' 30. 'பசுத்தோல் போர்த்த புலியவனை நம்பாதே' 31, 'பன்றியொடு சேர்ந்த கன்றும் கெடும்' 32 முதலான பல பழமொழிகளைப் பயன்படுத்தியிருக்கும் பாங்கு படித்துச் சுவைக்கத்தக்கதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறுகத் தொகுத்து நோக்கும் போது, பாரதிதாசனின் கவிதைத் தொகுப்புக்கள் அனைத்திலும் நாட்டார் இலக்கியத்தின் இசை மரபும், பொருள் மரபும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளமையையும், நாட்டாரிலக்கியத்திற் பாரதிதாசனுக்கு இருந்த ஈடுபாடும் மதிப்பும் துலக்கம் பெறுகின்றமையையும் உணரக்கூடியதாக இருத்தல் காண்க.

★ ★

## அடிக்குறிப்புகள்

1. பாரதிதாசன், இசையமுது முதல் தொகுதி, பக்.55.
2. பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, பக். 125.
3. மேலது, பக். 126 - 128.
4. இ. பாலசுந்தரம், ஈழத்து நாட்டார் பாடல் ஆய்வும் மதிப்பீடும், 1979, பக்.
5. பாரதிதாசன், குடும்ப விளக்கு, நான்காம் பகுதி, பக். 71.
6. மேலது, பக். 76.
7. பாரதிதாசன் கவிதைகள், முதலாந் தொகுதி, பக். 127.
8. இ. பாலசுந்தரம், 1979, பக்.
9. பாரதிதாசன், குடும்ப விளக்கு, (3, 4, 5) 2வது பகுதி, பக். 87.
10. பாரதிதாசன், இளைஞர் இலக்கியம், பக். 108.
11. மேலது, பக். 109.
12. புலவர் மு. வைத்திலிங்கம் (தொகுப்பாசிரியர்), பாவேந்தர் வாக்கும் நோக்கும் பக். 54.
13. பாரதிதாசன், இசையமுது, முதல் தொகுதி, பக். 7.
14, பாரதிதாசன் கவிதைகள், மூன்றும் தொகுதி, பக். 147.
15. மேலது, பக். 25.
16. பாரதிதாசன், இசையமுது, முதல் தொகுதி, பக். 8.
17. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 116.
18. இ. பாலசுந்தரம், ஈழத்து நாட்டார் பாடல்கள் ஆய்வும் மதிப்பீடும், 1979, பக். 409 — 410.
19. பாரதிதாசன், முல்லைக்காடு, பக. 45
50, மேலது, பக். 42.
21. பாரதிதாசன், குடும்ப விளக்கு, (4வது தொகுதி), பக். 85.
22, மேலது, பக். 59 — 60.
23. பாரதிதாசன், இளைஞர் இலக்கியம், பக் 116.
24. பாரதிதாசன், குடும்ப விளக்கு, (3, 4, 5) 4வது தொகுதி, பக், 87.
25. சி. கனகசபாபதி, பாரதியும் பாரதிதாசனும் ஒப்பியல் திறனாய்வு, அகரம், சிவகங்கை, 1989, பக். 287,
27. பாரதிதாசன். தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு, புதுவை, சுயமரியாதை இயக்கம், 1967, பக், 12.
28. சி. கனகசபாபதி (1980), பக். 134.
29. பாரதிதாசன், தேனருவி, பக். 108.
30. பாரதிதாசன், குடும்ப விளக்கு (3, 4, 5) ப்க். 19.
31. பாரதிதாசன் கவிதைகள், மூன்றும் தொகுதி, பக், 109,
32. பாரதிதாசன், தேனருவி பக். 143.
33. பாரதிதாசன், இசையமுது, 2ம் தொகுதி, பக். 55.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூடங்களில் நூல் நிலையங்கள்

ஏ. கே. குணசிங்கராசா
B. A. (Ceylon) Dip in Ed. (Ceylon); M. A. Ed. (Jaffna)
விரிவுரையாளர் - கல்வியற்புலம், யாழ்பல்கலைக்கழகம், திருநெல்வேலி

சமூகத்தில் கல்வியை நிறுவன ரீதியாக வழங்கும் ஸ்தாபனங்களுள் பள்ளிக்கூடம் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்தே கற்றற் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். கல்விச் செயற்பாடுகளான கற்றல். கற்பித்தல் - தூண்டுதல் - துலங்குதல் ஆகியன முழுமை பெறப் பள்ளிக்கூடங்களில் நூல் நிலையங்கள் இடம்பெறவேண்டியது இன்றியமையாதனவாகும். இன்று நூல் நிலையங்கள் கல்வி சார் நிறுவனங்களில் மட்டுமன்றி சமூகத்தின் மத்தியிலேயே சனசமூக நிலையங்களாக விளங்குகின்றன. இலங்கையில் பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி - (இலவச மதிய போசனம் – இலவச பாடப் புத்தகங்கள் உட்பட) வழங்கப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் கல்வி சார் நிறுவனங்களில் தங்களது ஆற்றல்கள், திறன்கள் என்பவைகளுக்கமையக் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் அனைவருக்கும் அவ்வவ் நிறுவனங்களில் சிறந்த நூல்நிலையங்களை அமைத்துக் கொடுக்க வேண்டியது அரசின் கடமையாக இருக்கவேண்டும்.

கல்வியின் பெரும்பகுதி பள்ளிக்கூடங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் அப்பாற்பட்டதெனலாம். இந்நிலையில் நூல் நிலையங்கள் முககிய பங்கினை வகிக்கின்றது. நூல் நிலையம் என நாம் கருதும்போது பொதுவாக வாசிப்பில் இன்பம் காணும் வாசகர்கட்கும் அறிவை மேலும் இடையீடற்ற வாசனை மூலம் வளர்க்க விரும்புபவருக்கும் வேண்டிய போது தகவலைக் கொடுத்தும் தகவலை பரப்பியும், வேண்டிய நூல்களையும் வேறு வாசிப்புக்குகந்த வெளியீடுகளையும் நேரடியாகக் கையாள உதவும் ஒரு,முறையே பொதுவாக நூல் நிலையம் என்று அழைக்கப்படுகின்றது. குறிப்பாக ஒரு பள்க்ளிகூடத்தில் அங்கு படிக்கும் மாணவர்களின் வாசிப்பு இரசனையை ஊட்டக்கூடிய வகையில் நூல் நிலையசகள் அமைதல் வேண்டும். பள்ளிக்கூடங்கள் பிள்ளைகளுக்கு எழுத்தறிவினை மட்டும் அளித்தால் போதாது. கல்வி என்பது அறிவு வேட்கையாகும். எதிர்காலச் சந்ததியினர் முழுமையான ஆளுமை பெற்றவர்களாக விளங்க அவர்களது அறிவுப் பசிக்குத் தீனி கொடுக்கும் கல்விசார் நிலையமாகப் பள்ளிக்கூட நூல் நிலையங்கள் விளங்குதல் வேண்டும். எனவே பள்ளிக்கூடப் பிள்ளைகள் படிப்பதற்கு வேண்டிய சிறந்த நூல்களையும் பள்ளிக்கூட நூல் நிலையம் வழங்கவேண்டியது அவசியமாகும்,

1943ஆம் ஆண்டு கல்வியினைப் பற்றி ஆராய்ந்த விசேட குழுவானது பள்ளிக்கூட நூல் நிலையங்கள் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்:–

''நூல் நிலையம் இல்லாத பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமேயன்று. அதனைப் பள்ளிக்கூடம் என்று சொல்வதிலும் பார்க்கப் படித்துக் கொடுக்கும் தொழிற்சாலை என்று சொல்வதே மேல்'' *(Sersional Paper XXIV 1943 P. III)*

1964 ஆம் ஆண்டு தேசியக் கல்வி சம்பந்தமாக வெளியிடப்பட்ட வெள்ளையறிக்கை பள்ளிக்கூடங்களில் நூல் நிலையங்களை அமைத்துப், பயனுள்ள முறைகளில் நடத்துவதற்கான சில ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அளித்துள்ளது.

''ஒவ்வொரு கனிஷ்ட பாடசாலையிலும் குழந்தைகளுக்கும் அங்கு படிக்கும் மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் எண்ணிக்கை குறையாத நூல்களைத் தன்னகத்தே கொண்ட நூல்நிலையம் இருக்கும். இந்நூல் நிலையம் நூல்நிலையவியலில் பயிற்றப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் ஒருவரால் நிர்வகிக்கப்படும். அவர் இந்நூல் நிலையத்தில் ஆற்றுதின்றபணி கற்பித்தலுடன் சம்பந்தப்பட்ட பணியாகவே கருதப்படும். ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் நூல்நிலையவியல் மாணவர்கள், விரும்பினல் மட்டும் கற்கக்கூடிய ஒரு பாடமாக இடம்பெறும். ஒவ்வொரு மகாவித்தியாலயத்திலும், ஒரு முழுநேர நூலகப் பொறுப்பாளரால் நிர்வகிக்கப்படும் ஒரு நூல் நிலையம் இருக்கும். இந்நூல்நிலையம் பள்ளிக்கூடத்திலுள்ள மாணவரின் தொகைக்கேற்ப அமைந்த ஒரு தனி அறையிலோ, மண்டபத்திலோ இருக்கும். கனிஷ்ட பாடசாலையில் மாணவனுக்கு ரூபா 3 வீதமும், மகா வித்தியாலயத்தில் மாணவனுக்கு ரூபா 5 வீதமும் நூல்நிலைய நிதி வழங்கப்பெறும். *(White Paper on Education Proposals for National Sysiem of Education 1964 P.16-18)*

எனவே, இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கமைய பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு இளம் வயதிலேயே நூல்களை பயன்படுத்துவதில் பயிற்சி அளிப்பது அவர்களின் பிற்காலக் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த அத்திவாரமாக அமையும்.

இன்று அறிவு மிக வேகமாகப் பரவி வருகின்றது. நாம் இப்போது அறிவியல்யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ருேம். செய்தித் தொடர்புகளும் வளர்ந்து கொண்டே செல்கின்றன. புத்தகங்கள், செய்தித்தாள்கள் சஞ்சிகைகள், கலை ஏடுகள், ஆய்வுஏடுகள் என்பன பெருகி வருகின்றன. வானெலி ஒலிபரப்புகள் தொலைக்காட்சி ஒலி ஒளி பரப்புச் சேவை தொலை தூரத்திலுள்ள மக்களோடு எங்களைத் தொடர்புபடுத்திவிடுகின்றன. மேற்கத்திய நாடுகளில் துரிதகரமாக வளர்ச்சி பெற்றுவரும் விஞ்ஞான தொழில் நுட்ப விருத்தியின் வேகம்' மாற்றம், முன்னேற்றம் முதலானவற்றை ஒவ்வொரு பள்ளிக்கூடப் பிள்ளையும் உடனுக்குடன் அறிந்து தனது அறிவை விருத்தியாக்கிக் கொள்ளவேண்டும். பள்ளிக்கூடப் படிப்பு பயனுள்ளதாக முழுமையுடையதாக விளங்க ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் சிறந்ததொரு நூல்நிலையம் அமைத்தல் வேண்டும்.

பள்ளிக்கூட நூல் நிலையங்களிலுள்ள பல்வேறு துறைகளைச் சேர்ந்த நூல்கள், சஞ்சிகைகள், நாளாந்த வாராந்தப் பத்திரிகைகள் அனைத்தும் சிறுவர்களது அறிவு வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நூல்களின் தாக்கம் பற்றி றிச்சார்ட் பெம்பேர்கர் *(Richard Bamberger)* பின்வருமாறு விபரித்துள்ளார். 'ஓர் இளம்பிள்ளையின் வளர்ச்சியில் நூல்களின் தாக்கம் மிகவும் திட்டவட்டமானதாகும். அதன் உள்ளம் என்னும் கோயிலைக் கட்டியெழுப்ப உதவும் கற்கள் நூல்களேயாகும். அவை ஒருவரின் கற்பனை சக்தியை விரிவடையச் செய்வதோடு உணர்ச்சிகளைப் பண்படுத்தி மனதை நெறிப்படுத்துகின்றன மற்றும் நூல்கள் சிறுவர்களினதும் இளைஞர்களினதும் அறிவை வளம்படுத்தித் தார்மீகத்துறையிலும் உலகியல் துறையிலும் தீர்வு காண உதவுகின்றன.' எனவே தான் வளர்ந்து வரும் இளஞ் சிறுர்களுக்கு நூல்களின் உறவை நல்ல முறையில் ஏற்படுத்தி வைக்க வேண்டிய கடமை பள்ளிக்கூடங்களையே சாரும்.

பள்ளிக்கூடங்களில் அமைந்துள்ள நூல் நிலையங்கள் குறிப்பான இலக்குகளைக்கொண்டிருத்தல் வேண்டும். பள்ளிக்கூட சமூகத்தின் பிரதிநிதிகளான ஆசிரியர்கள், மாணவர்கள் இரு பகுதியினரிடமும் வாசிப்புப் பழக்கத்தை ஊட்டியிருத்தல் வேண்டும். நூல் நிலைய நூல்கள், பருவ இதழ்கள்' செவிப்புல கட்புல விடயங்கள் ஆகியவற்றையும் செய்திச் சேவைகளையும் பரவச் செய்வதற்கு முன் வாசிப்பில் இரசனை ஏற்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். சமுதாயத்திலிருக்கும் அன்ருடப் போக்குகளையும் பிரச்சினைகளைப் பற்றியும் கல்வி, கலாச்சாரம், அறிவியற்றுறைகளில் தேசிய முறைப்படி என்ன நடக்கிறதென்பது பற்றிய சகல தகவல்களையும் பள்ளிக்கூடச் சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு நூல்நிலையங்களுக்கே உரியதாகும். வகுப்பறையில் மட்டும் தான் கற்பது கல்வியல்ல. வகுப்பறை வரம்புக்கு வெளியே பள்ளிக்கூட மாணவன் நூல்நிலையத்தின்பால் ஈர்க்கப்பட்டவனுய் தனது சுயவிருப்பிற்கு சுதந்திரமளித்து, வாசிப்பினைத் தூண்டக் கூடிய வகையில் நூல்நிலையம் அமைந்திருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் வேண்டும், ஆசிரியரது தலையீடின்றித் தாமாகவே நூல்களைப் படித்து விளங்கிக் கிரகிக்கும் ஆற்றலை விருத்திசெய்தல் வேண்டும். இந்நிலை பள்ளிக்கூடப் பிள்ளைகளின் சுயமான (*Self Education*) கற்றலுக்கு அடிகோலுகின்றது. படிக்கும் பிள்ளை தானுகவே விருப்பத்துடன் வாசிப்பில் ஈடுபாடுடையதாக விளங்கத் தலைப்படவேண்டும்.

பள்ளிகூடப் பாடவிதானத்தில் உள்ள பல்வேறு பாடங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றனவாய், செயற்கையான பிரிவுகளைத் தாங்கி நிற்கலாம். பாடங்கள் நெடுக்கு ஒருமைப்பாடும் குறுக்கு ஒருமைப்பாடும் கொண்டதாக ஒன்றிணைந்த கட்டமாக, இயல்பான தொடர்புகளை ஏற்படுத்த நூல்நிலைய மேலதிக வாசிப்பு அத்தியாவசியமாகும். பள்ளிக்கூட நூல்நிலையங்களில் போதிக்கப்படும் பாடங்களை மேலும் விரிவாக அறிவதற்குத் துணைப்பாட நூல்கள், உசாத்துணை நூல்கள் உதவுகின்றன. ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைச் செவ்வனே கழிப்பதற்கு ஏற்ற நூல்கள் நூல் நிலையங்களில் இடம்பெறுதல் வேண்டும். பரந்த விரிவான அறிவைப் பெறத்தக்க வகையில் கலைத் துறை, விஞ்ஞான, பொது, சமுதாய நூல்கள் இடம்பெறுதல் வேண்டும். அப்போது தான் மாணவர்கள் மனதில் இலக்கிய உணர்வு. சமூக நோக்கு, அறிவியல் மனப்பான்மை வளர இந்நூல்கள் உதவும். உயர்தர சஞ்சிகைகளையும், சமகால நிகழ்ச்சிகளை, உடனுக்குடன் அறியத்தக்க வகையில் நாளாந்த ஏடுகள், வாரஇதழ்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை நூல் நிலையங்கள் கொண்டிருத்தல் வேண்டும். பள்ளிக்கூடங்களில் உள்ள நூல்நிலையங்கள் கூடியளவு பொது நூல்நிலையங்களுடன் இணைக்கப்பட்டிருப்பின் படிக்கும் பிள்ளைகள் கூடுதலான பலனைப் பெற்றுக்கொள்ள ஏதுவாகும்.

பள்ளிக்கூடங்களில் மட்டுமன்றி எங்கெங்கு கற்றலும் கற்பித்தலும் உயிர்த்துடிப்புள்ளதாக இயங்குகின்றதோ அங்கெல்லாம் நூல்நிலைய சேவையும் அவசியமாகும். சிறுவர்களிடையே வாசிக்கும் பழக்கம் வளர்க்கப்படல் வேண்டும். நல்ல தரமான நூல்கள் நாட்டில் குறைந்த விலையில் கிடைப்பதாயின் வாசிக்கும் ஆர்வமும் பெருகும் என்பதில் ஐயமில்லை. இன்று இலங்கை இருக்கும் நிலையில் நூலகங்களின் எண்ணிக்கையும் தரமும் மேலும் வளர்ச்சி பெற்றுல் தான் சிறுவர் இலக்கிய வளர்ச்சி ஏற்படும். பள்ளிக்கூட ஆசிரியர் தன்னிடம் கற்கும் பிள்ளைகளிடையே நூலார்வத்தை ஏற்படுத்துவதோடு நூல்கள் தரும் இன்பத்தின் பொருட்டும் வாசிக்கத் தூண்டவேண்டும். அதே சமயம் பாடசாலைப் பிள்ளைகள் வாசிப்பதை நிதானமாக வரையறைப்படுத்தவும் வேண்டும். பள்ளிக்கூடப் பிள்ளைகளைப் பெருமளவிற்கு வாசிக்கும் பழக்கத்தோடு ஒன்றியிருக்கச் செய்தல் அவசியமாகும். பிள்ளைகள் நல்ல நூல்களை வாசித்துப் பழக்கப்பட்டுவிட்டார்களென்றுல், அவர்களுடைய மனம் அதே வழியில் படர்ந்து செல்லும் என்பது அனுபவ உண்மையாகும்.

நூல் நிலையங்கள் பிள்ளைகளைச் சமூகப் பொருத்தமுடையோராகச் செய்வதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இங்கு கிடைக்கப்பெறும் நாளிதழ்கள், வார இதழ்கள் பிள்ளைகளைச் சமூகப்படுத்துவதில் பெரும் பணியாற்றுகின்றன. வாழ்க்கைக்கு வேண்டிய சமூக அற ஒழுக்கங்களைப் பேணுதலையே சில பத்திரிகைகள் தம் தலையாய கடனுகக் கொண்டு கடமையாற்றுகின்றன. அதே சமயம் பொறுப்பற்ற முறையில் பத்திரிகா தர்மத்திற்கு மாறுன வகையில் சமுதாயத்தைக் கெடுக்கக்கூடிய கருத்துக்களைக் கொண்ட பத்திரிகைகளையும் காணலாம். பிள்ளைகளைச் சமூகப்படுத்தல் நூல்களின் முக்கிய கடனுகும். இதற்குச் சமூகம் பற்றிய அறிவு மாணவர்களுக்கு அவசியமாகும். பொதுவாக சமூக அறிவை அளித்துச் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளை நூல் நிலையத்திலுள்ள நூல்கள் படிப்படியாக ஆரம்பம் தொட்டு உயர்நிலை வரை பிள்ளைகளுக்கு அளித்தல் வேண்டும்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு நூல் நிலையம் பள்ளிக்கூடப் பிள்ளைகளின் கல்வியினை முழுமைப்படுத்தத் தேவையான பகுதி என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். இலங்கையிலுள்ள பெரும்பாலான பிள்ளைகளுக்கு அவர்களின் வீடுகளிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதியளவு வாசிப்புக்குகந்த நூல்கள் இல்லை. எனவே இலங்கையின் ஆரம்பப் பாடசாலைகளிலும் உயர்தரப் பாடசாலைகளிலும் ஏனைய கல்விசார் நிறுவனங்களிலும் நூலகங்களின் விருத்திக்காகப் பொதுத் துறையினரும் தனியார் துறையினரும் கூடுதலான கரிசனை எடுத்து வருவது குறிப்பிடத் தக்கதாகும், 'ஒரு நூலகத்தின் அலுவல்களும் நோக்கங்களும் அது ஒரு தேசிய நூலகமா, பல்கலைக்கழக நூலகமா, விசேட நூலகமா, பள்ளிக்கூட நூலகமா, பொது நூலகமா என்பதில் தங்கியிருக்கின்றன. நூல் நிலையம் எவ்விதமானதாயினும் தனிப்பட்ட ஒருவரினதும் சமூகத்தினதும் தேசத்தினதும் செய்தி, கல்வி, கலாச்சாரத் தேவைகளுக்கு மிக அவசியமாகும். (ஈசுவரி கொரயா, நூல்நிலையச் சேவை, அத்: 99 கல்வி நூற்றுண்டு விழா மலர், பகுதி 3 1969 பக், 1380.

வாசிப்பு ஒருவனை முழுமனிதனுக்குகின்றது. மேற்கு நாட்டறிஞர் தாமஸ் கார்லைல் என்பவர், 'நல்லதொரு நூல் நிலையமே சிறந்ததோர் பல்கலைக்கழகமாகும்' என்றார். பல நூல்களைக் கண்டறிந்து பொருள்களைத் தேடுவது கல்வியின்பாற்படும் என்றார் ஆலிவர் லாட்ஜ் என்னும் அறிஞர். நூலகங்களில் நூல்கள் பிள்ளைகளை ஈர்க்கக்கூடிய முறையில் அடுக்கி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஓய்வு நேரங்களில் மட்டுமன்றி நூல்நிலைய வாசிப்புக்கென்றே தனிப்பட்ட பாட வேளைகள் ஒதுக்கப்படவேண்டும். ஒரு பள்ளிக்கூடத்தின் திலகமாக விளங்குவது, அப்பள்ளிக்கூட நூலகமேயாகும். எனவே ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் நூலகம் இன்றியமையாதது.

''நீரளவே யாகுமாம் நீராம்பல்
தான் கற்ற
நூலளவே யாருமாம் நுண்ணறிவு

என்ற எமது முன்னோரின் முதுமொழிகளுக்கமைய மனிதனின் ஆளுமையையும், தனித்தன்மையையும் உருவாக்கிக் கொடுக்கும் கருவிகளாகவும் விளங்குவன சான்றோர்களே. எனவேதான் பல்வேறுபட்ட நூல்களையும் சஞ்சிகைகளையும் ஒரே இடத்தில் வைத்துப்பேணி மக்கள் யாவரதும் கல்வி விருத்திக்குச் சேவைபுரியும் ஓர் உன்னதமான நிறுவனம் பள்ளிக்கூட நூலகமாகும். பள்ளிக்கூட மாணவர்கள் தமது பூரண அறிவை சுதந்திரமான முறையில் விருத்தி செய்வதற்கு நூலகங்களையே நாடவேண்டியவர்களாகின்றார்கள். மாணவர்கள் தமது கல்வி விருத்திக்குப் பொருத்தமான நூல்களைப் பயன்படுத்தத் தொடங்குவது பாடசாலை நூலகங்களிலேயே எனலாம். ஒரு பள்ளிக்கூடத்தின் நூலகமே, அப்பள்ளிக்கூட மாணவர்களின் அறிவு விருத்தியின் மத்திய தளமாகக் கொள்ளலாம்.

''தொட்டனைத்தூறும் மணற்கேணி
- மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு''
(திருக்குறள்: 396)

★ ★

> அறிவும் திறமையையும் பெறுவது மட்டுமல்ல கல்வியின் நோக்கம்; பிறருடன் ஒத்து வாழ நம்மைப் பக்குவப்படுத்துவதே அதன் முக்கிய நோக்கம்.
>
> டாக்டர் எஸ், இராதாகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கியல்

க. சிவபாதசுந்தரம் *B. Sc. (Hons) Dip – in Edu.*

*விலங்கியல் கற்பதன் நோக்கம்:*

(அ) சுயநலத்திற்காக.

(ஆ) தனக்குத் தேவையானவற்றை அறிந்துகொள்வதற்காக.

(இ) தனது வளர்ச்சிக்குத் தேவையான உணவை அறிவதற்காக.

(ஈ) தனது பரிணும வளர்ச்சியை அறிவதற்காக.

(உ) தான் சேர்ந்து வாழும் உயிரினங்களை அறிவதற்காக,

(ஊ) சமுதாயத்தில் ஒருவனுக இருந்து அதனை வளர்க்க முயற்சிப்பதற்காக

(எ) தனது அடுத்த நிலை பற்றிச் சிந்திப்பதற்காக.

*மனிதனின் பரிணுமம்*

குரங்கு போன்ற விலங்குகளிலிருந்து மனிதன் தோன்றினுன்; மரங்களிலே வாழ்ந்த மூதாதையர் தரையிலிறங்கி இருபாத விலங்குகளாக – நிமிர்ந்த விலங்குகளாக - மாறியதன் காரணமாக, முன் அவயவங்கள் கைகளாகப் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. பொருட்களை நுட்பமாகவும் இறுக்கமாகவும் பற்றிப் பிடிக்கக் கூடிய ஆற்றல் தோன்றியது. கைகளைச் சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்காக மூளை விருத்தி ஏற்பட கற்காலம் தோன்றியது, தொடர்ந்து மூளை விருத்தி ஏற்பட, உலோக காலம் தோன்றியது. வனத்தை விட்டு வெளியேறி, கிராமங்களையும், நகரங்களையும் மனிதன் அமைக்கத் தொடங்கினுன். சமூகங்களும் சமுதாய்ங்களும் நகரங்களும் தோன்றின. விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் என்பன பெருகின. கை → மூளை → கை → மூளை > கை > மூளை இதன் விளைவு இன்றுள்ள பிளாஸ்ரிக் யுகம்.

இன்றைய நிலையில் இயற்கைத் தேர்வானது நடைமுறைக் காரணியாக (மனிதனைப் பொறுத்து) இருப்பது அரிது; ஆனுல் குடிசனப் பெருக்கமும், சூழலை பெருமளவில் மாற்றிப் பயன்படுத்தும் பாரிய துர்விளைவுகளைத் தோற்றுவிக்கும், நிகழ்தகவு அதிகரித்துள்ளது. மனிதக் கூர்ப்பு வேறுதிசையில் திரும்பவுள்ளது. கட்டமைப்புக் கூர்ப்பிலும் பார்க்க பெற்ற அனுபவ சேமிப்புகளின் பரம்பரை யூடாகக் கடத்தப்படும் தன்மை முதன்மை வகிப்பதனுல் *Julion Hoxley* யின் கூற்றுப்படி உளவியல் - சமூகவியல் கூர்ப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மேற்போன்ற விலங்கியல் தத்துவங்களைத்தான் மாணவன் அறிய வேண்டும்; விளங்க வேண்டும்; கிரகிக்க வேண்டும்; பிரயோகிக்க வேண்டும்.

*கற்றல் நிகழ்ச்சி*

குறிப்பிட்ட பாடப்பரப்பை அறிய வேண்டும்; விளங்க வேண்டும்; கிரகிக்க வேண்டும்; பகுத்து, தொகுத்து ஆராய வேண்டும்; பயன்படுத்தவேண்டும்; உணவை உட்கொள்ளல் (அறிதல்); சமிபாடடைதல் (விளங்கல்); அகத்து உறிஞ்சப்படுதல் (கிரகித்தல்); தன்மயமாக்கப்படல் (பகுத்தலும் தொகுத்தலும்) சக்தியாக மாற்றப்படல் (பிரயோகம்)) சக்திக்காகத்தான் உணவு உட்கொள்ளப்படுவதாயின், பிரயோகத்திற்காகத்தான் பாட அறிவு தேவைப்படுகின்றது. ஆனுல் இன்றைய நிலையில் மாணவர் உணவை உட்கொள்ளவில்லை என்று கூறுவதிலும் பார்க்க, அதனைப் பார்க்கவே இல்லை. பாடங்கள் போதிக்கப்படுவதைக் கேட்கின்றுர்கள். ஆனுல் விளங்கிக் கொள்வதில்லை. கற்றல் திருப்திகரமாக இருக்க வேண்டுமாயின் பாடங்களைக் கேட்பதோடு மட்டும் நில்லாமல் அவற்றை விளங்கி, கிரகித்தல் முதற்படி. குறைமீட்டலைப் போன்று, கிரகித்ததை தானுகவே இருந்து சிந்தித்துப் பகுத்துத் தொகுத்தல் இரண்டாம்படி, இவ் விரு படிகளை மீறினுற்றுன் கற்றலை மேற்

கொள்ள முடியும் ஆயின், இன்றைய மாண வர்கள் முதற் படியிலேயே ஏற மறுக்கின் றுர்கள். இதன் விளைவுதான் இப்பாடத் தில் திறமைச் சித்திகள் மிகந் குறைவாக உள்ளமை.

## பரீட்சையின் நோக்கம்

(அ) பாடத்தில் மாணவன் அடைந் துள்ள நிலையை அறிதல்,

(ஆ) மாணவரிடையே உள்ள வேறு பாட்டை அறிதல்,

(இ) மாணவன் அறிவு. கிரகிப்பு பகுப்பு, தொகுப்பு, பிரயோகம் ஆகிய திறன்களை அறிதல்.

(ஈ) கிரகித்ததை வெளிப்படுத்தும் ஆற் றலை அறிதல்,

(உ) ஒழுங்கு முறையிலே சிந்திக்கக் கூடிய ஆற்றலை அறிதல்.

(ஊ) விடயமொன்றைப் பல கோணங்க ளில் நின்று ஆராயக் கூடிய ஆற் றலை அறிதல்.

## விளுக்கள் வகையும் விடைகளின் தன்மையும்

(அ) பல்தேர்வுவினுக்கள் கற்றல் நிகழ் ச்சியிலுள்ள வெவ்வேறு திறன்களை அறிவ தற்காக விளுக்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனல், எமது நாட்டைப் பொறுத்து O/L பரீட்சையில் 80 வீதம் அறிவு மட்டத் தை அளப்பதற்காகவும். 20 வீதம் பகுப்பு - தொகுப்பு - பிரயோகம் என்பவற்றை அறி வதற்காவும் விளுக்கள் தொகுக்கப்படுகின் றன. A/L வகுப்புப் ஏறத்தாழ 70 வீதம் அறிவு மட்டத்தை அளப்பதற்கும் 30வீதம் மட்டுமே பகுப்பு - தொகுப்பு - பிரயோக திறன்களை அறிவதற்கும் விளுக்கள் தொகுக் கப்படுகின்றன. இதனுற்ருன் போலும் 1972ஆம் ஆண்டு முதல் இன்று வரை விலங்கியல் II வினத்தாளில் பெறும் புள்ளி யிலும் பார்க்க விளுத்தாள் I இல் கூடிய புள்ளிகள் மாணவர் பெறுகின்றனர். எனவே தேவைக்கு மேலதிகமாக பாடவிட யங்களை அறிய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

(ஆ) அமைப்புக் கட்டுரை; கொடுக்கப் படும் நான்கு விளுக்களுக்கும் விடை எழுத வேண்டும். பல பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு விளுவிலும் 20 பகுதிகளுள்ளன. ஒரு சொல்லில் அல்லது ஒரு சொற்றெட ரில் அல்லது ஒரு வசனத்தில் விடை எதிர் பார்க்கப்படுகிறது. வெவ்வேறு கற்றல் திறன்களை அறியப் பயன்படுத்தப்படுகிறது. பாடத்தைக் கேட்பதனுல் மட்டும் அல்லது விளங்கிக் கொள்வதனுல் மட்டும் திருப்தி கரமான விடைகளை எழுத முடியாது. போதித்ததை விளங்கி, தனதாக்கி. தொகுத்து, பகுத்து கற்பதன் மூலமே சிறந்த விடைகளை அளிக்க முடியும். தேவை யான பாட ஆழத்திற்கும், அகலத்திற்கும் மேலாக கற்பிக்கப்படுவதனுல் மாணவர்கள் தேவையானது எவ்வளவு என்பதை அறிய முடியாமல் பரீட்சையில் போதிய புள்ளி கள் பெறமுடியாது போகின்றது. அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாகி விடுகின் றது; கிரகித்தல் நடைபெருத காரணத் தால் விளுவின் நோக்கத்தை அறியமுடியா மலிருந்து அமைப்புக் கட்டுரையைத் தொடர் கட்டுரையாக எழுத முயல்கின்ற னர்.

(இ) தொடர் கட்டுரை; இதன் முக்கிய நோக்கம் மாணவன் கேட்டதை அல்லது வாசித்ததை விளங்கிக் கொண்டாளு? விளங்கியதை வெளிப்படுத்தக் கூடிய ஆற்ற லைப் பெற்றுள்ளாளு? ஒழுங்கு முறையில் தரவுகளை அல்லது அறிவுகளை நிரற்படுத் தக்கூடிய ஆற்றல் கொண்டுள்ளாளு? என் பனவற்றை மதிப்பிடுவதற்காகும். விளுக் களைத் தெரிந்தெடுக்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதனுல் தெரிந்தெடுக்கும் அவனது ஆற்றல் அளக்கப்படுகிறது. அமைப்புக் கட் டுரை ஒவ்வொன்றுக்கும் வழங்கப்படும் நேரம் 15 நிமிடம்; 80 பகுதிகள். ஆனல், தொடர்கட்டுரை ஒன்றிற்கு வழங்கும் நேரம் 30 நிமிடம்; படங்களைத் தவிர்த்து ஒவ்வொரு விளுவுக்கும் குறைந்தது இரண்டு பக்க விடை எதிர்பார்க்கப்படுகிறது. ஆனல் பல மாணவர்கள் ஒரு விளுவுக்கு ஐந்து, ஆறு வரிகளை எழுதிவிட்டு. திருப்தியடைந்து விடுகின்றனர். இதனுற்ருன் திறமைச் சித்தி கிடைப்பதில்லை. அமைப்புக் கட்டுரையைத் தொடர் கட்டுரையாகவும், 'தொடர் கட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையை அமைப்புக் கட்டுரையாகவும் மாற்றி எழுதும் பழக்கம் முற்முகக் கைவிடப்பட வேண்டும். படங்கள் தரும்படி கேட்கப்படாதவிடத்து வரிப்படங்களை வரைவதனல் விளக்கமும்வெளிப்படுத்தும் தன்மையும் சிறப்புறுவது மட்டுமன்றி, மொழி வளம் குறைந்த மாணவருக்கும் இது உதவுகின்றது.

*மாணவருக்கு அறிவுரை*

*எதனைப் படிக்க வேண்டும்;* பாடத் திட்டத்தை முழுமையாக அறிந்திருக்க வேண்டும்.

*எவ்வளவு படிக்க வேண்டும்?* விரிவான பாடத் திட்டங்களில் பாடப்பரப்பு ஒன்று கற்பிக்கப்படும் நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுகளின் வினத்தாள்களிலுள்ள அமைப்புக் கட்டுரை வினக்களும், தொடர் கட்டுரை வினக்களும் ஆழத்தையும் அகலத்தையும் வெளிகாட்டுகின்றது. (MCQ கேள்விகளுட் சில, பகுப்பு – தொகுப்பு - பிரயோகம் என்பவற்றைஅறிவதற்கும், மாணவரின் பொது அறிவை அறிவதற்கும் தொகுக்கப்படுவதனல் பாடத்தின் ஆழத்திற்கும் அகலத்திற்கும் வெளியேயும் இருக்கும்.

*யாரிடம் படிக்க வேண்டும்?* அனுபவம் கொண்ட ஆசிரியரிடமிருந்து; மாணவர் விளங்கிக்கொள்ளக் கூடிய வகையிலே கற்பிக்கக்கூடிய ஆசிரியரிடமிருந்து; சிந்தனையைத் தூண்டும் வகையிலும், கிரகித்தலை இலகுவாக்கும் வகையிலும், பகுத்துத் தொகுத்து ஆராயக்கூடிய மனப்பாங்கை வளர்க்கக் கூடிய வகையிலும் கற்பிக்கக்கூடிய ஆசிரியரிடமிருந்து; குறைவாகக் கூறி, நிறைவாக அறுவடை செய்யக்கூடிய ஆசிரியரிடமிருந்து.

*எப்படிக் கற்பது?* விரிவான குறிப்புகளை விளங்காமல் படிப்பதைத் தவிர்த்தல்; கற்றதைத் திரும்பத் திரும்ப மீட்டல்; கற்றதைக் கொண்டு எவ்வாறு பிரயோகப்படுத்தலாம் என்பதைச் சிந்தித்தல்; எந்த நேரமும் சூழலை - சூழல் மாற்றங்களை – அவதானித்தல்; செய்முறைகளைத் தானகச் செய்து அவதானிப்புகளை மேற்கொள்ளல்; முன்னைய வினக்களைப் பாடப்பரப்புகளின் படி பிரித்து விடைகாண முயலுதல்; கட்டுரை வினக்களுக்கு திரும்பத் திரும்பவிடைகளை எழுதி எழுத்து ஆற்றல் பெறுதல். எதுதான் நேரிட்டாலும் ஒவ்வொரு நாளும் தானக வாசிப்பதற்கும், சிந்திப்பதற்குமென சில மணித்தியாலங்களை ஒதுக்கிவைத்தல்.

**

*புறநானூற்றில் வீரம்*

*வேந்துடைத் தானும் முனைகெட நெரிதர*
*ஏந்துவாள் வலத்தன் ஒருவனகித்*
*தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்கு*
*ஆழியனையன் மாதோ என்றும்*
*பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்*
*புரவிற் காற்றுச் சீறூர்த்*
*தொன்மை கட்டிய வண்மையோனே.*

*புறம்:* 312

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து நாகரீகம்

## தேர்வும் - மாணவரும் ஆசிரியரும் - ஒரு கண்ணோட்டம்

செ. யோகராசா *B. A. (Hons) B. Phil Dip. in Edu.*

க. பொ. த. உயர்தர வகுப்பு கலை, வர்த்தக மாணவர்கள் (விருப்பத்திற்குரிய தெரிவு அடிப்படையில்) கற்க முன் வரும் பாடங்களுள் இந்து நாகரிகமும் ஒன்றாகும். இம்மாணவர்கள் கற்கும் பாடங்களுள், மேதிலக முயற்சிகளின்றிச் சிறந்த பெறுபேறு அடையக்கூடிய பாடமாக விளங்குவது இதுவே என்று கூறத் தோன்றுகிறது. ஏனெனில், பாடத் திட்டப் பரப்பு சுருக்கமாக வுள்ளது; விருப்பத்திற்குரிய தெரிவு வினுக் களின் எண்ணிக்கை (ஒன்பதில் ஐந்து) பல வாகவுள்ளது; அனுபவம் மிக்க ஆசிரியர் களும்' சராசரி அறிவுடைய மாணவர்களும் முன்கூட்டியேஊகித்து, அழுத்தங்கொடுத்து கற்பிக்கக் கூடிய – கற்கக்கூடிய முறையில் பாட அலகுகள் அமைந்துள்ளன. இத் தகைய வாய்ப்புகளிலிருந்தும், தேர்வுக் குத் தோற்றுவோரில் ஏறத்தாழ மூன்றி லொரு பங்கினர் சாதாரண சித்தியை பெறு கின்றமை வியப்பளிப்பதாகும். இத்தொடர் பில் சுருக்கமான சில கருத்துக்களைக் கூறு வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்,

பொதுவாக, பெரும்பாலான பரீட்சார்த் திகள் தாம் எழுத வேண்டிய ஆறு வினுக் களுக்கும் விடையெழுத முயல்வதில்லை; இரண்டொரு வினுக்களுக்கு விடையளிக் காமலே விட்டு விடுகின்றனர். 'நேரம் போதவில்லையே'; என்று தமக்குத்தாமேகூறி அமைதி கொள்கின்றனர். (விடைத்தாள் களில் இவ்வாறு எழுதுவதுமுண்டு) இவ்வாறு குறிப்பிட்ட நேரத்திற்குள் உரிய வினுக் களுக்கு விடை எழுத இயலாமல் இடர்ப் படுவதற்குக் காரணம், விடையின் அளவு பற்றிய தெளிவு பரீட்சார்த்திகளுக்கு இல் லாமையாகும். எடுத்துக்காட்டாக, 'தென் கிழக்காசியாவில் இந்து மதம்'; தொடர் பான (பெரிய) வினுவுக்கு (14 புள்ளிகள்) ஏறத்தாழ ஐந்து பக்கங்கள் எழுதும் பரீட் சார்த்திகள் சிலர் இவ்விடயம் தொடர் பான விளக்கக் குறிப்பு (6 புள்ளிகள்) கேட் கப்படும் போதும் ஏறத்தாழ ஐந்து பக்கங் கள் எழுதுகின்றனர் அதே வேளையில் ஏனைய வினுக்கள் எழுதுவதற்குரிய நேரம் விழுங்கப்படுகின்றது என்பதையும், ஒரு விளக்கக் குறிப்புக்கான கூடிய புள்ளி ஆறு என்பதையும் அத்தகைய பரீட்சார்த்திகள் உணர முடியாதவர்களாகின்றனர். இதனை உணர்த்தவே 'விடை இத்தனை வரிகளுக்கு மேற்படலாகாது' என்றொரு விதி வினுத் தாளில் இடம்பெற்றது (1988). இதன் தாற்பரியத்தை உணராத பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட வரிகளுக்குள் விடையைப்பூர்த்தி செய்ய இயலாதவர்களாகவும், 'வரி விதிப் பு'க்குப் பயந்தவர்களாகவும் அல்லலுற்ற னர். விளைவாக, முழுமையற்ற நிலையில் விடையை முழுமையாக்கிக்கொண்டனர். ஆகவே, நேரத்திற்கும் வினுவின் தன்மைக்கு மேற்ப, பரீட்சார்த்திகள் திட்டமிட்டு விடை எழுதுவதில் போதிய பயிற்சியினை முன்கூட் டியே பெற்றுக்கொள்ள வேண்டியதன் முக் கியத்துவத்தினைப் பிரக்ஞை பூர்வமாக உணர்ந்து செயற்படவேண்டியது அவசிய மாகின்றது.

இனி, வினுக்களின் தன்மைகள் பற்றிய சில விடயங்கள் கூறவேண்டியுள்ளன. இந்து நாகரிக வினுக்களிடையே காணப்படும் பொதுவான தன்மைகளுள் ஒன்று, வினு வானது உட்பகுதிகளைக் கொண்டுள்ளமை யாகும். இவற்றைப் பரீட்சார்த்திகள் பலர் உணர்ந்துள்ளதாகத் தெரியவில்லை. எடுத் துக்காட்டாக, 'இந்துசமயத்தின் சிறப்பியல் புகளை எடுத்துக்கூறி அச்சமயத்தின் புராதன நிலைகளை அறிந்து கொள்வதற்குரிய வர லாற்று மூலங்களாகச் சிந்துவெளி அகழ்வு களிற் பெறப்பட்ட தொல்பொருட்கள் எவ் வளவிற்கு உதவுகின்றன என்பதனை ஆராய்க'' என்ற வினு கேட்கப்பட்டபோது பரீட்சார்த்திகள் வினுவின் முதற்பகுதியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனியாது விட்டமையால் கேட்கப்பட்ட சிறப்பியல்புகளை எடுத்துக் கூறத் தவறினர். "மக்களிடையே சமய உணர்வையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எத்தகைய வழிமுறைகளைக் கையாண்டார் என்பதனைக் கூறி இலங்கையில் இந்துமத வரலாற்றில் அவரது சமயப் பணிகளுக்குரிய முக்கியத்துவத்தினை மதிப்பிடுக" என்ற வினாவுக்கு விடையளித்த போது, பரீட்சார்த்திகள் வினாவின் பிற்பகுதியைக் கவனியாது விட்டமையால் சமயப் பணிகளுக்குரிய முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறத்தவறினர்.

வினாக்கள் மேற்கோள் முறையிலே இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, "சைவ சமயத்திற் பக்தி உணர்ச்சியைப் பெருக்குவதற்குச் சிறந்த சாதனங்களாகத் தேவாரமும் திருவாசகமுமே விளங்குகின்றன" – இக்கூற்றினை ஆராய்க – என்பது ஒரு வினாவாகும். இவ் வினாவைக் கிரகித்து விவாதித்து மேற்கோள்கள் காட்டி எழுதும் ஆற்றல் பரீட்சார்த்திகளிடம் அரிதாக வெளிப்படுகின்றமையையே அவதானிக்க முடிகின்றது.

வினாவில் அமையும் மேற்கோள் விரிவாக அமைந்து விடுவதுமுண்டு. எடுத்துக்காட்டாக, "பௌத்தம் சிறுதொகையான சிந்தனையாளரை மட்டும் கருத்திற்கொண்டு தத்துவ விசாரணையில் ஈடுபட்டது. இந்துமதமோவெனில் ஞானநெறி நிற்கவல்ல சிறுதொகையினரான தத்துவஞானிகள் பயன்பெறும் வண்ணம் தத்துவக் கருத்துக்களை வழங்கியதோடமையாது பெருமளவிலான பொதுமக்கள் பயனடையும் வண்ணம் அவர்கள் எளிதிற் கிரகிக்கக்கூடிய சமயக்கருத்துக்களையும் வழங்கிப் பெருமளவிற்கு ஆதிக்கம் செய்யத் தலைப்பட்டது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்கமாக ஆராய்க என்பது ஒரு வினா. வினாவின் நீட்சி காரணமாக மேலோட்டமாக வாசித்துவிட்டு கலக்கமடைவது வழக்கமாகும். அதே வேளையில் நிதானமாக இரண்டு மூன்று தடவை வாசித்து கிரகித்துக்கொள்ளும் இயல்புள்ள பரீட்சார்த்தி வினாவின் கடினமற்ற தன்மையை உணரலாம்.

வினாக்கள் ஒப்பீட்டுப் பாங்கிலும் இடம் பெறுகின்றன. எடுத்துக் காட்டாக, "விசிட்டாத் வைதத்தின் சிறப்பியல்புகளைச் சுருக்மாகக் கூறி, இத்தத்துவத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்கு மிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க." என்ற வினாவைக் குறிப்பிடலாம். இங்கு பரீட்சார்த்தியிடமிருந்து ஒப்பீடு செய்யும் திறன் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும், பெரும்பாலானோர் அறவே அனுபவமில்லாத தம்மியல்பினையே வெளிப்படுத்துகின்றனர்.

விடையிலே பல அம்சங்களை அவசியமாக எதிர்பார்த்திருக்கும் வகையிலான வினாக்களும் அமைகின்றன. "தொன்மை இலக்கியமாகிய இருக்குவேதம் இந்துப்பண்பாட்டின் பல்வேறு அம்சங்களுக்கு அடிப்படையாக அமையுமாற்றை விளக்குக" என்பது இத்தகைய வினாக்களுக்கு ஓர் உதாரணமாகும். ஆனால் இவ்வினா கேட்கப்பட்ட போது, பரீட்சார்த்திகள் பலர், வினாவைச் சரியாகப் புரிந்து கொள்ளாது ஓரிரு அம்சங்களுக்கு மட்டுமே விடையிறுத்திருந்தமை கவனிக்கத்தக்கது.

சுருக்கக் கூறின், வினாக்களின் தன்மைகள் பற்றி நன்கறிந்து தெளிவு பெற வேண்டிய நிலைபினை மாணவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியதும் அவசியவாகின்றது எனலாம்.

பரீட்சார்த்திகள் சில சந்தர்ப்பங்களில் தமது பொது அறிவு குன்றிய நிலையையும் தாராள சிந்தையுடன் புலப்படுத்தி விடுகின்றனர். உதாரணமாக 'நான்கு புருடார்த்தங்க'ளும் நான்கு பாதங்களும் எவையென்பதிலே அவர்களுக்குக் குழப்பமேற்படுவதுண்டு; பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீர்திருத்த இயக்கம் எது? இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீர்திருத்த இயக்கம் எது? என்பதிலேகூட தடுமாற்றம் இருப்பதை வெளிப்படுத்துகின்றனர். பரீட்சார்த்திகளின் இத்தகைய நிலை வியப்பிற்கும், விசனத்திற்கும் கல்வியுலகின் சிந்தனைக்குமுரிய தொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுக்குரிய வினாக்கள் போதியளவு இடம்பெறுவதனால் வினாக்களைத் தெரிந்து எழுதுகின்ற முறையிலும் பரீட்சார்த்திகள் சிந்தித்துச் செயற்பட வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு வினாத்தாளிலேயே ஒரு தடவை பின்வரும் இரு வினாக்களும் இடம் பெற்றிருந்தன.

(4) ''விசிட்டாத் வைதத்தின் சிறப்பியல்புகளைச் சுருக்கமாகக்கூறி, இத்தத்துவத்திற்கும் சைவ சித்தாந்திற்குமிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க''.

(8) ''சிற்பக் கலையில் இந்துக்கள் சிறந்தது விளங்கியமைக்குக் கோயில்களிற் பல்வேறு நிலைகளில் நிறுவப்பட்டுள்ள திருவுருவங்களே சிறந்த சான்று'' — நீர் தேர்ந்தெடுக்கும் இறைவனது திருவுருவொன்றினது அமைப்பு, அத்திருவுருவம் உணர்த்தும் தத்துவம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இக்கூற்றினை ஆராய்க.

சராசரி அறிவுடைய பரீட்சார்த்திக்கு முதலாவது வினாவைவிட, இரண்டாவது வினா இலகுவானதாக அமைய வாய்ப்புள்ளது. ஆயினும் அத்தகைய பரீட்சார்த்தி வினாவைச் சரியாக வாசித்துணராது முதலாவது வினாவையே தெரிந்து கொள்ளும் நிலையும் நிலவுகின்றது. 'விசிட்டாத்வைதம்' என்ற தொடர் முதலில் இடம் பெற்றுள்ளதைக் கவனித்தவுடன் வினா நன்கு பரிச்சயமானது போலப் பரீட்சார்த்திக்குத் தெரிகின்றது. தொடர்ந்து வினா எவ்வாறு அமைந்து செல்கின்றது என்பதை உணரும் ஆற்றல் பரீட்சார்த்தியிடமில்லை. இந்நிலையில் இரண்டாவது வினாவின் எளிமைத்தன்மையும் தெரியாது போகின்றது. இது பரீட்சார்த்திகள் பலரின் பரிதாபகரமான நிலை என்றே கூறவேண்டும்.

இறுதியாக, ஆசிரியர்கள் நிலைபற்றியும் நோக்குவது பொருத்தமானது. (க. பொ. த. சாதாரண தர) சமூகக்கல்வியானது, கற்பிக்கும் ஆசிரியர்களிடம் வரலாறு, அரசியல், புவியியல், பொருளியல் என்றவாறு பல்துறை அறிவினை அவாவி நிற்பது போன்றே, இந்துநாகரிகமும் கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து, சமயம், தத்துவம், வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு என்றவாறு பல்துறை அறிவினை நாடி நிற்கின்றமை வலியுறுத்தப்பட வேண்டியதொன்றாகும். ஆயினும் இத்தகைய தனித்துவ நிலை, இந்து நாகரிக ஆசிரியர் குழாத்தினால் எவ்வளவு தூரம் உணரப்பட்டுள்ளது என்பதும்உணர்ந்தோரால் எவ்வளவு தூரம் பின்பற்றப்படுகின்றதென்பதும் பற்றி கூர்ந்து அவதானிக்கும் போது ஏமாற்றமே எஞ்சி நிற்கின்றது.

மேலும், பாடத்திட்ட அடிப்படையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலர் பாடத்திட்டத்தை திருப்திகரமாகச் சுருக்கமாக முடிப்பதில் கவனஞ் செலுத்துகின்றனரே தவிர, குறிப்பிட்ட அலகுகள் பல்வேறு கோணங்களில் தேர்வுக்கு வருகின்றமையே உணர்ந்து அதற்கேற்ற விதத்தில் விரிவாக-ஒரு அலகையே பல்வேறு நோக்குகளில் - கற்பிப்பதிலே ஆர்வங் காட்டத் தயங்குகின்றனர். மறுபுறம் தனியார்கல்வி நிறுவனங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலர் G. A. Q. வகுப்பிற்குத் தேவையான - விரிவான - நோட்சுகளை A/L வகுப்பு மாணவர்கள் தலையிலே கட்டியடிக்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட ஆரோக்கியமற்ற சூழ்நிலையில், இந்து நாகரிக பாடத்திற்கென முழுமையான தனிநூல் இதுவரை வெளிவராதமையும், வெளிவரவேண்டிய அவசியமும் தெளிவாகின்றது. அது மட்டுமன்றி, இந்து நாகரிக பாடற்தொடர்பான கருத்தரங்குகளும் அவசியமாக வேண்டப்படுகின்றன என்பதில் ஐயமில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் ஏற்கும் தலைக்கடவுள்

வை. கா. சிவப்பிரகாசம் எம். ஏ. (கல்வி); எம். ஏ. (தமிழ்)
அதிபர், ஆசிரியர் கல்லூரி, கோப்பாய்

வாழ்க்கையில் மனச்செம்மையை வளர்த்துக்கொள்ள மிக உயர்ந்த நிலையில் எண்ணம், சொல், செயல் என்னும் மூன்றையும் ஒருமைப்படுத்த உதவும் வழி அல்லது நெறியே சமயம். அதனைத் திருநெறி, செந்நெறி என்று கூறல் தமிழ் வழக்கு. திருவள்ளுவர் தமது முப்பால் என்னும் திருக்குறளில் சமயம் என்ற சொல்லை எச்சந்தர்ப்பத்திலும் வழங்காவிட்டாலும் அதனைப் 'பொய்தீர் ஒழுக்கநெறி' என்று விதந்து கூறியுள்ளார். அதனால் சமயம் என்பது மக்கள் கடைப்பிடித்து ஒழுகுவதற்குரிய வழி என்றும் வள்ளுவர் கருதுவதாகக் கொள்ளலாம். இவ்வழி பொய்ம்மை நீங்கிய நெறி அதாவது உண்மை நெறி என்பது வள்ளுவர் கருத்து.

சமய வரலாற்றை ஆராய்ந்த சமயவியலாளர்கள் இயற்கைப் பொருள் வழிபாடு (*Animism*), ஆவி வழிபாடு (*Spiritism*), பொருட் புனித அல்லது போலியுருவ வழிபாடு (*Fetishism*), மூதாதையர் நினைவு வழிபாடு (*Ancestor Worship*), 'இனப்பொருள் வணக்கம் (*Totemism*) என்னும் போக்குகள் பண்டைக் காலத்தில் நிலவின என்பர். குல மரபு/இனக்குழுநிலை (*Tribal Stage*), தேசிய நிலை (*National Stage*), உலகநிலை அல்லது பொது நிலை (*Universal Stage*) என்னும் படிநிலைகளின் வழியே இறைவணக்கம் பல கடவுள் வழிபாடு (*Polytheism*), ஒருகடவுள் வழிபாடு (*Monotheism*), தலைக்கடவுள் வழிபாடு (*Henotheism*) என வளர்ந்தது என்பது சமயவியல் ஆய்வாளர் கருத்து.

உயிருள்ள பொருள்கள் உயிரில்லாப் பொருள்களின் வழிபாட்டு முறைகளின் எச்சசொச்சங்கள் திருக்குறளில் இலைமறை காய்போல இடையிடையே காணப்பட்டாலும் உலக / பொது நிலையில் முதன்மை பெறும் தலைக்கடவுள் வழிபாடே திருவள்ளுவரின் பொதுக்கொள்கை எனலாம். 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் முதற் குறட் கூற்றே வள்ளுவரின் பொதுக் கொள்கையைத் திட்ப நுட்பமாக இயம்புகின்றது.

திருக்குறளின் முதலதிகாரம் 'கடவுள் வாழ்த்து' என்று தலைமுறை தலைமுறையாக வழங்கி வருகின்றது. எனினும் திருவள்ளுவர் படைத்த முப்பாலில் கடவுள் என்னும் சொல் முதலாம் அதிகாரத்திலோ ஏனைய அதிகாரங்களிலோ அவரால் எங்கும் ஆளப்படவில்லை. 'தெய்வம் என்ற சொல்லை வள்ளுவர் முப்பாலின் ஏனைய அதிகாரங்களில் ஆண்டிருப்பினும் முதலாம் அதிகாரத்தில் அவர் கடவுளைத் தெய்வம் என்றும் குறிப்பிடவில்லை. ஆயினும் அவர் கடவுளை இறைவன் (5, 10) எனவும் 'பகவன்' (1) எனவும் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் 'பகவன்' என்னும் சொல் ஒரு சமயச்சார்பான சொல்லாட்சி என ஆய்வாளர் சிலர் கருதினும் பல சமய விளக்கங்கட்கும் இடந்தரும் பொதுச்சொல்லாட்சி என்று கொள்ளலே பொருந்தும்.

இவை தவிர (1) வாலறிவன் (2) மலர்மிசை ஏகினான் (3) வேண்டுதல் வேண்டாமையிலான் (4) ஐந்தவித்தான் (5) தனக்குவமையில்லாதான் (6) அறவாழியந்தணன் (7) எண்குணத்தான் என்னும் சொற்றொடர்களை தாம் ஏற்கும் தலைக் கடவுளின் சிறப்பியல்புகளை விளக்கும் தொடர்களாக வள்ளுவர் முதலாம் அதிகாரத்தில் ஆண்டுள்ளார். வள்ளுவர் ஏற்கும் தலைக்கடவுளின் சிறப்பியல்புகளைக் கூர்ந்து நோக்குவோம்.

வள்ளுவர் ஏற்கும் தலைக்கடவுள் காட்சிப் பொருள் ஆகிய உருவம் உள்வவர். சங்க காலத்தில் பெருவழக்குப் பெற்றிருந்த உருவ வணக்கம் திருவள்ளுவர் வரையறுக்கும் தலைக்கடவுள் வழிபாட்டு முறையிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெற்றது என்பதே இதன் பொருள். இத்தலைக்கடவுளின் உறுப்புக்களில் தாள் அல்லது அடியே சிறப்பு மிக்கது. அதனை நற்றாள் அல்லது மாணடி என அடை சேர்த்து வள்ளுவர் விதந்து கூறுகிறார். தலைக் கடவுளின் ஏனைய உறுப்புக்கள் பற்றி வள்ளுவர் வெளிப்படையாக ஒன்றும் கூற வில்லை. ஆயின் ஏற்புடைய தெய்வமான தலைக்கடவுள் 'தருமசக்கரம் தாங்கிய கர முள்ளவர்' என்று என்று அவர் கருதுவதை 'அறவாழி அந்தணன்' என்னும் தொடர் மூலம் ஊகிக்கலாம். அவ்வாறே அவர் ஏற் கும் தலைக்கடவுள் 'மலர்வாணன்' என்பதை 'மலர்மிசை ஏகினான்' என்னும் தொடர் உணர்த்துகின்றது.

காட்சிப் பொருளாம் தலைக்கடவுள் கருத்துப் பொருள் அல்லது அருவப்பொருளு மாவர் என்னும் தத்துவக் கருத்து வள்ளுவ ரின் கடவுட் கொள்கையில் முதன்மை பெறு விடினும் மறுக்கப்படவில்லை என்று கொள்ள லாம். முதற் குறளில் வரும் 'அகர முதல எழுத்தெல்லாம்' என்னும் எடுத்துக்காட்டு வமை கடவுள் நாத வடிவினர் அல்லது அரு வப்பொருள் என்னும் தத்துவக் கருத்தைக் குறிப்பாய் உணர்த்துகின்றது.

உருவம், அருவம் என்னும் இரு நிலைகளி லும் வழிபடுதற்குரிய தலைக்கடவுள் தெய்வ நிலைக்குரிய குணங்கள் பல உடையவர். எண்ணத்தக்க அல்லது சிந்திக்கத்தக்க பண்புகள் உள்ள காரணத்தால் வள்ளுவர் கடவுளை 'எண்குணத்தான்' என்கிறார் என் பது உரையாசிரியர் காளிங்கர் போன்ற சில ரின் கருத்து. எனினும் தலைக்கடவுள் எட்டுக் குணங்கள் உள்ள 'செம்பொருள்' என்பது வள்ளுவர் கருத்து எனல் பொருந்தும்.

கடவுளின் எண்ணத்தக்க பண்புகளை அல்லது எண்வகைக் குணங்களை உண்மை நிலை, இன்மை நிலை என்னும் இரு நிலைகளி லும் நோக்கி உடன்பாட்டு முகமாகவும் எதிர்மறை முகமாகவும் விளக்கலாம். இவ் விளக்கத்திற்குகந்த வழித்துணையாக குற ளின் உரையாசிரியர்கள் கூறும் கருத்துக்களை யும் வள்ளுவர் தமது குறட் பாக்களில் ஆண்ட சொற்றொடர்களையும் அட்டவணை வடிவில் தந்து சீர்தூக்குவோம்.

**சைவாகமக்கருத்து - பரிமேலழகர்** | **சமணக்கருத்து - பரிதியர்**

| உண்மை நிலை | இன்மை நிலை | உண்மை நிலை | இன்மை நிலை |
|---|---|---|---|
| 1. தன்வயம் | 1. பாசங்கள் | 1. அனந்தஞானம் | 1. நாமம் |
| 2. தூய்மை | | 2. அனந்தவீரியம் | 2. கோத்திரம் |
| 3. இயற்கையுணர்வு | | 3. அனந்தகுணம் | 3. அவா |
| 4. முற்றுமுணர்வு | | 4. அனந்ததெரிசனம் | 4. அழிவு (அழியாவியல்பு) |
| 5. அருள் - பேரருள் | | | |
| 6. ஆற்றல் - முடிவிலாற்றல் | | | |
| 7. இன்பம் - வரம்பில் இன்பம் | | | |

**வள்ளுவர் கருத்து**

| உண்மை நிலை | இன்மை நிலை |
|---|---|
| 1. தலைமை - 'ஆதி பகவன்' | 1. விருப்பு வெறுப்பு - வேண்டுதல் வேண்டாமை இலான் |
| 2. தூய்மை - 'வால் அறிவன்' | 2. அவா - ஐந்து அவித்தான் |
| 3. அறிவு/உணர்வு - 'வால் அறிவன்' | 3. ஒப்பு - தனக்கு உவமை இலான் |
| 4. அருள் - 'அந்தணன்' | |
| 5. புகழ் - பொருள்சேர் புகழ்' | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைக்கடவுளின் எண்குணங்களெனப் பரிமேலழகர் கூறும் சைவாகமக் கருத்தையும் பரிதியார் கூறும் சமணக் கருத்தையும் முதலாம் அதிகாரத்தில் வள்ளுவர் ஆண்ட சொற்றொடர்களையும் ஒப்புநோக்கும் போது பல பிரிவினர்க்கும் உரிய பொதுக் கருத்துக்களும் அவ்வப் பிரிவினரின் தனித் தன்மையைக் காட்டும் கருத்துக்களும் அவற்றில் அடங்கியுள்ளமை புலனாகும். இவற்றில் உண்மை நிலை என்னும் வகையைச் சேர்ந்த நான்கு குணங்களும் இன்மை நிலை என்னும் வகையைச் சேர்ந்த ஒன்றும் குறிப்பாகச் சிந்தித்தற்குரியன.

உண்மை நிலையைச் சேர்ந்த பண்புகளில் 'தலைமை' என்பது சிறப்பானது. முதற் குறளில் வள்ளுவர் 'உலகு ஆதி பகவன் முதற்று' என வரையறுத்துக் கூறும் கருத்து கடவுளின் உண்மையையும் அவரின் முதன்மையையும் யாவரையும் யாவற்றையும் தமது மேலாண்மையினுள் வைத்திருந்து இயக்கும் தலைமைப் பண்பினையும் விதந்து கூறுகின்றது. 'தன் வயத்தனாதல்' இறைவனின் பண்பு என்பது சைவாகமக் கருத்து என்று பரிமேலழகர் கூறுவதன் பொருளும் இதுவே. கடவுள் பிறரின்வயப்பட்டு இயங்குபவர் இல்லை அல்லது பரவயத்தன் ஆதல் இல்லை. எதிர்மறை முகமாகக் கூறும் இவ் விளக்கத்தை உடன்பாட்டு முகமாக உரைப்பதாயின் கடவுள் தன்னைத்தானே ஆள்பவர். இயக்குபவர் அல்லது தன்வயத்தன் ஆதல் என்னும் குணமுள்ளவர் எனலாம்.

இரண்டாவதாகக் கடவுள் 'தூய்மை' ஆகிய பண்புள்ளவர். இதனைத் 'தூய உடம்பினனாதல்' என்னும் சைவாகமக் கொள்கையாகப் பரிமேலழகர் எடுத்துக் கூறுகிறார். இதனைக் கடவுள் தூய்மையே வடிவானவர் என்று விளக்கலாம். ஆயின் தூய அறிவினர் கடவுள் என்பது வள்ளுவர் கருத்து. குணமாகவோ குணியாகவோ கடவுளைக் கருதினால் தூய்மையே அவரின் இயல்பு என்பது தெளிவு.

மூன்றாவதாக, அறிவு அல்லது உணர்வு என்னும் பண்புள்ளவர் கடவுள். இதனை ஞானம் என்றும் கூறலாம். இயல்பாய் அறிதல், முற்றும் அறிதல் என்பன இப்பண்பின் பரிமாணங்களாக விளங்குதலைச் சைவாகமக் கோட்பாடு ஏற்றுக்கொள்கின்றது. அதனால் இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல் என்பன கடவுளின் பண்புகளெனச் சைவாகமக் கொள்கையினர் சிறப்பாகக் கூறுகிறார்கள். கடவுள் இயற்கையுணர்வினர் அல்லது இயல்பாய் அறிபவர் என்பதன் கருத்து அவர் மெய், வாய், கண், மூக்கு செவி என்னும் பொறிகளின் பயன்பாடு இல்லாமல் இயல்பாய் அறிபவர் என்பதேயாம். ஆயின் மக்கள் ஐம்பொறிகளின் துணைபெற்று செயற்கையாய் அறிவதால் அவர் அறியும் முறை மக்கள் அறியும் முறையின் வேறுபடுகின்றது.

மேலும் கடவுளின் அறிவு. மக்களின் அறிவு என்பன அளவிலும் வேறுபடுகின்றன. மக்களின் அறிவு வரையறைக்கு உட்பட்டதாதலின் அதனைச் சிற்றறிவுஎன்பது சைவாகமக் கொள்கை ஆயின் கடவுளின் அறிவு எல்லைக்கு உட்பட்டதாகாமையின் அதனை முற்றறிவு என்பர் சைவாகமக் கொள்கையினர்.

கடவுளின் அறிவுப் பரிமாணம் பற்றிய வள்ளுவர் கருத்து வெளிப்படையாகவோ தெளிவாகவோ முதலாம் அதிகாரத்தில் அமையவில்லை. 'வாலறிவன்' என்னும் குறளாட்சித் தொடருக்கு விளக்கம் கூறும் காலிங்கர் 'வாலிமை என்பது வெண்மை; பெருமை என்றுமாம்' என்கிறார். அதனால் காலிங்கரின் சொற்பொருள் வரையறையின் அடிப்படையில் கடவுள் பேரறிவினர் என்பது வள்ளுவர் கருத்து எனலாம்.

நான்காவதாக, கடவுள் 'அருள்' என்னும் உயர்பண்புள்ளவர் என்பது சைவாகமக் கருத்து. இப் பண்பின் பெருமையை மதித்து அடைமொழி சேர்த்து' பேரருளுடைமை' என்பது கடவுளின் பண்புகளில் ஒன்று எனில் சைவ நூல் வழக்கு. இல்லறத்துக்குரிய பண்மாக 'அன்பு' என்னும் மன நெகிழ்ச்சியையும் துறவறத்துக்குரிய பண்பாக அதனினும் விரிந்த நெகிழ்ச்சியைக் குறிக்கும் 'அருள்' என்னும் குணத்தையும் வரையறுக்கும் வள்ளுவர் அறக்கடலான கடவுளுக்குரிய தெய்வப் பண்பாக 'அழகிய தண்ணளி' என்னும் மேதகு குணத்தை விதந்து கூறுகிறார். கட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுளின் அருள் ஒருசார் மக்களின் அருளின் வேறுபட்டு அழகும் தண்மையும் கொண்டிருக்குமே தவிர வெம்மையை ஒரு பரிமாண மாகக் கொள்ளவில்லை என்பது வள்ளுவர் கருத்து, அறக்கருணையைக் கடவுட் பண் பாக்கி மறக்கருணையை எடுத்துரைக்காது விடும் நுட்பத்தை 'அந்தணன்' என்னும் குறளாட்சிச் சொற்பொருள் மூலம் ஊகிக்க லா. 'அந்தணன்', 'அனைத்துயிர்கட்கும் அழகிய தண்ணளியை உடைவன்' என்னும் காலிங்கர் உரைவிளக்கம் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறத்தக்கது.

எண்வகைக் குணங்களில் உண்மைநிலை என்னும் பிரிவைச் சேர்ந்தனவாக முடிவில் ஆற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பவற்றையும் சைவாகமக் கருத்தாகப் பரிமேலழகர் குறிப்பிடுகின்றார். வள்ளுவர் இவற்றை ஏற்கின்றாரா என்பதும் ஏற்பின் அவற்றை எவ்வாறு குறளிற் புலப்படுத்து கின்றார் என்பதும் சிந்தித்தற்கு ரியன. சைவாகமங் கூறும் இயல்பாய் உணர்தல், முற்றுமுணர்தல் என்னும் குணங்களை இரண்டாகக் கூறாமல் 'வாலறிவன்' என் னும் தொடரில் ஒரே இறைமைக் குணமாக் கியது போல இறைவனுக்குரிய தலைமை என்னும் பண்பில் ஆற்றலையும் இணைத்து விட்டார் எனலாம், இவ்வாற்றலின் முடி வின்மை என்னும் சிறப்பை இறைவன் ஆற்ற லின் பயனாக மக்கள் அடையும் 'நீடுவாழ்வு' 'பிறவிப் பெருங்கடல் நீந்தல்' என்னும் பயன்கள் மூலம் வள்ளுவர் குறிப்பாய் உணர வைக்கிறார்.

சைவாசமக் கொள்கையினர் எடுத்துக் கூறும் 'வரம்பில் இன்பமுடைமை' என்னும் பண்பை 'இறைவன் இன்பவடிவினன்' இன்பகனமுடையான்' எனச் சைவச் சான் றோர் விரித்துக் கூறுவர். இக்கருத்தை வள்ளு வர் இறைமைக் குணமென வெளிப்படை யாக முதலாம் அதிகாரத்திற் கூறவில்லை.

தலைமை, தூய்மை, அறிவு, அருள் என்னும் பண்புகளின் வேறாகப் 'புகழ்' என் னும் சிறப்பும் பண்பும் கடவுளுக்கு உரியது என்பது வள்ளுவர் கருத்து. 'பொருள் சேர் புகழ்' என அதனை அடைபுணர்த்து சிறப் பிக்கின்றார் அவர், தலைமை முதலிய நான்கு பண்புகள் இறைவனிடம் அமைந்திருக்கும் அருமை காரணமாகவும் அவற்றின் விளை வாக உயிர்களுக்குக் கிடைக்கும் பயன்கள் காரணமாகவும் உருவானதே புகழ். இறைவ னின் அருஞ்செயல்களையும் அருட் செயல் களையும் கதைகளாக்கிப் பிற்காலப் பெரி யோர் இறைவனின் திருப்புகழைத் துதிப் பதைச் சமய நூல்களைப் படிப்போர் அறி வர். அத்தகைய சமயக் கதைகளைத் திரு வள்ளுவர் பலபடக் கூறுவிடினும் கடவுள் பொருள்சேர் புகழுடையவர் என்று சிறப் பித்துக் கூறுகிறார்.

'இன்மை நிலை என்னும் வகையிற் கட வுள் இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர் என்னும் கருத்தைச் சைவாகமவாதிகள் கூறு வர். பாசங்கள் இல்லாதவர் கடவுள் என் னும் கொள்கையை வள்ளுவர் விரித்து அவா அற்றவர் கடவுள் எனவும் விருப்பு வெறுப்பு இல்லாதவர் கடவுள் எனவும் கூறுகிறார். மெய்' வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் பொறிகள்மூலம் போகப் பொருள்கள் அல்லது விடயங்கள் மீது உண் டாவது அவா. இத்தகைய ஐவகைத் தோற்றமுள்ள அவா நீங்கியவரென்பதால் கடவுளை 'ஐந்தவித்தான்' என்கிறார் வள்ளு வர். இதே காரணத்தால் இறைவனைப் 'பற் றற்றான்' என மற்றோர் அதிகாரத்திற் குறிப் பிடுகின்றார்.

போகப் பொருள்கள் அல்லது விடயங் கள் மீது ஐம்பொறி வாயிலாக உண்டாகும் அவாக் காரணமாக அவற்றின்மீது விருப்பும் ஏற்படலாம் வெறுப்பும் உண்டாகலாம். இவ்விருப்பு வெறுப்புக்கள் இல்லாதவர் என் பதால் கடவுளை 'வேண்டுதல் வேண்டாமை யிலான்' என்கிறார் வள்ளுவர்.

தெய்வ நிலைக்குப் பொருத்தமான தலைமை, தூய்மை, அறிவு, அருள் என்னும் பண்புகள் அமைந்துள்ளமையால் கடவுள் பொருள்சேர் புகழ்' என்னும் சிறப்பு மிக்க வர் என விதந்து கூறியது போல மனித நிலைக்குரிய அவா, விருப்பு, வெறுப்பு என் பன இல்லாமையால் கடவுள் தமக்கு நிக ராக யாரும் இல்லாதவர் என வரையறுத்து 'தனக்குவமையில்லாதான்' இறைவன் என்று கூறுகிறார் வள்ளுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவப் பொருளாகவும் அருவப் பொருளாகவும் கருதப்படும் 'எண்குணத்தான்' புரியும் செயல்கள் யாவை என்பதை இப்போது நோக்குவோம். படைத்தல், காத்தல், அழித்தல் என மூன்றாகவும் படைத்தல், காத்தல்' அழித்தல். மறைத்தல், அருளல் என ஐந்தாகவும் மெய்யுணர்வியலார் கூறும் தொழில்களில் 'அருளல்' என்னும் தொழிலையே வள்ளுவர் இறைவனுக்குரிய முதன்மையான செயலாக மதிக்கிறார். இறைவனை முறையாக நாடுவோர் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' அவர்கள்பால் 'இருள்சேர் இருவினையும் சேரா' என்று வள்ளுவர் கூறும் கூற்றுக்கள் காத்தல் அல்லது அருளல் அல்லது காத்தருளல் கடவுளின் செயல் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. 'உலகு ஆதி பகவன் முதற்று' என்று கூறுவதால் உலகத் தோற்றம் அல்லது படைத்தல் என்பது கடவுளின் செயல் என வள்ளுவர் கருதுகிறார் எனலாம். ஆயின் அழித்தல் என்னும் தொழில் கடவுளுக்குரியதென வெளிப்படையாகவோ குறிப்பாகவோ வள்ளுவர் கூறவில்லை.

இத்தகைய கடவுளை உருவப்பொருள் என்னும் நிலையில் வணங்குதலே மக்களின் இலட்சியமாக வேண்டுமென்பது வள்ளுவர் கருத்து. மக்களின் முக்கிய உடலுறுப்புக்கள் உருவ வணக்கத்தில் ஈடுபடவேண்டுமென்னும் கருத்தைக் குறிப்பாயுணர்த்துமுகமாக 'எண்குணத்தான் தாளை வணங்காத் தலை குணமில' என்கிறார் வள்ளுவர். வேறு சொற்களிற் கூறுவதாயின் கடவுளைக் காணுக் கண்கள் போலவும் அவர் புகழ் கேளாச் செவிகள் போலவும் அவர் சிறப்புப் பேசா வாய்கள் போலவும் அவரை வணங்காத் தலைகளும் பயனற்றன என வள்ளுவர் கருதுகிறார்.

இறுதியாக, தலைக்கடவுளை வணங்குவதால் மக்கள் அடையும் இம்மை மறுமைப் பயன்கள் பற்றிய வள்ளுவர் கருத்துக்களை நோக்குவோம். கடவுளை வணங்குவோர் 'மனக்கவலை நீக்கம்', 'இருவினை விளைவு நீக்கம்' 'பிறவித் தொடர்ச்சி நீக்கம் ஆகிய பயன்களை இம்மையில் அடைவர். அவர்கள் மறுமையில் வீட்டு 'நிலமிசை நீடுவாழ்வார், அல்லது பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்பது வள்ளுவர் முடிவு. இப்பயன்களை அடையத் தொழுகை அல்லது வணக்கமே வழி என்றும் அவ்வழியே ஒழுகாவிட்டால் கற்றதனால் ஆய பயன் என்கொல்' என்றும், அறுதியாகவும் உறுதியாகவும் உரைக்கின்றார்.

### புறநானூற்றில் மக்கள் கடமை

ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்கு கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாளருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்கும் கடனே.

புறம்: 312

# நாயக்கர் கால இலக்கிய முயற்சிகள்

## — ஒரு மீள் பார்வை —

கலாநிதி துரை மனோகரன்
(தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஒவ்வொரு காலகட்டமும் ஒவ்வொரு வகையிற் தனித்துவம் பெற்று விளங்குகின்றது. அந்த வகையில் நாயக்கர் காலமும் குறிப்பிடத்தக்க பண்பமைதிகளையும்செல்நெறிகளையும் கொண்டு விளங்குகின்றது. பல்வேறு அம்சங்களில் பிற காலகட்டங்களினின்றும் வேறுபட்டதாகவும் அமைந்துள்ளது. சில அம்சங்களைப் பொறுத்தவரையில் முன்னைய காலகட்டங்களின் உச்சநிலையாகவும், வேறு சில அம்சங்களில் புதிய திருப்புமுனையாகவும் இக்காலகட்டம் அமைந்துள்ளது. அவை பற்றிய சில குறிப்புகளை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெருவலி பெற்றிருந்த சோழப் பேரரசு ஏறத்தாழ கி. பி. 13ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து பெருமை குறைந்து நலிவடையத் தொடங்கியது. சோழப் பேரரசன் 3ம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்திலே (கி. பி. 1178 –1218) சோழப் பேரரசுக்கு ஏற்படத் தொடங்கிய நலிவு, 3ம் இராசேந்திரன் (கி. பி. 1246–1279) காலத்தில் அப்பேரரசு வீழ்ச்சியுறுவதற்கு வழிகோலியது. சோழப் பெருமன்னரின் வீழ்ச்சியுடன் அவர்களின் பரம்பரையே தமிழ் நாட்டிலிருந்து தலைமறைவாகிவிடுவதனைக் காணலாம். 3ம் குலோத்துங்கனின் ஆட்சியினையடுத்து அதுவரை சோழப் பேரரசுக்கு அடங்கியிருந்த பாண்டியர்கள் தலையெடுக்கத் தொடங்கினர். தென்னிந்தியாவின் பல பகுதிகளையும் வென்றடக்கி, இரண்டாவது முறையாகத் தமது பேரரசுஒன்றினை நிறுவ முனைந்தனர். பாண்டியரின் அம்முயற்சியின் விளைவே, சோழப் பேரரசின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்ட இரண்டாவது பாண்டியப் பேரரசாகும். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் சிறப்புற்று விளங்கிய அப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர், சிறிதுகாலம் தமிழகத்தில் முஸ்லீம்களின் ஆட்சி நிலவியது. முஸ்லீம்களின் படையெடுப்புகள் தமிழகத்திற் பாண்டிய ஹொய்சள ஆட்சிகளை அழித்தமை மாத்திரமன்றி, அந்நாட்டின் சமயம், பண்பாடு, மற்றும் உள்ளூர் நிறுவனங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. இத்தகைய படையெடுப்புகள், இந்து சமயத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஆர்வத்தை இயல்பாகவே மக்களிடத்து ஏற்படுத்தின. ஒரு வகையில் இத்தகைய முயற்சிகள் இந்துப் பாரம்பரியத்தினையும் பண்பாட்டினையும் பாதுகாக்க அவாவுற்ற இயக்கம் போன்றே அமைந்தன. இத்தகைய இயக்க முறையிலான செயற்பாடுகளுக்குத் தென்னிந்திய மன்னரும் மக்களும் வீரசைவசமயத்தின் ஆதரவாளரும் பேராதரவினை நல்கினர். இதன் விளைவாக ஹரிகரன், புக்கன் ஆகிய இரு சகோதரர்கள் துங்கபத்திரை ஆற்றங்கரையினை அடுத்த நாடுகளைக் கைப்பற்றி, விஜய நகரம் என்னும் இடத்தினைத் தலைநகராகக் கொண்டு, கி. பி. 1336 இல் விஜயநகரப் பேரரசுக்கு வித்திட்டனர். காலப்போக்கிலே இவர்கள் தொடக்கி வைத்த அரசு வளர்ச்சி பெற்று, பலம்மிக்க தென்னிந்தியப் பேரரசாக விரிவாக்கம் பெற்றது.

ஹரிகரன் (கி.பி. 1336–1357) விஜய நகரத்தை ஆட்சி செய்த முதல் மன்னனாகவும், புக்கன் (கி. பி. 1357-1377) விஜயநகரப் பேரரசினை தென்னிந்தியாவின் பெரும்பகுதியை உள்ளடக்கி ஆட்சி செய்த பேரரசனாகவும் விளங்கினர். புக்கனின் ஆட்சியின்போதே அவனது மகனும் விஜயநகரப் பேரரசின் இளவரசனுமான குமார கம்பணனால் மதுரைச் சுல்தானியரின் ஆட்சி அகற்றப்பட்டது. மதுரைச் சுல்தானியரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் விஜயநகரப் பேரரசின் மேலாண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்கு உட்பட்டது. அத்தோடு, குமார கம்பணன் விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாகத் தமிழகத்தினை ஆட்சிசெய்தான்.

ஆயினும், நீண்டகாலம் விஜயநகரப் பேரரசால் நிலைத்து நிற்க முடியவில்லை. கி. பி. 1565 இல் தக்கணத்து முஸ்லீம் அரசுகளுக்கும், விஜயநகரப் பேரரசுக்குமிடையே நடைபெற்ற போரில், இப் பேரரசு வலுவிழந்தது. அக்காலகட்டத்திலிருந்து மதுரை நாயக்க அரசு, எஞ்சியிருந்த விஜயநகர மேலாண்மையை எதிர்ப்பதிலும், தஞ்சை நாயக்க அரசு அதனை ஆதரிப்பதிலும் ஈடுபாடு காட்டின. தமிழகத்தினைப் பொறுத்தவரையில், மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களே பெருஞ்சிறப்புப் பெற்றவர்களாக விளங்கினர்.

சோழராட்சியின் மறைவுக்குப் பின்னர், தமிழகத்தில் குழப்பமான அரசியல் நிலையே காணப்பட்டது. மதுரை நாயக்கரின் ஆட்சி சமயத்துறை சார்ந்த பண்பாட்டுக் கூறுகளைப் பேணி, ஓரளவாயினும் நல்லாட்சிக்கு வித்திட்டது உண்மையே. ஆயினும், சோழராட்சியின்பின் இரண்டாம் பாண்டியப் பேரரசினைத் தவிர்த்துப் பார்க்கும்போது, தமிழகத்தில் வலிமையான அரசு நிறுவப்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை. குழப்பங்களும், உட்பூசல்களும் அதிகரித்துக் காணப்பட்டன. இதனால், கி. பி. 17–ம் நூற்றாண்டினைத் 'தமிழகத்தின் போர்க்காலம்' என்று கூறத்தக்க அளவுக்குத் தொடர்ச்சியாகப் போர்கள் இடம்பெற்றன. இத்தகைய போர்களினால் தமிழகத்து மக்களின் வாழ்நிலை பாதிப்படைய நேரிட்டது. மேலும், படையெடுப்பாளராலும், ஆட்சியாளராலும் கோயில்கள் கொள்ளையடிக்கப்பட்டதோடு கொடும் பஞ்சங்களும், குழப்பங்களும் அந் நூற்றாண்டிற் பெரிதும் இடம்பெற்றன. வெளிநாடுகளினின்றும் அக்காலத்திலே தமிழகத்துக்கு வருகை புரிந்தோர் எழுதிய கடிதங்கள் தமிழகத்தின் சூழ்நிலையைத் தெளிவாக உணர்த்துகின்றன.

இவ்வாறு, அரசியல் நிலையில் உறுதிப்பாடு இன்றித் தமிழகத்திலே அமைதியற்ற நிலை அவ்வப்போது காணப்பட்டது. பொருளாதார நிலை சிறப்பற்றுக் காணப்பட்டமையால், நாட்டிற் பஞ்சமும், வறுமையும் தலைதூக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டு, அவற்றின் துன்பங்களை மக்கள் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது. அதேவேளையில் மன்னர்களதும், மக்களதும் சமயநிலைப்பாடு குறிப்பிடத்தக்கதாக விளங்கியது. இந்துசமயம் தொடர்பான பாதுகாப்பு உணர்வு பொதுவாகவே இக் காலகட்டத்திற் சகல மட்டத்திலும் காணப்பட்டது. இத்தகைய உணர்வினைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்த விஜயநகரப் பேரரசின் மேலாண்மை நிலவிய காலத்திலும், நாயக்க மன்னரின் ஆட்சியின்போதும் தமிழகத்தில் இந்துசமயம் புத்துயிர் பெறத் தொடங்கியது.

களப்பிரர் காலத்தில் சமயச்சார்பு தமிழிலக்கியத்தில் இடம்பெறத் தொடங்கிவிட்டதாயினும், பல்லவர் காலத்திலிருந்தே முழுமையான அளவுக்கு இத்தகைய சார்புத் தன்மை வளர்ச்சிபெறத் தொடங்கியது. இத்தகைய வளர்ச்சிநிலை நாயக்கர்கால இலக்கியங்களில் உச்சநிலை பெற்றிருப்பதனைச் சிறப்பாகக் காணமுடிகின்றது. தமிழகத்தில் விஜயநகரப் பேரரசின் மேலாண்மை நிலவிய காலத்திலும், நாயக்க மன்னரின் ஆட்சியின்போதும் இந்துசமயம் புத்துயிர் பெற்றமை, மக்கள் சமயத்துறையில் புதிய ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டத் துணையாகியது. இதனால் தமிழ் இலக்கியம் முன்னரை விடவும் இந்துசமயத்தில் பெரும் செல்வாக்குக்கு உட்படத் தொடங்கியது. வைதீகசமயங்களின் வளர்ச்சியோடு, அவை சார்ந்த தத்துவநூல்களும் இக்காலகட்டத்திற் பெருகின. இந்துசமயத்தை வளர்க்குமுகமாகத் தமிழகத்தில் மடங்களும், ஆதீனங்களும் அதிகரித்தன. சோழர் காலத்தைவிட அதிகமான அளவுக்குச் சமயச்சார்பு கொண்டவையாக இக்காலப் பகுதியில் தோன்றிய இலக்கியங்கள் விளங்கின.

சோழப் பேரரசின் காலம் முதலாக, ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பனியாரின் வருகை வரையிலே, தமிழகத்தில் நிலப்பிரபுத்துவம் சிறப்பிடம் பெற்று விளங்கியது. நிலப்பிரபுத்துவத்தின் வலுமிகுந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனமாகச் சமயம் அமைந்தது. சோழர் காலத்தின்பின் ஏற்பட்ட பல்வேறு அரசியல், பொருளாதார, சமய, சமுதாய நெருக்கடிகளினால் நிலப்பிரபுத்துவ அமைப்பு சீரழிந்து போகாமற் பேணவேண்டுமென்ற பெரும் பொறுப்பினை, உள்ளூர் நிலக்கிழார்களோடு, சமயத் தொடர்பான நிறுவனங்களும் ஏற்றுக்கொண்டன. நிலப்பிரபுத்துவத்தைப் பேணவேண்டுமெனில், சாதியமைப்பினைப் பாதுகாப்பது அவர்களது பொறுப்பாக இருந்தது. சாதியமைப்பினைப் பாதுகாப்பதெனில், அடிநிலையில் வாழும் தாழ்வுற்ற மக்களையும் மனநிறைவு கொள்ளச் செய்யவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பு, அடிப்படையில் வேளாண்மைப் பொருளாதாரத்திலேயே தங்கியிருந்தமையால், வேளாண்மையோடு தொடர்புடைய மக்களைப் பாத்திரங்களாகக் கொண்ட பள்ளு இலக்கியங்களும் தோன்றின. தமிழகத்தின் நிலப்பிரபுத்துவ நிறுவனமாக விளங்கிய சமயத்துக்குத் தூலவடிவம் கொடுத்துத் தாங்கி நிலைநிறுத்தியது கோயிலாகும். இதனாலேயே நிலப்பிரபுத்துவச் சமுதாய அடிப்படையைக் கொண்ட அக்கால இலக்கியங்கள் கோயில் சார்ந்த சூழலைத் தமது களமாகக்கொள்ள வேண்டியேற்பட்டது.

இதேவேளையில், தமிழர் சமுதாயத்தோடு தொடர்புடைய இன்னோர் அம்சத்தையும் மனங்கொளவேண்டியுள்ளது. களப்பிரர் காலத்திலிருந்தே தமிழரின் சமுதாய அமைப்பில் நால்வகை வருணப் பாகுபாடு புகத் தொடங்கிவிட்டது. பல்லவர் காலப் பகுதியில் ஏற்பட்ட சைவ - வைணவ சமயங்கள் சார்ந்த பக்தி இயக்கம், சாதி உணர்வுகளை ஓரளவு கட்டுப்படுத்தியிருந்தது. ஆனால் சோழப் பெருமன்னர் காலத்திலிருந்து தமிழர் சமுதாயத்திற் சாதியமைப்பு மேலும் இறுக்கமடையத் தொடங்கியது. விஜயநகரப் பேரரசின் காலத்தில், இந்நிலை சமுதாயத்தின் பிரிக்கவியலாத அம்சமாகிவிட்டது.

நாயக்கர் காலத்தைப் பொறுத்தவரையில், பிறிதொரு விடயமும் குறிப்பிடத்தக்கது தமிழர் சமுதாயத்தில் அடக்கி வைக்கப்பட்டிருந்த அடிநிலை மாந்தரது கிளர்ச்சிகளின் தோற்றுவாயைச் சோழர் காலத்திலே காணமுடிகின்றது. இவற்றைச் சோழர்கால இலக்கியங்கள் புறக்கணித்த போதிலும், நாயக்கர் காலத்துப் புதிய இலக்கிய கர்த்தாக்கள் ஓரளவு அவற்றை மனங்கொண்டனர்.

அதேவேளை, பலவகையிலும் குழப்பமும், சீரழிவும் காணப்பட்ட அக்காலச் சூழ்நிலையில், தமது கருத்துகளைப் பொது மக்களுக்கும் உணர்த்தவேண்டும் என்ற நோக்கமும் ஓரளவாயினும் இலக்கிய ஆசிரியர்களிடத்து ஏற்படத் தொடங்கியது. இதற்கு வாய்மொழி இலக்கியத்தின் பாதிப்பும் காரணமாயிற்று. வாய்மொழி இலக்கியம் முற்றுமுழுதாகப் பொதுமக்கள் சார்ந்த இலக்கியமென்பது குறிப்பிடத்தக்கது.

சோழ. பாண்டியப் பேரரசுகளின் பின்னர், அரசியலில் உறுதிப்பாடு இன்றி நிலைகுலைந்திருந்த தமிழகத்திற் குறுநில மன்னரும், தனிப்பட்ட வள்ளல்களும், செல்வாக்கு மிக்க தனிமனிதரும் புலவர்களின் பாட்டுடைத் தலைவராகும் போக்கினை அக்காலகட்டத்திற் காணமுடிகின்றது. இதனால் நாயக்கர் காலத்தில் காவியங்களின் வளர்ச்சி தடைப்பட, சிற்றிலக்கியங்கள் பெருவளர்ச்சி பெறும் நிலையினைக் காணமுடிகின்றது. சமயச் சார்பும், தனிமனித வழிபாடும் அதிகரிக்கத் தொடங்கவே, தெய்வங்களையோ, சிறுதலைவர்களையோ, பாட்டுடைத் தலைவராகக் கொண்டு சிற்றிலக்கியங்கள் அமையத் தொடங்கின, சோழர்காலச் சிற்றிலக்கியங்களில் பேரரசின் பாதிப்பு அமைந்திருக்க நாயக்கர் காலச் சிற்றிலக்கியங்களில் சமயச் சார்பும், தனிமனித வழிபாடுகளும் பெருகியிருந்தன. நாயக்கர் காலத்திற் பழையவையும் புதியவையுமாகப் பரணி, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், நான்மணிமாலை, மும்மணிக் கோவை, தூது, காதல்கோவை, அந்தாதி, சதகம் எனப் பல்வேறு சிற்றிலக்கியங்கள் பல்கிப் பெருகின. முன்னர் தோன்றியவையும், நாயக்கர் காலத்தில் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவையுமான இவையனைத் தி லு ம் நாயக்கர் காலத்து அம்சங்களின் பிரதி பலிப்பைக் காணலாம். எடுத்துக்காட்டாக பல்லவர் காலத்திலே தோன்றிய உலா, ஆரம்பத்தில் பக்திச்சார்பு பெற்று, சோழர் காலத்திலே அரசியற்சார்பு கொண்டு, நாயக்கர் காலத்தில் சமயச்சார்பு பெறுவ தனைக் காணலாம். சோழர் காலத்திலே தோன்றிய பரணி, பிள்ளைத்தமிழ் முதலா னவை. ஆரம்பத்தில் அரசியற்சார்பு, நாயக் கர் காலத்தில் சமய அடிப்படையிலான தத் துவச் சார்பு பெறுவதனைக் காணலாம்.

இத்தகைய சூழலிலேயே, சோழர் காலத்து இலக்கியங்களிற் காண்பதற்கு இய லாத பொதுமக்கட்சார்பு இலக்கியங்களான பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் முத லானவை தோன்றின. பிற சிற்றிலக்கியங்க ளிற் காணத் தகும் வகையிலே தெய்வங் களையோ, சிறு தலைவர்களையோ பாட் டுடைத் தலைவர்களாகக் கொண்டு, அவர் களது புகழ் பேசுதல், சமயச்சார்பு கொண் டிருத்தல் ஆகிய அம்சங்களை உள்ளடக்கி யிருப்பினும். இம்மூவகை இலக்கியங்களும் தம்மளவிலே தனித்துவம் மிக்கவையாக விளங்குவதைக் காணலாம். இவ்விலக்கியங் களிற் கிராமிய வாழ்வும், பொதுமக்கட்சார் பும், உலகியல் நோக்கும், சமய ஈடுபாடும் ஒருங்கு காணப்பட்டமை, பிற சிற்றிலக்கி யங்களினின்றும் இவற்றின் தனித்துவ இயல் பினை உணரச் செய்கின்றது.

பல்லவர் காலத்துப் பக்திநெறி வளர்ச்சி யின் விளைவாக, சோழப் பெருமன்னர் காலத்தில் சைவ, வைணவ சமயங்களுக் கான தத்துவ நெறிகளும் தோற்றம் பெறத் தொடங்கின. அவற்றின் வளர்ச்சி நிலை களை நாயக்கர் காலத்திலே காணலாம். குறிப்பாக, சைவசித்தாந்தத்தின் பெரு வளர்ச்சி நிலையினைக் குறிக்கும் தத்துவ நூல்கள் பல அக்காலகட்டத்தில் தோன் றின. இத்தகைய தத்துவ நூல்களில் ஒரு வகை, நேரடியாகத் தத்துவக் கருத்துக் களைக் கூறுவனவாகவும், பிறிதொருவகை அக்கருத்துகளைக் கதைகள் வாயிலாக விளக்குவனவாகவும் அமைந்தன.

தமிழ் மன்னராட்சி நிலவிய பேரரசுகள் மங்கிப் பழங்கதைகளாகப்போன காலகட் டத்தில் பழமை தொடர்பான மீட்டெடுப்பு அல்லது புத்துயிர்ப்பு தோன்றவேண்டிய நிலை ஏற்பட்டது. பழமையைப் பேணும் பெருமுயற்சி இக்காலகட்டத்தில் செயற் படுத்தப்படத் தொடங்கியது. இத்தகைய பழமை மீட்டெடுப்பை பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களுக்கான உரைகள் வாயிலாக இக்காலத்து உரையாசிரியர்கள் செயற் படுத்த முயன்றனர். எட்டுத்தொகை, பத் துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம். சீவகசிந்தாமணி முதலிய இலக்கியங்களுக் கும், தொல்காப்பியம் முதலான இலக்கணங் களுக்கும் உரை செய்வதில் ஆசிரியர் பலர் உழைத்தனர்.

நாயக்கர் காலப் பகுதிக் கட்டிடக்கலை அமைப்புக்கும், அக்கால இலக்கியங்களின் அமைப்புக்குமிடையே ஓர் ஒற்றுமையைக் காணலாம். அக்காலக் கட்டிடக்கலை அமைப்பில், சோழர் காலக் கட்டிடக்கலை அமைப்பை விடவும் நுணுக்க வேலைப் பாடுகள் அதிகமாக உள்ளன. அதைப் போன்றே, இலக்கிய அமைப்பிலும் கற்பனா சக்தி, கல்வியறிவு, புத்திசாதுரியம் முதலா னவற்றைக் கொண்டு பொருளறிய வேண் டிய முறையில் சொற்கள், சொல்லாட்சி களைக் கவிஞர் அமைத்தனர். சந்தச்சிறப்பு, சொல்லலங்காரம் முதலானவற்றில் தீவிர மாக இறங்கி, உள்ளடக்கத்தில் ஆழ அக் கறை செலுத்தாத நிலையும் காணப்பட் டது. சிலேடை, யமகம். திரிபு, மடக்கு, சித் திரகவி முதலானவற்றில் அரும்பொழுதைச் செலவிட்டு, கவித்துவத்தில் கவனம் செலுத் தாதும் கவிஞர் இயங்கினர்.

சங்க காலத்திலிருந்து வடசொற்கள். வடநூற் கருத்துக்கள் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறத் தொடங்கி, படிப்படியாக ஊடுருவிவிட்டன. இதன் உச்ச நிலையை நாயக்கர் கால இலக்கியங்களிற் காணமுடி கின்றது. விஜயநகரப் பேரரசரும், நாயக்க மன்னரும் வடமொழியைப் பெருமளவு போற்றியதனாலும், தத்துவநூற் கருத்துக் கள் வளர்ச்சி பெற்றமையாலும், சமயச் சார்பின் அடிப்படையிலான புராணக்கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், இதிகாசக் கதைகள், கருத்துகள் முன்னரைவிடப் பெருமளவில் அறிமுகப்படுத்தப் பட்டதனாலும், கவிஞர்கள் வடமொழிச் சந்தங்களையும், பிறவற்றையும் தமிழிற் பயன்படுத்தியமையினாலும் வடமொழிச் செல்வாக்கு தமிழ் மொழியைப் பாதிக்குமளவுக்கு மிகுந்தது.

நாயக்கர் காலத்து அரசியற் பொருளாதாரச் சூழ்நிலைகள் இலக்கியவாதிகளுள் ஒருசாரரை விரக்தியுறச் செய்தமையை அவதானிக்க முடிகின்றது. அதன்விளைவாக வசைக் கவியும் இக்காலகட்டத்தில் வளர்ச்சியுற்றமையைக் காணமுடிகின்றது. 'வசை பாடக் காளமேகம்' என்று பெயர் பெற்ற கவிஞர் மட்டுமன்றி, இரட்டையர். அந்த சுக்கவிவீரராகவ முதலியார் முதலான வேறு கவிஞர்களும் வசைக்கவிகள் பலவற்றைப் பாடியுள்ளனர். இத்தகைய வசைக்கவிகளும் நாயக்கர்கால இலக்கியப் போக்கை உணர்ந்துகொள்ளத் துணைசெய்கின்றன.

---

## சங்க நாதம்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,
இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே!

திங்களொடு செம்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமிழுடன் பிறந்தோம்
நாங்கள், ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு ஞாபகம்செய்
முழங்கு சங்கே!

சிங் களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென் றூதூது சங்கே!
பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிஜமெனச் சங்கே முழங்கு!

வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள்
வெற்றித் தோள்கள்
கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறுமுள்ளம்
எங்கள் உள்ளம்
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய் கின்றதமிழ்
எங்கள் மூச்சாம்! (எங்)

— பாரதிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமானச் செலவுக் கணக்குகள்

ஆ. ஜெகநாதன் *B. Com. (Hons)*
*வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை*

வியாபார நிறுவனங்கள் குறிப்பிட்ட நிதியாண்டு முடிவில் தம் இலாப நட்டத்தைக் கணிப்பதற்காக முடிபுக் கணக்குகளைத் தயாரிப்பது போன்று வியாபார நோக்கமற்ற, இலாபமீட்டுவதை நோக்கமாகக் கொள்ளாத விளையாட்டுக் கழகங்கள், நலன்புரிச் சங்கங்கள், தொழிற்சங்கங்கள், வாசிகசாலைகள் போன்றன தயாரிக்கும் கணக்குகள் வருமானச் செலவுக் கணக்குகள் எனப் பெயர் பெறுகின்றன. மேற்படி கணக்கைத் தவிர கொள்ளல் கொடுத்தல் கணக்கு ஐந்தொகை என்பவற்றையும் இவை தயாரிக்கின்றன.

## கொள்ளல் கொடுத்தல் கணக்கு

நிறுவனத்துக்குக் கிடைக்கும் பணம் அதன் மூலம் நடைபெறும் சகல நடவடிக்கைகளும் இதில் இடம்பெறும். வியாபார நிறுவனங்களில் காசு நடவடிக்கைகளைப் பதிவதற்கு பயன்படுத்தப்படும் காசேட்டை ஒத்ததாக இது அமையும். பின்வரும் விபரங்கள் பதியப்படும்.

அ) ஆரம்ப காசு மீதி, வங்கி மீதிகள், இறுதிக் காசு மீதி, வங்கி மீதிகள் கீழ் கொண்டு வரப்படும்.

ஆ) குறிப்பிட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற சகல காசு நடவடிக்கைகளும் பதியப்படும்.

இ) முற்பணமாகக் கொடுத்தவை, முற்பணமாகப் பெற்றவை யாவும் இக்கணக்கில் இடம்பெறும்.

## வருமானச் செலவுக் கணக்கு

கொள்ளல் கொடுத்தற் கணக்கை தயாரிப்பதனுல் குறிப்பிட்ட கால முடிவில் உள்ள காசு வங்கி மீதிகளை அறியலாமே தவிர அக்காலப்பகுதியில் ஏற்பட்ட செலவுகளையும் வருமானங்களையும் வகுத்துக் காட்டமுடியாது. மேலும் கொடுக்க வேண்டிய, பெற வேண்டிய செலவுகள் வருமானங்களை அறியமுடியாது. எனவே வருமானமா அல்லது செலவினமா அதிகமாகவுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள வருமானச் செலவுக் கணக்கு என்ற ஒரு கணக்கைத் தயாரிக்க வேண்டியுள்ளது. இது வியாபார நிறுவனத்தில் தயாரிக்கப்படும் இலாப நட்டக் கணக்கை ஒத்தது.

பின்வரும் விபரங்கள் இக்கணக்கில் பதியப்படும்.

அ) குறிக்கப்பட்ட காலத்துக்குரிய பெற்ற, பெறவேண்டிய வருமானங்கள் செலவும் பக்கத்தில் பதியப்படும்.

ஆ) குறிக்கப்பட்ட காலத்துக்குரிய கொடுத்த. கொடுக்க வேண்டிய செலவுகள் வரவுப் பக்கத்தில் பதியப்படும்,

இ) வருமானம் கூடுதலாக இருப்பின் (செலவுப் பக்கம்) செலவிலும் கூடிய வருமானம் எனப் பதியப்படும்.

ஈ) செலவுகள் கூடுதலாக இருப்பின் (வரவுப் பக்கம்) வருமானத்திலும் கூடிய செலவு எனப் பதியப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தொகை

வியாபார தாபனங்களின் நிதி நிலைமையைப் படம் பிடித்துக் காட்டுவது ஐந் தொகை. இதில் சொத்துக்களும், பொறுப்புக்களும் காட்டப்படும். அதேபோல் இலாப நோக்கற்ற தாபனங்களும் ஐந்தொகையை தயாரித்து நிதி நிலைமையைக் காட்டும் .இங்கு ஐந்தொகையில் எதுவித வேறுபாடும் இல்லை. மூலதனமானது திரண்ட நிதி என்ற பெயரில் இடம்பெறும்.

மேற்கூறிய கணக்குகள் தவிர பின்வரும் கணக்குகளும் அறிக்கைகளும் தயாரிக் கப்படுகின்றன.

அ) திரண்ட நிதிக் கணக்கு
ஆ) அங்கத்தவர் பணக் கணக்கு (சந்தா)
இ) விசேட நிதியக் கணக்கு

## திரண்ட நிதிக் கணக்கு

இது மூலதனத்திற்கு ஒப்பானதாகும். இங்கு உரிமையாளரிடமிருந்து மூலதனமா கப் பணம் திரட்டப்படுவதில்லை. அங்கத்தவர்களின் சந்தாப் பணம் மூலம் பணம் திரட்டப்படுகிறது, அவர்கள் ஒவ்வொரு காலப் பகுதியிலும் தொடர்ந்து சந்தாவை செலுத்திய வண்ணமிருப்பர். பொதுவாக வருமானத்திற்கு மிஞ்சிய செலவுகள், அல் லது செலவுக்கு மிஞ்சிய வருமானம் தாக்கங்களை ஏற்படுத்தும், பொதுவாகக் கணக்கு களில் ஆரம்ப நிலையைக் கூற்றுக்களிலிருந்து (ஆரம்ப ஐந்தொகையில் சொத்துக்கள் பொறுப்புக்கள்) கணிப்பிடப்பட்டு திரண்ட நிதி கணிப்பிடப்படும்.

திரண்ட நிதி ஐந்தொகையில் மூலதனம் போன்று காட்டப்படும்.

## அங்கத்தவர் பணக் கணக்கு (சந்தா)

இந்நிறுவனங்களில் பிரதான வருமான மூலமாக அமைவது சந்தாப் பணம் ஆகும். இதற்கெனத் தனியாக இடாப்பும், பற்றுச்சீட்டுப் புத்தகங்களும் பேணப்பட்டு பதிவு கள் ஒழுங்காக இடம்பெறச் செய்தல் வேண்டும்.

சந்தாப் பணமானது பல முறைகளில் அறவிடப்படலாம், மாதாந்த அல்லது காலாண்டுக்கு ஒருமுறை அல்லது அரையாண்டுப் பகுதிகளில் அல்லது வருடம் ஒரு முறை சந்தா அறவிடப்படலாம்.

## ஆயுட் காலச் சந்தா

சில அங்கத்தவர்கள் குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி ஆயுட்காலச் சந்தா தாரர்களாக இருப்பதுண்டு, இந்நிலையில் அவர்களின் சீவிய காலம் முழுதும் வருடம் வருடம் வருமானமாகக் காட்டப்படல் வேண்டும். ஆனால் இது நடைமுறைவில் சாத் தியப்படாது. எனவே சந்தா சிறிய தொகையாயின் முழுவதையும் அவ்வருட வருமானச் செலவுக் கணக்கில் வருமானமாகக் காட்டப்படும்.

தொகை பெரிதாக அமையின் குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட தொகையை வருமானமாகக் காட்டி மிகுதியை ஐந்தொகையில் பரிப்புக்கள் பக்கத்தில் முடிவுரு சந்தா என்ற தலைப்பில் பொறுப்பாகக் காட்டப்படும்.

கணக்கியல் பரீட்சைகளில் சந்தாக் கணக்குகள் தனியாகச் செய்கையில் இடம் பெறச் செய்தல் அவசியம். ஏனெனில் குறிப்பிட்ட காலப்பகுதியில் அக்காலப் பகுதிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரிய அங்கத்தவர்கள் யாவரும் தம் சந்தாவைச் செலுத்தியிருக்க மாட்டார்கள். சென்ற காலப் பகுதியில் செலுத்தப்படாமல் இருப்பதுவும், அவர்களுட் சிலர் இக் காலத்துள் செலுத்துவதும், இக் காலப் பகுதிக்குரிய சந்தாவை ஏலவே சென்ற காலப் பகுதியில் முற்கூட்டியே செலுத்தியிருப்பதுவும், இனி வரும் காலப் பகுதிக்குரியதை இக்காலப் பகுதிக்குள் செலுத்தியிருப்பதுவும் சிக்கலான நிலைமைகளைத் தோற்றுவித்து வருமானக் கணிப்பில் மாணவர்களுக்கு இடர்களை ஏற்படுத்தும். எனவே பின்வரும் சில உதாரணக் கனக்குகளூடாக அவற்றை விளக்க முற்படுவோம்.

உ+ம்; I; கழக அங்கத்தவர்கள் 500. சந்தா மாதம் 5/-

குறிப்பிட்ட ஆண்டு 1980
பெற்ற சந்தா 28000/- இதில்
1981க்கு உரியது 3000/-
சந்தாப் பணத்தைத் தயாரிக்குக.

விடை;-

| | | |
|---|---|---|
| 1980க்குரிய சந்தா | 500×5×12 | 30000 |
| 1980ல் பெற்றது | 28000 | |
| இதில் 1981க்குரியது(மு.ப) | 3000 | |
| ∴ 1980 க்குரியது | | 25000 |
| 1980ல் பெறவேண்டியது (நிலுவை) | | 5000 |

சந்தா கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வருமானச் செலவுக் க/கு | 30000 | கொள்ளல் கொடுத்தல் | 28000 |
| முற்பணம் | 3000 | நிலுவை | 5000 |
| | 33000 | | 33000 |
| நிலுவை | 5000 | முற்பணம் | 3000 |

சந்தா க/குல் செலவு மீதி முற்பணச் சந்தாவையும் வரவு மீதி பெறவேண்டிய நிலுவை சந்தாவையும் காட்டுகின்றன.

இங்கு அடுத்த வருடத்திற்குரிய வருமானம் இவ் வருடத்தில் பெறப்பட்டுள்ளது. இது முற்பணம் இரு ஒரு பொறுப்பு. எனவே செலவு மீதியாகப் பிரதிபலிக்கிறது.

இதே போல் பெறவேண்டிய வருமானமாகிய சந்தா நிலுவைச் சந்தா இது வரவு மீதியாகப் பிரதிபலிக்கிறது,

எனவே ஐந்தொகையில் முற்பணச் சந்தா பொறுப்பாகவும் நிலுவைச் சந்தா சொத்தாகவும் காட்டப்படும்.

உ—ம் II அங்கத்தவர் 500 மாதச் சந்தா 5/-

நிதி ஆண்டு 1980
1980-ல் பெற்றது 28000/
1981-க் குரியது 3000/-
1979க்-குரியது 2000/-

சந்தாக் கணக்கைத் தயாரிக்குக

குறிப்பு: சென்ற வருடம் வரவேண்டிய சந்தா முழுவதும் இவ்வருடம் பெறப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 1980க்குரிய சந்தா | | 500 × 12 × 5 | = | 30-000 |
| 1980ல் பெற்றது | | 28000 | | |
| 1981 க்குரியது | 3000 | | | |
| 1079 க்குரியது | 2000 | (5 000) | | |
| | | 23000 | | (23000) |
| 1980 ல் நிலுவைச் சந்தா | | | | 7000 |

நிலுவைச் சந்தாக் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 2000 | சந்தா | 2000 |
| சந்தா | 7000 | | |

சந்தாக் க/கு

| | | | |
|---|---|---|---|
| வருமானச் செலவு க/கு | 30000 | கொள்ளல் கொடுத்தல் | 28000 |
| முற்பணச் சந்தா | 3000 | நிலுவைச் சந்தா | 7000 |
| 1979ல் நிலுவைச் சந்தா | 2000 | | |
| | 35000 | | 35000 |

உதாரணம் III

1979ல் மீதிகள்

| | |
|---|---|
| நிலுவைச் சந்தா | 4000/ |
| முற்பணச் சந்தா | 3000/- |
| 1980ல் பெற்றது | 29000/- |
| இதில் 1979 க்குரியது | 3000/- |
| இதில் 1981 க்குரியது | 2000/- |

நிதி ஆண்டு 1980

அங்கத்தவர் தொகை 500 மாதச்சந்தா 5/-

விடை

| | | | |
|---|---|---|---|
| இவ்வருட 1989 க்குரிய சந்தா | | | 30000 |
| 1980ல் பெற்ற தொகை | | 29000 | |
| 1979 க்குரியது | 3000 | | |
| 1981 க்குரியது | 2000 | (5000) | |
| | | 24000 | |
| 1979ல் பெற்ற முற்பணச் சந்தா | | 3000 | (27000) |
| 1980 க்குரிா நிலுவைச் சந்தா | | | 3000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலுவைச் சந்தா க / கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 4000 | சந்தா | 3000 |
| சந்தாக் க / கு | 3000 | மீதி கீ/கொ/செ | 4000 |
| | 7000 | | 7000 |
| மீதி கீ/கொ/வ | 4000 | | |

முற்பணச் சந்தாக் க / கு

| | | | |
|---|---|---|---|
| சந்தாக் க/கு | 3000 | மீதி | 3000 |
| | | சந்தா | 2000 |

சந்தாக் க / கு

| | | | |
|---|---|---|---|
| வருமானச் செலவுக் க/கு | 30000 | கொள்ளல் கொடுத்தல் | 29000 |
| நிலுவைச் சந்தா | 3000 | முற்பணச் சந்தா | 3000 |
| முற்பணச் சந்தா | 2000 | நிலுவைச் சந்தா | 3000 |
| | 35000 | | 35000 |

## விசேட நிதிக்கணக்கு (நன்கொடை)

விசேட நோக்கங்களுக்காக நிதியங்களை ஏற்படுத்துவதுண்டு. உதாரணமாக விளையாட்டு மைதானத்துக்கான நிதியம் கட்டட நிதியம் போன்றவை.

குறித்த நடவடிக்கைகள் முடிவடைந்தபின் மீதி இருப்பின் இது திரண்ட நிதியில் சேர்க்கப்படும்.

## மரண சாசனத்தினுல் கிடைக்கப் பெற்றவை:

சில அங்கத்தவர்களோ ஆதரவாளர்களோ மரண சாசனம் எழுதி கழகங்களுக்கு பணம் அல்லது சொத்துக்களை அன்பளிப்பு செய்யலாம்.

பணமாகக் கிடைத்தால்

| | | |
|---|---|---|
| கொள்ளல் கொடுத்தல் க / கு | வரவு | |
| திரண்டநிதிக் கணக்கு க / கு | | செலவு |

சொத்தாகக் கிடைத்தால்

| | | |
|---|---|---|
| சொத்துக் க / கு | வரவு | |
| திரண்டநிதிக் க / கு | | செலவு |

## ஏனைய கணக்குகள்

சில சங்கங்கள் கழக அங்கத்தவர்களின் நன்மை கருதி தேனீர்ச்சாலைகள், போசன சாலைகள் மதுபானசாலைகள் போன்றவற்றை நடாத்தலாம். இந்நிலையில் இக்கணக்குகள் தனியாக கணக்கு வைக்கப்பட்டு இலாப நட்டங்கள் கணிப்பிடப்பட்டு வருமானச் செலவுக் கணக்கிற்கு மாற்றப்படும்.

மேலும் வருமானத்தை ஈட்டுவதற்காக விசேட நடவடிக்கைகள் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக இசை நிகழ்ச்சிகள், சினிமாக் காட்சிகள், நாடகங்கள் போன்றவற்றை நடாத்தி நுழைவுக் கட்டணங்களை அறவிட்டு செலவுகள் போக மீதி வருமானங்கள் வருமானச் செலவுக் கணக்கிற்கு கொண்டு செல்லப்படும்.

## கணக்குகளைத் தயாரித்தல்

1. ஆரம்ப ஐந்தொகையைத் தயாரித்து திரண்ட நிதியைக் கணிப்பிடல் வேண்டும்.
2. ஆரம்ப இறுதி மீதிகள் தரப்பட்டிருப்பின் அவற்றைக் கவனத்தில் கொண்டு கொள்ளல் கொடுத்தல் கணக்கையும் அவதானித்து சந்தாக் கணக்கைத் தயாரித்தல் வேண்டும்.
3. வேறு வருமானங்கள் ஏதாவது ஈட்டியிருப்பின் உதாரணமாக மதுபானசாலை வியாபாரம். சிற்றுண்டிச்சாலை வியாபாரம் போன்றவற்றின் விபரங்களைக் கவனத்திற் கொண்டு அவற்றுக்கான தனியான கணக்குகளைத் தயாரித்து இலாப நட்டங்களைக் கணித்து வருமானச் செலவுக் கணக்கில் பதிதல் வேண்டும், இக்கணக்குகளை தயாரிக்கும் போது சில சமயங்களில் விற்பனை அல்லது கொள்வனவைக் கணிக்கவேண்டி ஏற்படும். இந்நிலையில் கடன்பட்டோர் கணக்கு, கடன் கொடுத்தோர் கணக்கு போன்றவற்றைத தயாரிக்க நேரிடும்,
4. கொள்ளல் கொடுத்தல் கணக்கிலிருந்தே அதிகமான தகவல்கள் இடம்மாற்றப்படுகின்றன. பொதுவாக கொள்ளல் கொடுத்தல் க/கு இன் செலவுப் பதிவுகள் வரவிலும் வரவுப் பதிவுகள் செலவிலும் வருமானச் செலவுக் கணக்கில் பதியப்பகின்ற போதும் சில பதிவுகள் வருமானச் செலவுக் க/கு இல் பதியப்படலாகாது.
   அவை வருமாறு:
   (அ) ஆரம்ப மீதி ஆரம்ப ஐந்தொகையில் இடம்பெறும்.
   (ஆ) சென்ற காலத்துக்குரிய வருமானங்கள் எதுவும் பெறப்பட்டால் அல்லது அடுத்த வருடத்துக்குரிய வருமானங்கள் எதுவும் முற்பணமாகப் பெறப்பட்டிருந்தால் கொள்ளல் கொடுத்தல் க/கு ல் வரவில் இடம்பெறும். ஆனால் அவ்வருட வருமானச் செலவுக் க/குல் இடம்பெறாது.
   (இ) சொத்துக்களை விற்றுப் பெற்ற பணம் அல்லது சொத்துக்களைக் கொள்வனவு செய்து செலவு வைத்த தொகைகள் வருமானச் செலவுக் க/குஇல் இடம் பெறாது.
   (ஈ) சென்ற காலத்துக்குரிய கொடுக்க வேண்டிய செலவுகள் அல்லது அடுத்த வருடத்திற்கான ஏதாவது முற்பணங்கள் கொடுக்கப்பட்டிருப்பின் கொள்ளல் கொடுத்தல் க/கு இல் இடம்பெறும். இது வருமானச் செலவுக் க/கு இல் இடம் பெறும்.
5. இக்காலப் பகுதிக்குரிய வருமானங்கள் யாவும் காசாகப் பெற்றவையும் பெறுதவையும் அதே போன்று இக்காலப் பகுதிக்குரிய செலவுகள் காசாகக் கொடுத்தவையும் கொடுக்க வேண்டியவையும் வருமானச் செலவுக் க/குல் இலாப நட்டக் க/கு ஐப் போன்று இடம்பெறச் செய்தல் வேண்டும்,
6. ஆரம்பத்திலும் இறுதியிலுமுள்ள மீதிகளை அதாவது கொள்ளல் கொடுத்தல் க/கு ஐ அவதானித்து சொத்துக்கள் பொறுப்புக்களைக் கருத்திற்கொண்டு வியாபார தாபனம் ஒன்றின் ஐந்தொகையைத் தயாரிப்பது போல் ஓர் ஐந்தொகையைத் தயாரிக்க வேண்டும். வருமானச் செலவுக் க/கு செலவிலும் கூடிய வருமானமெனில் (இலாபம்) திரண்ட நிதியுடன் கூட்டப்படும். வருமானத்திலும் கூடிய செலவாயின் (நட்டம்) திரண்ட நிதியிலிருந்து கழிக்கவேண்டும்,

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வியாபாரம்

ஆ. சிவநாதன் *(B. A. Hons)*

## தோற்றம்

ஆரம்பகால மனிதனின் தேவைகள் குறைவாக இருந்தமையால் தனது தேவைகளைத் தானே பூர்த்திசெய்து கொண்டான். அக்காலத்தில் சனத்தொகையும் குறைவாக இருந்தமையால் தனது தேவைக்கு மேலதிகமாக உற்பத்தி செய்தவற்றை வேறோர் சமூகத்துக்கு பண்டமாற்று முறையில் மாற்றிக் கொண்டதன் மூலம் திருப்தி அடைந்தான். ஆனல் பின்னர் பண்டமாற்று முறையில் பலசிக்கல்கள் ஏற்பட்டபோது பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு பணத்தைப் பயன்படுத்தும் முறை ஆரம்பித்ததுடன் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை இலகுபடுத்தப்பட்டது. இத்தகைய கொடுக்கல் வாங்கல் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் கட்டுப்படுத்தப்பட்டபோது அது உள்நாட்டு வர்த்தகம் என அழைக்கப்பட்டது. ஆனல் உணவுப் பொருள்கள் கைத்தொழிற் பொருட்கள் சேவைகள் ஆகியவற்றை ஒருநாட்டில் பெற்றுக்கொள்ள முடியாதபோது வேறுநாடுகளிலிருந்து பணங் கொடுத்தோ பண்டமாற்ருகவோ பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்ட போது வெளிநாட்டு வியாபாரம் தோன்றிற்று எனலாம். இதனைக் குறித்த நாட்டிற்கும் ஏனைய சர்வதேச நாடுகளுக்குமிடையில் ஏற்படும் பொருட்கள் சேவைகளின் பாச்சல் பொருளாதார நலனை உயர்த்துதல் என்னும் அடிப்படை நோக்கத்துடன் ஆரம்பமாகியது என பொருளியலாளர்கள் குறிப்பிடுவர்.

சர்வதேச வர்த்தகம் ஆரம்பமாவதற்கான காரணங்களை ஆராய்ந்தவர்களில் அடம்சிமித் *(Adam smith)*, றிக்காடோ *(Ricardo)*, காபேலர் *(Haberler)* போன்றவர்கள் முக்கியமானவர்களாவர். இவர்களுள் அடம்சிமித்தின் முழுநயக்கோட்பாடு வர்த்தகக் கோட்பாட்டில் மிகப் பழமையானதாகும். பின்னர் 1817-ம் ஆண்டு றிக்காடோ என்ற பொருளியலாளர் அரசியல் பொருளாதாரக் கோட்பாடு என்ற நூலில் ஒப்பீட்டு நயவிதி என்பதை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படையை விளக்குகிருர். காபேலர் என்ற பொருளியலாளர் 1936-ம் ஆண்டு அமையச் செலவின் அடிப்படையில் *(The Opporlunity Cost Theory)* வர்த்தகக் கோட்பாட்டினை முன்வைத்தார். இக் கோட்பாடுகளுக்கான அடிப்படையான எடுகோள்கள் பின்வருமாறு.

1. இரண்டு நாடுகள் இரண்டு பொருட்களை மாத்திரம் உற்பத்தி செய்கின்றன.
2. ஒரே அளவு தொழிற்பயிற்சியுடைய தொழிலாளர் மாத்திரம் உற்பத்திக் காரணியாக உள்ளனர்.
3. ஊழியப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு பொருளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு பொருட்கள் பரிமாற்றப்படுகின்றன.
4. இரண்டு நாடுகளுக்கிடையே காரணிகள் நகர்வதில்லை. குறிப்பிட்ட நாட்டிற்குள் தடையற்ற காரணி நகர்வு உள்ளது.
5. இரண்டு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் அரசாங்க அல்லது வர்த்தகக் கட்டுப்பாடுகள் என்ற எந்தத் தடையுமில்லை.
6. இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்திலே பொருட்களைக் கொண்டு செல்லும் போக்குவரத்திற்கான செலவுகள் எதுவும் கவனத்திலெடுக்கப்படவில்லை.
7. அந்தந்த நாடுகளில் உற்பத்திக் காரணியாகக் கருதப்பட்டவை முழுஅளவில் அல்லது நிறைதொழில் மட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றன.
8. இரண்டு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் பொருட்கள் பரிமாற்ற அளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டே மதிப்பிடப்படுகின்றது.

இதன் அடிப்படையில் விளக்கப்பட்ட காபேலர் அவர்களது அமையச் செலவின் அடிப்படையில் விளக்கப்பட்ட வர்த்தகக் கோட்பாட்டை இச்சந்தர்ப்பத்தில் விளக்குவது பொருத்தமானதாகும்.

காபேலரது அமையச் செலவின் அடிப்படையிலான வர்த்தகக் கோட்பாட்டை விளக்குவதற்கு யப்பான், சிங்கப்பூர் என்ற இருநாடுகள் அரிசி, துணி என்ற இரு பொருட்களை உற்பத்தி செய்கின்றன என எடுத்துக் கொள்வோம். இருநாடுகளின் உற்பத்தித் திறனைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

ஒரு தொழிலாளியின் ஒரு நாளைய உற்பத்தி

| பண்டம் | யப்பான் | சிங்கப்பூர் |
|---|---|---|
| அரிசி (புசல்) | 6 | 1 |
| துணி (மீற்றர்) | 4 | 2 |

மேற்காட்டிய அட்டவணையின்படி யப்பான் உற்பத்தியாளர் ஒரு தொழிலாளியின் ஒரு நாளைய உழைப்பில் 6 புசல் அரிசியை உற்பத்தி செய்யலாம். அல்லது 4 மீற்றர் துணியை உற்பத்தி செய்யலாம். 6 புசல் அரிசியை உற்பத்திக்கான அமையச் செலவு 4மீற்றர் துணியாகும். எனவே யப்பானில் 1 புசல் அரிசிக்கான அமையச்செலவு $\frac{2}{3}$மீற்றர் துணியாகும். மாறாக 4மீற்றர் துணிக்கான அமையச்செலவு 6புசல் அரிசி ஆகும். எனவே யப்பானில் 1மீற்றர் துணிக்கான அமையச்செலவு $1\frac{1}{2}$புசல் அரிசி ஆகும்.

அதேவிதமாக சிங்கப்பூரில் உற்பத்தியாளர் ஒரு தொழிலாளியின் ஒரு நாளைய உழைப்பில் 1 புசல் அரிசியை உற்பத்தி செய்யலாம் அல்லது 2 மீற்றர் துணியை உற்பத்தி செய்யலாம். 1 புசல் அரிசிக்கான அமையச்செவு 2 மீற்றர் துணியாகும். மாறாக 2 மீற்றர் துணிக்கான அமையச் செலவு 1 புசல் அரிசியாகும். எனவே 1 மீற்றர் துணிக்கான அமையச் செலவு $\frac{1}{2}$ புசல் அரிசியாகும்.

மேற்குறித்த தரவிலிருந்து நோக்கும் போது ஒப்பீட்டு ரீதியில் யப்பானில் அரிசி உற்பத்திக்கான அமையச் செலவு சிங்கப்பூரின் அரிசி உற்பத்திக்கான அமையச் செலவிலும் குறைவானதே ($\frac{2}{3}<2$) மறுபுறமாக துணி உற்பத்தியின் அமையச் செலவு யப்பானைவிட சிங்கப்பூருக்கு குறைவானதே ஆகும். அதாவது யப்பானில் 1 மீற்றர் துணிக்கான அமையச்செலவு $1\frac{1}{2}$ புசல் அரிசியைவிட சிங்கப்பூரில் 1மீற்றர் துணிக்கான அமையச் செலவு $\frac{1}{2}$புசல் அரிசி குறைவானதே ஆகும். ($\frac{1}{2}<1\frac{1}{2}$)

எனவே காபேலரது கோட்பாட்டின்படி இருநாடுகளில் எந்த நாடு குறைந்த அமையச் செலவினைக் கொண்டுள்ளதோ அந்த நாடு அப்பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவேண்டும். எனவே இவ் உதாரணத்தின்படி யப்பான் அரிசி உற்பத்தியிலும், சிங்கப்பூர் துணி உற்பத்தியிலும் குறைந்த அமையச் செலவை உடையன. எனவே யப்பான் அரிசியை ஏற்றுமதிசெய்து துணியை இறக்குமதிசெய்ய, சிங்கப்பூர் துணியை ஏற்றுமதிசெய்து அரிசியை இறக்குமதி செய்வதன் மூலம் இரு நாடுகளும் வர்த்தகத்தில் ஈடுபட்டு நன்மையை அனுபவிக்கலாம் என்பது இக் கோட்பாட்டின் விளக்கமாகும். இவ் ஆய்விலும் குறைபாடுகள் காணப்படுகின்றமையை நவீன பொருளியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சர்வதேச வர்த்தகம் பற்றிய ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டின்படி நாடுகளின் வேறுபட்ட காரணி வளப்பேற்றின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தின் போக்கு நிர்ணயிக்கப்படுகிறது என்பதாகும். ஒரு நாட்டின் காரணி வளப்பேறு என்பது சார்பு ரீதியாகக் கிடைக்கக்கூடிய வேறுபட்ட உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிடுகின்றது. சில நாடுகளில் உழைப்பு மூலதனத்தைவிட மேலதிகமாகவுள்ளது. சிலநாடுகளில் மூலதனம் உழைப்பைவிட அதிகமாகவுள்ளது. உழைப்பு கூடுதலாகவுள்ள நாட்டில் உழைப்பு அருமையாகவுள்ள நாட்டைவிட கூலிகள் குறைவாகவுள்ளது. இவ்வித நாட்டில் தொழிற் செறிவான உற்பத்தியை மலிவான முறையில் பயன்படுத்தலாம். எனவே உழைப்பு மேலதிகமாகவுள்ள நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தொழிற் செறிவான பொருட்களின் ஏற்றுமதியையும் முதற்செறிவான பொருட்களின் இறக்குமதியையும் அனுமதிக்கலாம். மறுபுறமாக மூலதனம் மேலதிகமாகவுள்ள நாடுகள் முதற்செறிவான பொருட்களின் ஏற்றுமதியையும் தொழிற் செறிவான பொருட்களின் இறக்குமதியையும் அனுமதிக்கலாம்.

வகைகள்

வெளிநாட்டு வர்த்தகம் இரு வகையில் நடைபெறலாம். அவைகளாவன.

I இருபக்க வர்த்தகம்

II பல்பக்க வர்த்தகம்

இருபக்க வர்த்தகம் எனும்போது இரு நாடுகளுக்கிடையே முன்கூட்டியே செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வர்த்தகமாகும். அத்தகைய ஒப்பந்தத்தில் வர்த்தகத்திற்கு பயன்படவுள்ள பொருட்கள், பொருட்களின் அளவு, பொருட்களின் விலை. வர்த்தகக் காலம் போன்ற விடயங்கள் குறிக்கப்பட்டிருக்கும்.

இருபக்க வர்த்தகத்திற்கு மாறுபட்ட ஒன்றே பல்பக்க வர்த்தகமாகும். உலக நாடுகளிடையே எத்தகைய வர்த்தக ஒப்பந்தமும் இல்லாத வகையில் மேற்கொள்ளப்படும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தினையே நாம் பல்பக்க வர்த்தகம் எனக் கூறுகின்றோம். அதாவது ஒரு நாடு எந்த ஒரு நாட்டிற்கும் பொருட்களை ஏற்றுமதி செய்யலாம். அதே போல் எந்த நாட்டிலிலிருந்தும் பொருட்களை இறக்குமதி செய்யலாம். பல்பக்க வியாபாரத்திலே குறித்த ஒரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்த பொருள்களுக்கான கொடுப்பனவை அந் நாடு வேறோர் நாட்டுக்கு ஏற்றுமதி செய்த பொருள்களுக்காக கிடைக்கும் பனத்தைக் கொண்டு செலுத்தலாம்.

இருபக்க வர்த்தகத்தின் மூலம் குறிக்கப்பட்ட ஏற்றுமதிப் பொருட்களுக்கு உறுதியான விலை, உறுதியான சந்தை வாய்ப்புகள் கிடைக்கக் கூடியதாக இருக்கும். இதேபோன்ற சர்வதேச நாணயங்களது பெறுமதியில் ஏற்படும் தளம்பல்கள் இரு பக்க வர்த்தகத்தினைப் பாதிக்காது. இத்தகைய நன்மைகள் இருந்தாலும் கூட ஒரு நாட்டின் ஏற்றுமதிப் பொருட்களைப் பொறுத்த மட்டில் ஒப்பந்த நிலையிலும் பார்க்க உலக சந்தை விலை உயர்வாக இருக்கும் போதும் இறக்குமதிப் பொருட்களைப் பொறுத்த மட்டில் ஒப்பந்த விலையிலும் பார்க்க உலகச் சந்தை விலை குறைவாக இருக்கும் போதும் இரு பக்க வர்த்தகம் பாதகமான விளைவையே ஏற்படுத்தும்.

இன்றைய உலகில் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதனுல் பல நன்மைகளை அனுபவிக்கின்றன. அவற்றுள் முக்கியமானவையாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத பொருட்கள், சேவைகளைப்பெறுவதற்கு வழிவகுக்கின்றது. சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடாமல் இவற்றைப் பெற முடியாது

2. பேரளவு சந்தை வாய்ப்புக்களைப் பெற முடிகிறது. இதனுல் உள்நாட்டு உற்பத்திகள் அதிகரிப்பதற்கு வழிவகுப்பதனுல் பொருளாதாரச் சிக்கனம் ஏற்பட்டு குறைந்த செலவில் தரமான பொருளை உற்பத்தி செய்ய வழிவகுக்கிறது.

3. சர்வதேச வர்த்தகத்தினுல் தொழிற் பிரிப்பு ஏற்படவும், அதனுல் நிபுணத்வம் ஏற்படவும் அதனுல் அனுகூலங்களையும் பெற முடிகிறது. அதாவது சிறக்குமியல்பு காரணமாக கொடுக்கப்பட்ட மூலவளங்களைக் கொண்டு மேலதிக உற்பத்தியைச் செய்ய வழி வகுக்கிறது எனலாம்.

4. வர்த்தகத்தை ஒரு வளர்ச்சியை இயக்கும் கருவியாகவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் உதவும் முறையிலும் நடைமுறைப்படுத்தலாம்.

இவ்வாறு சர்வதேச வர்த்தகத்தினுல் நன்மைகள் காணப்படினும் தீமைகளாகவும் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒரு நாட்டின் ஏற்றுமதிப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் போதியளவு கேள்வி துரிதமாக அதிகரிக்காவிடின் அந்நாட்டிற்கு பாதகமான விளைவினை ஏற்படுத்தும்.

2. சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் உற்பத்திகளுக்கு ஊக்கமளிக்கப்படுமே தவிர உள்நாட்டு சந்தைத் தேவைகட்கான உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட மாட்டாது.

3. வெளிநாட்டுச் சந்தைகளில் பெருமளவு தங்கியிருக்கும் போது அப்பொருட்கள் கிடைக்காத போது அல்லது அவற்றினது விலைகள் உலக சந்தையில் அதிகரிக்கும் போது குறிப்பிட்ட நாடு அந்நிய செலாவணிப் பிரச்சினை போன்ற பிரச்சினைகள் எழ வாய்ப்பளிக்கின்றது.

## இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம்

இலங்கையில் 19ம் நூற்றுண்டின் முதற் காலப் பகுதியிலிருந்து பெருந்தோட்ட விவசாயத்தின் ஆரம்பத்துடன் வெளிநாட்டு வர்த்தகமானது முக்கிய இடத்தினைப் பெறலாயிற்று. ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் போன்றே இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரமானது பெருந்தோட்ட விவசாயத்துடன் தோன்றி வளர்ந்த தொன்றுகும்.

இலங்கையில் 1970ம் ஆண்டு வரை ஏற்றுமதி வருமானத்தில் தேயிலை, றப்பர் தெங்குப் பொருட்கள் 90% பங்கினை வகித்தது. இவை தவிர்ந்த ஏனைய ஏற்றுமதிப் பொருட்கள் ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய பத்து சதவீதமானதாகவே இருந்தது. 1977ம் ஆண்டிலும் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் ஏற்றுமதி வருமானத்தில் 75 சதவீதமான ஏற்றுமதிக்குப் பொறுப்பாக இருந்தன. ஆனுல் 1977ம் ஆண்டு பொருளாதாரக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக ஏற்றுமதிக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டன. 1977ம் ஆண்டு 75 சதவீதத்திற்குப் பொறுப்பாக இருந்த தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் 1988ம் ஆண்டு ஏறக்குறைய 38வீதமான பங்குக்கே பொறுப்பாக இருந்தன. ஆனுல் இம்மூன்று வகையான பொருட்களிலும் தேயிலையின் பங்களிப்பே உயர்வாக இருந்தது 1950–53ம் ஆண்டு காலப்பகுதியில் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 48 சத வீதமும் 1977ல் 53 சதவீதமும் தேயிலை ஏற்றுமதி மூலமே பெறப்பட்டது. இவ்வாறு முக்கிய பங்கினை வழங்கிய தேயிலை 1987 - 1988 காலப்பகுதியில் 26 சத வீதமாக அமைந்து ஏறக்குறைய அரைப்பங்காக வீழ்ச்சியடைந்துள்ளது.

மொத்த ஏற்றுமதி வருமானத்தில் இறப்பர் தெங்குப் பொருட்கள் ஆகியன படிப்படியாக வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டதாகவுள்ளன. 1950 – 53ம் ஆண்டுக் காலப்பகுதியில் மொத்த வருமானத்தில் இறப்பர் கொண்டிருந்த பங்கு 26 சத வீதமாக இருந்து 1978ல் 14 சதவீதமாக வீழ்ச்சியடைந்து, 1988ல் 8 சதவீதமாக மேலும் வீழ்ச்சியடைந்தது. இதேபோன்றே தெங்குப் பொருட்கள் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் கொண்டிருந்த பங்கானது 1950 – 53ல் 16 சத வீதமாக இருந்து 1977ல் 5 சதவீதமாகவும், 1988 3·3 சத வீதமாகவும் வீழ்ச்சியடைந்தது, ஒப்புரீதியாக நோக்கும் போது இறப்பரினை விட தெங்குப் பொருட்கள் மொத்த வருமானத்தில் கொண்டுள்ள பங்கினது வீழ்ச்சி அதிகமானதாகும். ஏனெனில் தேயிலை, இறப்பரினைப் போலன்றி தெங்குப் பொருட்களுக்கு உள்நாட்டு நுகர்வு அதிகமாக இருப்பதால் சனத்தொகை அதிகரித்துச் செல்லும் நிலையில் இதன் ஏற்றுமதியினை அதிகரிப்பது கடினமாகும்.

1970ம் ஆண்டிற்குப் பின்பு ஏற்றுமதியினைப் பன்முகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவக்கைகளினுல் பல பொருட்களின் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டன. இதனுல் தற்போது ஏற்றுமதி அமைப்பானது பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு ஆராயப்படுகிறது.

1. வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) தேயிலை
(ஆ) இறப்பர்
(இ) தெங்கு உற்பத்திகள்
(ஈ) சிறு வேளாண்மைப் பயிர்கள்

2. கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகள்.
(அ) புடவையும் ஆடைகளும்
(ஆ) பெற்ரோலிய உற்பத்திகள்
(இ) ஏனையவை

3. கனிப் பொருள் ஏற்றுமதிகள்
(அ) இரத்தினக் கற்கள்
(ஆ) ஏனையவை

4. பகுக்கப்படாதவை

இவ்வாறு வகுக்கப்பட்ட ஏற்றுமதி அமைப்பின் துறைவாரியான பங்களிப்பினை பின்வரும் அட்டவணை மூலம் காட்டலாம்.

| வகை | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|
| | 1977 | 1987 | 1988 |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் | 80 | 42 | 43 |
| 1.1 தேயிலை | 53 | 26 | 26 |
| 1.2 இறப்பர் | 14 | 7 | 8 |
| 1.3 தெங்கு | 8 | 5 | 3 |
| 1.4 சிறுவேளாண்மை உற்பத்திகள் | 5 | 4 | 6 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் | 14 | 49 | 48 |
| 2.1 புடவையும் ஆடைகளும் | 2 | 32 | 30 |
| 2.2 பெற்ரோலிய உற்பத்திகள் | 9 | 6 | 5 |
| 2.3 ஏனையவை | 3 | 11 | 13 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 5 | 4 | 6 |
| 3.1 இரத்தினக் கற்கள் | 5 | 3 | 5 |
| 3.2 ஏனையவை | — | 1 | 1 |
| 4. பகுக்கப்படாதவை | 1 | 5 | 3 |
| | 100 | 100 | 100 |

(ஆதாரம்: மத்தியவங்கி ஆண்டறிக்கை)

எனவே இப்பகுப்பாய்வில் வேளாண்மை ஏற்றுமதி என்பதற்குள் முன்னணி வகித்த தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் என்பவற்றுடன் சிறுவேளாண்மை உற்பத்திகளும் சேர்க்கப்பட்டுள்ளது. சிறு வேளாண்மை உற்பத்திகள் என்பது கறுவா ஏலம், கராம்பு, கோப்பி போன்ற சிறு அளவில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திகளைக் குறிக்கும். இச் சிறு வேளாண்மை உற்பத்திகள் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 1977-ல் 5 சதவீத பங்கினையும் 87-ல் 4 சதவீத பங்கினையும் 1988-ல் 5 சதவீத பங்கினையும் வழங்கின. இவ்வகைப் பொருட்கள் உலகசந்தையில் விலைத்தளம்பல்களை அனுபவிக்கும் அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை இலங்கையில் இவ்வுற்பத்திகள் பெருமளவுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்களாகவே மேற்கொள்ளப்படுவதனுல் உற்பத்தியும் குறைவாக உள்ளதனுல் ஏற்றுமதிக்கான பங்களிப்பும் குறைவாகவே உள்ளது.

இலங்கையின் ஏற்றுமதித் துறையின் போக்கில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தி ஏற்றுமதி வருமானத்தில் பெருமளவை பெற்றுத்தரும் விதத்தில் கைத்தொழில்பொருள்கள் விளங்குகின்றன. 1977-ல் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 14 சதவீதத்திற்கும், 1980-ல் 33 சதவீதத்திற்கும், 1987-ல் 49 சதவீதத்திற்கும், 1988-ல் 48 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்து முக்கிய ஏற்றுமதி மூலமாக கைத்தொழில் ஏற்றுமதிகள் மாறியுள்ளது. இக்கைத்தொழில்களின் ஏற்றுமதியில் முக்கியமான பங்களிப்பைச் செய்வன

(அ) புடவையும் ஆடைகளும்

(ஆ) பெற்றேலிய உற்பத்திகள்

ஆகியனவாகும். இலங்கையில் 1978-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட பெருமளவான கைத்தொழில்கள் ஆடைக் கைத்தொழிலாக அமைந்துள்ளமையிஞலேயே புடவையும் ஆடைகளும் முக்கிய ஏற்றுமதி மூலமாக அமைவதற்கு காரணமாகும். 1977-ல் 2 சதவீதமான பங்களிப்புச் செய்த புடவையும் ஆடைகளும் 1987-ல் 32 சதவீதத்திற்கும், 1988-ல் 30 சதவீதத்துக்கும் பங்களிப்புச் செய்தது. மற்றெரு முக்கிய மூலமாக அமைவது பெற்றேலியப் பொருட்களாகும். ஆனுல் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் இதன் பங்களிப்பு குறைந்து கொண்டே வருகிறது. 1977-ம் ஆண்டு மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 9 சதவீதத்திற்கு வகைகூறிய பெற்றேலிய உற்பத்திகள் 1988-ம் ஆண்டு 5 சதவீதத்திற்கு மட்டுமே பங்களிப்புச் செய்து, இதன் பங்களிப்பு அண்மைக் காலத்தில் குறைவடைந்து வருகிறது. இவற்றைவிட ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளாக மீன் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், தொழிநுட்ப மின்னியல் கருவிகள் போன்றன அடங்கும்.

இவ்வாறு கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்களிப்பு மாற்றமடைந்து வந்திருப்பினும் புடவைகள் பெற்றேலிய ஏற்றுமதிகளிலிருந்தான தேறிய வெளிநாட்டு செலாவணி இலாபங்கள் இத்தகைய ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்களுடன் தொடர்புபடுத்தி பார்க்குமிடத்து மிக முனைப்பானதாக இல்லை. இவற்றுக்கான உள்ளீடுகள் பெருமளவிற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால் இலங்கையில் இவ்வுற்பத்திகளுக்கான கூட்டப்பட்ட பெறுமதி குறைவாகவே உள்ளது. எனவே இக்கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான கூட்டப்பட்ட உள்ளூர் பெறுமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கூடியளவு உள்நாட்டு மூலப்பொருட்களை பயன்படுத்தவும் ஊக்குவிக்க வேண்டியது அவசியமாயுள்ளது.

மொத்த ஏற்றுமதி வருமானத்தில் மற்றோர் மூலம் கனிப்பொருள் ஏற்றுமதியாகும். இக்கனிப்பொருள் ஏற்றுமதியில் முக்கிய மூலமாக அமைவது இரத்தினக்கற்களே ஆகும். இது மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 1987-ல் 3சதவீதத்திற்கும் 1988-ல் 5 சதவீதத்திற்கும் பங்களிப்புச் செய்துள்ளது.

## இறக்குமதி வியாபாரம்

இலங்கையின் இறக்குமதிகளின் பண்டத் தொகுதிகளை மூன்ருக வகைப்படுத்தலாம் அவையாவன

1. நுகர்வுப் பொருட்கள்
2. இடைநிலைப் பொருட்கள்
3. முதலீட்டுப் பொருட்கள்

நுகர்வுப் பொருட்கள் என்பது மக்களின் நேரடி நுகர்வுக்கு உதவக் கூடியவையாகும். நுகர்வுப் பொருட்களில் அரிசி, மா, சீனி என்பவற்றுடன் புடவையும் துணிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனுல் 1987-ம் ஆண்டின்பின் புடவையும் துணிகளும் என்பது இடைநிலைப் பொருட்களில் சேர்க்கப்பட்டுள்ளது. 1950 — 53-ம் ஆண்டு காலப் பகுதியில் மொத்த இறக்குமதிகளில் நுகர்வுப் பொருட்கள் 57 சதவீதமாகவும் இதில் அரிசி, மா, சீனி ஆகிய மூன்று பொருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் கொண்டிருந்த பங்கானது 31 சத வீதமாகவும் அமைந்திருந்தது. 1976-ல் மொத்த இறக்குமதிகளில் நுகர்வுப்பொருட்களின் பங்கு 36.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தபோதிலும் அரிசி, மா, சீனி ஆகியன இதில் 29.7 சதவீதமான பங்கினைக் கொண்டிருந்தன. ஆனால் இலங்கையின் சுதந்திர வர்த்தக வலய நடவடிக்கையினுல் கைத்தொழிலுக்கான இடைநிலை முதலீட்டுப் பொருட்களின் பங்களிப்பு அதிகரித்ததனுல் நுகர்வுப் பொருட்களின் பங்களிப்பு குறைவடைந்து வருகிறது. 1978-ம் ஆண்டு மொத்த இறக்குமதிச் செலவினத்தில் நுகர்வுப் பொருட்கள் 38 சதவீதமாக இருந்து 1987ல் 23 சத வீதமாகவும், 1988ல் 25 சத வீதமாகவும் அமைந்து காணப்பட்டது

இடைநிலைப் பொருட்கள் எனும்போது முக்கியமாக உதிரிப் பாகங்கள் பருத்திநூல் போன்ற முடிவு பெருத உற்பத்திப் பொருட்களை அல்லது மூலப் பொருட்களை உள்ளடக்கியதாகும். இலங்கை மத்திய வங்கியின் பகுப்பாய்வின்படி இடைநிலைப்பொருட்கள் என்பதில் பெற்ருேலியம். வளமாக்கி, இரசாயனம், கோதுமை என்பன உள்ளடக்கப்பட்டிருந்தது, ஆனுல் 1987ம் ஆண்டின் பின்னர் நுகர்வுப் பொருட்களில் உள்ளடக்கப்பட்டிருந்த புடவைகளும் ஆடைகளும் என்பதும் இப்போது இடைநிலைப் பொருட்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது. 1976ம் ஆண்டு மொத்த இறக்குமதிச் செலவீனத்தில் 48 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்த இடைநிலைப் பொருட்கள் 1988ல் 57 சத வீதத்திற்கு பங்களிப்புச் செய்து இதன் பங்களிப்பு உயர்வடைந்து வருவதைக் காணலாம். இவ்வாறு இடைநிலைப் பொருட்களின் பங்களிப்பு உயர்வடைகின்றமை இலங்கையின் உற்பத்தி அபிவிருத்தி அதிகரிக்கவும் வேலைவாய்ப்புப் பெருகவும் சாதகமான செயற்பாடாகும்,

முதலீட்டுப் பொருட்கள் எனும்போது நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத இயந்திரங்கள் தளபாடங்கள் மற்றும் ,கைத்தொழில் விவசாய உபகரணங்களைக் குறிப்பதாகும். இலங்கை மத்திய வங்கியின் பகுப்பாய்வின் படி முதலீட்டுப் பொருட்கள் என்பதனுள் பின்வரும் பகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1. பொறியும் கருவியும்
2. போக்கு வரத்துக் கருவி
3. கட்டிடப் பொருட்கள்.

முதலீட்டுப் பொருட்களின் பங்களிப்பில் கடந்த மாதங்களில் சிலகாலங்கள் தவிர பெருமளவு மாற்றம் காணப்படவில்லை. 1960ல் மொத்த இறக்குமதிச் செலவினத்தில் முதலீட்டுப் பொருட்கள் 18 சதவீதத்தினையும், 1970ல் 24 சதவீதத்தினையும், 1976ல் 14 சதவீதத்தினையும், 1987ல் 19 சதவீதத்தினையும், 1988ல் 17 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்தன.

இறக்குமதியில் நுகர்வுப் பொருட்களின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கேற்ப முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் அதிகரிப்பேற்பட்டிருப்பின் அது உற்பத்திப் பெருக்கம் வேலைவாய்ப்பு அதிகரிப்பு என்ற அடிப்படையில் நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்குச் சாதகமானதாக அமைந்திருக்கும். ஆனுல் இலங்கையின் மொத்த இறக்குமதியில் முதலீட்டுப் பொருட்கள் கொண்டுள்ள பங்கிலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இலங்கையில் இறக்குமதிப் பிரதியீடு, ஏற்றுமதி கைத்தொழில் மயமாக்கம், என்ற அடிப்படையில் வெளிநாட்டிலிருந்து மூலப் பொருட்களையும் உதிரிப் பாகங்களையும் இறக்குமதி செய்து உள்நாட்டில் கைத்தொழிலாக்கத்தினை மேற்கொள்ள முனைந்தமையினுலேயே இடைநிலைப்பொருட்களின் இறக்குமதியில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் நுகர்வுப் பொருட்கள் மட்டுமன்றி இடைநிலைப் பொருட்கள் கூட பெருமளவிற்கு நுகர்வுப் பொருட்களாகவே அமைந்துள்ளன. இந்த அடிப்படையில் 1950ம் ஆண்டிலிருந்து இன்றுவரை இலங்கையின் மொத்த இறக்குமதியில் மிகப் பெரும்பகுதி நுகர்வுப் பொருட்களாகவே காணப்படுகின்றன.

இலங்கையின் இறக்குமதி பண்டத் தொகுதியின் அண்மைக்கால அமைப்பினை பின்வரும் அட்டவணை மூலம் காட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வகை | மொத்தத்தின் சதவீதம் | | |
|---|---|---|---|
| | 1986 | 1987 | 1988 |
| 1. நுகர்வுப் பொருட்கள் | 22.5 | 22.8 | 24.5 |
| 1.1 உணவும் குடிபானமும் | 12.4 | 12.3 | 14.3 |
| 1.1 அரிசி | 1.9 | 1.1 | 2.5 |
| 1.1.2 மா | 0 2 | 0.2 | 0.4 |
| 1.1.3 சீனி | 3.2 | 3.9 | 4.1 |
| 1.2 ஏனையவை | 10.1 | 10.5 | 10.1 |
| 2. இடைநிலைப் பொருட்கள் | 52.4 | 57.2 | 56.9 |
| 2.1 பெற்றோலியம் | 11.5 | 14.4 | 11.0 |
| 2.2 வளமாக்கி | 2.4 | 2.1 | 3.5 |
| 2.3 இரசாயனம் | 2.9 | 2.6 | 2.6 |
| 2.4 கோதுமை | 4.4 | 3.2 | 4.2 |
| 2.5 புடவைகளும் ஆடையும் | 11 5 | 13.4 | 12.3 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | 19.4 | 18.7 | 17.0 |
| 3.1 பொறியும் கருவியும் | 10.7 | 11.0 | 9.9 |
| 3.2 போக்குவரத்துக் கருவி | 2.7 | 2.3 | 2.0 |
| 3.3 கட்டடப் பொருட்கள் | 1.7 | 1.2 | 1.5 |
| 4. பகுக்கப்படாதவை | 5.7 | 1.3 | 1.6 |

(ஆதாரம்: மத்திய வங்கி ஆண்டறிக்கை - 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுபதாம் ஆண்டுகளிலிருந்து ஈழத்தில் நிகழ்ந்த கலை இலக்கிய விவாதங்கள்

## — ஓர் அறிமுகக் குறிப்பு

மௌ. சித்திரலேகா
*சிரேஸ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்*

இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பிலே பல சுவையான கலை இலக்கிய விவாதங்கள் அடிக்கடி நடைபெற்று வந்துள்ளன.. குறிப்பாக அறுபதாம் ஆண்டுகளில் 'மரபு', மண்வாசனை இலக்கியம்' முற்போக்கு இலக்கியம்' போன்ற இலக்கியக் கருத்தாக்கங்கள் தொடர்பாக நடைபெற்ற சர்ச்சைகள் நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம் பெறுபவையாகும்.

எழுபதாம் ஆண்டுகளிலிருந்து இன்றுவரையுள்ள இருபது ஆண்டு காலப் பகுதியும் சில முக்கியமான கலை இலக்கிய விவாதங்களைக் கண்டுள்ளது. குறிப்பிட்ட ஆக்கம் பற்றிய அபிப்பிராய வேறுபாடுகளிலிருந்து கலை இலக்கியம் தொடர்பான கருத்துநிலை முரண்பாடுகள் காரணமாக எழும் சர்ச்சைகள் வரை இவ்விவாதங்கள் பல்வேறு தரத்தினதாகவும் வகையினவாகவும் அமைந்துள்ளன. இவற்றுள் கருத்துத் தெளிவினை ஏற்படுத்தவும் இலக்கியம் பற்றிய புதிய கருத்துநிலையை நோக்கிய தேடல்களை ஆரம்பிக்கவும் உதவும் விவாதங்களே முக்கியமானவையாகும். இவற்றுள் இரு விவாதங்கள் குறித்து இங்கு சுருக்கமாக அறிமுகம் செய்ய முயல்கிறேன்.

எழுபதாம் ஆண்டுகளிலிருந்து இன்றுவரை இலக்கியத்தின் அழகியல் தொடர்பான அக்கறை ஈழத்து எழுத்தாளர் மத்தியில் அதிகரித்திருப்பதை அவதானிக்கலாம். இக்காலகட்டத்தில் நிகழ்ந்த முக்கியமானதோர் விவாதம் இலக்கியத்தின் அழகியல் தொடர்பானதாகவே அமைந்ததில் வியப்பில்லை. கருத்தரங்குகளிலும் நூல் வெளியீட்டுக் கூட்டங்களிலும் இவ் விடயம் தொடர்பாகப் பலரும் கதைத்தனர். இத்தகைய அக்கறையின் தூல வடிவமாக 79ம் ஆண்டிலிருந்து 81ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை சமர், லங்கா கார்டியன் (ஆங்கிலம்) அலை, மல்லிகை ஆகிய சஞ்சிகைகளில் வெளிவந்த கட்டுரைகள் அமைந்தன,

சமர் சஞ்சிகையில் மறைந்த பேராசிரியர் கைலாசபதி முற்போக்கு இலக்கியமும் அழகியல் பிரச்சனைகளும் என்றொரு கட்டுரை எழுதியிருந்தார். இக்கட்டுரையில் முற்போக்கு இலக்கியம் அழகியல் அம்சங்களைப் போதுமான அளவு கவனிப்பதில்லை என்ற குற்றச்சாட்டினைக் காரசாரமாக விமர்சித்திருந்தார்.' கலைவாதிகளின் சொல்லும் செயலும் ஒன்றையே மையமாகக் கொண்டுள்ளன, பௌதீக - யதார்த்த உலகின் பிரச்சினைகளுக்குச் சமுதாய ரீதியான தீர்வு காட்டும் சித்தாந்தமும் அதன் வழி படைக்கப்படும் இலக்கியங்களும் எவ்வகையிலும் கண்டிக்கப்பட வேண்டியன. இதனை வெவ்வேறு வகையிலும் வடிவத்திலும் அவர்கள் மீண்டும் மீண்டும் கூறுவார்கள். 'அழகியல்' என்பது அவர்களின் பிரம்மாஸ்திரம்' ஆழமாக நோக்கினுல் கலைவாதிகள் அறிந்தோ அறியாமலோ சமுதாய மாற்றத்துக்காகப் பாடுபடும் எழுத்தாளரின் ஆக்கங்களையே அழகியலின் பெயரில் நிராகரிக்கின்றனர்.

கைலாசபதி அவர்களது கருத்தின் சரி, பிழை ஒரு புறம் இருக்க, இக்கட்டுரையானது, அழகியல் அம்சங்கள் பற்றி அடிக்கடி பேசி வந்தோரிடையே எதிர்க்குரல்களை எழுப்பியது. அலை சஞ்சிகையின் பதின்மூன்ருவது இதழில் (பங்குனி 80) அ. யேசுராசா, மு. புஸ்பராசன் ஆகியோர் இது தொடர்பான கட்டுரைகளை எழுதினர். கைலாசபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் கட்டுரைக்கு நேரடியான பதில் அல்லா விடினும் அதில் கூறப்பட்ட சில கருத்துகளை இவை நிராகரித்ததுடன் ஈழத்து முற் போக்கு இலக்கியம், எழுத்தாளர்கள் பற் றிய சில வினக்களையும் முன்வைத்திருந்தன.

இக்கட்டுரைகளையும் அக்காலகட்டத்தில் நிலவிய இலக்கிய அழகியல் தொடர்பான கருத்துக்களையும் மனம் கொண்டு கொழும் பிலிருந்து வெளிவரும் லங்கா கார்டியன் என்ற ஆங்கில இதழில் (செப். 80) சமுத்தி ரன் என்பவர் *Marxists vs Formalists -The Tamil Literary Scene —* தமிழ் இலக்கியம் மார்க்சியர்களுக்கு எதிராக உருவவாதிகள் என்ற கட்டுரையை எழுதினர். இக்கட்டுரை யில் முற்போக்குக் கலை இலக்கியக் கோட் பாட்டின் உருவாக்கம் '70களில் கலை இலக்கி யத்தில் முன்னேக்கிய பெரும் பாய்ச்சலுக்கு உதவிற்று என்று குறிப்பிட்டார். அத்துடன் எவ்வாறு கலை இலக்கியத்தில் உள்ளடக்கம் முதன்மை பெறுகிறது என்பதையும் தொட் டுக் காட்டியிருந்தார் இக் கட்டுரையைத் தொடர்ந்து லங்கா கார்டியனிலும் அலையி லும் மாறி மாறி வெவ்வேறு கருத்துகள் வெளிவந்தன. சமுத்திரன், எஸ். சிவசேக ரம், எம்.ஏ. நுஃமான், ரெஜீ சிறிவர்த்தனு, சாகர (சேனக பண்டாரநாயக்க) ஆகியோர் இவ்விவாதத்தில் பங்கு கொண்டனர். தமிழ் எழுத்தாளர்கள் மாத்திரமன்றி சிங்கள கலை இலக்கிய விமர்சகர்களும் இதில் பங்கு கொண்டது இவ்விவாதத்தின் பரப்பை அக லித்தது, அத்துடன் கலையின் உருவம், உள் ளடக்கம், கருத்து நிலை, மார்க்சீய விமர் சனம் போன்ற அம்சங்கள் பற்றி கோட் பாட்டு ரீதியான விவாதங்களையும் உருவாக் கியது. உள்ளடக்கம் உருவத்திலும் முதன்மை வாய்ந்ததா? இலக்கியத்தின் உரு வம் என்றால் என்ன? கலையின் கருத்து நிலை அதன் உள்ளடக்கம், உருவம் யாவும் எவ் வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண் டுள்ளன போன்ற வினக்கள் கோட்பாட்டு மட்டத்தில் அலசப்பட்டன. இவ்வகையில் ஈழத்தில் 60ஆம் 70ஆம் ஆண்டுகளின் இலக் கியப் பின்னணியில் ஆரம்பித்த விவாதமா னது அத்தளத்திலிருந்து இன்னொரு தளத் திற்கு மேலெழும்பியது. இத்தொடர் பில் உருவம், உள்ளடக்கம் மார்க்சிஸ விமர்சனம், உருவம், உள்ளடக்கம் கலை கருத்துநிலை' என்ற தலைப்புகளில் ரெஜி சிறிவர்த்தனு அவர்களதும், 'உள்ளடக்கத்தை உருவாக்கு தல்' என்ற தலைப்பில் சேனக பண்டார நாயக்க அவர்களதும் கட்டுரைகள் குறிப் பிடத்தக்கன. துரதிர்ஷ்டவசமாக இவை (அலையில் மொழிபெயர்க்கப்பட்ட உருவம் உள்ளடக்கம், மார்ச்சீய விமர்சனம் தவிர) தமிழில் பெயர்க்கப்படவில்லை. இத்தொடர் பில் மல்லிகையில் (ஆகஸ்ட் 81) பேராசிரியர் சிவத்தம்பியின் '*அழகியல் மார்க்ஸியமும் மார்க்ஸிய அழகியலும்*' என்ற கட்டுரையும் குறிப்பிடத்தக்கது இவ்விவாதங்களின் போது ஈழத்து முற்போக்கு இலக்கியம் பற்றி நிறையவே பேசப்பட்டது எஸ்.சிவசேகரம், எம். ஏ நுஃமான் ஆகியோர் மாறுபாடான கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்

முற்போக்குஇலக்கியம் பற்றிய இன் னேர் விவாதம் மல்லிகையில் '82ஆம் 83 ஆம்' ஆண்டுகளில் நடைபெற்றது. கந் தையா நடேசன் எழுதிய '*இலங்கை முற் போக்கு இலக்கியமும் அதன் எதிரணியின ரான மரபுப் பண்டிதரும் மார்க்ஸியப பண்டி தரும்*' என்ற கட்டுரையுடன் இவ்விவாதம் ஆரம்பித்தது. என், கே. ரகுநாதன், எஸ். சிவதாசன், கலாமணி, சி. வன்னியகுலம் எனப் பலரும் பங்கு கொண்டனர். ஈழத்து முற்போக்கு இலக்கிய அணியினர் எதிர் நோக்கும் விமர்சனங்கள், அவற்றுக்கான காரணங்கள் என்பவை பற்றி இவ்விவாதம் கருத்துச் செலுத்தியது.

மேற்கூறிய இருதொகுதி விவாதங்களும் இன்றைய ஈழத்து இலக்கியப் பரப்பில் கூர் மையடைந்து வரும் அழகியல் சிரத்தையின் பிரதிபலிப்புகள் மாத்திரம் அல்ல, கலைஇலக் கியத்தின் ஆக்கமுறைமை, உருவ உள்ளடக்க இணைவு ஆகியவை பற்றிய பரந்த கருத்துக ளுக்கும் இடமளித்துள்ளன. அவற்றை வளர்த்துள்ளன. முற்போக்கு முகாமினரால் முன்பு அதிகம் விதந்தோதப்படாத கவிஞர் மகாகவி தற்போது நன்கு கணிக்கப்படுவது இத்தகைய கருத்துப் பரிமாறல்களது ஒரு மறைமுகமான வெளிப்பாடு எனலாம்.

சில சமயங்களில் நாசுக்குக் குறைந்தன வாகவும் பாதை மாறியனவாகவும் இருந்தா லும் கூட மேற்கூறிய இரு தொகுதி விவா தங்களும் நவீன ஈழத்து இலக்கியத்தில் முக் கியமானவையாகும். இவற்றின் பயனும் குறைத்து மதிப்பிட முடியாதவை. இவை பற்றியும் ஏனைய சர்ச்சைகள் பற்றியும் விரிந்த ஆராய்ச்சி அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களும் சமூகப்பணியும்

கனகசபாபதி நாகேஸ்வரன் M. A.
உதவி விரிவுரையாளர், யாழ்ப்பாண பல்கலைக் கழகம்.

சமூகத்தின் துடிப்புள்ள பரம்பரை இளைஞர் பரம்பரையேயாகும். இளைஞர்கள் கல்வி வல்லவர்களாயும், பொறுப்புணர்ச்சியுள்ளவர்களாயும், தன்னம்பிக்கையும் துணிவும் உள்ளவர்களாயும் இருத்தலவசியம். ஒரு சமூகத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு, மொழி, சமயம் அனைத்தையும் கட்டிக்காத்து அச்சமூகத்தின் பெருமைகளையும் சொத்துக்களையும் காத்துநிற்கும் பொறுப்பு வலிவை மிக்க இளஞ் சந்ததியினரிடமே உள்ளது. சமூகம் ஒரு தோப்பு; அதிலே ஒவ்வொரு இளைஞனும் ஒரு தனி மரம். அவ்வாறுயின் ஒவ்வொரு இளைஞனும் புத்திஜீவியாகவும் நற்குண நற்செய்கைகளுடையவனுகவும் விளங்க வேண்டும். சமூக மதிப்பினைப் பெற்றுத் திகழவும் வேண்டும்.

இளைஞர்களிடம் காணப்படும் துடிப்பு முதியவர்களிடமோ குழந்தைகளிடமோ கற்றறிவார்ந்தவர்களிடமோ இல்லை. ளமையிலேயே தன்னலவுணர்வறுந்து சமூக நல நாட்டம் என்னும் விரிந்த மனேநிலை உருவாக வேண்டும். அம்மனேநிலையினுல்தான் இளைஞர்கள் மதிப்பினைப் பெற்றுக்கொள்கிறுர்கள். 'மதிப்பு' என்பது வெறுமனே ஒருவருக்குக் கிடைக்கும் 'புகழ்' அல்ல. மாறுக சமூகம் அம்மனிதனைப் பற்றிக் கொண்டுள்ள 'கணிப்பீடு' என்பதுதான் அர்த்தம். உலகிலே எத்தனையோ பேர் பிறக்கிறுர்கள். ஆனுல் எத்தனைபேர் நினைப்பிலுள்ளவர்களாக வாழுகிறுர்கள்? என்று கேட்டால் சற்றுப் பின்னடிக்க வேண்டியவர்களாகவேயுள்ளோம். இன்றைய சமூக நிலையில் பொதுப்பணி, சமூகப்பணி, தொண்டு, சேவை என்ற கோட்பாடுகள் மிக மிக அத்தியாவசியமானவையாகவுள்ளன. பொது மனிதனிலிருந்து விலகாத வகையிலே அவனேடு தொடர்புடையவனுக இளைஞன் வாழ நினைக்க வேண்டும். இது இலகுவான செயற்பாடல்ல,

அப்படியாஞல் இளைஞர்கள் சமூகத்தின் உயர் மட்டத்தினுல் அங்கீகரிக்கப்படல் வேண்டும். அதாவது வயது, அனுபனம், அறிவு என்பவற்ருல் முதிர்ந்தவர்களிடத்தில் ஈடுபாடுள்ளோராகவும், அவர்களது மதிப்பினையும் நம்பிக்கையினையும் பெற்றவர்களாகவும் விளங்க வேண்டும், இபபண்பினை வருவித்துக் கொள்வதிலே பெருஞ்சிரமமுண்டு. பெரியவர்களை மதிக்கின்ற பண்பு ஒரு தனித்துவமான கலையாகும். இளைஞர்கள் அப்பண்பினை நன்கு புரிந்து தொழிற்பட்டால் முதியோரது ஆதரவைப் பெற்றுத் திகழலாம், 'கீழ்ப்படிவு', 'பணிவு', 'இன்சொல்' 'பண்பு' 'அன்பு' ஆகிய குணங்கள் இளைஞர்களிடத்திலே இருக்குமாஞல் பெரியோரது ஆசியும் ஆதரவும் வெகு இலகுவிலே கிடைக்கும் இத்தகு குணங்களைக் கொண்ட இளைஞரணி பெரும் ஆற்றலும் செயல்வலுவும் வாய்ந்தாகத் திகழுமென்பதில் ஐயமில்லை,

இளைஞர்கள் எப்போதும் வேகம் கொண்டு செயற்படுபவர்கள். அதனுல் அவர்களது நடவடிக்கைகளிலே சிறுபிள்ளைத்தனங்களும் நிகழுதல் சாலும். அதனைக் கட்டுப்படுத்தி நடந்து கொள்ளும் வல்லமையையும் பழக்கத்தையும் இளைஞர்கள் வளர்த்தெடுக்க வேண்டும், அனுபவம் ஒரு நல்ல ஆசானைப் போன்றமைவதனை மறந்துவிடக் கூடாது. எனவே அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டால் அதிகம் சிரமமில்லை. ஒரு கிராமத்தின் வளர்ச்சி இளைஞர்களின் கையிலேதான் பெரிதும் தங்கியுள்ளதெனலாம். இளைஞர்களும் யுவதிகளும் தான் எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் சமூகநலச் சிற்பிகள், இவர்களின் தெபழிற்பாடுகள் பலவேறு வழிகளிலும் கிராம அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையலாம். கிராமங்களிலேயுள்ளவர்களது கல்வியறிவுக்கு ஆக்கபூர்வமான பய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுள்ள பங்களிப்பினை நல்குவது இளைஞர் களது பணியாகின்றது. எல்லாப் பணிகளுள் ளும் சிறந்தது கல்விப்பணியாகும். அது புண்ணியந் தரும் பணியுமாகும். 'புண்ணி யங் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி தல்' என்று பாடுகின்றார் மகாகவி சுப்பிர மணிய பாரதியார். ஆகவே முதியோர் கல்வி, பாலர் கல்வி, இளைஞர் கல்வி ஆகிய நோக்கு நிலைகளிலே கல்விப் பணிகளை முன் னின்று புரிவதற்கு இளைஞர்கள் முன்வரல் வேண்டும். இத்தொழிற்பாட்டிலே பல் கலைக் கழக இளைஞர்களுக்கு மிகுந்த பொறுப் புங் கடமையுமுண்டு. கல்விச் சிறப்பு எல் லோருக்கும் எளிதிலே வந்து வாய்த்துவிடும் என்று கருதிவிட முடியாது. எனவே கல் விச் செல்வம் பெற்றவர்கள் அச்செல்வத் தைப் பல பயனுள்ள வழியிலே நெறிப் படுத்தி அறிவுள்ள சமுதாயத்தை உருவாக் குவதற்குப் பெரிதும் முயன்று பாடுபட வேண்டிய நிலைமையுள்ளது. கல்விதான் உண்மையை அறிய உதவுவது ஆகையினாலே உண்மையானவற்றை அறிந்து புரிந்து கொண்டு மக்கட் சமுதாயத்தை மறு மலர்சி கொண்டதாக மாற்றியமைக்கும் வல்லமையும் சக்தியும் கல்வி வல்ல இளை ஞர்களிடமேயுண்டு. இப்பணியில் ஈடுபடுவ தில் இன்பமுமுண்டு; பயனுமுண்டு.

ஒரு சமுதாயத்தின் கல்வி மறுமலர்ச்சி யில் இளைஞர்களின் பங்களிப்பு மிக அவ சியமானது. கல்வி யெனும் சொத்துடைமை யால் எவ்வித ஆபத்துமில்லை. அக்கல்வியைக் கள்வர் களவெடுத்துக்கொண்டு செல்லமுடி யாது; வெள்ளம், தீ, புயல் போன்ற இயற் கையனர்த்தங்களால் சேதமேற்படாது. அத் துடன் சென்ற இடமெல்லாம் சிறப்பை நல்கும் ஒரு பெருஞ் செல்வம் கல்வி. ஆத லினாலே கல்வியென்னும் பயிரை இளைஞர் கள் வளர்ப்பதுடன் பிறருக்கும் பயனுள்ள வகையிலே கொடுப்பதற்கும் பின்நிற்கக் கூடாது. பிறருக்குக் கொடுப்பது என்பது லேசிலே வந்தமையும் காரியமல்ல. அப் படிக் கொடுப்பதும் — பிறரை வாழ்விப்பது மென்பதுமான பண்பு அன்பு உள்ளவர் களிடமே ஏற்படுமொரு நல்ல செய்கை யாகும். அன்பு ஏற்படுமானால் அதனால் ஆர் வம் பிறக்கும். அவ்வார்வம் மேலிட மேலிட இன்பம் பிறக்கும் அவ்வின்பமே பொது சேவையிலே ஒருவன் பெறும் பயன் எனலாம். சமூகத்தின் முன்னேற்றத்தில் எல்லோரும் இன்பம் கண்டுவிட முடியாது. அதுவும் அன்புடையார் மாட்டு நிகழும் ஒரு தன்மையாகும். எனவே இளைஞர்கள் தமக் கும் தமது சமுதாயத்திற்கும் இன்பம் பயப் பவர்களாக வாழ்வதற்குப் பழகிக் கொண் டால் அதனால் வரும் இன்பத்தையும் நுகர்ந் தனுபவிக்கலாம்; பேரின்ப வாழ்வை வாழ லாம்.

சனசமூக நிலையங்கள் இளைஞர்களது அபிலாஷைகளை நிறைவேற்றும் நிறுவனங் களாக விளங்குகின்றன. செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், சமய அறிவுப் போட்டிகள், சிரமதானம் என்ற பல்வேறு வழிகளிலே சமூகத்தோடு ஒட்டி உறவாடிக் கிராம மக் களையும் ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்ள இளைஞர்கள் முன்வர வேண்டும் கலைகளைப் பேணும் பணியிலே துடிப்புடனும் ஆர்வத் துடனும் செயற்படல் வேண்டும். மன்றங் கள், சங்கங்களின் உறுதுணையுடன் பெரியள விலே உறுப்பினர்களைச் சேர்த்துக் கலை விழாக்களையும் விளையாட்டுப் போட்டிகளை யும் நிகழ்த்துவதற்கு இளைஞர்கள் திரள வேண்டும்.

தமிழ் இயற்றமிழ், இசைத்தமிழ், நாட கத் தமிழ் என முத்தமிழாக வகுக்கப்பட் டுள்ளது. இசையையும் நாடகத்தையும் இணைத்து வளர்க்கும் ஆர்வமும் ஆசையும் இளைஞர்களிடத்தே தோன்றி நலஞ் செய்ய வேண்டும். இன்றைய நிலையில் சமயஅறிவு (எச்சமயமாக இருந்தாலும்) அவசியமாகின் றது. ஒவ்வொருவரும் தாம் தாம் பிறந்த சமயத்தினை நெறி பிசகாது கடைப்பிடித்து ஒழுகி அவ்வச் சமய போதனைகளை மனங் கொண்டு நற்பிரசைகளாக வாழவழிவகுக்க வேண்டும். சமயவுண்மைகளைக் கசட றக் கற்றாலேயே சமயச் சண்டை— போட்டி—ஆட்சேர்ப்பு — என்பன இடம் பெறமாட்டா. ஆதலால் அடிப்படைகளை நல்ல முறையிலே கற்பதற்கான ஒரு திட் டத்தை — வகுப்பினை ஏற்படுத்தி நடை முறைப்படுத்தல் வேண்டும். வெறுமனே சாப்பிடுவதும் உறங்குவதுமாக இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால் மனிதர்களாகிய எமக்கும் விலங்குகளுக்கும் வேற்றுமையில்லாது போய் விடும். எனவே துடிப்புடனும், விழிப் புணர்ச்சியுடனும் நமது இளைஞர்கள் தொழிற்பட்டு அவ்வத்துறைகளிலே முன்னேற்றங் காணுதல் வேண்டும். இம்முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கு இளைஞர்களுக்குப் பக்கபலமாக — ஆதரவாக — பணம் படைத்தவர்களும். மனம் படைத்தவர்களும் உதவிகள் புரிந்து உற்சாகப்படுத்துதல் வேண்டும். இளைஞர்களது பணிகளைச் செம்மைப்படுத்தி நல்ல முறையில் வளர்த்தெடுப்பது அவசியமாகும். பயனைப் பொறுத்தே முயற்சியின் அளவு மதிப்பிடப்படும். எனவே அதிக பயன் விளைந்தால் முயற்சியின் வேகமும் கணிப்பிடப்படலாம். எனவே பல பயன்தரு திட்டங்களை இளைஞர் ஒன்றியங்கள் தீட்டி நடைமுறைப்படுத்தலாம்.

கோவில்களிலே திருத்தொண்டுபுரிதல், சைவசமயிகளாயின் திருமுறை, புராணம், குருபூசைகள் நிகழ்த்துதல் என்பன நமது பண்பாட்டு எல்லைக்குள் நின்று நாம் முன்னின்று செய்யத் தக்கவை. இவற்றிலே இளைஞர்கள் கவனம் செலுத்துவது மிகவும் பயன்தரும் நிகழ்வுகளாகும்.

போட்டிகளால் மாணவர்கள் முதியவர்கள் இயல்பாகவே ஊக்கங் கொள்வர். பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், கவிதைப் போட்டிகள், முதியோர் நடைப்போட்டி என்பன சமூகத்தின் ஆர்வமிக்கவர்களால் வரவேற்கப்படும் போட்டிகளிற் சிலவாகும். எனவே போட்டிகளை நிகழ்த்தி ஆர்வத்தை வளர்ப்பது மிகவும் உற்சாகமான சமூகப் பணியாகும். ஒரு கிராமத்தினதோ அல்லது ஒரு நாட்டினதோ பெருஞ் சொத்து அக்கிராமத்திலே பயிலப்படும் கலைகளாகும். நாட்டார் கலைகள், கூத்துக்கள், காவடி, கரகம், காத்தவராயன் நாடகம் போன்றவை ஊர்க்கலைஞர்களிடையே பிரபல்யம் பெற்றுத் திகழலாம். அவ்வகையான கலைத்துவ அமிசங்களை மேடைநிகழ்வுகளாக்கி உற்சாகப்படுத்தும் பணியும் இளைஞர்களையே சார்ந்து நிற்கிறது, இவ்வாறு பன்முகப்பட்ட பணிகளை நோக்கியதோடு செயற்றிட்டத்தை இளைஞர்கள் வகுத்துச் செயற்படுத்தினால் அவர்களின் செய்கை நன்றிக்கும் பாராட்டுக்குமுரியதாகக் கணித்துக் கௌரவம் பெறும் என்பதில் ஐயமில்லை.

இளைஞர்களே ஒரு நாட்டின் முதுகெலும்பு. அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டால் சாதிக்க இயலாததென்றொன்றில்லை. 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற பழமொழி இளைஞர்களது ஒற்றுமையை வலியுறுத்துவதற்கு இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கருத்தொற்றுமை, கொள்கையொற்றுமை, வயதொற்றுமை, இயல்பொற்றுமை என்ற அத்தனையமிசங்களிலும் ஏகோபித்த கருத்துடையவர்களாக இளைஞர்கள் அணி திகழுமாயின் அவர்களால் இயலாததென்றொன்றில்லை. எனவே ஆற்றலும் அறிவும், துடிப்பும் ஐக்கியமும் உள்ள இளஞ்சந்ததியின் மனம் விரிவடைந்து சமூகப் பணியில் ஈடுபட்டுச் சமூக மதிப்பைப் பெற்று நல்லன செய்து புகழுடனும் பீடுடனும் வாழ வாழ்த்துகிறேன். வெல்க இளைஞர் பணி!

★

*இந்த உலகில் வாழும் மனிதர்களிலேயே மிக முக்கியமான மனிதர் நீங்கள் மட்டுமே. இந்த உலகச் சரித்திரத்திலேயே உங்களை மிகச் சரியாக உணர்ந்து அறிந்து விரும்பக்கூடிய மனிதர் யார் என்றால் அதுவும் நீங்கள்தான். மீண்டும் திரும்ப வராத முடிவற்ற காலம் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தில் தனிப்பட்ட முறையில் நீங்கள் எதையாவது சாதித்து உலக சரித்திரத்தில் இடம்பெற வேண்டாமா? மாறுங்கள். மாற்றத்தைக் கொண்டு வந்துவிடலாம்.*

*— ஹில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி என்னும் பயிர்

பேராசிரியர் வ. ஆறுமுகம்
கல்வியற்றுறை யாழ். பல்கலைக் கழகம்

பயிர்ச் செய்கை என்பது, பொதுவாக, விவசாயத்துடன் தொடர்புடையதாகவே கருதப்படுவதுண்டு. ஒரு விவசாயி பயிர்ச் செய்கையாகிய தனது தொழிலில் பல வழிகளில் பாடுபடுகின்றான். விதை விதைத்தல் / நடுதல், பராமரித்தல், பாதுகாத்தல் என்ற படிமுறையிலான முயற்சிகளில் அவன் இறங்குகின்றான். எனினும், பயிர் செய்யும் போது அவன் அதனைக் குறித்த ஒரு காலத்திலேயே ஆரம்பிக்கின்றான். பயிர்ச் செய்கைக்கெனப் பொருத்தமான காலம் உண்டு. அக்காலந் தவறிப் பயிர் செய்ய முனைவது பயனற்ற செயலாகும். எமது முன்னோர் 'பருவத்தே பயிர் செய்' என்று கூறியது இக்காரணத்தைக் கருத்திற்கொண்டேயாகும்.

பொருத்தமான காலத்தில் பயிர் செய்யும் போது, விதையை விதைப்பதற்கு ஏற்றதாக நிலத்தைப் பண்படுத்தி வைத்திருத்தல் வேண்டும், பண்படுத்தப்படாத நிலம் விளை நிலமாகமாட்டாது. விளைநிலமல்லாத வெறும் நிலத்தில் விதைக்கப்படும் விதை வேர்விட்டுச் செழித்துப் பயிராகமாட்டாது. எனவே, முதல் வேலையாகப் பயிரிடும் நிலத்தில் கவனஞ் செலுத்தப்படவேண்டியது அவசியம். விதை முளைத்துப் பயிராக வளரும் போது அதற்குத் தேவையான பசளை. நீர் ஆகியன உரிய காலங்களில், உரிய அளவில், உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். அப்போது தான் பயிர் செழிப்பாக வளரும் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. கல்வியும் அத்தகைய ஒரு பயிரேயாகும்.

கல்வி ஆகிய பயிரின் விளைச்சலுக்குரிய நிலம் மாணவனது உள்ளமாகிய 'விளைநில'மாகும். விவசாயத்தில் எவ்விதம் பயிர் வளர்ச்சிக்கென ஏற்ற பருவங்கள் கொள்ளப்படுகின்றனவோ அவ்விதம் கல்விப் பயிரின் வளர்ச்சிக்கு மிகவும் உகந்த பருவம் மாணவனது இளமைப்பருவமேயாகும். அதனாற்றான் 'இளமையிற் கல்' என்றும் 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்றும் கொண்டனர்.

கல்லில் பொறிக்கப்படுகின்ற எழுத்து என்றென்றும் அழியாது நிலைத்துநிற்கும். ஒருவன் தனது இளமையில் பயிலும் வித்தையும் அப்படியே நிலைத்துநிற்கும். பிள்ளைப் பருவமானது கல்வி என்னும் விதையை நாட்டுவதற்குப் பொருத்தமான பருவமாகும். இப்பருவத்தினர் வேறு விதமான தொல்லைகள், தொந்தரவுகள் இல்லாதவராய் கல்வியை உளங்கொள்வதற்கேற்ற தயார் நிலையில் இருப்பர். கல்வியானது 'கருப்பையில் இருந்து கல்லறை வரைக்கும், நீடிப்பதாக இன்றைய வழக்கில் கொள்ளப்படுவதானாலும், அதன் வளர்ச்சிக்குரிய பருவமாக மாணவனது இளமைப் பருவமே வலியுறுத்தப்படுகிறது. புதிதாகக் கற்கும் விடயங்களில் கவனஞ் செலுத்தவும், அப்படியானவற்றைத் துருவிச் செல்லவும், அவற்றை உள்ளத்திலிருத்தவும் அதுவே சிறந்த பருவமாகும். உலகிலுள்ள எந்த நாட்டினை எடுத்துக்கொண்டாலும் அதன் கல்விசார் நடைமுறைகள் இதனை மெய்ப்பிக்கின்றன.

விதையினை விதைத்துப் பயிரை வளர்ப்பவன் விவசாயி என்பது போல் கல்வி என்னும் பயிரை வளர்ப்பவன் ஆசிரியனாவான். நிலத்தைப் பண்படுத்திப் பயிரின் செழிப்பான வளர்ச்சிக்கு விவசாயி காரணமாவது போல மாணவனுடைய உள்ளத்தைப் பக்குவப்படுத்தி, பண்படுத்தி, கல்வி என்னும் பயிர் காலூன்றுவதற்கேற்றதாகப் பதப்படுத்துவது ஆசிரியனுடைய முயற்சியாகின்றது. தனது பொறுப்பில் விடப்பட்ட மாணவர்களது வளர்ச்சி, முன்னேற்றம் என்பவற்றில் கண்ணுங்கருத்துமாக இருப்பவனே நல்லாசிரியனாவான். மாணவரிடத்தே அறிவு நிறைந்து பரந்து விளங்குவது ஆசிரியனுடைய பணியின் பருமனிலே தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கல்வி என்னும் பயிருக்குக் கண்ணீர்
என்னும் தண்ணீர் வேண்டும்' என்பது ஒரு
காலத்தைய கருத்து. இன்றைய கல்வியுலகு
அதனை முற்றாக ஒதுக்கித் தள்ளிவிட்டது.
அன்று கற்றல் என்பது மாணவனது விருப்ப
மில்லாமல் வலிந்து, கட்டாயத்தின் பேரில்
திணிக்கப்பட்ட நிலையில் 'கண்ணீர்' அதற்கு
தண்ணீராக இருந்திருக்கலாம். கற்றல்
அனுபவங்கள் மாணவனுக்குக் கசப்பான
வையாக இருந்தமை அதற்குக் காரணமாயி
ருக்கலாம். 'சட்டம்பி பொல்லாதான் சற்று
மிரங்காதான்' என்ற உருவகம் அதற்கு
மேலும் வலுவூட்டியது. அதன் பயன் மாண
வனுடைய கண்ணீர் மலிந்த காட்சியேயா
கும். பள்ளிக்கூடப் பருவத்தில், எதுவித
முன்னாயத்தமுமில்லாமல், பள்ளிப் படிப்பில்
புகுத்தப்பட்ட மாணவன் அதனோடு தன்னைப்
பொருத்திக்கொள்ளும் வரைக்கும் பள்ளிப்
படிப்பு அவனுக்குத் துயர் தருவதாகவே
இருந்திருக்கும்.

பள்ளிக்கூட வாழ்க்கையில் மாணவன்
பெறப்போகின்ற அனுபவங்கள் அனைத்தும்
இன்பகரமானவையாக இருப்பதை இன்
றைய கல்வி முயற்சிகள் யாவும் வலியுறுத்து
கின்றன. எனவே கல்வியின் வளர்ச்சியில்
இன்று அந்தக் 'கண்ணீரு'க்கு இடமில்லை.
அதற்குப் பதிலாக ஆனந்தக் கண்ணீரையே
எதிர்பார்க்கலாம். துன்பத்தின் வெளிப்
பாடாக இன்று கல்வி காணப்படுமேயானல்
அங்கு ஏதோ விரும்பத்தகாத விடயம் இருக்
கின்றது என்பதே பொருளாகும்.

மாணவன் கற்றலை மேற்கொள்ளும்
போது மனநிறைவுடன். முழு விருப்புடன்
மகிழ்ச்சியுடன் ஈடுபடவேண்டும், அப்போது
தான் அவனுக்குக் கிடைக்கும் அனுபவங்க
ளும், அவற்றின் மூலம் அவன் பெறும் அறி
வும் அவனுடைய உள்ளத்தில் உறைந்து படி
யும். இதில் ஆசிரியருடைய பங்கு மிகவும்
முக்கியமானதாகும்.

தான் கற்பிக்கும் பிள்ளைகளுடைய உள
முதிர்ச்சி, அறிவு முதிர்ச்சி, பின்னணி என்ப
வற்றைக் கவனத்திற்கெடுத்து, அவற்றுக்குப்
பொருத்தமான அணுகுமுறையைக் கையா
ளும் ஒருவனே உண்மையான ஆசிரியனு
வான். அக்'கலை' எல்லோர்க்கும் எளிதில்
கைவரும் / கைவரக்கூடிய ஒன்றெனக் கூற
முடியாது. அது தானாகத் தோன்றுவதும்
அன்று. முயன்று வளர்க்கக்கூடிய /வளர்க்கப்
படவேண்டிய ஒன்றாகும். அத்தகைய முயற்
சியைத் தான் நாம் ஆசிரிய பயிற்சி என்கி
றோம்.

அண்மைக்காலம் வரைக்கும் அறிவுள்ள
வன் எவனும் ஆசிரியனாகலாம் என்ற எண்
ணம் இருந்து வந்தது. அதன்படி ஆசிரியர்
கள் எல்லோரும் கட்டாயமாகப் பயிற்றப்பட
வேண்டும் என்றுகொள்ளப்படவில்லை. தனக்
குத் தெரிந்தவற்றைத் தனது மாணவருக்குச்
சொல்லிக்கொடுப்பது தான் ஆசிரியனுடைய
கடமை என்று கொள்ளப்பட்ட பின்னணி
யில், மாணவனைப் பற்றிச் சிந்திக்காது கற்
பிக்கப்பட்ட பாடத்தைப் பற்றியே சிந்தித்த
நிலையில், ஆசிரியன் பயிற்றப்படவேண்டும்.
என்ற எண்ணம் அழுத்தம் பெறாதது ஆச்
சரியமில்லை ஆனால், இன்று சிந்தனை மறு
துருவத்துக்குச் சென்றுவிட்டது. நாம் கற்
பிக்க முற்படும் பாடத்திலும் பார்க்க அந்தப்
பாடத்தைப் பயிலும் மாணவனுக்கு இன்று
முதலிடம் கொடுக்கிறோம்.

கல்வி பயிலும் மாணவன் தான் கற்ப
வற்றை எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடிய
தாகக் கற்பிப்பது பற்றிய அங்கலாய்ப்பே
இன்று மேலோங்கி நிற்கின்றது. எனவே.
ஆசிரியத் தொழிலில்புகும் ஒவ்வொருவனும்
அதற்கெனப் பயிற்றப்படவேண்டும் என்ற
எண்ணம் இன்று வலுப்பெற்றுவிட்டது,
உலக நாடுகள் அனைத்தும் இந்த நோக்கிற்
செயற்பட முனைவதை நாம் இன்று காண்கி
றோம்.

இதனை இன்றைய சமூகமும் ஆசிரிய
உலகமும் கருத்திலிருத்துவது அவசியமாகும்.
கல்வி என்னும் பயிரை வளர்க்க முயலும்
நாம் ஒவ்வொருவரும் அதற்கு வேண்டிய
திறன்களை உடையவர்களாக எம்மைஆக்கிக்
கொள்ளவேண்டும். எம்முடைய அறிவைத்
தொடர்ந்து பெருக்கிக்கொண்டிருந்தாலே
எமது மாணவராகிய விளை நிலத்தில் கல்வி
என்னும் பயிரைப் பெருகச் செய்யலாம்.

ஆசிரியன் விளக்கைப் போன்றவன் என்
பர். விளக்குத் தொடர்ச்சியாக எரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தாற்றான் அது ஒளியைக் கொடுத்து இருளை அகற்றும். ஆசிரியனாகிய விளக்கும் அப்படித்தான். அறிவு என்னும் நெய் நிறைந்து விளங்கினாற்றான் ஆசிரியன் என்னும் விளக்கு மாணவருடைய அறியாமை என்னும் இருளை அகற்ற முடியும். இல்லையெனில் ஆசிரியனால் மாணவனுக்கு எந்த வழியிலும் உதவமுடியாது.

கல்வி என்னும் பயிர்ச்செய்கை பிறிதொரு அடிப்படையையும் அவாவி நிற்கின்றது. அதுதான் ஆசிரியனுடைய அர்ப்பண உணர்வு. கற்பித்தற் தொழிலை மேற்கொள்ளும் ஒவ்வொருவரும் அதற்காகத் தம்மை அர்ப்பணித்தவராக இருப்பது வேண்டத்தக்க இலட்சிய நிலையாகும். அது இல்லாமல் ஆசிரியத்தை வெறுமனே வாழ்க்கைத் தொழிலாகக் கொள்ளும் ஒருவன், தனது நல்வாழ்வுக்கு வேண்டிய பொருளைத் தேடும் வழியாகக் கொள்பவன், ஒருபோதும் அத்தொழிலுக்குப் பொருத்தமானவனாக மாட்டான்.

பயிரை வளர்ப்பதில் கண்ணுங்கருத்துமாயில்லாத விவசாயி தோல்வியைக் காண்பது போல, தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளாத, தனது தொழிலில் முழுமையாக ஈடுபடாத ஆசிரியனும் தன்னுடைய நோக்கத்தை நிறைவு செய்ய முடியாது. இது அனுபவத்தின் பாடமாகும் எமது இளஞ் சந்ததியினரிடையே அறிவைப்பரப்பி கல்வி என்னும் பயிரைச் செழிப்புற வளர்ப்பது எமது கட்டாய கடமையாகும். அதற்கெனத் தம்மை அர்ப்பணிப்பதை ஆசிரியர்களிடமிருந்து சமூகம் எதிர்பார்ப்பது ஏற்புடையதேயாகும்.

★

## திணிக்கும் மொழி வேண்டா
## இணைக்கும் மொழி வேண்டும்

அருமைப் பிள்ளாய்,
அழகுக் குள்ளாய்,
அந்தமிழைக் கற்பாய்!

பெருமை சேரும்
செம்மை கூறும்
பைந்தமிழைக் கற்பாய்!

இமிழ் கடல்சூழ்
உலகினிலே
ஈடிலாத மொழியுள்

தமிழ்மொழி போல்
தாய்மொழி போல்
தருவதுண்டோ விழிகள்!

பாங்கிருக்கும்
பயனிருக்கும்
உலக மொழி ஒன்று

ஆங்கிலத்தை
உலகொருமை
அறிவுக் கேற்பாய் நன்று

பன்மொழிகள்
கற்பதுவும்
படிப்புக் கழகாகும்;

இன்பத்தமிழை
ஏற்றதின் பின்
எய்துவதே சாலும்

ஏங்கிரண்டு
மொழிகள் போலும்
எண்ணமெலாம் ஓங்கும்

வீங்குலகில்
திணிக்கும் மொழி
விளைத்திடுமே தீங்கும்!

— பாரதிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை: தனிமனிதப் பிரச்சனையல்ல சமூகப் பிரச்சனை

டொக்டர் எஸ். கே. முருகானந்தன்

அண்மையில் ஒரு நாள். இளம் தாய் ஒருத்தி தனது மகனை என்னிடம் கொண்டு வந்திருந்தாள். அவன் அன்றுகாலை நேரத்திற்கு எழுந்திருக்கவில்லை, முகம் கழுவவில்லை, தேநீர் குடிக்கவில்லை, சாப்பிடவில்லை; முதல் நாள் இரவு டி. வி. பார்த்தகளை எனத் தாய் சொன்னாள்.

அவனைப் பரிசோதித்துப் பார்த்தேன்.

அரை மயக்கத்தில் கிடந்தான்; கண்கள் சிவந்திருந்தன. எதையோ 'வெறித்த' பார்வை. அருட்டிய போது ஆவேசமாக அடக்கமின்றி நடந்து கொண்டான்.

ஆம், அவன் போதைப் பொருள் உபயோகித்திருந்தான்!

எங்கிருந்து அவனுக்கு இந்தப் பழக்கம் ஏற்பட்டது;

சில காலத்திற்கு முன் அந்நியப் படையின் துன்புறுத்தலும், கட்டாய ஆள் சேர்ப்பு நடவடிக்கைகளும் நடந்த போது அதிலிருந்து தப்ப கொழும்பில் சிலகாலம் தங்கியிருந்தான். அப்பொழுதுதான் இந்தப் பழக்கம் ஏற்பட்டது.

எனவே போதைப் பொருள் பாவனை என்பது நாம் பத்திரிகையில் படிக்கும், எங்கோ நடக்கும் செய்தி என்று எண்ணிய காலம் போய்விட்டது. எம் மத்தியிலும் பரவ ஆரம்பித்து விட்டது. இந்த அசுர ராட்சதன் தனது கோரக் கைகளால் எமது சமுதாயத்தையும் ஆக்கிரமிப்பதற்கு முன்னர். நாம் விழித்திருந்து தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

ஏற்கனவே எமது சமுதாயம் வெளிநாட்டு மோகத்திலும் அதன் பெறுபேறான கலாச்சாரச் சீரழிவினாலும் சிதைந்து கொண்டிருக்கிறது. போதைப் பொருளும் சேர்ந்து விட்டால் எமது எதிர்காலச் சந்ததிகளே அழிந்து விடும்.

எனவேதான் போதைப் பொருள்கள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் நாம் அறிவதுடன்; எமது சமுதாயத்திற்கும் அதனைப் பரப்பி, போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## *போதைப் பொருட்கள் என்றால் என்ன?*

ஒருவனால் உட்கொள்ளும் போது அவனது உடலிலும், மனத்திலும், நடத்தையிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் இரசாயனப் பொருட்களைப் போதைப் பொருட்கள் என்று சொல்லலாம்.

உட்கொள்வது என்பது பலவகைப்படலாம். வாயினால் உண்ணுவது, நீரில் கரைத்துக் குடிப்பது புகைப்பது, சூடு காட்டும் போது வெளியாகும் புகையைச் சுவாசிப்பது. ஊசியால் ஏற்றுவது, முரசினில் தேய்ப்பது போன்ற முறைகளைக் குறிப்பிடலாம். எந்த வகையிலும் போதை உண்டாகும்.

## *சில போதைப் பொருட்கள்*

பலவேறு வகையான போதைப் பொருட்கள் உலகமெங்கும் உபயோகிக்கப்பட்டாலும், இலங்கையில் சில வகையான போதைப் பொருட்களே பாவனையில் உள்ளன.

கஞ்சா *(Ganja)*, அபின் *(Opium)*, ஹெரோயின் *(Heroin)* ஆகிய மூன்றுமே இங்கு இங்கு முக்கியமாக உபயோகிக்கப் படுகின்றன.

மோர்பின் *(Morphine)*, பெத்திடீன் *(Pethidine)* ஆகிய சக்திமிக்க வலிநிவாரண மருந்துகள் மருத்துவத்துறையில் சிகிச்சைக்காக உபயோகிக்கப்பட்டாலும், போதைப் பொருளாய்ப் பாவிக்கப்படுவது குறைவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெற்றமீன் (*Amphetamines*), தூக்க மாத்திரைகள் (*Tranquilizers*) போன்ற மருந்துகளையும் சிலர் போதைப் பொருட்களாக உபயோகித்தாலும், அவை சமூகப் பிரச்சினையாக மாறுமளவில் அதிகமில்லை.

இவற்றைத் தவிர ஹஸீஸ் (*Hashish*) எல். எஸ். டி. (*L. S D.*), கொகெயின் (*Cocaine*) ஆகியவையும் நினைவில் வைத்திருக்க வேண்டிய சில போதைப் பொருட்களாகும்.

அபின், மோர்பின், பெத்திடீன், எல். எஸ். டி, ஹெரோயின் போன்ற பல்வேறு போதை மருந்துகளின் தயாரிப்பிற்கு மூலப் பொருள் பொப்பி (*Poppy*) என்ற தாவரம் தான். இத்தாவரத்தின் பழுக்காத காயை கீறி அதிலிருந்து வடியும் பாலில் இருந்தே இவை தயாரிக்கப்படுகின்றன.

அபினைக் காட்டிலும் மோர்பின் பத்து மடங்கு போதை நிறைந்தது. ஹெரோயின் மோர்பினைக் காட்டிலும் நூறு மடங்கு போதை நிறைந்தது.

உலகில் ஹெரோயின் உற்பத்தி நாடுகள், தங்கப் பிறை (*Golden Crescent*), தங்க முக்கோணம் (*Golden Triangle*) என இரு பிரிவுகளாக உள்ளன. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் 'கோல்டன் கிறசண்டி'லும், பர்மா, லாவோஸ், தாய்லாந்து ஆகிய நாடுகள் 'கோல்டன் ட்ரை ஆங்கிளி'லும் அடங்குகின்றன.

இந்த இரண்டிற்கும் இடையில் அகப்பட்டிருக்கும் இந்திய நாட்டின் பம்பாய், சென்னை நகரங்கள் வழியாக எமது நாட்டிற்கும் பெருமளவில் ஹெரோயின் வந்து சேர்கிறது.

உற்பத்தி இடங்களில் கிலோ 15,000 மதிப்புள்ள ஹெரோயின் அமெரிக்காவை அடையும்போது கிலோ ஒருகோடி ரூபா அளவிற்கு உயர்ந்து விடுகிறது. இதனால்தான் பலரும் தமது மனச்சாட்சியையும், ஏன் உயிரையும் கூடப்பொருட்படுத்தாது போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு, பெருமளவில் பணம் சம்பாதிக்கிறார்கள்.

கஞ்சா கனபிஸ் சற்றைவா (*Cannabs Sativa*) என்ற சணல் வகைத் தாவரத்திலிருந்து பெறப்படுகிறது. இது இலங்கையின் தென்கிழக்குப் பகுதியின் வரண்ட பிரதேசங்களில் சட்ட விரோதமாகப் பயிரிடப்படுகிறது. இலங்கையில் பல நூற்றாண்டு காலமாக உபயோகத்தில் இருந்து வந்திருக்கிறது. இறைச்சிக்கறி சமைப்பதில் உபயோகிக்கப்படும் பொருளாக இது பாரம்பரியப் பெருமை கொண்டது. அத்துடன் ஆயுள்வேத மருந்துகளிலும் உபயோகிக்கப்படுகிறது.

## ஏன் அடிமை ஆகிறார்கள்?

போதைப் பொருள் பாவனையாளர்கள் இயற்கையிலேயே கெட்டவர்களோ, மோசமானவர்களோ அல்ல. பெரும்பாலும் சந்தர்ப்பவசத்தால்தான் அதற்கு அறிமுகமாகிப் பின் அடிமையும் ஆகிறார்கள்.

பெரும்பாலும் உயர்வகுப்பு மாணவர்களும், வாலிபர்களும், சில யுவதிகளும் கூட போதைப் பொருட்களுக்கு அறிமுகமாகிறார்கள். பெற்றோர்களிடமிருந்து போதிய அன்பும் ஆதரவும் கிடைக்காமை, பெற்றோர்களின் மிதமிஞ்சிய கட்டுப்பாடு, குடி அல்லது போதைப் பழக்கம் உள்ள தந்தை, சதா பிரச்சினைப்பட்டு சண்டை பிடிக்கும் பெற்றோர், வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகள், சவால்களைச் சமாளிக்க முடியாமை, காதலில் தோல்வி, கெட்ட நண்பர்களின் சகவாசம், பாதுகாப்பின்மை போன்ற காரணங்களால்தான் பெரும்பாலும் போதைப் பொருட்களுக்கு அறிமுகமாகிறார்கள், பிரச்சினைகளிலிருந்து தப்ப எண்ணி, போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி விடுகிறார்கள்.

'அது எப்படி இருக்கும்' எனப் பரீட்சித்துப் பார்க்க முயன்று அடிமையாபவர்கள் பலர். போதைப் பொருட்களின் தரத்தை நிர்ணயிக்க முகர்ந்து பார்க்கும் வியாபாரிகளும் அடிமையாவதுண்டு.

## போதைப் பொருளுக்கு ஆட்படுதல்

போதைப் பொருட்களை உட்கொள்ளும் போது ஒருவித பரவச நிலை இன்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு ஏற்படுகிறது, இது உண்மையான பரவச நிலை அல்ல; போலி உணர்வுதான்

சில வேளைகளில் ஒருவித உற்சாகமும் ஏற்படலாம். சாதாரண நேரத்தில் தன்னால் செய்ய முடியாத ஒரு காரியத்தை போதைப் பொருட்களை உபயோகித்த பின் துணிச்ச லுடனும் மதிநுட்பத்துடனும், நுணுக்க மாகவும் செய்யலாம் என எண்ணுகிறார் கள். இதுவும் போலியான உணர்வே. உண் மையில் இதற்கு எதிர்மாறாகவே நடக்கிறது.

இந்தப் போலிப் பரவசத்தாலும் உற் சாகத்தாலும் கவரப்பட்ட மனிதன், அந்த மன நிலையையே மீண்டும் மீண்டும் பெற விரும்புகிறான். இதனால் மீண்டும் மீண்டும் போதைப் பொருட்களை நாடி, அதற்கு அடிமையாகிறான்.

ஆரம்பத்தில் எப்போதாவது ஒருமுறை தான் உபயோகிப்பார்கள், பிறகு மாதமொரு முறை என நினைப்பார்கள். 'இதைக் கூட நான் நினைத்தால் நிறுத்திவிடுவேன்' என்பார் கள். ஆனால் மனம் சொன்னபடி கேட்காது. சனி, ஞாயிறு தினங்களில் மாத்திரம் என எண்ணுவார்கள். இறுதியில் தினமும் உப யோகிக்க வேண்டி நேரிடும்.

ஆனால் நாட்செல்ல உபயோகிக்கும் போதைப் பொருளின் அளவையும் அதி கரிக்க வேண்டிய நிலை ஏற்படும் முன்பு கிடைத்த பரவசத்தை அதேயளவு போதைப் பொருளால் பின்பு கொடுக்க முடியாது. ஏனெனில் உடல் அதற்குப் பழக்கப்பட்டு போய்விடுகிறது. எனவே தான் அதன் அளவை அதிகரிக்க நேரிடுகிறது.

போதைப் பொருளுக்கு அடிமையாகும் ஒருவனின் மனநிலை மாத்திரமின்றி உடல நிலையும் கூடப் பாதிப்படைகிறது.

## போதை ஏற்படுத்தும் சில பாதிப்புகள்

போதைப் பொருள்கள் மனிதனின் நரம்பு மண்டலத்தையும் அதன் காரணமாக மனநிலையையுமே ஆரம்பத்தில் பாதித்தா லும், ஈற்றிலும் உடலின் ஒவ்வொரு உறுப் பையும் பாதிக்கவே செய்யும்.

ஆரம்பத்தில் அதிக வியர்வை, நித்திரை யின்மை, எரிச்சல் மனப்பான்மை, தடுமாற் றம், ஓங்காளம், சத்தி, கைநடுக்கம், வயிற் றோட்டம், தசைப்பிடிப்பு, பார்வை மங்கல், நெஞ்சுப் படபடப்பு போன்ற சாதாரண அறிகுறிகளே தோன்றுகின்றன.

பின்பு, கல்லீரல், சிறுநீரகம், மார்பு சம்பந்தமான நோய்களும், கடுமையான மூட்டுவலி, நரம்புத்தளர்ச்சி, போன்றவையும் உண்டாகலாம். சில தருணங்களில் வலிப்பு ஏற்பட்டு மரணம் கூட ஏற்படலாம். புற்று நோய் கூட உண்டாகக்கூடிய வாய்ப்பிருக் கிறது. ஆண்மையும் பாலியல் உணர்வும் தளர்ந்து விடும்

போதைப்பொருளைப் பெறுவதற்காக வும் அதற்கான பணத்தைப் பெறுவதற்காக வும் கொலை, களவு, விபச்சாரம் போன்ற எதையும் செய்வதற்கும் கூட போதை அடி மைகள் தயங்கமாட்டார்கள்.

## அவர்களை அடையாளம் காண்பது எப்படி?

போதைப் பொருள் பாவனையாளர்களை அதிலிருந்து மீட்கவும், பூரணமாகக் குணப் படுத்தவும் வேண்டுமாயின் அவர்களை ஆரம் பத்திலேயே இனங்காண்பது அவசியம். ஆயி னும் ஆரம்ப காலத்தில் அதற்கான அறிகுறி கள் தெளிவாக இருப்பதில்லை.

போதைப் பொருட்கள் பற்றிய தெளி வான அறிவும் போதிய முன்னெச்சரிக்கை யும் இருந்தால் மட்டுமே அவர்களை அடை யாளம் காணமுடியும், உங்கள் நெருங்கிய உறவினரோ, நண்பரோ கூட போதைப் பொருளுக்கு ஆட்படக் கூடும். எனவே விழிப்பாயிருங்கள் பின்வரும் அறிகுறிகள் அவர்களிடம் தெரிகிறதா என்பதை அவதா னியுங்கள்.

★ மகிழ்ச்சியும், உற்சாகமும், ஆர்வமும், முயற்சியுமுள்ள ஒருவரது மனோநிலை திடீ ரென எரிச்சலும் சிடுசிடுப்பும் மந்தமுமாக மாறினால் அவர் சந்தேகத்திற்குரியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ உங்களுக்குத் தெரிந்த ஒருவர் முன் போல் தனது படிப்பிலோ, வீட்டு வேலைகளிலோ, விளையாட்டிலோ அல்லது தொழிலிலோ அக்கறை காட்டாது சோர்வாகவும் அலட்சிய மனப்போக்குடன் இருந்தால் அவரையும் சந்தேகிக்கலாம்.

★ அடிக்கடி மாறும் மனோநிலைகளையும் அவதானியுங்கள். போதையில் இருக்கும் போது அமைதியாகவும் மகிழ்ச்சியுமாக இருப்பவர் போதை மறைந்ததும் சிடுசிடுப்புடனும் கோபத்துடனும் மனஅமைதி குலைந்தும் இருப்பார்.

★ அடிக்கடி கோபம் உண்டாகலாம். சிறு சிறு விஷயங்களுக்குக் கூட சண்டை பிடிக்கக் கூடும்.

★ தனது தவறான நடத்தையை மறைப்பதற்காகவும் போதைப் பொருட்களை வாங்குவதற்குத் தேவையான பணத்தைப் பெறவும் அடிக்கடியும் அனாவசியமாகவும் பொய் சொல்வர்.

★ குளிப்பதிலோ, சுத்தமான உடை அணிவதிலோ, தலை வாருவதிலோ அக்கறை இருக்காது. எனவே தனது தோற்றத்திலும் கவர்ச்சியிலும் அக்கறை எடுக்காதவர்களையும் கூர்ந்து கவனியுங்கள்.

★ கண் சிவந்திருக்கும். வாய், கண், மூக்கு ஆகியவற்றால் நீர் வடியும்.

★ ஏராளமான புதுநண்பர்கள் பழக்கமாவார்கள்,

★ பெரும்பாலும் வீட்டில் தங்கமாட்டார்கள். தங்கினாலும் இரவில் வெகுநேரம் கழித்தே வீட்டுக்கு வருவார்கள். காலையில் எழுந்திருக்க நேரமாகும்,

★ தனிமையை நாடுவார்கள். மனம் விட்டு கலகலப்பாக பழங்கமாட்டார்கள். எதையோ வெறித்துப் பார்க்கும் கண்களை அவதானிக்கலாம்.

★ வீட்டிலோ அலுவலகத்திலோ பணத்தையோ பொருட்களைத் திருடத் தயங்கமாட்டார்கள். இது போதைப் பொருளை வாங்குவதற்கான பணத்தைப் பெறுவதற்காகச் செய்யப்படுவது. எனவே உங்கள் வீட்டிலோ அலுவலகத்திலோ பணமோ, பொருளோ அடிக்கடி களவு போனால் உஷாராகுங்கள்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் ஒருவரைப் போதைப் பொருள் பாவனையாளரா எனச் சந்தேகப்படலாம். ஆயினும் அதை நிச்சயப்படுத்த வேறு தடயங்கள் இருக்கின்றனவா என ஆராயுங்கள்.

★ அவரது தனியறையை அல்லது குளியலறை, கழிவறை ஆகியவற்றை உன்னிப்பாக அவதானியுங்கள். அங்கு மருந்துத் தூள்கள், மாத்திரைகள். கருகிய ஈயத்தாள், மருந்து ஏற்றும் ஊசி, தீப்பெட்டி ஆகியவை ஏதாவது இருந்தால் உங்கள் சந்தேகம் உண்மையாக இருக்கலாம்.

★ அவரது உடலிலோ. உடையிலோ, அறையிலோ வழமைக்கு மாறான மணம் வீசுகிறதா எனவும் அவதானியுங்கள்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் அல்லது ஒருவர் பற்றி சந்தேகம் எழுந்தால் அவரைத் தீர விசாரித்து காரணத்தை அறியுங்கள். போதைப் பொருள் தான் காரணமாயிருந்தால் அவரைத் தகுந்த வைத்தியரிடமோ அல்லது அதற்கான புனர்வாழ்வு நிலையங்களுக்கோ அழைத்துச் சென்று அவரைப் போதையிலிருந்து மீட்டெடுத்து மீண்டும் கௌரவமான மனிதராக்க முயலுங்கள்.

சமுகப் பிரச்சினை

போதைப் பொருள் அடிமைகள் தமக்குத் தாமே தீங்கிளைப்பதுடன் நின்று விடுவதில்லை. அவரது தனிமனிதப் பிரச்சினை, அவரது குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பொருளாதாரப் பிரச்சினையாகவும் கௌரவப் பிரச்சினையாகவும் மாறி ஈற்றில் சமூகப் பிரச்சினையாக வளர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஹெரோயின் அடிமை நாளொன்றுக்கு ரூபா 50—150 வரை செல வழிக்க வேண்டியுள்ளது, இது எமது சரா சரி மனிதர்களின் கைக்கு மீறியது. அத்து டன் போதை அடிமை தான் சுயமாகத் தொழில் செய்ய இயலாதிருப்பதால் குடும் பத்திற்குச் சுமையாகிவிடுகிறார், இது குடும் பத்தில் வறுமையையும் போதாமையையும் உருவாக்குகிறது.

அத்துடன் போதைப்பொருள் அடிமைகள் களவு, கொள்ளை, கொலை, விபச்சாரம் போன்ற சமூக விரோதச் செயல்களிலும் ஈடு படுகின்றனர். இதனால் தான் போதை தனிமனி தப் பிரச்சினையாக நின்று விடாது சமூகப் பிரச்சனையாக வளர்ந்துவிடுகிறது.

எனவே சமூகக் கடப்பாடுள்ள ஒவ் வொருவரும் செய்யக்கூடியது என்ன?

★ ஒவ்வொருவரும் 'நான் எத்தருணத்தி லும் போதைப் பொருளை உபயோகிக்கமாட் டேன்' எனத் திடசங்கற்பம் எடுத்து அதன்படி ஒழுகவேண்டும்,

★ போதைப் பொருள் பாவனையால் ஏற் படும் பிரச்சினைகள், அழிவுகள் பற்றி தனது சுற்றுடலிலும் சமூகத்திலும் பிரதேசத்திலும் நாட்டிலும் பிரச்சாரம் செய்யவேண்டும்.

★ போதைப் பொருளுக்கு எதிரான ஏனைய இயக்கங்களுடன் இணைந்து பணி யாற்ற வேண்டும்,

உதாரணமாக, மல்மதுர 60, ஹோட் டன் பிளேஸ். கொழும்பு 7, சாந்தீகம், 21, முதலாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். தேசிய அபாயகரமான மருந்துகள் கட்டுப் பாட்டுச் சபை, அடிக் (ADIC) ஹெவ்லொக் வீதி, கொழும்பு ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளலாம்.

எல்லோரினதும் ஒருமித்த முயற்சி, போதை அரக்கனிடமிருச்து எமது சமூகத் தைக் காப்பாற்ற நிச்சயம் உதவும்.

## முக்கனியில் நடுக்கனியாம் சுவை மிகுந்த பலா

தமிழ் இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்படும் பழங்களில் மா, பலா, வாழை மூன்றும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. 'பசித்திருக் கும் போது பலாப்பழம், உண்ட வயிற்றிற்கோ மாம்பழம்' என்பது கன்னட நாட்டுப் பழமொழியாகும். பலா பழுத்தால் போதும், அக் கம் பக்கத்திலிருக்கும் அனைவருக்கும் தெரிந்துவிடும். அதன் மணமே அலாதி.

நன்கு முதிர்ந்த பலாப்பழங்கள் 40 கிலோ வரை இருக்கும். பழத்தில் உண்ணத் தகுந்த பகுதி 30% மாத்திரமே. மீதியுள்ள சக்கை ஆடு மாடுகளுக்கு உணவாக பயன்படுகிறது.

நூறு கிராம் பலாச்சுளையில் அடங்கியுள்ள ஊட்டச் சத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| சக்தி | 88 கலோரி | நார்ப்பொருள் | 1.1 கிராம் |
| கல்சியம் | 20 மி. கி. | பொஸ்பரஸ் | 41 மி. கி. |
| இரும்புச் சத்து | 0.5 மி. கி. | விட்டமின சி | 7 மி. கி' |
| பொட்டாசியம் | 191 மி. கி. | சோடியம் | 41.1 மி. கி. |

நன்றி: நல்வழி ஆகஸ்ட் 89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி அபிவிருத்தியில் குடாநாட்டிற்கு ஒரு சுற்றுப் புகையிரதப் பாதை

பேராசிரியர் **பொ. பாலசுந்தரம்பிள்ளை** *Ph. D. Derkam*
யாழ்ப்பாண பல்கலைக் கழகம்

பெரிய நகரங்கள், நகராக்கப்பட்ட பரப்புக்கள், கிராம நகரங்களுக்கிடையிலான போக்குவரத்துச் செயற்பாடு இன்று மிக முக்கியமடைந்துள்ளது நகரப் போக்குவரத்துத் திட்டமிடல் இன்று மிகவும் சிக்கலானதொரு துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. பாதைகள் அமைப்பதில் பெருமளவு நிலப்பரப்புந் தேவைப்படுவதும், அவற்றைப் பெறுவதில் ஏற்படும் நிதி, சட்டப் பிரச்சினைகள் ஒரு பக்கமும் எரிபொருள் செலவு அதிகரித்திருப்பதும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாய் இருப்பதால் வீதிகளில் ஏற்படும் விபத்துக்கள் போன்றன பெரும் பிரச்சினைகளாகவுள்ளன. மக்கள் பெருக்கம், நகராக்கம் போன்றவற்றால் போக்குவரத்து அதிகரித்ததுடன், இது பற்றிய கல்வியும் வளர்ச்சி பெற்றிராததனைக் காணலாம். நகரங்களிலுங். நகரைச் சூழவுள்ள பிரதேசத்தில் வாழ்வோர் குறிப்பாக தொழிலாளர்கள், மாணவர்கள், நுகர்வோர் மற்றும் குடிமக்கள் பல தேவைகள் கருதித் தினமும் பல பிரயாணங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளனர். இதனால் நகரப் போக்குவரத்து மலிவானதாகவும், கூடிய நிகழ்தகவு கொண்டதாகவும், எந்நேரமும் கிடைக்கக்கூடியதாகவும், வசதியானதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் நகரப் போக்குவரத்து பல சிக்கல் தன்மையைக் கொண்டது. குறித்த சிலநேரங்களில் நெருக்கடிப் பயணங்கள் காணப்படுகின்றன. காலையில் நகர் நோக்கிய பயணங்களும் மாலையில் நகரில் இருந்து வெளிநோக்கிய பயணங்களும் கூடுதலாகக் காணலாம். இப்பயண ஒழுங்கு வாகனங்களின் பயணச்சுமை ஒழுங்கைப் பாதிக்கின்றது. காலையில் நகரிலிருந்து வெளிநோக்கிச் செல்லும் பிரயாணங்களில் வாகனங்கள் பயணிகள் நிறைந்ததாகவும், மாலையில் இச்செயற்பாடு எதிராக அமைந்தும் இருப்பது காணக்கூடியதாக உள்ளது. இதனால் போக்குவரத்துத் திட்டமிடலில் இரு திசை நோக்கிய பயணத்திலும் பிரயாணச்சுமை ஒழுங்கு ஓரளவுக்கு சரியாக அமைய வேண்டியதொன்றாகவுள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் நகரப் போக்குவரத்தில் தனியார் வாகன உடமை அதிகரித்து இருப்பதும் 1970களின் பின்னர் வாகன உடமை மேலும் அதிகரித்து இருப்பதைக் காணலாம். இதனால் நகரங்களுக்கிடையிலான போக்குவரத்துச் சேவையில் பஸ் போக்குவரத்து முக்கியத்துவம் இழந்துள்ளது. எனினும் பெரிய நகரங்களிலும் நகரங்களுக்கிடையிலான போக்குவரத்திலும் புகையிரதம் முக்கியம் பெற்றிருப்பதைக் காணலாம். இலண்டன், பாரிஸ், நியூயோர்க் போன்ற பெரிய நகரங்களில் தரைக்கீழ்ப் புகையிரதப் போக்குவரத்து முக்கியத்துவம் பெற்றிருப்பதனைக் காணலாம். பெரிய நகரங்களெல்லாம் தரைக்கீழ்ப் போக்குவரத்தை விருத்திசெய்து வருகின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாகன உடமை குறைவாக இருப்பதும், நகரங்களுக்கிடையிலான போக்குவரத்தில் அரச அல்லது தனியார் போக்குவரத்து முக்கியத்துவம் பெற்றிருப்பதனைக் காணலாம். மேலும் வாடகை வாகனங்கள், சைக்கிள், ஒட்டோ என்பனவும் போக்குவரத்தில் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றன. பெரிய அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் போக்குவரத்து ஓர் முக்கிய கவனத்தை ஈர்த்த விடயமாகவுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு 1100 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், பௌதிக ரீதியில் வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வலிகாமம், தீவுகள் ஆகிய அலகுகளைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. குடாநாட்டில் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி மேற்குப் பகுதிகள் நகராக்கப்பட்டதொரு பரப்பாகக் காட்சி தருகின்றது. குடாநாட்டில் மேற்குறிப்பிட்ட பரப்புக்கள் அடங்கும் கிராமங்கள், நகரங்கள் பெரிய குடிசனத் தொகையையும், உயர்வான குடிசன அடர்த்தியையும் கொண்டதாகவுள்ளன. தற்போது குடாநாடு 8 லட்சத்துக்கு மேற்பட்ட மக்களைக் கொண்டும், இந்நூற்றுண்டின் முடிவில் 10 லட்சத்துத்குக் கிட்டிய மக்களைக் கொண்டதாகவும், குடாநாட்டில் 12 நகரங்களும், 100க்கு மேற்பட்ட கிராமங்களும் காணப்படுகின்றன. 1981–இல் யாழ்ப்பாண நகரம் 118,000 மக்களைக் கொண்டிருக்க, பெரிய யாழ்ப்பாணம் 165,000 மக்களையும் கொண்டிருந்தது. ஏனைய நகரங்கள் யாவும் 25,000க்கு குறைந்த மக்கள் தொகையைக் கொண்டிருந்தன. சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சுன்னுகம், மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, நெல்லியடி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, ஆகிய பன்னிரண்டு நகரங்களுக்குள் வலிகாமத்தில் ஏழும், வடமராட்சியில் மூன்றும், தென்மராட்சி, தீவுகள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு நகரமும் இருக்கின்றன. இந்நகரங்களைத் தவிர வளர்ச்சி பெற்ற பலசேவை நிலையங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் கொடிகாமம், அச்சுவேலி, கைதடி, கோப்பாய், தெல்லிப்பளை, வேலணை போன்றன முக்கிய சேவை நிலையங்களாகவுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 34.5 வீதத்தினர் நகரவாசிகளாகவும், 65.5 வீதத்தினர் கிராமவாசிகளாகவும் உள்ளனர். மேலும் கிராமவாசிகளாகக் கருதப்படுவோரில் கூடிய பங்கினர் விவசாயம் சார்பற்ற தொழில்களில் ஈடுபட்டோராகக் காணப்படுகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயத்தில் ஈடுபட்டோர் விகிதம் குறைவடைந்து வருவதனையும், வேலைப்படையில் விவசாய மீன்பிடித் துறையில் 35 வீதமும், கைத்தொழில் உற்பத்தி தொடர்பான தொழில்களில் 23 வீதமும், சேவைத் தொழில்களில் 37 வீதமும் ஈடுபட்டுள்ளனர். விவசாயம் சார்பற்ற தொழில்களின் வளர்ச்சியும், இத்தொழில்களில் ஈடுபடுவோர் விகிதம் அதிகரித்து வருவதும், விவசாய நிலங்கள் குறிப்பாக வலிகாமம் பகுதி விவசாயம் சார்பற்ற பயன்பாட்டிற்கு மாற்றப்பட்டு வருவதனையும் காணமுடிகின்றது. மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதார செயற்பாட்டில் சர்வதேச ரீதியாக அனுப்பப்படும் நிதி, நன்கொடைகள் போன்றன முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தற்போதைய சமூக பொருளாதார அமைப்புக்கு ஏற்ப இங்கு காணப்படும் போக்குவரத்துப் பாதைகளும் போக்குவரத்து வழிமுறைகளும் போதியதாக இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 365.8 மீற்றர் (ஏ) வகுப்பு, 281.5 மீற்றர் (பீ) வகுப்பு, 572.6 மீற்றர் (சி) வகுப்பு, 249.2 மீற்றர் (டி) வகுப்பு தெருக்கள் காணப்படுகின்றன. இவற்றுள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே கூடுதலான வீத எல்லா வகுப்புத் தெருக்கள் காணப்படுகின்றன. இவ்விரு மாவட்டங்களில் மொத்த எல்லா வகை வீதிகளின் நீளம் 1469 Km ஆகவுள்ளது. எனவே இன்றைய போக்குவரத்துத் தேவைகளை தற்போதைய போக்குவரத்து அமைப்பு மூலம் தீர்வு காண்பது கடினமாகும். வீதிப் போக்குவரத்தை விருத்தியாக்குவதும், அதன்மூலம் வீதிகளை அகலமாக்குவதும், புது வீதிகளை அமைப்பதும், செலவு கூடியதுடன் நடைமுறையில் பெருமளவு நிலப்பரப்பைப் போக்குவரத்துப் பயன்பாட்டிற்குக்கீழ்க் கொண்டு வரவேண்டி ஏற்படும். நகரப் போக்குவரத்தில் வாகனப் போக்குவரத்து மூலம் பயணிகள் தேவையைப் பூர்த்தி செய்வது கடினம். வீதிகளில் வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசல், விபத்து, சூழல் மாசுபடுதல் ஆகியவையே கூடுதலாக ஏற்படுகின்றன. உதாரணமாக கொழும்பு நகரப் போக்குவரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப் பிரச்சினை அதிகரித்து வருவதற்குக் காரணம். புகையிரதப் போக்குவரத்தை விருத்தியாக்காமல், வீதிப் போக்குவரத்து குறிப்பாக மினிபஸ்களின் மூலம் நகரப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய முற்பட்டதாகும்.

எனவே யாழ்ப்பாணக் குடாநாடு நகராக்கப்பட்ட பிரதேசமாக இருந்து வருவதும் இப்பிரதேசத்துக்குள் பொதுத்துறைப் போக்குவரத்தை விருத்தியாக்குவதும், போக்குவரத்து வலைப் பின்னலுக்கு ஏற்ப கைத்தொழில்களை, சேவை நிலையங்களை விருத்தியாக்குவதும், இடஞ்சார்பு விருத்தியை மேற்கொள்ளுதல், பிரதேச விருத்தியில் முக்கிய விடயமாகும். ஆகவே துறைசார், இடஞ்சார்பு அபிவிருத்திகளை இணைத்து இப்பிரதேசத்தின் அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்மூலம் அபிவிருத்தியை பின்தங்கிய இடங்களுக்கு எடுத்துச் செல்வதுடன் குடாநாட்டில் காணப்படும் விவசாய நிலங்களைக் குறிப்பாக விவசாய நிலங்களைப் பாதுகாத்தும், சூழலைப் பாதிக்காத முறையிலும் ஒரு பொதுப் போக்குவரத்து முறை அவசியமாகவுள்ளது. இந்த அடிப்படையில் வீதிப் போக்குவரத்தின் வளர்ச்சியும், மோட்டார் வாகனங்களின் அதிகரித்த பாவனையும் நகர – பிரதேச போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் ஏற்கனவே குடாநாட்டின் ஒரு பகுதியில் புகையிரதப்பாதை உள்ளது. காங்கேசன் துறையிலிருந்து ஆனையிறவு வரை 40 Km நீளமான இரும்புப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பளை, கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி, யாழ்ப்பாணம், கொக்குவில், சுன்னாகம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை ஆகிய நகர்களும், சேவை நிலையங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இப் பாதையில் இருபக்கமும் ஒவ்வொரு கிலோ மீற்றர் அகலமான பிரதேசத்தில் குடாநாட்டின் மொத்த குடிசனத் தொகையில் 50 வீதமான மக்களும் இரண்டு கிலோ மீற்றர் அகலமான பிரதேசத்தில் 70 வீதமான மக்களும் வாழ்கின்றார்கள். ஆகவே தீவுப்பகுதி, வடமராட்சி, வலிகாமம் மேற்கு, தென்மராட்சி, வரணிப் பிரதேசம் என்பன ஏற்கனவே இருக்கும் புகையிரதப் பாதைக்கு தூரத்தில் உள்ளது. இத்தகைய நிலையில் குடாநாட்டில் கொடிகாமத்திலிருந்து வடக்கு நோக்கி வடமராட்சியில் புலோலி வரைக்கும் பின்னர் புலோலியிலிருந்து வடமராட்சியின் நடுப்பகுதியூடாக மேற்கு நோக்கி தொண்டமனாறு, பலாலி ஊடாக காங்கேசன்துறைக்கு புகையிரதப் பாதை அமைக்கப்படவேண்டும். ஏற்கனவே காங்கேசன்துறையிலிருந்து பலாலி விமானத் தளத்திற்கும் புகையிரதப்பாதை அமைக்கப்பட்டு பாவிக்காமல் கைவிடப்பட்ட நிலையிலுள்ளது.

குறித்த புகையிரதப்பாதை காங்கேசன் துறை, பலாலி விமானநிலையம், அச்சுவேலி வளலாய் பகுதி ஊடாகச் சென்று தம்பாலையை அடைந்து தொண்டமனாறுக் கடல் நீர் ஏரியைக் கடந்து கெருடாவில், தனக்காரக்குறிச்சி, கொற்றாவத்தை வதிரி, அல்வாய் தெற்கு, ஊடாகப் புலோலியை அடைந்து பின் தெற்கு நோக்கி கொடிகாமம், பருத்தித்துறை வீதிக்கு மேற்காகத் துன்னாலை, வரணி வழியாக கொடிகாமம் வரை அமைக்கப்படவேண்டும். இப்பாதை அமைக்கப்படுவதால் குடாநாட்டில் முக்கிய நகர்கள் சேவை நிலையங்களான பலாலி, அச்சுவேலி, தொண்டைமனாறு, உடுப்பிட்டி வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி, வரணி ஆகியன குடாநாட்டின் முக்கிய நகர்களுடன் புகையிரதப் பாதை மூலம் இணைக்கப்படுகின்றதுடன் முக்கிய சேவை கைத்தொழில் மையங்களான யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, நாவற்குழி என்பவற்றுடன் வடமராட்சி இணைக்கப்படுகின்றது. ஏற்கனவே யாழ்ப்பாண நகரிலிருந்து அலுப்பாந்தி துறைமுகம் வரையும் புகையிரதப் பாதை இருந்து தற்போது கைவிடப்பட்ட நிலையிலுள்ளது. இப்பாதை மீளத் திருத்தப்படுமாயின் அலுப்பாந்தி, காங்கேசன்துறை ஆகிய இரு துறைமுகங்களும் புகையிரதப் பாதையால் மீளவும் இணைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட புகையிரதப் பாதை செல்லும் பிரதேசம் ஒரு சமதரையாக இருக்கின்றமையால் பாதையமைப்பு, இலகுவானதுடன் செலவும் குறைவாக இருக்கும். தொண்டமானாறு, முள்ளி ஆகிய இடங்களிலேயே மிகவும் ஒடுங்கிய கடல் நீர் ஏரிப் பரப்புக்களை இப்புகையிரதப் பாதை கடக்க வேண்டியுள்ளது.

இப்பாதை அமைவிருக்கும் வழிப் பிரதேசத்தில் கூடுதலான வீதப் பரப்பு தற்போது தரவை, கடல்நீர், ஏரிப்பரப்பு, மற்றும் வயல். தோட்டக் காணிகளாக இருப்பதாலும் குறிப்பாக வாழிட நிலப்பரப்பு குறைவாக இருப்பதாலும், தேவையான நிலங்களைப் பெறக்கூடியதாக இருப்பதுடன் சராசரியில் பெறுவதற்கான நட்டஈடு கொடுத்தல் போன்றன மிகக் குறைவாக இருக்கும். முன்மொழியப்பட்ட புகையிரதப் பாதை செல்லவிருக்கும் நிலப்பரப்பின் தற்போதைய நிலப் பயன்பாடு அட்டவணை 1 இல் காட்டப்பட்டுளளது.

படம் (i)

| இடங்களுக்கிடையில் (i) | தூர அளவு (ii) | பிரதான நிலப் பயன்பாடு (iii) |
|---|---|---|
| காங்கேசன்துறை—பலாலி | 4·0 கி.மீ. | கலடு, விவசாயக் காணி |
| பலாலி — தம்பாலை | 4·5 கி.மீ. | தரவை, நெற்பரப்பு |
| தம்பாலை — தொண்டமனாறு | 1.5 கி.மீ. | கடல் நீர், ஏரிப் பரப்பு |
| தொண்டமனாறு—கெருடாவில் | 1·0 கி.மீ. | நெற்பரப்பு |
| கெருடாவில்– தனக்காரக்குறிச்சி | 1·5 கி.மீ. | நெற்பரப்பு |
| தனக்காரக்குறிச்சி – கம்பர்மலை | 0 75 கி.மீ. | நெற்பரப்பு |
| கம்பர்மலை — கொற்றுவத்தை | 2·25 கி.மீ. | தோட்டக்காணி |
| கொற்றுவத்தை — வதிரி | 1·5 கி.மீ. | வீட்டுத் தோட்டம், குடியிருப்பு |
| வதிரி — அல்வாய் தெற்கு | 1·9 கி.மீ, | நெற்பரப்பு, நெருக்கமற்ற குடியிருப்பு |
| அல்வாய் தெற்கு — புலோலி தெற்கு | 2·25 கி.மீ. | வீட்டுத்தோட்டம், நெற்பரப்பு |
| புலோலி தெற்கு — வரணி | 7·25 கி.மீ. | நெற்பரப்பு, தரவை, கடல்நீர்ப்பரப்பு |
| வரணி — கொடிகாமம் | 5·5 கி.மீ. | தரவை, நெற்பரப்பு, வீட்டுத்தோட்டம் |


(iii) உத்தேச புகையிரதப் பாதை செல்லும் பரப்பு காணிகள் கூடுதலாக அரச காணிகளாக இருப்பதால் இப்பாதையமைப்புக்கு தேவையான காணி பெறுவதில் சிரமமும், நட்டஈட்டுச் செலவும் குறைவாக இருக்கும்.

(iv) இப்பாதை பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி, அச்சுவேலி ஆகிய நகர்களுக்கு 1 — 2 கிலோமீற்றர் தூரத்தில் செல்ல அமைக்கப்படுமேயல்லாமல், இந்நகர்கள் ஊடாக இப்பாதை அமைக்கப்பட மாட்டாது. ஏனெனில் நகரப் பகுதிகளின் பெறுமானம் மிக்க நிலங்கள், கட்டிடங்கள் பேணப்படும்.

(v) இப்பாதை அமைக்கப்படுமிடத்து குடாநாடு பலாலி விமான நிலையத்துடன் இணைக்கப்படும். மேலும் இவ்விமான நிலையம் எதிர்காலத்தில் சர்வதேச விமானநிலையமாக விருத்தி பெறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

(vi) இப்பாதை அமைக்கப்படுமிடத்து அச்சுவேலி கைத்தொழில் பேட்டை என்பன காங்கேசன் துறைமுகத்துடனும் பலாலி விமானநிலையத்துடனும் இணைக்கப்படும். இதனுல் இத்தொழிற் பேட்டைக்குத் தேவையான மூலப்பொருட்களை அனுப்புவதிலும் இலகுவான போக்குவரத்துக் கிட்டலாம். மேலும் குடாநாட்டிலுள்ள தற்போதைய கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் மையங்களான நாவற்குழி, யாழ்ப்பாணம், சுன்னாகம், காங்கேசன் துறை ஆகியவற்றுடன் புதிதாக அமையவிருக்கும் கைத்தொழில் மையங்களான கொடிகாமம், வரணி போன்றன இணைக்கப்படும். இதனால் குறிப்பாக மக்களும் பொருட்களும் குடாநாட்டில் இலகுவாகச் செல்ல வாய்ப்பேற்படும்.

(vii) யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிய தொழில் சேவை நிலையங்கள் புகையிரத நிலையங்களைச் சார்ந்து அமையக்கூடிய இடவமைவுக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாம்.

(viii) இச்சுற்றுப் புகையிரதப் பாதைக்குள் நடுவில் இருக்கும் பிரதேசம் கிராம - விவசாய பகுதியாகத் தொடர்ந்தும் இருக்கும் வாய்ப்பைப் பெறலாம்.

இப்பாதை அமைக்க ஒப்பீட்டு ரீதியில் அதிக செலவு பிடிக்காது என்பதற்கான பல சாதகமான நிலமைகள் காணப்படுகின்றன. இப்பாதை செல்லும் வழிப்பரப்பு சமதரையாக இருப்பதாலும் நீர்நிலைகள், ஆறுகள் போன்றன இல்லாதிருப்பதாலும், கட்டுமானச் செலவு சுருக்கமாக இருக்கலாம். மேலும் இப்பாதை அமைப்பதற்குத் தேவையான கல், மணல் என்பன அருகில் எடுக்கக்கூடிய நிலமைகள் காணப்படுகின்றன. வசாவிளானுக்கும், அச்சுவேலிக்கும் இடைப்பட்ட பரப்பில் பெருமளவு கலட்டுக் காணிகளிலிருந்தும், வடமராட்சியில் கம்பர்மலைப் பகுதியிலிருந்தும் கற்கள் பெறக்கூடியதாக இருக்கும். இப்பகுதிகளில் கற்கள் கிளறி எடுக்கப்படுவதுடன் அப்பரப்புக்களை தோட்ட நிலங்களாக மாற்றியமைக்க முடியும்.

தற்போதைய செலவு அடிப்படையில் ஒரு கிலோ மீற்றர் நீளமான புகையிரதப் பாதை யாழ்ப்பாணப் பகுதியில் அமைக்க ஒரு மில்லியன் ரூபா செலவாகும். ஆகவே இத்திட்டத்தை நிறைவேற்ற 40 மில்லியன் வரையில் எடுக்கலாம். இத்திட்டம் இம்மாவட்டத்தில் முன்னுரிமை பெறக்கூடிய தொன்றாக இருப்பதால், இதனை உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிதியுடன் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். இப்பாதையை முதலில் ஒற்றைப் பாதையாக அமைக்கப்பட்டுப் பின்னர் தேவை ஏற்படுமிடத்து இரட்டைப் பாதைகளாக மாற்றியமைக்கலாம் மேலும் மின்சார மயமாக்கமும், செய்யயப்படலாம். ஆகவே இத்திட்டத்தை அரசு ஆராயவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தமிழ் இலக்கியமும் ஆய்வு முயற்சிகளும்

## — சில குறிப்புகள் —

*கலாநிதி* **க. அருணாசலம்** *M.A. Ph.D.*
*முதுநிலை விரிவுரையாளர்,*
*தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக் கழகம்*

தமிழகத்திலும் ஈழத்திலும் கடந்த மூன்று நான்கு தசாப்த காலத்துள் ஆக்க இலக்கிய முயற்சிகளும் ஆய்வு முயற்சிகளும் பிரமிக்கத்தக்க வகையில் வெகு வேகமாகப் பெருகிவருவதனை அவதானிக்க முடிகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இற்றை வரை தமிழில் புதுக் கவிதை, கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், குழந்தை இலக்கியம், கட்டுரை எனப் பல்வேறு துறைகளிலும் இந்தியா, ஈழம், மலேசியா முதலிய பல்வேறு நாடுகளிலும் தரமுள்ளனவாகவும் தரமற்றனவாகவும் வெளிவந்துள்ள ஆக்கங்களின் தொகை மலைப் பினையூட்டும் வகையில் அமைந்துள்ளன. பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலிய வற்றின் எண்ணிக்கையும் பல்கிப் பெருகி வருவதனை அவதானிக்கலாம்.

நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் ஆக்க முயற்சிகளிலும்பொதுசனத்தொடர்பு சாதனங்களான பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி முதலியவை அதிக அளவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றமை அலட்சியம் செய்ய முடியாத ஒன்றாகும். இவை தவிர, தமிழ் கூறும் நல்லுலகெங்கணும் பல்வேறு வகைப்பட்ட இலக்கிய மன்றங்களும் தமிழாராய்ச்சிநிறுவனங்களும் பண்பாட்டுக் கழகங்களும் அனைத்துலகத் தமிழராய்ச்சி மகாநாடுகளும் பிராந்தியமகாநாடுகளும் கருத்தரங்குகளும் நவீன தமிழ் இலக்கியம், தமிழியல் சம்பந்தமான ஆய்வு முயற்சிகள் முதலியவற்றில் மிகமுக்கியமான பங்களிப்பினை நல்கி வருகின்றன. பல்கலைக் கழக மட்டத்திலே 'தமிழியல்'[1] ஒரு பாடமாக அமைந்தமையும் பல்கலைக்கழகங்களிற் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் உயர்மட்ட ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றமையும் மனங்கொளத்தக்கவை.

கடந்த சில தசாப்தங்களில் தமிழியல் சம்பந்தமான நவீன ஆய்வு முயற்சிகள் தமிழகத்தையும் இந்தியாவையும் ஈழத்தையும் கடந்து பரந்துபட்ட வகையில் அனைத்துலகிலும் வியாபகம் பெற்றுக்கொண்டிருக்கின்றமையும்[2] கவனத்திற் கொள்ளவேண்டிய தொன்றாகும்.

உலகின் சகல துறைகளிலும் மாற்றங்கள் எப்பொழுதும் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன. அம்மாற்றங்கள் சில காலகட்டங்களில் மந்தகதியுடையனவாகவும் சில கால கட்டங்களிற் கடுகதியுடையனவாகவும் நிகழலாம். விஞ்ஞான யுகம் எனப் போற்றப்படும் இவ்விருபதாம் நூற்றாண்டிற் சகல துறைகளிலும் மாற்றங்கள் துரித வேகத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இலக்கிய முயற்சிகளும் இலக்கிய ஆய்வு முயற்சிகளும் இதற்கு விலக்கல்ல. 3

இத்தகையதொருநிலையில் நீண்டகாலத் தமிழ் இலக்கியப் பரப்பினை நாம் வசதியின் பொருட்டுப் பழந்தமிழ் இலக்கியம், நவீன தமிழ் இலக்கியம் என இரு பெரும் பகுதிகளாக வகுத்து நோக்குமிடத்துப் பழந்தமிழ் இதக்கியங்களிலும் பார்க்க நவீன தமிழ் இலக்கிய முயற்சிகள். ஆய்வு முயற்சிகள் ஆகியன எண்ணிக்கையிலும் பரப்பளவிலும் மிக விசாலம் பெற்று விளங்குவதனை அவதானிக்கலாம். அதுமட்டுமன்று, நவீன தமிழ் இலக்கியமும் ஆய்வு முயற்சிகளும் நாள் தோறும் வளர்ச்சியுற்று வருவன. சமகால வரலாற்றுப் போக்குகளோடும் சூழ்நிலைகளோடும் பல்வேறு துறைகள் சார்ந்த இயக்கங்களோடும் மாற்றங்களோடும் பின்னிப் பிணைந்தனவாகும்.

இந்நிலையில் நவீன இலக்கியங்களை ஒருவன்செவ்வனே அறிந்துகொள்ளவும் மதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடவும் வேண்டுமாயின் வெறுமனே இரசனைத் திறத்தினலோ இலக்கியஅறிவினலோ மட்டும் செய்தல் முடியாது. மிகப் பரந்துபட்ட அளவில் முயற்சிகளை மேற்கொள்வதோடு சமகால வரலாற்றுப் போக்குகள் நாட்டு நடப்புகள், உலக நிலைமைகள் முதலியவற்றைக் கூர்ந்து அவதானிக்கவேண்டியவனுகின்றுன். கூடவே அரசியல், பொருளியல், பண்பாட்டியல், சமூகவியல், மானிடவியல், மொழியியல், வரலாறு முதவிய துறைகள் பற்றிய அறிவும் அவசியமாகின்றது. இத்தகைய சிக்கல்களும் நெருக்கடிகளும் பிரச்சினைகளும் இதே வடிவிற் பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றி அறிய முயல்வோருக்கு இருப்பதில்லை.

மேலும் பழந்தமிழ் இலக்கியம் நவீன தமிழ் இலக்கியம் என்னும் பாகுபாடு வெறுமனே காலஅடிப்படையில் மட்டும் அமைந்ததல்ல. அடிப்படையிற் பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து நவீன இலக்கியம் உள்ளார்ந்த வேறுபட்ட பண்புகளைக் கொண்டு விளங்குகின்றது. நவீன இலக்கியம் 'பொதுமக்களால் பொதுமக்களுக்காகப் படைக்கப்படும் பொதுமக்கள் இலக்கியம்' என்னும்போது வெறுமனே, புதுமை, எளிமை, பொதுமக்கட்சார்பு, பொதுமக்கள் நலநாட்டம், தனித்துவம் முதலியவற்றை மட்டும் கொண்டதாக அமையாமல் வரலாற்று நோக்கு ஆய்வறிவுக் கண்ணேட்டம், காலஒழுங்கு, நவீன சிந்தனைகள் கருத்துகள், காலஓட்டத்தில் ஏற்பட்டு வரும் பல்வேறு துறைகள் சார்ந்த மாற்றங்கள், முற்போக்கான அம்சங்கள் முதலியவற்றையும் முனைப்பாகக் கொண்டுள்ளமையை அவதானிக்கலாம்.[4] இவ்வகையில் கவிதையிலும் பார்க்க உரைநடை ஆக்கங்களே காலத்துக்கேற்றனவாகவும் உகந்தனவாகவும் விளங்குகின்றன. இவற்றுள்ளும் நாவலிலக்கியம் விதந்து கூறக்கூடிய அளவிற்கு இன்றைய தலையாய இலக்கிய வடிவமாகப் பரிணமித்துள்ளது. இது போன்றே நவீன ஆய்வு முயற்சிகளும் மேற்கண்ட பண்புகளை உயிர்நாடியாகக்கொண்டு விளங்குகின்றன.

பழந்தமிழ் இலக்கியப் புலமையுடைய அறிஞர்கள் பலர் நவீன இலக்கியம், ஆய்வு முயற்சிகள் ஆகியன பற்றி அலட்சியம் காட்டுவதற்கும் கண்டனம் செய்வதற்கும் கொச்சைப்படுத்துவதற்கும் எள்ளிநகையாடுவதற்கும் மூல காரணம் மேற்கண்ட சிக்கல்களும் பிரச்சினைகளுமே எனலாம். நவீன போக்குகளையும் சிந்தனைகளையும் கருத்துகளையும் பல்வேறு துறைகள் சார்ந்த மாறுதல்களையும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மாற்றங்களையும் ஏற்றுக்கொள்ளும் – ஜீரணிக்கும் மனேபாவமின்மை மட்டுமல்லாது அவற்றை மூர்க்கமாக எதிர்க்கும் சுபாவமும் வரலாற்றுக் குருட்டுத்தனமும் பல்வேறுபட்ட சிரமங்களையும் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் எதிர்கொள்ளும் மனேதிடமின்றி மிகநாசூக்காகத் தப்பியோட முயலும் சிறுமைத்தனமும் அவர்களிடத்தே பொலிந்து கிடக்குமாற்றை அவதானிக்கலாம்.

குறவஞ்சி. பள்ளு, நொண்டி நாடகம் முதலிய நூல்கள் எழுந்த காலப் பகுதியிலிருந்தே பொதுமக்கட் சார்பான இலக்கியங்கள் எழலாயின எனக் கூறப்படினும் கூர்ந்து நோக்குமிடத்து 'பொதுமக்கள் இலக்கியம்' 'பொதுமக்கள் யுகம்' என்னும் சொற்பிரயோகங்கள் நிறைவான பொருளுடன் – அர்த்த புஷ்டியுடன் – பிரகாசிப்பது இருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலேயே எனலாம்.

பொதுவாகத் தமிழ் கூறும் உலகிற் 'பொதுமக்கள்' என்னும் சொற்பிரயோகம் மிகப் பரந்த பொருளிலேயே வழங்கப்பட்டு வருகின்றது. சமூகத்தில் மேலாண்மை செலுத்தும் மேல்மட்டத்திலுள்ளோர், மத்தியதர வர்க்கத்தினர், பல்வேறு நிலைகளிற் செயற்படும் புத்திஜீவிகள், சமூகத்தின் அடித்தளத்திலுள்ளோர் எனச் சமூகத்தின் பல்வேறு தளங்களில், சும்மா இருந்து சுகங்காண முனைபவர்களையும் பணப் பெருச்சாளிகளையும் புத்தி வீச்சினுல் வாழ்ந்துகொண்டிருப்பவர்களையும் ஈவிரக்கமின்றிப் பிறரால் சுரண்டப்பட்டு மிகக் கடின உழைப்பை மேற்கொண்டு பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்க்கைப் போராட்டம் நடத்துபவர்களையும் 'பொதுமக்கள்' என்னும் சொல்லால் குறிப்பிடுவது பொருத்தமுடையதா? சில தசாப்தங்களுக்கு முன்பு சிலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகாரத்தைக் 'குடிமக்கள் காப்பியம்' என வாதிட்டமையும் போற்றியமையும் இங்கு சிந்திக்கத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதி வரை எழுந்துள்ள கவிதைகள் நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் முதலியவற்றுட் பெரும்பாலன சமூகத்தின் மேல் மட்டத்திலுள்ளோர், மத்தியதர வர்க்கத்தினர் ஆகியோரின் வாழ்வைப் பிரதிபலிப்பன வாகவே அமைந்துள்ளன. இலக்கிய கர்த்தாக்களும் மேற்குறிப்பிட்ட சமூகத் தளங்களைச் சேர்ந்தவர்களே. இதற்கு விதிவிலக்காகச் சில இலக்கிய கர்த்தாக்கள் விளங்கினர் என்பதும் உண்மையே. ஆயின் இருபதாம் நூற்றுண்டின் நடுப் பகுதியிலிருந்து இந்நிலைமை பல்வேறு காரணங்களால் மாற்றமுறலாயிற்று.

இரண்டாம் உலக மகாயுத்த முடிவைத் தொடர்ந்து உலக அரங்கில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள், பொதுவுடைமைக் கருத்துக்களின் பரம்பல், இலவசக் கல்வி விருத்தி, தாய்மொழிக் கல்வி விருத்தி, சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்துகொண்டிருந்தவர்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வு, எழுச்சி முதலிய இன்னோரன்ன நிலைமைகள் அவர்களை முன்னணிக்குக் கொண்டுவரலாயின.

இவற்றின் விளைவாகத் துறைபோகக் கற்றவர்களும் கருவிலே திருவுடையவர்களும் மத்தியதர வர்க்கத்தினரும் தான் இலக்கியம் படைக்க முடியும் என நிலவி வந்த மரபு உடைத்தெறியப்பட்டு ஏட்டுக் கல்வியை அதிகம் பெறுது அதேசமயம் 'வாழ்க்கை அனுபவம்' என்னும் கல்வியை நிறையப் பெற்ற சமூகத்தின் அடித்தளத்தைச் சேர்ந்த பலர் ஆக்க இலக்கிய கர்த்தாக்களாகப் பரிணமிக்கலாயினர். அதன் உடனடி விளைவாக அதுகாலவரையில்லாத அளவிற்குச் சமூகத்தின் அடித்தளத்தில் வாழ்க்கைப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளும் இன்னல்களும் சுரண்டற் கொடுமைகளும் துயரங்களும் அவற்றின் தீர்வுக்கான மார்க்கங்களும் இலக்கியங்களாக உருவெடுத்தன.

அதுகாலவரை இலக்கிய வெளிச்சம் பரவாதிருந்த மிகப் பின்தங்கிய பிரதேசங்களிலும் பின்தள்ளப்பட்டிருந்த சமூகப் பிரிவுகளிலும் இலக்கிய வெளிச்சம் பரவலாயின. புத்தம்புதிய பிரதேசங்கள் பல இலக்கியக் களங்களாயின. அப்பிரதேசங்களிலிருந்து புதிய தலைமுறை எழுத்தாளர்கள் பலர் உருவாகினர். குறிப்பாகப் பிரதேச - மண்வாசனை இலக்கியங்கள் இவ்வகையில் விதந்து கூறத்தக்கனவாகும். இத்தகைய போக்கு இந்தியாவிலும் அதன் ஒரு கூறுன தமிழகத்திலும் இலங்கையிலும் அதன் ஒரு கூறுன மலையகத்திலும் மலேசியா முதலிய நாடுகளிலும் கடந்த சில தசாப்தங்களில் மிக வேகமாக வளர்ந்து வருவதனை அவதானிக்கலாம். டானியல், ஜீவா முதல் பாலமனோகரன், குறிஞ்சித் தென்னவன், தெணியான், பெனடிக்ற் பாலன், மலரன்சன், மாத்தளை வடிவேல், முருகபூபதி, மேமன்கவி, திக்குவல்லை கமால் முதலியோர் வரை ஜெயகாந்தன் முதல் பொன்னீலன், டி. செல்வராஜ், சங்கரராம், சின்னப்ப பாரதி, இன்றைய இளந் தலைமுறையினர் வரை நாம் இப்போக்கினைத் தெளிவாகக் காணமுடிகின்றது.

இவ்விடத்தே இன்னுமோர் முக்கிய அம்சம் கவனத்திற் கொள்ளத்தக்கது. கடந்த மூன்று நான்கு தசாப்த காலத்துள் 'தமிழ் இலக்கியம்' என்னும் பதம் மிகுந்த சிக்கல்கள் சிலவற்றைத் தோற்றுவித்து வருகின்றது. நீண்ட நெடுங்காலமாகத் தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் இலக்கிய ஆய்வு முதலிய பதங்கள் தமிழகத்தைப் பற்றியும் தமிழக இலக்கியம் பற்றியும் குறிப்பதற்கே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. தப்பித்தவறி ஓரிரு வசனங்கள் ஈழத்தைப்பற்றியும் ஈழத்து இலக்கியம்பற்றியும் கூறுவனவாக அமைவதுண்டு! அதற்கு மப்பால் தமிழ் வழங்கும் ஏனைய நாடுகளைப் பற்றியோ பிரதேசங்களைப் பற்றியோ குறிப்புகள் எவையும் இடம்பெறுவதில்லை.

'வடவேகங்கடம் முதல் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' காலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கிற் சிறிது சுருங்கியபோதும் தமிழகத்திற்கு வெளியே ஏனைய இந்தியப் பிரதேசங்களிலும் இலங்கையிலும் அதன் ஒரு கூறுன மலையகத்திலும் மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், பீயூனியன் முதலிய நாடுகளிலும் தமிழ் வழங்கலாயிற்று; தமிழ் இலக்கியங்கள் எழலாயின. இவற்றுள்ளும் ஈழம் கடந்த இரு நூற்றுண்டுகளுள் மிக முக்கியமானதோர் இடத்தை வகித்துவரலாயிற்று. கிறிஸ்தாப்த காலம் முதலே ஈழத்திலே தமிழ் இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமையை அண்மைக்கால ஆய்வுகள் பல வெளிக்கொணர்ந்து கொண்டிருக்கின்றன. கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டிலிருந்து தொடர்ச்சியான தமிழ் இலக்கிய வரலாற்றினைக் கொண்டு விளங்குகின்றது. பத்தொன்பதாம் நூற்றுண்டிலிருந்து இற்றை வரையிலான ஈழத்து இலக்கிய முயற்சிகள் எவரும் அலட்சியப்படுத்த முடியாத அளவுக்கு அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. பல்வேறு துறைகளிலும் தமிழகத்துக்கே வழிகாட்டியாக விளங்குகின்றன! தனித்துவத்துடன் மிளிர்கின்றன. கடந்த நான்கு தசாப்த காலத்துள் தமிழ் உலகுக்கே வளம் சேர்க்கும்வகையில் ஈழத்தில் வீறுர்ந்த காத்திரமான ஆக்க இலக்கிய முயற்சிகளும் தமிழியல் சம்பந்தமான ஆய்வு முயற்சிகளும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வுண்மைகள் ஈழத்து அறிஞர்களால் மட்டுமன்றி இதய சுத்தியும் நேர்மையுள்ளமும் கொண்ட தமிழகத்து அறிஞர்களாலும் அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகின்றன.[5]

இருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் குறிப்பாக 1960 களிலிருந்து ஈழத்தின் ஒரு பகுதியாக விளங்கும் மலையகமும் விதந்து கூறத்தக்க அளவிற்கு நவீன இலக்கியவளர்ச்சியில் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கின்றது. அதே போன்று மலேசியா, சிங்கப்பூர், முதலிய நாடுகளும் புறக்கணிக்க முடியாத அளவுக்கு நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியிற் பங்கேற்கலாயின. இன்றைய நிலைமைகளை அவதானிக்கும் போது மொரிசியஸ் பீயூனியன், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து முதலிய நாடுகளும் அந்நாடுகளில் வாழும் தமிழர்களும் நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியிற் பங்கு கொள்பவர்களாகப் பரிணமிக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஆயினும் இவை பற்றி இப்போது திட்டவட்டமாக ஆருடம் கூறுவதற்கில்லை,

எனினும் ஈழத்தைப் பொறுத்த வரையில் முற்பட்ட காலப் பகுதிகளைப் புறக்கணித்தாலும் கடந்த இரு நூற்றுண்டு காலப் பகுதியை எவராவது புறக்கணிக்கமுடியுமா? நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் இலக்கியம், சமயம், பண்பாடு, இலக்கணம், மொழியியல், சாசனவியல் முதலிய துறைகள் சம்பந்தப்பட்ட ஆய்வு முயற்சிகளிலும் நாவலர் தொடக்கம் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வரை, பண்டிதமணி தொடக்கம் டானியல், ஜீவா, சி வி. வேலுப்பிள்ளை, இன்றைய இளந்தலைமுறை எழுத்தாளர்கள் ஆய்வாளர்கள்வரை ஈழத்தவரின் பங்களிப்புகள் தட்டிக்கழிக்க முடியாதவை. இவற்றுடன் கூடவே இன்று மலையகமும் மிக வேகமாக முன்னணிக்கு வந்துகொண்டிருக்கின்றது. இந்நிலையில் 'தமிழ் இலக்கியம்', நவீன தமிழ் இலக்கியம்' ஆகிய பதங்கள் தமிழகத்து இலக்கியங்களை மட்டும் குறிப்பது எவ்வகையிற் பொருந்தும்?

இந்தியா, தமிழகம், ஈழம், மலேசியா முதலியவற்றின் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் தமிழ பயிலும் மாணவர்களுள் மிகப் பெரும்பாலோர் தமிழ் நாவல்கள், தமிழ்ச் சிறுகதைகள், தமிழ்க் கவிதைகள், தமிழ் நாடகங்கள், திறனுய்வு முதலியதுறைகள் சம்பந்தமான வினுக்களுக்கு விடையளிக்கும் போது தமிழகத்து ஆக்கங்களை மட்டுமே கவனத்திற் கொண்டு விடையளிக்கின்றனர். தமிழகத்து மாணவர்கள் மட்டுமன்றி ஈழத்து மாணவர்களும் இதே மாதிரிச் செயற்படுவது ஆச்சரியமளிப்பதாக இருந்தாலும் குறைபாடு அவர்களுடையதல்ல. தமிழிலக்கிய ஆய்வாளர்களும் ஆசிரியர்களும் பேராசிரியர்களுமே அவற்றுக்குப் பொறுப்பாவர்,

தமிழகத்திலே 'தமிழ் இலக்கிய வரலாறு', 'இருபதாம் நூற்றுண்டுத் தமிழ் இலக்கியம்', 'தமிழ் நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும்', 'தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்', 'தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்', 'புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க் கவிதை', 'புதுக்கவிதை', 'குழந்தை இலக்கியம்', 'தமிழியல் ஆய்வு முயற்சிகள்' முதலிய விடயங்கள் சம்பந்தமாக இதுவரை நூற்றுக்கணக்கான நூல்கள் வெளிவந்துள் ளன. இவற்றுள் மிகப் பெரும்பாலானவை தமிழகத்து அறிஞர்களால் எழுதப்பட்டவை கணிசமானவை ஈழத்து அறிஞர்களால் எழுதப்பட்டவை. ஈழத்து அறிஞர்களால் எழுதப்பட்டவற்றுட் பெரும்பாலன ஈழத்தில் வெளியாகியுள்ளன. இந்நூல்களுள் பெரும்பாலன தமிழகத்திற்கு வெளியே இடம் பெற்ற ஆக்க இலக்கிய முயற்சிகள், ஆய்வு முயற்சிகள் முதலியன பற்றி ஓரிரு வரிகள் தானும் குறிப்பிடவில்லை. ஒரு சில நூல்களே தமிழகத்திற்கு வெளியே இடம்பெற்ற — இடம் பெற்றுக்கொண்டிருக்கும் ஆக்க இலக்கிய முயற்சிகள், ஆய்வு முயற்சிகள் ஆகியன சம்பந்தமாக ஓரிரு வரிகளிலோ ஒரு சில பக்கங்களிலோ பந்திகளிலோ குறிப்பிட்டுள் ளமை ஊன்றி நோக்கத்தக்கவை,

தமிழகத்தைச் சேர்ந்த அறிஞர்களைத் தற்காலிகமாக மறந்துவிட்டு ஈழத்தமிழறிஞர்களைக் கவனத்திற் கொண்டால் அவர்களுட் பலர் இதே குறைபாடுகளைச் செய் துள்ளமையை அவதானிக்கலாம்; தமிழ் கூறும் நல்லுலகிலேயே முதன் முதல் 'தமிழ் இலக்கிய வரலாறு' சம்பந்தமாகத் தலையாய சிறந்த நூலொன்றினை எழுதிய பேராசிரியர் வி. செல்வநாயகம் தமது 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலில் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றுண்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சி சம்பந்தமாக ஈழத்துக்குரிய முக்கிய பங்களிப்பினைத் தகுந்த முறையிற் குறிப்பிடத் தவறியுள்ளார்.

இத்தகைய குறைபாடுகளை ஓரளவு நிவிர்த்தி செய்யும் வகையில் கடந்த சில தசாப்தங்களாக ஈழத்துப் பழந்தமிழ் இலக்கியம், நவீன இலக்கியம், நாட்டார் பாடல்கள், சமயம், பண்பாடு, மொழியியல் முதலியன தொடர்பாகத் தனித்தனி நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துகொண்டிருக்கின் றமை ஓரளவு மனநிறைவை அளிப்பதாகும். பண்டிதமணி தொடக்கம் பல்கலைக்கழகங்களிலும் வெளியிலும் உள்ள தமிழ் அறிஞர்கள் பலர் மேற்கொண்ட முயற்சிகள் இவ் வகையிற் போற்றத்தக்கவை, இளந்தலை முறை ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் சஞ்சிகையாளர்கள் பலர் இத்தகைய முயற்சிகளை மேன்மேலும் விரிவாகவும் ஆழமாகவும் மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய நிலைமைகளால் இருளில் மறைந்தும் மறைக்கப்பட்டுமிருந்த உண்மைகள் பல வெளிவரலாயின, ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தனித்துவமும் புலப்படலாயின.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தால் முனைப்பாக வற்புறுத்தப்பட்ட தேசிய இலக்கியக் கோட்பாடும் இங்கு சிந்திக்கத் தக்கது, மேலும் கடந்த சில ஆண்டுகளில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு ஈழத்து இலக்கியம் — இலக்கிய வரலாறு ஆகியன விசேட பகுதியாக அமைக்கப்பட்டுள்ளமையும் பட்டப்பின் படிப்பினை மேற்கொள்ளும் ஆராய்ச்சி மாணவர்கள் ஈழத்து இலக்கியம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வருவதும் கவனத்திற்கொள்ளத்தக்கவை.

மேற்கண்ட விடயங்கள் சில உண்மைகளைப் புலப்படுத்துகின்றன. நவீன தமிழ் இலக்கியம் என்பது தமிழகத்திற்கு மட்டும் உரியதன்று. தமிழகத்திற்கு வெளியிலும் தமிழ் வழங்கும் பிரதேசங்கள்பலவற்றுக்கும் உரியதொன்றாகும். அதே சமயம் நவீன தமிழ் இலக்கியம் அவ்வந் நாடுகளுக்கும் பிரதேசங்களுக்கும் உரிய தனித்துவத்துடன் விளங்குவதால் அவை தனித்தனியாகவும் ஒருங்கு சேர்த்தும் நோக்கப்பட வேண்டிய நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளன. ஆக்க இலக்கிய முயற்சிகளிலும் ஆய்வு முயற்சிகளிலும் தமிழகத்தினரைப் போன்றே தமிழகத்திற்கு வெளியே உள்ளவர்களும் மிக முக்கியமான பங்களிப்பினை நல்கியுள்ளனர்; நல்கி வருகின்றனர்.

நாவல், சிறுகதை இலக்கியங்கள் மக்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றுப் பெருவளர்ச்சி கண்டமை, சமுகத்தின் அடித்தளத்து மக்கள் இலக்கிய அரங்கில் முக்கியத்துவம் பெற்று இலக்கிய கர்த்தாக்களாகப் பரிணமித்தமை முதலியவற்றைக் கண்டு சகிக்க முடியாத மரபுவாதிகள் பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுக்கெதிராக ஆவேசத்துடன் செயற்பட்டனர், இலக்கியத்தின் தூய்மை பற்றி ஓங்கி ஒலித்தனர். இழிசனர் இலக்கியம், கொச்சைத் தமிழ் என்றெல்லாம் கண்டனஞ் செய்தனர். ஆயினும் காலம் இவர்களுக்காக காத்துநிற்கவில்லை. 1970களில் இத்தகையவர்களது ஆரவாரங்கள் ஓயலாயின. இதே போன்று ஆங்கிலதாசர்கள் பலர் 'ஆங்கில மொழி அறிவு-ஆங்கில இலக்கியப்பரிச்சயம்' என்னும் குண்டாந்தடிப் பிரயோகத்தை அடிக்கடி மேற்கொண்டு வந்துள்ளனர். இன்றும் கூட அவர்கள் முற்றாக ஓய்ந்துவிடவில்லை. இது பற்றிச் சுருக்கமாக இவ்விடத்தே விளக்குதல் அவசியமெனலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளிற் பிரித்தானியராட்சி நிலை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறுதுறைகளிலும் மாற்றங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. நவீன கல்வி முறையும் ஆங்கில மொழி அறிவும் விருத்தியுறலாயின. ஆட்சி மொழியாக விளங்கிய ஆங்கில மொழி அறிவின் அவசியம் ஆட்சி செய்தோரால் அளவு கடந்து வற்புறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியா, இலங்கை முதலிய நாடுகளைச் சேர்ந்த சுதேசிகள் பலர் ஆங்கில மொழி அறிவு பெற்று ஆங்கில தாசர்களாக விளங்கிய அதே சமயம் ஆங்கிலக் கல்வியினூடாக தன்மான உணர்வு பெற்ற தேசிய வீரர்கள் பலர் விதேசிய மோகத்தை வன்மையாகக் கண்டித்துச் சுதேசியப் பற்றினை மக்களுக் கூட்டி விடுதலைப் போராட்டத்தில் முனைப்பாகச்செயற்பட்டனர். இத்தகையவர்களுள் பாரதி, தாகூர், இர்பால் முதலிய இலக்கிய கர்த்தாக்களும் அடங்குவர். இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியையொட்டி இந்தியா, இலங்கை முதலியநாடுகள் சுதந்திரம் பெற்றன. அதனைத் தொடர்ந்து ஆங்கில மொழியின் அளவு கடந்த முக்கியத்துவமும் படிப்படியாக அருகலாயிற்று. அதன் இடத்தில் சுதேச மொழிகள் ஆட்சிமொழியாகின, தாய்மொழிக் கல்வி விருத்தியுறலாயிற்று. கலை இலககியங்கள் உட்படப் பல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்படலாயிற்து. ஆங்கிலக் கல்வியை நிறையப் பெற்றவர்கள் மட்டுமன்றித் தாய்மொழிக் கல்வியை மட்டும் பெற்றவர்களும் இலக்கிய ஆக்கம் உட்படப் பல துறைகளிலும் முன்னணிக்கு வரலாயினர். இவற்றைக் காணச் சகிக்காத ஆங்கில தாசர்கள் சிலர் முணுமுணுக்கலாயினர்.

ஆங்கில மொழி அறிவில் நிபுணத்துவம் பெறாதவர்கள் எவ்வாறு நவீன இலக்கியங்களைப் படைக்க முடியும்? நாவல், சிறுகதை, நவீன நாடகம், நவீன திறனாய்வு முதலியன ஆங்கில மொழி மூலமாகவே கீழை நாடுகளிற் பரவின. எனவே ஆங்கில மொழியிலும் ஆங்கில இலக்கியங்களிலும் மிகுந்த பரிச்சயமுடையவர்களே நவீன இலக்கியங்களைப் படைக்க முடியும் என்பது அவர்களது வாதம். 6

இவ்விடத்தே ஒருசில உண்மைகளை மட்டும் சுட்டிக்காட்டினாற் போதும். நவீன இலக்கிய முயற்சிகள் ஆங்கில மொழிக்கோ பெரிய பிரித்தானியாவுக்கோ மட்டும் சொந்தமானதல்ல, புனைகதை இலக்கியங்கள் முதலில் ரஷ்ய மொழியிலேயே தோன்றின. அதனைத்தொடர்ந்து அமெரிக்க எழுத்தாளர்கள் சிலர் அவற்றுக்கு மேலும் மெருகூட்டித் தலைசிறந்த புனைகதைகளைப் படைத்தனர். அதனைத் தொடர்ந்தே பெரிய பிரித்தானியாவில் புனைகதை இலக்கியம் பெரு வளர்ச்சி கண்டது.

இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் ஆங்கில மொழி இலக்கியப் பரிச்சயமுடையவர்களே முதலில் நவீன இலக்கியங்களைப் படைத்தனர். ஆயின் காலப்போக்கில் அவர்களைப் பின்பற்றி ஆங்கில மொழியை ஓரளவு அறிந்தவர்கள். அறவே அறியாதவர்கள், தாய்மொழிக் கல்வியை மட்டும் ஓரளவு பெற்றவர்கள் எனப் பல திறத்தினர் நவீன இலக்கிய ஆக்க முயற்சிகளிலே தீவிரஆர்வம் காட்டினர். ஆங்கில மொழியிலும் ஆங்கில இலக்கியங்களிலும் மிகுந்த பரிச்சயம் பெற்றவர்கள் படைத்தளித்த நவீன இலக்கியங்களிலும் பார்க்கத் தலைசிறந்த படைப்புகளை ஆங்கில மொழி அறிவினை ஓரளவு பெற்றவர்களும் அறவே பெறாதவர்களும் படைத்துள்ளனர் என்பது சிந்திக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக டொமினிக் ஜீவா, டானியல், வித்தன், ஜெயகாந்தன் முதலியோர் முதல் இன்றைய இளந்தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்கள் பலரும் இவ்வகையில் நோக்கத்தக்கவர்கள். ஜெயகாந்தன் தலைசிறந்த சிறுகதையாசிரியராகப் பரிணமித்த காலத்தில் ஆங்கில மொழி - இலக்கியப் பரிச்சயமற்றவராகவே விளங்கினார். அவரது பிற்காலத்திலேயே ஓரளவு ஆங்கில மொழி – இலக்கிய அறிவு பெற்றவராகப் பரிணமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுட் பலர் ஆங்கில மொழி அறிவு அறவே இல்லாதவர்களாக இருந்தபோதும் ஆர்வ மேலீட்டினால் மொழி பெயர்ப்புகளினூடாக உலகின் தலைசிறந்த இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்துள்ளனர் என்பதும ஆங்கில மொழி-இலக்கியப் பரிச்சயம் மிகுதியாகப்பெற்றவர்கள் பலர் தமிழ்மொழி-இலக்கியப் பரிச்சயமற்றவர்களாக விளங்கினர்; விளங்குகின்றனர் என்பதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியன. உலக அரங்கில் ஆங்கில மொழியின் முக்கியத்துவம் இன்று படிப்படியாக அருகிக்கொண்டு வருவதைக் காணலாம்.

இவ்விடத்தே சோவியத் யூனியன், யப்பான், சீனா, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளைச் சேர்ந்த தலைசிறந்த நவீன இலக்கிய கர்த்தாக்களையும் இங்கு ஒப்பு நோக்குதல் அவசியம். இவர்களுட் கணிசமானவர்களுக்கு ஆங்கில மொழி அறிவு சிறிதளவேனும் கிடையாது. இவர்கள் வாய்மொழியையன்றிப் பிறமொழியை அறியாதவர்கள்.[7]

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஆங்கில மொழி பல்வேறு காரணங்களினால் உலக மொழியாகப் பரிணமித்தமையும் ஆங்கில மொழியினூடாகப் பல நாடுகள் அரும்பெரும் அறிவுச் செல்வத்தைப் பெற்றமையும் மறுக்க முடியாத உண்மைகளே. எனினும் அதற்காக என்றுமே ஆங்கிலதாசர்களாக விளங்க வேண்டுமென்ற கட்டாயமில்லை, அத்தகையதொரு தாழ்வுச் சிக்கல் இருக்கும் வரை சுதேசிய முன்னேற்றத்தைப் பற்றி கனவு காணவும் முடியாது. ஆசிய நாடுகளுள் மிக முன்னேற்றம் பெற்றுள்ள யப்பான், சீனா ஆகிய நாடுகளும் சோவியத் யூனியன், பிரான்ஸ், ஜெர்மனி, நோர்வே, டென்மார்க் முதலிய நாடுகளும் இவ்வகையில் எம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றன. எமது ஆங்கில தாசர்கள் இவைபற்றி சிறிது சிந்திப்பது நலம் பயக்கும். 'ஆங்கில மொழி அறிவினையும் ஆங்கில இலக்கியப் பரிச்சயத்தினையும் மிகுதியாகப் பெற்றவரும் தலைசிறந்த திறனாய்வாளருமான பேராசிரியர் கைலாசபதி அவர்கள் ஓரிடத்தில் 'அதீத ஆங்கில இலக்கியச் செல்வாக்குத் தமிழின் ஆத்மாவையே அமுக்கிக் கொன்றுவிடுகின்றது என்பது என் கருத்து. மிதமிஞ்சிய ஆங்கிலச் சொற்பிரயோகமும் மேற்குலகச் சாய்வுடைய நோக்கமும் இலக்கிய நெறிக்கும் வளர்ச்சிக்கும் பாதகமாக அமைகின்றன என்பதில் தடையில்லை'[8] என 1969-ம் ஆண்டுலேயே கூறியுள்ளமை ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

ஆய்வு முயற்சிகள் தொடர்பாக மேலும் சில விடயங்களை மிகச் சுருக்கமாகவேனும் இங்கு சுட்டிக்காட்டுதல் அவசியம். ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தமிழ் இலக்கிய ஆய்வு என்பது பெரும்பாலும் வெறுமனே இலக்கிய இரசனையாகவும் 'ஆகா ஓகோ' எனப் புகழ்வதாகவுமே அமைந்திருந்தது. இதற்கு விதிவிலக்காக ஒரு சிலரே செயற்பட்டுள்ளனர். குறிப்பாக நீண்ட காலம் தமிழகத்திற் சமயப் பணிகளில் ஈடுபட்டிருந்த மேலைத்தேய அறிஞர்கள் சிலரும் மேலைத்தேய சிந்தனைகளின் தாக்கங்களுக்குள்ளாகியிருந்த வ. வே. சு. ஐயர், பாரதியார், சி. வை. தாமோதரம்பிள்ளை, வி. கனகசபைப்பிள்ளை முதலியோரும் இவ்வகையில் நினைவுகூரத் தக்கவர்கள்.

ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து நிலைமைகள் மாறலாயின. இலக்கிய ஆய்வு என்பது வெறுமனே சுவை நுகர்வாகவும் பொற்கலங்களைக் கண்டு பிடித்து இறும்பூது எய்துவதாகவும் இன மத மொழி வெறி கொண்டு 'மதம்' பிடித்து அலைவதாகவும் நிலவிய போக்குகள் மெல்ல மெல்ல அருகலாயின. விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் முனைப்புப் பெறலாயின. இதன் தார்க்கரீதியான விளைவாகத் 'தமிழ் இலக்கியம்' என்னும் குறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் மாற்றங்கள் முதலியன காரணமாக சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்துவோர்—சமூகத்தின் அடிமட்டத்தில் உழன்று கொண்டிருக்கும் அப்பாவி உடலுழைப் பாளிகள் ஆகியோருக்கிடையிலான உறவுகள் என்றுமில்லாதவாறு முரண்பட்டு முட்டி மோதலாயின: விரிசல் பெறலாயின. அடிமட்டத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வும் எழுச்சியும் ஏற்படலாயின. இவற்றினது விளைவின் ஒரு பகுதியாக நாட்டாரியல்—நாட்டார் பாடல்கள், கலைகள்—ஆய்வாளர் பலரதும் கவனத்தை மிகுதியாக ஈர்க்கலாயின- 'மேலோர் இலக்கியத்தை' மட்டுமே கற்றுச் சுவைத்து வந்த இலக்கிய உலகம், தவிர்க்க முடியாதவாறு கீழோர் இலக்கியமாக மேலோரால் கருதப்பட்டு அலட்சியப் படுத்தப்பட்ட நாட்டார் இலக்கியத்தையும் கலைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாயிற்று. இவற்றின் விளைவாகக் கடந்த சில தசாப்தங்களில் என்றுமில்லாதவாறு நாட்டார் பாடல்களையும் நாட்டார் கலைகளையும் தேடித் தொகுக்கும் முயற்சியும் அவற்றுக்குப் புத்துயிரூட்டுதல்[9] நாட்டாரியல் பற்றிய விஞ்ஞான பூர்வமான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் தொடர்பான முயற்சிகளும் நாளுக்கு நாள் பெருகி வருவதை அவதானிக்கலாம்.

தமிழ் இலக்கியம், தமிழியல் ஆகியன பற்றிய ஆய்வு தமிழருக்கேயுரியது என்னும் நிலைமை மாறி உலகளாவியதாக வியாபகம் பெற்று வருதல் குதூகலத்துடன் வரவேற்கத்தக்கதே;

ரிய வட்டம் 'தமிழியல்' என்னும் பாரிய களமாக விரிவடையலாயிற்று. இலக்கியம், இலக்கிய ஆய்வு என்பன சமூகம். பொருளாதாரம், சமயம், பண்பாட்டம்சங்கள், மொழியியல், சமூகவியல், மானிடவியல், சாசனவியல், தொல்பொருளியல், நாட்டாரியல் முதலியவற்றுடன் மிக நெருங்கிய பிணைப்புக் கொண்டிருப்பதும் உணரப்பட்டு முனைப்பாக வற்புறுத்தப்படலாயின.

இதன் காரணமாகச் சான்றோர் இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், பக்தி இலக்கியம், சைவ சித்தாந்த நூல்கள், சித்தர் பாடல்கள், காவியங்கள், புராணங்கள் முதலியன முதல் நாவலர், பாரதியார், இன்றைய எழுத்தாளர்கள் முதலியோரது முயற்சிகள், ஆக்கங்கள் ஈறாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வு முயற்சிகள் புதிய புதிய உண்மைகளை வெளிக்கொணரலாயின; தப்பபிப்பிராயங்கள் நீக்கப்படலாயின; தமிழியல் உலகிற் புற்றொளியைப் பாய்ச்சலாயின. காலம் காலமாகக் கலை – இலக்கிய உலகில் நிலவி வந்த பொய்மைகள், ஊழல்கள், சிறுமைகள், ஏமாற்று வித்தைகள், அநீதிகள், அக்கிரமங்கள், போலித்தனங்கள், நயவஞ்சகத் திட்டங்கள், மூடத்தனங்கள், அறியாமை முதலியன அம்பலமாகின; அம்பலமாகிக் கொண்டிருக்கின்றன.

கடந்த சில தசாப்தங்களில் ஏற்பட்டு வரும் பலதுறை முன்னேற்றங்கள், நவீன சிந்தனைகளதும் கருத்துக்களதும் பரம்பல், உலக அரங்கில் மிக வேகமாக ஏற்பட்டு

## சான்றுதாரம்:

1. தமிழ், தமிழ் இலக்கியம் என்னும் சொற்களிலும் பார்க்கத் 'தமிழியல்' என்னும் சொல் பரந்த பொருளில் வழங்கப்படுகின்றது. இலக்கியம், இலக்கணம், மொழியியல். சமூகம், சமயம், பண்பாட்டம்சங்கள், நுண்கலைகள், சாசனவியல், தொல்பொருளியல் முதலிய பல பிரிவுகளையும் உள்ளடக்கி நிற்கிறது.

2. இதுகாலவரை நடந்தேறிய அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகளில் தமிழரல்லாத கீழைத் தேசத்தவர்களும், மேலைத் தேசத்தவர்களும் முக்கிய ஆய்வாளர்களாப் பங்கு கொண்டமையும், சோவியத் யூனியனைச் சேர்ந்த அறிஞர்கள் சிலரும், யப்பானிய அறிஞர்கள் சிலரும், பேராசிரியர்கள் ஆஷர், பரோ, எமனோ, கலாநிதி கமில்சுவலபில் முத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியோரும் தமிழியல் தொடர்பாகச் செய்துள்ள ஆய்வு முயற்சிகளும் கவனத்திற் கொள்ளத் தக்கவை.

3. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி இலக்கிய முயற்சிகளையும் ஆய்வு முயற்சிகளையும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி முயற்சிகளோடு ஒப்புநோக்கின் இவ்வுண்மை புலப்படும்.

4. இவ்விடயம் சம்பந்தமாகப் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தமது 'நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்' (1980) என்னும் நூலில் விரிவாக நோக்கியுள்ளமை கவனிக்கத் தக்கது.

5. இவ்வகையில் நாவலர், சோமசுந்தர பாரதியார், நா. வானமாமலை, செந்தில்நாதன், விஜய பாஸ்கரன், ஜெயகாந்தன், வல்லிக்கண்ணன், சிதம்பர ரகுநாதன், டாக்டர் சாலை. இளந்திரையன் முதலியோர் தெரிவித்துள்ள கருத்துக்கள் நோக்கத்தக்கவை.

6. கடந்த வருட இறுதியில் (டிசம்பர் 30 - 1989) இடம்பெற்ற முக்கியமான கருத்தரங்கொன்றில் இக்கட்டுரையாசிரியரால் நிகழ்த்தப்பெற்ற ஆய்வுரையையடுத்து இத்தகைய கேள்விக் கணைகள் சிலரால் தொடுக்கப்பட்டன.

7. இம்மாத முற்பகுதியில் (மார்ச் 10-15, 1990) இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரபல சோவியத் இலக்கியகர்த்தாக்களான திருவாளர்கள் அனதோலி பார்ப்பரா வியச்சிஸ்லாவ் குப்ரியானோவ் ஆகியோருள் ஒருவர் ஆங்கில அறிவு சிறிதேனும் அற்றவராகவும், மற்றவர் ஆங்கில அறிவினை ஓரளவே பெற்றவராகவும் இருந்தமையை அவர்களுடன் இக்கட்டுரையாசிரியர் நேரில் உரையாடிய போது அறிய முடிந்தது. இதே போன்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1982-83 ஆண்டுகளிலே தமிழைச் சிறப்பாகப் பயின்றவர்களும் பீக்கிங் வானொலியிற் கடமையாற்றியவர்களுமான சீன மாணவர்கள் பலரும் அதே ஆண்டுகளில் இப்பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்திருந்த யப்பானிய ஆய்வுக் குழுவினருட் பலரும் ஆங்கில மொழி அறிவு சிறிதேனும் அற்றவர்களாக இருந்தமையை இக்கட்டுரையாசிரியரால் அவதானிக்க முடிந்தது.

8. க. கைலாசபதி, நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்' 1980, பக். 41—42.

9. தமிழகத்திலும் ஈழத்திலும் இத்தகைய முயற்சிகள் அண்மைக் காலத்திற் பெருகி வருவதை அவதானிக்கலாம். பேராசிரியர்கள் நா. வானமாமலை, சு. வித்தியானந்தன் முதலியோர் முதல் கலாநிதிகள் சி. மௌனகுரு, இ. பாலசுந்தரம் முதலியோர் வரை பலர் மேற்கொண்ட முயற்சிகள் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவை. சிங்கள மொழி இலக்கியத் துறையிலும் பேராசிரியர் சரத் சந்திராவின் மகத்தான பணிகளையடுத்து இத்தகைய முயற்சிகள் பெருகி வருவது நோக்கத்தக்கது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதி - ஒரு திரவத் தொடுப்பிழையம்
# The Blood - A Connective Tissue

A. பாஸ்கரன் B. Sc.

உயிரினத்தின் அடிப்படைக் கட்டமைப்பு அலகு கலம் (*Cell*) எனப்படும். இக்கலங்கள் ஒன்றிணைந்து இழையத்தை (*Tussue*) ஆக்குகிறது குறிப்பாக நான்கு வகையான இழையங்களை அடிப்படையில் கொள்ளலாம். அவை மேலணி இழையம், தொடுப்பிழையம், தசையிழையம், நரம்பிழையம் ஆகும்.

மனித உடலில் தொடுப்பிழையமானது பிரதான பங்கை வகிக்கிறது. இங்கு தாயம் எனப்படும் ஒருவித பிசுபிசுப்பான பதார்த்தத்தையும் அவற்றில் பல வகையான கலங்கள் மாறுபட்ட தொழில்களைச் செய்வதற்காக தாயத்தில் பரந்து காணப்படும். அத்துடன் புரதப் பொருளினுல் மிக நுண்ணிய நார்கள் கட்டுக்களாகவும், வலை போன்ற அமைப்பிலும் தாயத்தில் பதிந்து பரவிக் காணப்படும்.

தொடுப்பிழையம் என்று சொல்லுமிடத்து உடலின் அங்கங்கள், உறுப்புக்கள் ஆகியவற்றிற்கு இடையில் ஓர் தொடர்பை (இணைப்பை) ஏற்படுத்துகிறது. இவ்விழையம் ஓர் அங்கியின் உடற்தொழிலியற் தொடர்பை ஏற்படுத்துகிறது என்ருல் மிகையாகாது. தாயத்தின் தன்மையைக் கொண்டு தொடுப்பிழையம் மூவகைப்படும். அவற்றை உண்மையான தொடுப்பிழையம், வன்கூட்டிழையம், திரவத் தொடுப்பிழையம் என வகுக்கலாம். இங்கு தாயமானது முறையே பகுதித் திண்மம், திண்மம், திரவம் ஆகிய நிலைகளில் காணப்படுகிறது. ஒவ்வொரு இழையத்திலும் தாயத்தில் காணப்படும் புரதம் வித்தியாசமான அமைப்பை உடையதாக இருக்கும்.

நாம் இங்கு எடுத்துக் கொள்வது திரவத் தொடுப்பிழையம் ஆகும். இத்தொடுப்பிழையத்தில் குருதி (*Blood*), நிணநீர் (*Lymph*) ஆகியன அடங்கும். குருதியானது மனித உடலில் மிக முக்கிய பங்கு எடுக்கிறது. உடலில் வேறுபட்ட இடங்களில் காணப்படும் அங்கங்களுக்கு இடையே ஓர் தொடர்பை ஏற்படுத்துகிறது. இத்தொடர்பினுல் தான் அங்கங்கள் யாவும் திறம்பட செயற்படுகிறது எனலாம். எனவே குருதியைப் பற்றிய அறிவு மிக முக்கியமான விடயமாகும்.

மனித உடலில் குருதியானது போசணைப் பொருட்கள், விற்றமின்கள் போன்ற பலதரப்பட்ட பொருட்களைக் கலங்களுக்கு வழங்குவதுடன் உடற்கலங்களால் தோற்றுவிக்கப்படும் வேண்டாத நச்சுக் கழிவுப் பொருட்களை கழிவு அங்கங்களுக்கு எடுத்துச் செல்கிறது. இக்குருதியானது உடலில் ஒரு போக்குவரத்துச் சேவையைச் செய்கின்றது. (*Medium of Transport*) எனலாம்.

எமது உடலின் நிறையில் 8% பங்கு குருதி வகிக்கிறது. அல்லது ஒரு சராசரி மனிதனில் (*70Kg*) 5.6 லீற்றர் குருதி காணப்படுகின்றது. இனி இதன் பகுதிகளைப் பார்ப்போம். குருதி வெறுமையாக விட்டுவிட்டால் கட்டிபட்டுவிடும். இதனைத் தவிர்க்கும் முகமாக சிற்றேற்று அல்லது ஒக்சலேற்று கொஞ்சம் போடவேண்டும். இப்படி ஒக்சலேற்றப்பட்ட குருதியை ஒரு பரிசோதனைக் குழாயிலிட்டு அடையவிட்டால் அதன் பகுதிகளை அவதானிக்கலாம். இது மண்ணை நீரில் கரைத்துவிட்டு அடைய வைப்பதற்கு ஒப்பானது. குருதியானது இரு பெரும் பகுதிகளைக் கொண்டது.

(1) கலங்கள் 45% (2) தாயம் 55%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலங்கள்:**

குருதிக் கலங்களில் மிகப்பெரிய பகுதி சிவப்புநிற செங்குருதிக் குழியங்களாகும் (*Red Blood Corpuscles*). இதனை சுருக்கமாக *R.B.C.* என அழைக்கப்படும். இவை 5 மில்லியன் / $mm^3$ இல் உள்ளது. வளர்ந்த மனிதனில் என்பு மச்சையினுல் (*Bone Marrow*) உற்பத்தி செய்யப்படும். இக்கலங்களில் கரு, இழைமணி சொல்கியுடல் காணப்படமாட்டா. ஆகவே தான் இவை கலம் எனப்படாமல் குழியங்கள் எனப்படுகின்றன. இதன் பிரதான தொழில் சுவாச மேற்பரப்பாகிய சுவாசப்பையில் இருந்து ஒட்சிசனை இழையங்களுக்கு எடுத்துச் செல்லல் ஆகும். சாதாரணமாக செங்குழியங்கள் 100இல் இருந்து 120 நாட்கள் வரை வாழும், பின்பு மண்ணிரலில் அழிக்கப்படும்.

அடுத்த கலங்கள் வெண்குருதிக் குழியங்களாகும் (*Leucocytes or White Blood Cells*). இவை 6000 இல் இருந்து 10,000 / $mm^3$ இல் உள்ளது. இவை கருவை உடையன. செங்குருதிக் குழியங்களுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவாக இருப்பினும் பருமனில் பெரிதானவை. இவைதான் நோய்களை எதிர்க்கும் தன்மை உடையன. எமக்கு முதலான பாதுகாப்பு வழங்குவது (*1st diffence*) இவ் வெண்குருதிக் குழியங்களாகும். இக்குழியங்களின் செயற்பாட்டினுல் எம் உடலில் வரும் நுண்ணங்கிகள் (பக்ரீரியா, வைரசு) அழிக்கப்படுகின்றன. அல்லது அவற்றின் செயற்பாடு நிறுத்தப்படுகிறது. இக்குழியங்களை சிறுமணியுள்ளன, சிறுமணி அற்றன என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். சிறுமணி உள்ளவை 75% காணப்படும். அவற்றில் நடுநிலைநாடி (*Neutrophils*) 70%, அமிலநாடி (*Eosino-phils*) 4%, மூலநாடி (*Basophils*) 1% காணப்படும். சிறுமணி அற்றது 25% காணப்படும். இவற்றில் நிணநீர்க்குழியம் (*Lymphocytes*) 20%, ஒற்றைக்குழியம் (*Monocytes*) 5% காணப்படும். இங்கு நிணநீர்க் குழியங்களே பிரதான பாதுகாப்பு வழங்குகின்றது. இக்கலங்களின் தொழிற்பாட்டால் ஒரு பாதுகாப்புத் தொகுதி ஆக்கப்படுகிறது. இதனை நீர்ப்பீடனத் தொகுதி எனப்படும். ஆங்கிலத்தில் இதனை *Immun esystem* எனப்படும். தற்காலத்தில் இத்தொகுதியில் ஏற்படும் பிரதான நோய் *AIDS*. (*Acquired Immune Defeceny Syn-clrome*) இதனை பெறப்பட்ட நீர்ப்பீடனக் குறைபாட்டு நோய் எனலாம்.

அடுத்தது குருதிச் சிறுதட்டுக்களாகும். இவை அடையவிட்ட தாயத்தில் மிதந்து கொண்டிருக்கும். இத்தட்டுக்கள் காயம் ஏற்படும்பொழுது மிதமிஞ்சிய குருதிப் பெருக்கைத் தடுப்பதற்காக குருதி உறைதலுடன் சம்பந்தம் உடையது.

தாயம் / நீர்ப்பாயத்தை எடுத்துக் கொண்டால் 90 — 92% நீர் காணப்படும். மிகுதி ''அல்புமின்'' என்ற புரதப் பதார்த்தத்தினுல் ஆனது. இது சிரோசிஸ் என்ற ஈரல் அளற்சியினுல் குறையும். மதுபானம் குடிப்பவர்களில் இந்நோய் காணப்படும். மீதிப் பெரும்பகுதி ''குளோபுலின்'' என்ற பதார்த்தத்தால் ஆனது. இது வெண்குழியங்களுடன் சேர்ந்து நோய் எதிர்க்கும் தன்மை உடையது.

**மனிதனின் குருதி வகைகள்:**

இதனை இரு பெரும் வகைகளாகப் பிரிக்கலாம்.

1) *ABO* வகை 2) ரீசஸ் வகை (*Rhesus*)

இவை செங்குருதிக் குழியங்கள் (*RBC*) மேல் இருக்கும் பிறபொருட்களை வைத்தே பிரிக்கப்படும்.

(1) *ABO* வகை

*A* — பிறபொருள் உள்ளவன் *A* வகை
*B* — பிறபொருள் உள்ளவன் *B* வகை
*AB* — பிறபொருட்கள் உள்ளவன் *AB* வகை
*O* — பிறபொருட்கள் இல்லாதவன் *O* வகை

(2) ரீசஸ்வகை (*Rhesus*)

இங்கு இன்னொருவகை பிறபொருள் காணப்படும். இப்பிறபொருள் உள்ளவன் *Positive* (+) வகை எனவும், இல்லாதவன் *Negative* (—) வகை எனவும் கொள்ளப்படும். இதன்படி மனித சமுதாயத்தை

1) *O Positive* 5) *A Positive*
2) *O Negative* 6) *A Negative*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) AB Positive 7) B Positive
4) AB Negative 8) B Negativa என
எட்டு வகையாகப் பிரிக்கலாம்.

ரீசஸ் வகையில் Positive (+) வகை சமுதாயத்தில் 80% — 90% ஆகும். மிகச் சிலரே Negative (—) வகை உடையனர். ஆபிரிக்கர்கள், சீனர், ஜப்பானியர் 90 — 100% ரீசஸ் Negative ($Rh^-$) உடையவர்கள்.

குருதியானது காயம் அல்லது பாரதூரமான வெட்டுக்கள், துப்பாக்கிச் சூடு போன்ற சந்தர்ப்பங்களில் இழக்கப்படுகின்றது. இதனை ஓரளவு நிவிர்த்தி செய்யும் முகமாக குருதி பாய்ச்சல் (ஏற்றல்) அவசியமாகின்றது. இச்சந்தர்ப்பங்களில் ஒருவருக்கு அதே வகைக் குருதியையே கொடுக்கவேண்டும். உதாரணமாக Positive வகை உள்ளவருக்கு Positive வகை குருதியே வழங்கப்பட வேண்டும். இரத்த வங்கியில் (Blood -Bank) அவ்வகைக் குருதி இல்லாத சந்தர்ப்பங்களில் உயிரைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் கீழ்வரும் அட்டவணைப்படி குருதி மாறிக் கொடுக்கலாம்.

| நோயாளியின் வகை | கொடுக்கும் குருதியின் வகை |
|---|---|
| 1. A ———→ | A or O |
| 2. B ———→ | B or O |
| 3. AB ———→ | A, B, AB, O |
| 4. O ———→ | O (மட்டும்) |

குருதியானது நோயாளி or வேண்டப்படுபவனுக்கு அத்தியாவசியமான நிலையில் மட்டுமே கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில் குருதி ஏற்றத்தாலும் பல பிரச்சினைகள் உருவாகும்.

1. எயிட்ஸ், மலேரியா போன்ற நோய்கள் குருதி வழங்குபவருக்கு இருந்தால் அவை நோயாளிக்கும் தொற்றலாம்.

2. குருதி $4^0$ — $6^0$ Cல் சேமிக்கப்பட்டுள்ளது. இதனால் அதிக குருதி ஏற்றத்தால் உடல் வெப்பநிலை குறையும். இது இதயத் துடிப்பைப் பாதிக்கும்.

3. குருதி சேகரிப்பின்போது சிற்ரேற் கலக்கப்பட்டு இருப்பதால் அது (சிற்ரேற்) உடலின் கல்சியக் குறைபாட்டை உருவாக்கும்.

4. பொருந்தாத குருதியை ஏற்றினால் குளிர்ந்து நடுங்கி காய்ச்சல் ஏற்பட்டு இறப்பு ஏற்படும்.

இரத்த தானம் 18 — 55 வயதுக்குட்பட்டவர்கள் வழங்கலாம். இது செலவு இன்றிச் செய்யும் ஒரு மிகப் பெரிய புண்ணியமாகும். ஒவ்வொருவரும் இதை நன்கு உணர்ந்து தேவைப்படும் இடத்து குருதியை தயக்கம் இன்றி வழங்குவ்து ''மனிதநேயத்துக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

—✱—

நமது நாட்டிலுள்ள புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை 15 லட்சமாகும். புகையிலையை ஒதுக்கி, வெற்றிலையைக் குதப்பி, புகைத்து, குடித்து, போதை மருந்தெடுப்பவர்களின் எண்ணிக்கை கிடுகிடுவென ஏறிக்கொண்டு போகும்போது புற்று நோயாளிகளின் எண்ணிக்கை மட்டும் ஏறாமல் என்ன செய்யும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைவடிவில் அனுப்பப்படுகிறது

வர்ணம் (B. Sc.)

''மூத்த மகன் கனடாவிலை...இரண்டாவது மகன் சுவிஸிலே ...... இளையமகன் பிரான்ஸிலே...... மகளும் மருமகனும் நோர்வேயிலே... தாய்க்குச் சுகமில்லாமல் வந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனதென்று கேள்விப்பட்ட எல்லோரும் போனிலை சுகம் விசாரிச்சினம்'' ஒருவர் சொல்கிறார்.

'மகள் நாளைக்குக் கொழும்புக்குப் போரு. மருமகனோடை கதைக்கவேணுமாம். அந்த நாளிலை உதெல்லாம் ஏலுமான காரியமே. இப்ப ஒரு நிமிடத்திலை இங்கையிருந்து லண்டனுக்கு போனிலை கதைக்கலாம்' இது இன்னுமொருவர் சொல்கிறார்.

'இந்தியா நல்லா வேண்டிக்கட்டப் போகுது. இம்ரான் 5 விக்கெட் எடுத்துப் போட்டான். 180 ரன்சையும் இரண்டு மூன்று விக்கெட்டோடை எடுத்துப்போடுவாங்கள்' சார்ஜாவில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடக்கும் கிரிக்கெட் போட்டியை தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு விமர்சிக்கும் மாணவர் கூட்டம்.

ஆஸ்கார் திரைப்பட விருது வழங்கும் வைபவம் அதே நேரத்தில் உலகெங்கும் தொலைக்காட்சியில் காட்டப்படுகிறது. வெவ்வேறு நாடுகளில் உள்ள திரைப்படப் பிரமுகர்கள் தங்கள் வீட்டில் இருந்தவாறே பரிசு பெற்றவர்களை அறிகிறார்கள். புதுமையாகத்தான் உள்ளது.

செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றிவரும் விண்கலம் எடுக்கும் படம் கேப்கெனடியில் இருக்கும் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளிவிடப்படுகிறது. உலகும் சிறுத்துவிட்டது. எல்லாம் பக்கத்திலேயே நடப்பதுபோல் இருக்கிறது. ஆம்... 20ம் நூற்றுண்டின் விஞ்ஞானப் புதுமைகள் தான்.

சூரியனிலிருந்து வெற்றிடத்தினூடாக ஒளி பூமியை வந்தடைகிறது. சூரிய சக்தி பூமியை வந்தடையாவிடில் இவ்வுலகிலுள்ள உயிர்கள் வாழ்வது எப்படி?

இன்றைய உலகில் தொடர்பு சாதனங்கள் தகவல் பரிமாற்றம், விண்வெளி ஆராய்ச்சி, வைத்தியத்துறை முன்னேற்றம் போன்றவை மின்காந்த அலைகள் கண்டுபிடிக்கப்படாவிட்டால் சாத்தியமாகியிருக்குமா?

முதலில் மின்காந்த அலைகள் எவ்வாறு உண்டாகின்றன என்பதைப் பார்ப்போம். ஒன்றுக்கொன்று செங்குத்தாக உள்ள மின் புலத்தினதும் காந்தப் புலத்தினதும் அதிர்வின் காரணமாகவே மின்காந்த அலைகள் உண்டாகின்றன. அத்துடன் இருபுலங்களினதும் திசை அலையின் இயக்கத் திசைக்கு செங்குத்தாக இருக்கும், எனவேதான் மின்காந்த அலைகள் குறுக்கலைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இரு புலங்களும் ஆடலுறும் அதிர்வெண்கள் சமனுக இருக்கும், அவை அதிர்வுறும் அதிர்வெண்ணே மின்காந்த அலையினது அதிர்வெண் ஆகும், புலங்கள் ஆடலுறும் அதிர்வெண் 20KHz இலும் அதிகமாகும் போது தான் மின்காந்த அலைகள் அப்பால் ஊடுகடத்தப்படுகின்றன.

எல்லா மின்காந்த அலைகளும் வெற்றிடத்தில் $2.998 \times 10^8 ms^{-1}$ ( $3 \times 10^8 ms^{-1}$( கதியுடன் செல்லும் ஊடகங்களில் வெவ்வேறு அலைகள் வெவ்வேறு வேகத்துடன் செல்லும். r- கதிர்கள், x-கதிர்கள், கழியூதாக் கதிர்கள், கட்புல ஒளி, செந்நிறக் கீழ்க்கதிர்கள், நுணுக்கலைகள், றேடியோ அலைகள் என்பன மின்காந்த அலைகளுக்குள் அடங்கும். மின்காந்த அலைகள் மின்புலங்களாலோ காந்தப் புலங்களாலோ பாதிக்கப்படுவதில்லை. மின்காந்த அலைகளுக்குள் அடங்கும் அலைகளையும் அவற்றின் அலைநீள வரிசையையும் மீடிறன் வரிசையையும் பின்வருமாறு காட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*r* — *Rays* (*r* — கதிர்கள்)
*X* — *Rays* (*X* — கதிர்கள்)
*Ultra - Violet rays* (கழியூதாக்கதிர்கள்)

அலை நீளம் கூடுகிறது | மீடிறன் கூடுகிறது

*Violet* — ஊதா
*Indigo* — கருநீலம்
*Blue* — நீலம்
*Green* — பச்சை
*Yellow* — மஞ்சள்
*Orange* — செம்மஞ்சள்
*Red* — சிவப்பு
} கட்புலனுகு ஒளி

*Infra — red rays* (சிவப்புக் கீழ்க்கதிர்கள்)
*Microwaves* — நுணுக்கலைகள்

*UHF (Ultra High Frequency)*
*VHF (Very High Frequency)*
*SW* (சிற்றலை)
*MW* (மத்திம அலை)
*Long Wave*
} றேடியோ அலைகள்

மின்காந்த அலைகளுக்குள் *r* அலைகளே மிகவும் அலைநீளம் குறைந்தவை. அதன் அலைநீளம் $10^{-12}m$ பருமன் வரிசையில் இருக்கும். அடுத்து அலைநீளம் குறைந்தவை *x*-கதிர்கள் ஆகும். இதன் அலைநீளம் $10^{-10}m$ பருமன் வரிசையில் இருககும். இது வாயுக்களினூடு செல்லும் போது வாயுவை அயனக்கும். *X*- கதிர்களுக்கு எல்லா ஊடகங்களினதும் முறிவுச்சுட்டி ஏறக்குறைய ஒன்று ($u = 1$) ஆக இருக்கும். எனவே ஒரு ஊடகத்திலிருந்து இன்னுமோர் ஊடகத்திற்கு செல்லும் போது முடிவடைவது மிகக் குறைவு. எனவே இதனை வில்லைகளினுல் குவிக்க முடியாது. *X*-கதிர்சள் பதார்த்தங்களினூடு ஊடுருவும் அடர்த்தி கூடிய ஊடகத்தில் ஊடுருவும் தன்மை குறைவாக இருக்கும். இவ்வியல்பே *x*- கதிர் படப்பிடிப்பின் போது பயன்படுகிறது. மருத்துவத் துறையில் எலும்பு முறிவு வைத்தியத்தில் *X*-கதிர் படங்களே முறிவு ஏற்பட்ட இடத்தை இடங்காண்பதற்கும் முறிவு அல்லது வெடிப்பின் தன்மையை அறிவதற்கும் உதவுகின்றன. அத்துடன் புற்றுநோய்க் கலங்களை அழிப்பதற்கும் *X*- கதிர்கள் பயன்படுத்தப்படுகின்றன. *X*- கதிர்களும் தெறிப்பு விதிகளுக்கமையத் தெறிப்படையும். ஆனல் கூடிய படுகோணங்களுக்கு மட்டுமே தெறிப்பேற்படும்.

இரச ஆவி விளக்குகளிலிருந்தும் சூரியனிலிருந்தும் கழியூதாக் கதிர்கள் (ஊதாக் கடந்த கதிர்கள்) காலப்படுகின்றன. இது கண்ணுடியால் உறிஞ்சப்படும். சூரியனுல் காலப்படும் ஊதாக்கடந்தகதிர்களில் பெரும் பகுதி வளிமண்டலத்தால் உறிஞ்சப்பட்டு விடும். இது மனித உடலில் விற்றமின் *D* தொகுப்பிற்கு பயன்படுகிறது. இது சில இரசாயனத் தாக்கங்களை விரைவுபடுத்தும்.

கட்புல ஒளியும் மின்காந்த அலையே யாகும். இது ஏழு நிறங்களைக் கொண்டது. இதில் சிவப்பு, பச்சை, நீலம் என்பவை முதன்மை நிறங்களாகும். இவற்றுள் நீல நிறம் வளி மண்டலத்திலுள்ள தூசி துணிக்கைகளால் சிதறலடைவதுமிகக்கூட. எனவே தான் வானம் நீலமாகத். தோற்றுகிறது. சிவப்பு நிறம் சிதறலடைவது மிகக் குறைவு. எனவே தான் சிவப்பு நிறம் அபாய அறிவிப்பில் பயன்படுத்தப்படுகிறது.

செந்நிறக் கீழ்க்கதிர்கள் (*Infra -redrays*) வெப்ப உணர்வு கூடியவை அவை சிதறல் அடைவது மிகக் குறைவு. பனியினூடாகச் செல்லக்கூடியது. பனிநேரப் படிப்பின்போது பயன்படுத்தப்படுகிறது. தொலைக்காட்சிகளின் இயக்கத்தைத் தூர இருந்து கட்டுப்படுத்துவதற்கும் (*Remote Control*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்நிறக் கீழ்க்கதிர்கள் பயன்படுத்தப்படுவதுண்டு.

நுணுக்கலைகள் ராடர் கருவிகளில் பயன்படுத்தப்படுகிறது இதன் அலைநீளம் 1mm முதல 10cm வரெ இருக்கும்

தொலைக்காட்சியில் பயன்படுத்தபபடும் அலைகள் றேடியோவில் பயன்படுத்தப்படும் அலைகளை விட மீடிறன் கூடியவை. அலை நீளம் குறைந்தவை. அலை நீளம் குறைவாக உள்ள அலைகள் கோணலடைவதும் மிகக் குறைவு. எனவே தொலைக்காட்சி அலைகள் தடைகளைச் சுற்றிச் செல்வது குறைவு. இதன்காரணமாகத் தான் மலைப் பள்ளத்தாக்கில் வசிக்கும் ஒருவர் றேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கக்கூடியதாக இருந்தபோதிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாதுள்ளது. எனவே தான் ஒலிபரப்பு அஞ்சல் நிலையங்களை விட ஒளிபரப்பு அஞ்சல் நிலையங்கள் கூடுதலாகத் தேவைப்படுகின்றது.

இன்றைய நவீன உலகை மின்காந்த அலைகள் கட்டி ஆள்கின்றன. மின்காந்த அலைகளின் உதவியால் உலகம் சிறியதாகி விட்டது வீட்டிலிருந்தவாறே உலகத்தைப் பார்க்கலாம் உலகத்திலுள்ள எவருடனும் தொடர்பு கொள்ளலாம். உலகம் எமது வீட்டிற்குள்......... ⊙

---

# இன்பத் தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர்! — அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்! — இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்! — இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்! — இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! — இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! — இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! — இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! — இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ!

— பாரதிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலையிடல் கொள்கை (Pricing Policy)

*Devarajan Jeyaraman*
*B. Com (Hons) (Sri Lanka) M. B. A. (Delhi)*
*University of Jaffna*

ஒரு பொருளைக் கொள்வனவு செய்ய தீர்மானிக்கும்போது நாம் அக்கறை காட்டும் கூறு விலையாகும். சந்தைப்படுத்தல் கலவையில் நிறுவனத்துக்கு வருமானத்தினை பெற்றுக் கொடுக்கும் மூலகம் விலையாகும். விலை என்றால் என்ன? பொருளின் பெறுமதியினை அளவிடப் பயன்படுத்தும் கருவி விலையாகும். பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்யும் எந்த ஒரு நிறுவனமும் சரியான விலையிடல் கொள்கை ஒன்றினை வகுத்துக் கொள்ளல் வேண்டும். எந்த ஒரு நிறுவனமும் இரு அடிப்படை நோக்கங்களை அடையக்கூடிய முறையில் தமது விலையிடல் கொள்கையினை நிர்ணயித்துக் கொள்ளும் அவையாவன;

*(i)* நிறுவனம் தொடர்ந்து நிலைத்திருத்தல் *(Surviral)*

*(ii)* நிறுவனத்தின் வளர்ச்சி *(Growth)*

ஒரு நிறுவனம் தொடர்ந்து நிலைத்திருப்பதனையும் வளர்ச்சி அடைவதனையுமே நோக்கமாகக் கொண்டு விலையிடல் கொள்கையினை தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

பொதுவாக ஒரு நிறுவனம் சரியான விலையிடல் கொள்கையினை நிர்ணயித்துக் கொள்கையில் பல்வேறு காரணிகளை கருத்தில் கொள்ளல் வேண்டும்.

(i) *அரசாங்கத்தின் சட்டவிதிகள்:*

சிலவகையான பொருட்கள் விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு அவற்றிற்கு கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இத்தகைய பொருட்களின் விலைகளைப் பொறுத்தமட்டில் அரசின் சட்டவிதிகளைக் கருத்திற் கொண்டே விலையானது நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

(ii) *போட்டி நிறுவனங்களின் பலம்*

பலம் நிறைந்த போட்டி நிறுவனங்கள் காணப்படுமாயின் அவற்றின் விலையிடல் கொள்கையினையும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

(iii) *நாட்டின் பொருளாதாரநிலை:*

விலையிடல் கொள்கையை தீர்மானிக்கும்போது நாட்டின் பொதுவான பொருளாதார நிலையினையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். ஒரு நிறுவனம் முதன் முதலில் பொருட்களை சேவைகளை உற்பத்தி செய்கையில் சரியான ஒரு விலையிடல் கொள்கையை நிர்ணயித்துக் கொள்ளல் வேண்டும் பின்பு காலத்திற்குக் காலம் விலையில் மாற்றங்களை செய்யவேண்டியபோது இவ் விலையிடல் கொள்கையை கருத்தில் கொண்டு, விலையினை மீளாய்வு செய்யமுடியும்.

நடைமுறையில் பொதுவாக பல்வேறு முறைகளில் விலை நிர்ணயிக்கப்படும். எந்த ஒரு நிறுவனமும் தமது உற்பத்திப் பொருட்கள் சேவைகளிற்கான விலையினை தீர்மானித்துக் கொள்கையில் பொதுவாக ஆறு படிகளை மேற்கொள்ளல் வேண்டும். முதலில் நிறுவனம்

1) விலையிடல் நோக்கத்தினை நிர்ணயித்தல் வேண்டும்.
2) கேள்வியினை மதிப்பீடு செய்தல்
3) செலவினை மதிப்பீடு செய்தல்
4) போட்டியாளரின் விலையினை ஆராய்தல்
5) சரியான விலையிடல் முறையைத் தெரிவு செய்தல்
6) இறுதியாக விலையை நிர்ணயித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் நிறுவனம் விலையிடல் நோக்கத்தினை நிர்ணயிக்கும்போது, குறிப்பிட்ட பொருளை விற்பனை செய்வதன் மூலம் எதனை அடைந்து கொள்ளவுள்ளது என்பதன் அடிப்படையில் விலையிடலின் நோக்கம் அமையும். பொதுவாக ஒரு நிறுவனம் விலையிடல் தொடர்பான நான்கு நோக்கங்களைக் கொண்டது. இவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நோக்கங்களைக் கொண்டதாக அது அமையலாம். அவ் நோக்கங்களாவன தொடர்ந்து நிலைத்திருத்தல், லாபத்தினை உச்சப்படுத்தல், சந்தைப் பங்கில் தலைமைத்துவம், பொருளின் தரம் தொடர்பான தலைமைத்துவத்தினைப் பேணல் பொதுவாக ஒரு நிறுவனம் தொடர்ந்து நிலைத்திருப்பதனை நோக்கமாகக் கொள்ளின் பொருட்களிற்கான விலையினை குறைவாக நிர்ணயிக்கும் பொருளின் விலையினை குறைவாக நிர்ணயிப்பதன் மூலம் பொருளின் விற்பனையைப் பேணி இதன்மூலம் தொடர்ச்சியான உற்பத்தியினை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். நுகர்வோர் விலைக்கு தூண்டுதலாக இருக்கும் வேளையிலே இது சாத்தியமானதாகும்.

அனேகமான நிறுவனங்கள் லாபத்தினை உச்சப்படுத்தும் வகையில் விலையினை நிர்ணயிக்க முற்படுவர். இத்தகைய நோக்கத்தினைக் கொண்ட உற்பத்தியாளர் கேள்வி, செலவு பற்றிய மதிப்பீட்டினை மேற்கொண்டு அதன் அடிப்படையில் லாபத்தினை உச்சப்படுத்தக்கூடிய முறையில் விலையைத் தெரிவு செய்யலாம்.

சில நிறுவனங்கள் சந்தையில் கூடுதலான சந்தைப் பங்கினை கொண்டிருத்தல் வேண்டும் என்ற நோக்கத்தினைக் கொண்டிருக்கலாம். அவ்வாறான நோக்கத்தினைக் கொண்ட நிறுவனங்கள் இயலுமான அளவு குறைவான அளவில் விலையினை நிர்ணயித்துக் கொள்ளல் வேண்டும். சந்தையில் சில நிறுவனங்கள உற்பத்தித் தரத்தில் மேலோங்கிய நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற நோக்கத்தினைக் கொண்டதாக காணப்படலாம் தரத்தினை விலையின் அடிப்படையிலே பொதுவாக நுகர்வோர் மதிப்பீடு செய்வர். எனவே இதன் காரணத்தினால் தரத்தினை உயர்த்திக் காட்டும் பொருட்டும், தரம் தொடர்பான ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவுகளை ஈடு செய்யும் பொருட்டும் கூடுதலான விலை நிர்ணயிக்கப்படும். எனவே மேற்குறிப்பிட்ட நோக்கங்களில் ஏதேனும் ஒரு நோக்கத்தினைக் கொண்டதாக விலையிடல் தொடர்பாக நிறுவனத்தின் நோக்கம் அமையலாம். நிறுவனம் விலையிடல் தொடர்பான சரியான நோக்கத்தினை நிர்ணயித்தபின் நிறுவனம் பொருள் தொடர்பான கேள்வியினை மதிப்பீடு செய்தல் வேண்டும். கேள்வியானது மதிப்பீடு செய்யப்பட்ட பின்பு, பொருளின் உற்பத்தி தொடர்பான செலவுகளை கணிப்பிடல் வேண்டும். விலைக்கும் செலவுக்கும் தொடர்புண்டு என்பதால், செலவுகளை சரியான முறையில் கணிப்பிடல் அவசியமானதாகும். செலவுகளை நிலையான செலவு, மாறும் செலவு என்ற பாகுபாட்டின் அடிப்படையில் கணிப்பிட்டு, பின்பு மொத்தச் செலவினை மதிப்பிடலாம். நிலையான செலவு என்கையில் வெளியீட்டிற்கு ஏற்ப மாற்றமடையாத செலவினைக் குறிக்கும். (உ-ம்: வாடகை, வட்டி) மாறும் செலவு என்னும்போது உற்பத்தி வெளியீட்டிற்கு ஏற்ப மாற்றம் அடையும் செலவினைக் குறிக்கும் (உ-ம்: மூலப்பொருள் செலவு) நிலையான செலவினையும், மாறும் செலவினையும் கூட்டி மொத்தச் செலவினை மதிப்பிடலாம்.

இதனைத் தொடர்ந்து போட்டியாளரின் விலையினை ஆராய்தல் வேண்டும். போட்டியாளர் எவ்வெவ் விலைகளில் பொருட்களை உற்பத்திசெய்து வழங்குகின்றனர். ஒரு நிறுவனம் தனது பொருட்கள் சேவைகளுக்கான விலையினை போட்டியாளரின் விலைக்கு அண்மித்ததாக நிர்ணயிப்பதே சிறந்தது. ஆனால் தரத்தினைப் பொறுத்து பெருமளவு வேறுபாடு காணப்படின் இதனைப் பெரிதும் பொருட்படுத்த வேண்டியதில்லை.

அடுத்ததாக நிறுவனம் ஒரு விலையிடல் முறையைத் தெரிவுசெய்து இறுதியான விலையினை நிர்ணயித்துக் கொள்ளல் வேண்டும். பல்வேறு வகையான விலையிடல் முறைகள் உண்டு. அவையாவன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) செலவினையும் லாபத்தினையும் கூட்டி விலையை நிர்ணயித்தல்:
இம்முறையில் நிறுவனம் உற்பத்திச் செலவினையும், எதிர்பார்க்கும் லாப வீதத்தினையும் சேர்த்து விலையினை நிர்ணயித்துக் கொள்ளல் வேண்டும்.
உதாரணமாக ஒரு நிறுவனத்தின் அலகுக்கான உற்பத்திச் செலவு 8/-
எதிர்பார்க்கும் லாபம் 50%
எனவே விலை = செலவு — 8
+ லாப வீதம் (50%)—4 = 12/-
இங்கு அலகிற்கான விலை 12/- என்பது உற்பத்திச் செலவுடன, எதிர்பார்க்கும் லாபத்தினையும் கூட்டி நிர்ணயிக்கப் பட்டது.

(ii) சந்தை ஊடுருவல் விலையிடல் :— இம்முறையில் நிறுவனம் சந்தையில் ஊடுருவி ஒரு வாடிக்கையாளர் தொகுதியினை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்குடன் உற்பத்திப் பொருட்களின் விலைகள் குறைவாக நிர்ணயித்துக் கொள்ளப்படும். புதிய நிறுவனங்களே பொதுவாக இத்தகைய விலையிடல் முறையினை மேற்கொள்ளுவது வழமையாகும். புதிய நிறுவனங்கள் வாடிக்கையாளர்களைக் கொண்டதாக இருக்கா. எனவே, வாடிக்கையாளர்களை ஏற்படுத்தி சந்தையில் ஒரு இடத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் குறைவான விலை பொருட்களுக்கு நிர்ணயிக்கப்படும். எனினும் நுகர்வோர் விலைக்கு தூண்டுதலாக இருக்கும் போதே இவ விலையிடலானது வெற்றியளிக்கும் எனக் கூறுவது மிகப் பொருத்தமானதாகும்.

(iii) விரைவு பண மீட்பு உபாய விலையிடல் :— சில உற்பத்தியாளருக்குப் பணத்தினை விரைவாக மீட்டெடுத்தல் மிக முக்கியமான காரணியாகும். எனவே இதனைக் கருத்தில் கொண்டு அதாவது ஈடுபடுத்திய முதலீட்டினை ஒரு குறிப்பிட்ட காலத்தில் விரைவாக திரும்பப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் விலையினை நிர்ணயித்துக் கொள்ளலாம். பல காரணங்களுக்காக விரைவாகப் பணத்தினை மீட்க வேண்டியிருக்கலாம்.

(அ) விரைவில் மேலும் முதலீடு செய்து தொழிலை விருத்தி செய்வதற்கு,

(ஆ) எதிர்காலம் நிச்சயமற்ற தன்மையையும் ஆபத்தினையும் கொண்டது. எனவே அதனைத் தவிர்த்து விரைவாக முதலீட்டினை திரும்பப் பெறுவதற்கு.

(இ) வியாபாரத்தினை வெற்றியாகமேற் கொள்ள விரைவான பணமீட்பு மிக இன்றியமையாததாகும். மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக விரைவுபண மீட்பு உபாய விலையிடல் நிறுவனங் களினால் மேற்கொள்ளப்படுகிறது.

(iv) உளவியல் ரீதியான விலையிடல் :- நிறுவனம் நுகர்வோருக்கு உளவியல் ரீதியான திருப்தியினை வழங்கும் பொருட்டு விலையானது நிர்ணயிக்கப்படலாம். சில நிறுவனங்கள் நுகர்வோருக்கு பொருள் தொடர்பான தரத்தினை உயர்த்திக் காட்டும் போது கூடிய விலையினை நிர்ணயிக்கலாம். அல்லது விலையினைக் குறைத்துக் காட்டும் நோக்கில் விலை பூரணமற்ற முறையில் (Odd Pricing) நிர்ணயிக்கப்படலாம் இலங்கையில் பாட்டா பாதணிகள் உற்பத்திக் கம்பனி இவ்விலையிடலை மேற்கொள்கின்றன. உற்பத்திப் பொருட்களின் விலைகளானது முழு எண்ணாக நிர்ணயிக்கப்படாது அரைகுறையாக நிர்ணயிப்பது மூலம் நுகர்வோருக்கு ஒரு உளவியல் ரீதியான திருப்தியினை வழங்க முடியும்.

உ - ம்? பாட்டா பாதணியின் விலை
ரூபா 299-99

பொதுவாக மேற்குறிப்பிட்ட முறை கருத்தில் கொண்டு ஒரு நிறுவனம் தனது பொருட்கள் சேவைகளுக்கான விலையிடல் கொள்கையை தீர்மானித்துத் கொள்ள வேண்டும். இதன் மூலம் நிறுவனம் தனது லாபத்தினை அடைய முடியும் எனவும், தொடர்ந்து நிறுவனம் நிலைத்திருக்க முடியும் எனவும் எதிர்பார்க்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்வாய்க் கிராமமும் அதன் கல்விச்சிறப்பும்

செல்வி க. புவனேஸ்வரி (B. A. Hons)

பனைகள் நெடுதுயர்ந்து தலையோலைகளால் செறிந்து, குடை போல் விளங்கி பகலவனின் வெயிலொளியையும் வெப்பத்தையும் தடுத்து இருளை உண்டாக்குவதோடு குளிர்மையையும் தருவதால் இப்பிரதேசம் அல்வாய் எனப் பெயர் பெற்றது. மூன்று சதுர மைல் விஸ்தீரணமுடைய இக்கிராமமானது தற்போது அல்வாய் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என நான்கு கிராம சேவகர் பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் ஏறக்குறைய 5300 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் $\frac{1}{3}$ பகுதியினர் போதிய அளவு கல்வி வசதியுடையவர்களாகவேயுள்ளனர்.

